தமிழ் நயம்
2003

மதத்திற்கு
மதம் பிடித்ததால்
காயம் பட்டுக்கிடக்கிறான்
கடவுள்!

அவனுக்கு
மருத்துவம் பார்க்க
மனிதராய்
வருவீரா?

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

With Best Compliments from

VIJEYA ENTERPRISE

Imports & Exports
General Merchants & Commission Agents

MAHARAJA FOOD PRODUCT

Importers & Exporters, Sri Lanka Food Producers

No. 18/3, Dr. E. A. Cooray Mawatha, Colombo 6
Tel : 2360926, 2559849   Mobile: 0777-512299
Tel/Fax: 2361139   E-mail : maharaja@dialogslt.net

மனிதர் நம் மனங்களில்

மரிக்கச் செய்த மனிதத்தோடும்

அன்பு பகிர மறந்துபோன.

மரத்துவிட்ட இருண்ட இதயங்களோடும்

சுயம் என்ற மூன்றெழுத்தில்

சுருக்கிட்டு வாழ்ந்தபோதும்

காபன்புகையில் கந்தகச் சூட்டில்

கருகிவிட்ட நுரையீரலோடும்

அணுக்கதிர் வீச்சில்

ஆலைகளின் பெருமூச்சில்

அழிந்து போன ஆத்மாவோடும்

தாக்கும் வாயுக்கள் பருகிய

ஓசோன் சிரசோடும்

இதுவரை எமை மன்னித்து

இன்னுமின்னும் இந்த மண்ணில்

மாண்புறச் செய்து வாழ வைக்கும்

இயற்கை அன்னைக்கே

இந்நயம்

சமர்ப்பணம்

றோயல் கல்லூரி

தமிழ் இலக்கிய மன்றம்

பெருமையுடன் வழங்கும்

கலை விழா 2003

சுபானு வருடம் - கார்த்திகை மாதம் - பதினான்காம் நாள்
(30-11-2003)
மாலை 3.15 மணி
'நவரங்கஹல' மண்டபம்

மலராசிரியர் :

அஸீம் அ. மக்கீன்

துணை மலராசிரியர்கள் :

வி. விமலாதித்தன் | மு. ஜும்லி | ச. சிவாகணேஷ்

Royal College
Tamil Literary Association

Proudly Presents

Kalai Vizha 2003

30th of November 2003 3.15 p.m
Navarangahala Hall

Editor

Azeem A. Mackeen

Sub-Editors

V. Vimalathithan | *M. Jumly* | *S. Shivaaganesh*

தமிழ் காக்கும் 'கருவி' கண்டுபிடித்த

~ தொல்காப்பியர் ~

தமிழே, உனக்கு வாழ்த்து

பவளப்பட்டாடை போர்த்தி,
ஜொலித்து நின்றே மழலை மொழிபேசி,
கொஞ்சிக்குலாவும் குழந்தைத்தமிழே !
சுயம் காணத்திணறிய போதே,
போலி முகத்திரை கிழித்தே,
முகவரிக் கொடுத்தே,
நின் பிள்ளையாயெனை மீட்டே,
பெரு பேற்றை நல்கியப்பைந்தமிழே - நீ வாழி !

தேனுக்கு இனிமை கற்பித்த
தெவிட்டிடா தெளியமுதே,
பாரதத்தில் பாரதிச் சொல்வீச்சில்
வீழ்ந்திடா திடநெஞ்சம் கொண்டே,
வில்லை விடவும் வீரம் பேசி
வெள்ளையனை வீழச்செய்தே - வெற்றி
வாகை சூடிய வீரத்தமிழே - நீ வாழி !

எத்தனை வனப்புமிகு தையலர் கண்டேன்
எவரிலும் எனுள்ளம் மயங்கியதில்லை - உன்
வண்ணக் கலையழகில் மட்டுமே
எனை முற்றுமுழுதாய் மறந்தேன்,
ஞாலம் மீதினில் நான் உயிரோடுள்ள வரை
உன் உணர்வினில் உறைந்து வாழ
வரம் தந்த கன்னித்தமிழே - நீ வாழி !

- அஸீம். அ. மக்கீன் -

With the Best Compliments of

மேதினியெங்கும் மேவிடும் புகழின்

உச்சியில் இலங்கிடும் றோயல்

போதனாசாலை ஓதிடும் பூந்தமிழ்

இலக்கிய மன்றத்துப் பூக்கள்

சாதனை படைக்கும் கலைவிழா தன்னில்

சாற்றிடும் "தமிழ் நயம்" நூலின்

வாசனை சிறக்க வான்புகழ் செழிக்க

வளமுடன் வாழ்த்துகின்றேன் நான்.

"தமிழ் தென்றல்"
அலி அக்பர்

SCHOOL OF OUR FATHERS

(Words and Music by the Late Mr. H. L. Reed, Principal 1921-32)

Thy spirit first to life awoke,
In eighteen hundred and thirty-five
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's learning thrive.

Refrain :
School where our fathers learnt the way before us,
Learnt of books and learnt of men through thee we'll do the same,
True to out watchword "Disce aut Discede"
We will learn of books and men and learn to play the game.

Within thy shade our fathers trod
The path that leads to man's estate
They have repaid the debt they owed
They kept thy fame inviolate.

And we their loyal sons now bear
The torch, with heart : as sound as oak
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.

With the Best Compliments of

WORLDWIDE LOGISTICS (PRIVATE) LIMITED

BUSINESS SERVICES

Sea Freight & Air Freight, LCL Consolidations, Customs House Agents, Personal Effects Packing & Forwarding

P. O. Box 1335, No. 321-D, Union Place,
Colombo 2, Sri Lanka.
Tel : 94-4710868, 74-5348999
Fax : 94-11-2304092
E-mail : info@ww-logistics.lk
Web : www.ww-logistics.lk

International Freight Forwarders, NVOCC Consolidators, Customs House Agents

றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்
செயற்குழு 2003

<u>தலைவர்</u>

உயர் திரு. எச். ஏ. யு. குணசேகர

<u>சிரேஷ்ட உப தலைவர்</u>

திரு. சி. இரத்தினசபாபதி

<u>உப தலைவர்கள்</u>

திரு. இ. இராஜசூரியர்
திரு. அ. சரவணன்
திருமதி. உதயகுமார்
திருமதி. பிரேம்நாத்
திருமதி. ல. பிரபாகரன்
திருமதி. சு. கோபாலகிருஷ்ணன்

<u>மன்றத் தலைவர்</u>

க. பார்த்தீபன்

<u>இணை செயலாளர்கள்</u>

சி. விதூஷன்
து. ஜு . அஸ்லம்

<u>இணை பொருளாளர்கள்</u>

அ. அர்ஷார்ட்
மு. இம்தியாஸ்

<u>உப பொருளாளர்கள்</u>

நி. நிஷாந்தனன்
பி. சுந்தரகுமார்

<u>மலராசிரியர்</u>

அஸீம். அ. மக்கீன்

<u>துணை மலராசிரியர்கள்</u>

வி. விமலாதித்தன், மு. ஜும்லி சி. சிவகணேஷ்

<u>செயற்குழு உறுப்பினர்கள்</u>

தி. சஞ்சீவன்	சி. சிவகுமார்	சு. நஸாமட்
ச. சம்சன்	அ. ஷரீக்	ஜெ. ரவிகிருஷாந்
எம். ருஹ்மான்	உ. நாஸி	அ.யு. ஃபாயிஸ்
எம். அஃப்பான்	ச. சஜீகாந்தன்	செ. கிருஷாந்
ல. ஆபித்		

Royal College
Tamil Literary Association
Office Bearers 2003

President
Mr. Upali Gunasekara

Senior Vice President
Mr. S. Ratnasabapathy

Vice Presidents
Mr. R. Rajasooriyar
Mr. A. Saravanan
Mrs. T. Udayakumar
Mrs. R. Premnath
Mrs. L. Pirabaharan
Mrs. S. Gopalakrishnan

Student Chairman
K. Partheepan

Joint Secretaries
S. Vithushan
T.J. Aslam

Treasurers
M. Arshad
M. Imthiyaz

Asst. Treasurers
N. Neshanthanan
P. Suntharakumar

Editor
Azeem A. Mackeen

Sub Editor
V. Vimalathithan
M. Jumly
S. Sivaganesh

Committee Members
J. Ravikrishanth
S. Samson
A.Y. Faiz
S. Nazamat
S. Sajeeganthan
T. Sanjeevan
S. Sivakumar
M.F. Rhuman
A.L.M. Abith
S. Krishanth
M. Affan
U. Nazih
A. Shariq

Office Bearers

Seated L to R	:	Mrs. T. Udayakumar, Mr. A. Saravanan, Azeem. A. Mackeen, Mr. R. L. Senanayake *(Deputy Principal)*, S. Vithushan, H. A. U. Gunesekara *(Principal)*, K. Partheepan, Mr. S. Rathnasabapathy *(Master-in-Charge)*, T. J. Aslam, A. Arshad, Mrs. L. Pirabaharan, Mrs. R. Premnath
Standing 1st Row L to R	:	V. Vimalathithan, S. Sivaganesh, S. Sivakumar, J. Ravikirushanth, M. U. M. Nazih, S. Sajeeganthan, A. Shariq Mirzaa, N. Neshanthanan, A. Y. F. A. Faiz,
Standing 2nd Row L to R	:	S. Samson, T. Sanjeevan, A. L. M. Abith, S. Krishanth, P. Suntharakumar, M. F. Rahuman, M. Affan, M. S. M. Jumly, S. Nazamat

எங்கள் இதய ஸ்வரங்கள்.......

"உடல்களை உரமாய் இட்டு
உதிரம்தனை நீராய் வார்த்து
பழந்தமிழ் மரத்தை – இதுவரை
வளர்த்தோம் ! தொடர்ந்தும் வளர்ப்போம்"

இவ்வரும்பணியில் ஆவலாயும் மிக்க விருப்பும் கொண்டே அகரம் உச்சரித்து, கலைவிழா 2003 இல் தமிழன்னைக்கு மகுடம் சூட்டவும், தமிழ்த்தாகம் தீர்க்கவும் முனைந்தே இங்கு வந்திட்டோம்.

தமிழ் என்ற தண் கடலில் மூழ்கி முத்தெடுத்து நல்லதோர் மகுடம் செய்து அன்னைக்குச் சூட்டி உடல்தனில் ஒட்டிய நீர்த்துளிகளையும் இங்கே சிதறி, தாகம் தீர்க்கவும், விழைந்தோம்.

அந்த முயற்சியின் முடிவுப் பொருளே உங்கள் கரங்களில் கொஞ்சிச் சிரிக்கும் சிறு பிள்ளைகள் நாம் விளைத்த வேளாண்மை **இந்த "தமிழ் நயம்".**

தமிழ் நயத்தின் இலக்கணம் சொல்லி தரம் உயர்த்திய பெரும் தகைகளான பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், கவிஞர், மு.மேத்தா, லேனா தமிழ்வாணன், ப. ஸ்ரீ.இராகவன், மா. கணபதிப்பிள்ளை, மானா மக்கீன், சுதாராஜ், ஆகியோருக்கும், பழைய மாணவர்களுக்கும், எம் கல்லூரி மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

இம் மலர்தனை சமைத்தளிக்கும் அவாவில் விட்ட குறைகளை புறந்தள்ளி, நிறைகளை மட்டும் மனங்களில் பரப்புவீர்கள் என முழுதாய் நம்பி முற்றும் இடுகின்றோம்.

மலராசிரியர் : அஸீம். அ. மக்கீன்
துணை மலராசிரியர்கள் : வி. விமலாதித்தன்
மு. ஜும்லி
சி. சிவாகணேஷ்

With the Best Compliments From :

BARATHY ENTERPRISES

General Merchants & Commission Agents for Local Produce

No : 86, 4th Cross Street, Colombo 11,
Tel : 2330360

209, Prine Street, Colombo 11.

பிரதம விருந்தினரின் செய்தி

தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்படும் தமிழ் நயம் 2003க்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். தற்போது உலகமெங்கும் கல்வியைப்பற்றிய அடிப்படைச் சிந்தனைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் பாதிப்பினால் இன்றைய இளைஞர்களிடையே கல்வி என்றாலே மருத்துவம், பொறியியல், கணினி, தொழில் நுட்பம் போன்ற கல்விதான் உயர்ந்தது என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய கல்வியின் விளைவாக மாணவர்களிடையே தர்க்கபூர்வமான சிந்தனையும், விஞ்ஞானப் பண்பாடும் வளர்ந்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் இவை இரண்டால் மட்டுமே ஒரு மனிதனை முழுமையானவனாக ஆக்கிவிட முடியாது.

மனிதனிடத்தில் கற்ற கல்வி மூலமாக செயலாற்றல், படைப்பாற்றல், கலையுணர்வு, ஒழுக்கம், இரக்கம், கருணை போன்றவை தேவையான அளவில் உண்டாக்கப்பட வேண்டும். பெரும் பொருள் செலவழித்து ஒரு மாணவர் கல்வி கற்று பாடசாலையிலிருந்து வெளிவருவாரானால், அவர் நல்லொழுக்கமோ, கருணையோ, கலை உணர்வோ, இரசனையோ செயலார்வமோ கொண்டிருப்பார் என்று உறுதி சொல்ல முடியாத சூழ்நிலையே இன்று நிலவுகிறது.

பாடசாலைப் பாடத்திட்டங்களால் மாணவர்களிடத்தில் ஏற்படுத்த முடியாத உயர்ந்த சில பண்புகளை அவர்களிடத்தில் விதைப்பதற்கும், வளர்ப்பதற்கும் வேறு வழிமுறைகள்

தேவைப்படுகின்றன. இந்தப் பின்னணியிற்தான் பாடசாலைகளில் தமிழ்ச்சங்கம் போன்ற மாணவ மன்றங்கள் முன்குறிப்பிட்டவற்றை ஓரளவாவது நிறைவேற்ற உதவும் களங்களாக நோக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனிச்சிறப்புகள் பற்பல உள்ளன. பல திறமைகள் இலைமறைகாயாக உள்ளன. அவற்றை வெளிப்படுத்தி, வளர்த்து, அம்மாணவர் மகிழ்ச்சியாயும் பணிபுரிவதில் சுமையற்ற உணர்வும், பிறரோடு பழகுவதில் அன்பும், எளிமையும் தன்னம்பிக்கையும் கொண்டு வாழ உதவும் ஒரு களமாக இத்தகைய சங்கங்களின் செயற்பாடுகள் அமைகின்றன. மாணவரிடமிருந்தும், பிரசைகளிடமிருந்தும் இத்தகைய உயர்ந்த பண்புகளையே ஒரு நாடும், ஒரு சமூகமும் எதிபார்க்கின்றது. உங்கள் தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும் **கலைவிழா** மாணவர்களின் கலையுணர்வை மாத்திரமல்ல, தமிழ் உணர்வையும் வெளிப்படுத்த உதவும். இவ்விழாவை வடிவமைத்து சிறப்பிக்கப்போகும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

- பேராசிரியர். உமா குமாரசுவாமி
துணை வேந்தர், திறந்த பல்கலைக்கழகம்
நாவலை.

PRINCIPAL'S MESSAGE

Tamil Literary Association of Royal College is getting ready to celebrate the annual **"Kali Vizha 2003".**

I understand that the members of the Literary Association has conducted competitions at Inter-grade and Inter-School levels to maintain the high standard among the students activities of this nature will help to mould their character and the personality. Cultural programmes will promote understanding and peace among the multi religious and multi ethnic groups.

I thank the Teachers in charge, members and the organizing committee for the untiring efforts taken to organise the **"Kalai Vizha".**

I wish them all the best for a successful evening.

H. A. U. Gunasekara
Principal, Royal College

Best Wishes

from

❖

❖

❖

P. MAYOORAN

Year 12 SCI

MESSAGE FROM THE ASST. PRINCIPAL, CO-CURRICULAR ACTIVITIES

Kalai Vizha function is organized by the Tamil Literary Association is held annually and I thank the organizers for requesting for my message on this occasion. Tamil Literary Association by organizing the **Kalai Vizha** has paved the way to bring the aesthetic capabilities of the Tamil children into the forefront. We know the amount of hard work the organizers put in for successful completion of the event. The performers as well as the organizers are exposed for a life long experience which definitely helps in their personality development. We at Royal encourage children to take part in co-curricular activities for this purpose.

I Like to appreciate the behind the stage advice, encouragement, and guidance by Mr. S. Ratnasabapathy and Masters does.

Well done boys.

Ranjith Senanayake
Asst. Principal
Co-curricular Activities.

With Best Compliments from :

MAMUJEE & COMPANY

Dealers in Chemicals, Acids, Dyes & Waxes

123, Bankshall Street, Colombo 11.
Tel : 2342757, 2342759, 2342760,
2323094, 2421774
Telefax : 244655
E-mail : mamujee@itmin.com

MESSAGE FROM THE DEPUTY PRINCIPAL PRIMARY SECTION

I am very happy to contribute this message to the souvenir published in connection with the Annual **"Kalai Vizha"**

Royal College is unique in manyways, however it's more unique in the respect of cultural harmony. If the young children are given more opportunity of this nature they will certainly strive to be citizens of the world.

I hope next year more students of other communities will join the performances at the **"Kalai Vizha".** The primary school will be an ideal place to start such combined cultural activities.

I wish Tamil Literary Association all the best in it's future endeavours.

U. K. Attygalle
Deputy Principal

With Best Compliments from

AZHARA HOTEL
AZHARA MONEY CHANGERS
AZHARA COMMUNICATIONS

207, Galle Road
Kollupitiya, Colombo 3

பொறுப்பாசிரியரின் பொன் மனத்திலிருந்து...

தமிழிலக்கியத்தை பொறுத்த வரையில் அது இரண்டாயிரம் ஆண்டு காலப்பெருமை மிகு வரலாற்றையுடையது. அத்தமிழ் இலக்கியத்தை கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எமது றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினூடாக வளர்த்து வரும் பெருமையில் நாமும் இணைந்துள்ளோம் என்பதில் பெருமையடைகின்றோம்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் தரம் ஒன்றிலிருந்து தரம் பதின்மூன்று வரையான மாணவர்கள் பயின்று, அரங்கேற்ற இத்தமிழ் இலக்கிய மன்றம் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளாக எம் மன்றத்தின் போசகராக இருந்து வழிகாட்டி ஓய்வு பெற்றிருக்கும் அதிபர். எச்.எல்.பி. கோமஸ் அவர்கட்கும் மற்றும் பதவியுயர்வு பெற்றுச் சென்ற உப அதிபர் திரு. எஸ். பி. சேனாரத்ன அவர்கட்கும் இத்தமிழ் நயத்தினூடாக நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காலத்தின் நிதர்சனங்களை எழுத்துருவாக்கி வெளிவந்திருக்கும் இத்தமிழ் நயம், றோயல் கல்லூரியின் தமிழ் இலக்கியமன்றத்தினால் றோயல் மாதாவிற்கு சூட்டப்பட்டும் மற்றொரு அணிகலன் என்றால் மிகையில்லை. இப்பணியில் என்னோடு கைகோர்த்த அதிபர், பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் மற்றும் தமிழ் இலக்கிய மன்ற நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு தமழ் நயம் நுகர்ந்து மனமகிழ்வு பெற வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்

சி. இரத்தினசபாபதி

With Best Compliments from

✳

✳

✳

✳

✳

✳

✳

✳

SUMMIT INDUSTRIES (PVT) LTD.

Manufacturer and Exporter of Quality Clothing

MESSAGE FROM THE SENIOR SINHALA LITERARY ASSOCIATION

It is with great pleasure that I contribute this message of felicitation to the souvenir published to mark the annual **"Kalai Vizha 2003"**

'Kalai Vizha' is one the main festivals which is held by Tamil speaking children. A number of personalities who have come out of it can be seen in high proffesion today. It is a speciality that Tamil speaking students are much cordial with Sinhala speaking students in our School. Besides that lots of Tamil Students learn Sinhala Language and so do Sinhala Students. In fact peace which cannot normally be seen in other schools between Sinhala and Tamil Speaking students can be seen in Royal College.

The development of Tamil Literature had taken place a long time ago. Numerous Tamil books written by several educated persons are not rare today. I hope that even the present Tamil students of Royal College will be great personalities in time to come.

I. Madugoda
Teacher-in-charge
Sinhala Literary Association

With Best Compliments from

TVS

THIVYA'S

Dealers in Agro chemicals, Vegetable Seeds, Fertilizers, Lime, Water pumps, Sprayers, Sprayer Parts & Water Pump Parts

Park Road, Kandapola

Telephone: 052 2229730

Fax: 052 2229635

MESSAGE FROM THE ENGLISH LITERARY ASSOCIATION

WIth much pleasure I pen a few words to the souvenir published to mark the Tamil Literary Day.

Under the shelter of Royal College the different strands of communities are brought together. It was always one brotherhood so far.

Aesthetic interests will surely enhance the bonds between mankind in various ways.

"The world is too much with us, later or sooner....." as the poet said. Men who are busy the whole day with their work, they have no time to think about the beauty of life.

Thus, ocassion of this nature helps men to find pleasure in themselves and make them ready for enjoyment. By engaging in these meditations let our hearts grow and expand with an ever-widening love until freed from all selfish hankering hatred, passion, it embraces the whole universe with thoughtful tenderness.

Good luck in all your endeavours

M.M.S. Dias Dadagamuwa
Teacher-in-charge
English Literary Association

With Best Compliments from

V. S. P. Stores

Dealers in Cardboard, Paper, Brass, Copper, Aluminium and Metal Etc.

No. 78, Bastian Mawatha,
Colombo 11.
Mobile : 0777 884185

மன்றத் தலைவரின் மனத்திலிருந்து ...

ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம். ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !

- பாரதியார்

பைந்தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற அவாவினால் எமது மன்றமானது கடந்த 64 வருடமாக தமிழ் அன்னைக்கு விழாவெடுத்து, தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றி வருகின்றது. இதன் வரிசையில் நிகழும் சுபானு வருடம் 30-11-2003ம் ஆண்டு இனிய மாலைப் பொழுதில் இவ்விழா உங்கள் முன்னிலையில் அரங்கேறுகின்றது.

தமிழ்த் தாய்க்கு பெருமை சேர்க்கும் ஓர் முயற்சியே வேத்தியர்கள் நாம் வழங்கும் இக் கலைவிழா. றோயல் கல்லூரி, தமிழ் இலக்கிய மன்றமானது எமது கல்லூரிக்குள் மாத்திரமன்றி வெளிப்பாடசாலை மாணவர்களினதும் கலை, கலாசார பண்புகளையும் வெளிக் கொணரும் ஒரு மன்றம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இச்சந்தர்ப்பத்தில் எமக்கு பொருளுதவி, விளம்பர உதவி, சரீர உதவி, ஆலோசனை என்பன தந்து எம்மை ஊக்குவித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்"

- க. பார்த்தீபன்
மன்றத் தலைவர்

With Best Compliments from

KOTAHENA PHARMACY

Pharmaceuticals, Dispensing, Chemists, Druggists & Groceres

VAN FOR HIRE

79, Bonjean Road, Kotahena,
Colombo 13,
Sri Lanka.
Telephone: 2386009

செயலாளர்களின் செயல் மனது செப்புவது ......

"தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்" என்ற மகுடவாக்கியத்தை சிரமேற்கொண்டு இயங்கி வரும் றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தின் அயராத் தமிழ்ப்பணியில் இன்னுமொரு மைல்கல்லாம் கலைவிழா 2003ஐ எட்டியுள்ளது.

வழமை போல என்றும் புதுமை படைக்கும் பணியில் வேரூன்றிய எமது வேத்தியர்கள் இம்முறை நாம் எமது பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளை அகில இலங்கை ரீதியாக நடாத்தினோம். இப்போட்டிகளில் வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி தெற்கு, மலையகம் போன்ற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

எம்மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது கோடானகோடி நன்றிகளை தெரிவிப்பதுடன் எதிர்வரும் காலங்களில் உங்கள் பூரண ஒத்துழைப்பை தந்துதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இணைச் செயலாளர்கள்
சி. விதூஷன்
து. ஜீ. அஸ்லம்

With Best Compliments from :

Iris Colour Graphics Limited

95 Cotta Road, Colombo 8, Sri Lanka
Telephone: (+94 11) 2699219,
2698366, 2686579
Fax: (+94 11) 2698433
E-mail: iriscolr@slt.lk

Tamil Tutorial Staff

Seated L to R : Mr. S. Kirupaharan, Mrs. R. Premnath, Mrs. S. Y. M. Munaz, Mr. R. Rajasooriyar, Mr. S. Rathnasabapathy *(Deputy Principal)*, Mr. H. A. U. Gunasekara *(Principal)*, Mr. M. Kanapathipillai *(Sectional Head)*, Mrs. L. Pirabaharan, Miss S. Kathirgamathamby, Mrs. S. Mahilrajan, Mr. B. Shanmugarajah

Standing 1st Row L to R : Mrs. J. Suthakar, Mrs. L. Thavakumar, Miss A. S. Alfred, Mrs. R. Loganathan, Miss A. Selveratnam, Mrs. Misriya Nizar, Mrs. V. Saravananda, Mrs. S. A. Latheef, Mrs. P. Neelalojanan, Mrs. Ismiya Ansari, Mrs. T. Uthayakumar, Mrs. S. Selvadas, Mrs. S. Thevamalini, Mrs. S. Kajanthan, Mrs. V. Elaiyathamby

Standing 2nd Row L to R : Mr. V. Parameswaran, Mr. S. K. Sothilingam, Mr. V. Shanthakumar, Mr. B. Kirubakaran, Mr. A. Saravanan, Mr. R. M. Hayeez, Mr. S. R. Jeyakumar, Mr. C. Nadesan, Mr. S. Sivakumar, Mr. V. Selvaranjan, Dr. K. Nandakumar, Mr. K. Sri Ragavarajan

TROPII COAST HOTELS
30, Sea Avenue, Colombo 3.
(Adjoining Pan Asia Bank)
Tel : 4717171 / 5335555 Fax : 4513851
E-mail : tropii@hotmail.com

YARL PAADY RESIDENCY
51C, Amman Road, Nallur, Jaffna.
Tel/Fax : 021-2226868 / 0777-276636
E-mail : yarlpaady@hotmail.com
Web : www.yarlpaady.com

Restaurants - Rooms - Appartments

MR. S. KUGADASAN
(Pettah Agent)
DISTRIBUTOR DELMEGE LANKA (PVT) LTD.
Tel : 011-2527748

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்பு நடனம்
வரவேற்புரை
மலரும் மொட்டும்
உதய தாமரைகள்
அதிபர் உரை
நடனம் (பெங்காலி நடனம்)
மலர் வெளியீடு
பரிசளிப்பு (கல்லூரிக்குள்ளான)
விவாத அணி - அறிமுகம்
இசைநிகழ்ச்சி

இடைவேளை

பிரதம விருந்தினர் உரை
பரிசளிப்பு (பாடசாலைகளுக்குள்ளான)
மேலைத்தேய நடனம்
சமூக நாடகம்
இசை நிகழ்ச்சி
நன்றியுரை
புதுமைத்தாளலயம்
பாடசாலை கீதம்
தேசியகீதம்

PROGRAMME PARADE

Lighting of the Oil lamp
Thamil Vaalthu
Welcome Dance
Welcome Speech
Malarum Mottum
Udaya Thamaraikal
Principal Speech
Dance (Bangali)
Souvenir Release
Prize Giving (Intergrade)
Introduction of the Debate Team
Musical Programme I

Interval

Cheif Guest Speech
Prize Giving (Inter School)
Western Dance
Social Drama
Musical Programme II
Vote of Thanks
Thalalayam
College Song
National Anthem

With Best Compliments From :
A. BAUR & CO. LTD.
P. O. Box 11, 5, Upper Chatham Street,
Colombo 1.

With Best Compliments From :
SLT IDD
- Flat rate 24 hours of the day.
- Per Second billing.
- For further details please contact (01) 555 555 (office hours only.)

ABS
"Dedicated Coaching with Care"
Leader in Professional Education
39, Bullers Road, Colombo -4.
Phone : 4510101 Fax : 4512677
Email : info@absgroup.lk Web : www.absgroup.lk

ABS
"Dedicated Coaching with Care"
Leader in Professional Education
39, Bullers Road, Colombo -4.
Phone : 4510101 Fax : 4512677
Email : info@absgroup.lk Web : www.absgroup.lk

ABS
"Dedicated Coaching with Care"
Leader in Professional Education
39, Bullers Road, Colombo -4.
Phone : 4510101 Fax : 4512677
Email : info@absgroup.lk Web : www.absgroup.lk

ABS
"Dedicated Coaching with Care"
Leader in Professional Education
39, Bullers Road, Colombo -4.
Phone : 4510101 Fax : 4512677
Email : info@absgroup.lk Web : www.absgroup.lk

ABS
"Dedicated Coaching with Care"
Leader in Professional Education
39, Bullers Road, Colombo -4.
Phone : 4510101 Fax : 4512677
Email : info@absgroup.lk Web : www.absgroup.lk

ஆசிரியத்துவம் கொச்சைப்படுத்தப்படுகிறதா ?

- மா. கணபதிப்பிள்ளை
பொறுப்பாசிரியர், தமிழ்ப்பிரிவு
றோயல் கல்லூரி,
கொழும்பு - 07.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற பொன்மொழி எங்களுக்குச் சொந்தமானது. ஆசிரியன் "ஆசான்" எனவும் "உபாத்தியாயன்" எனவும் விளங்கிய பெருமை எங்களுக்குரியது. இத்தகைய ஆசிரியர்கள் சமூகத்தின் அறிவொளிகளாக விளங்கினர். ஒரு தனியாசிரியனின் தன்னலமற்ற சேவையால் முன்னேறிய பல ஊர்கள் உண்டு. காலம் கடந்தும் பல அதிபர்கள், ஆசிரியர்களின் பெயர்கள் பலராலும் பேசப்படுகிறது என்றால் ஆசிரியத்துவம் உன்னத நிலையில் இருந்ததையே அது எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் ஆசிரியன் மரணவிசாரணை அதிகாரியாகவிருந்தான். பிறப்பு இறப்புப் பதிவாளனாக இருந்தான். கிராமங்களின் சமாதான நீதிவான்களாகவும், நியமனம் பெறாத சமூகநல உத்தியோகத்தர்களாகவும் செயற்பட்டனர். கிராமங்களில் என்ன, நகரங்களில் கூட ஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் முக்கிய செல்வாக்கைப்பெற்று இருந்தன. ஆசிரியர்களும் அத்தகையப் பெருந்தன்மையுடனும், கௌரவத்துடனும், தாம் வறுமையிலும் செம்மையாக நடுநிலமை தவறாதவர்களாக வாழ்ந்து வந்தனர்.

பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள், பட்டதாரிகள், பயிற்றப்பட்டவர்கள் என்று ஆசிரியர்கள் இருந்தகாலம் பொற்காலம் ஆகும். இவர்களின் அறிவுத்தேடல்களால் அக்காலத்தில் விழிப்புணர்வு மிக்க எழுத்துக்களையும், பேச்சுக்களையும் காண முடிந்தது. வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் வினைதிறன் உள்ள நிகழ்வாக இருந்தன. பாடசாலை என்பது கிராமத்தின் "அறிவு விளக்கு" என்ற நிலையில் போற்றப்பட்டது. "பாடசாலைகளைத் திறவுங்கள் சிறைச்சாலைகளை மூடுங்கள்" என்ற கருத்தாளமிக்க சிந்தனைகள் இக்காலத்துக்கு உரியதாக இருந்தன. ஆழமான அறிவு வளம் உள்ளவன்தான் ஆசிரியனாக வரலாம் என்ற நிலை இருந்தது. அறிவுவளமில்லாதவன் ஆசிரியனாக இருக்கமாட்டான் என்ற நிலை 1970 வரை இலங்கையில் இருந்தது எனலாம். ஆசிரியன் பண்பானவனாக இருக்க வேண்டும். மாதிரி மனிதனாக இருக்கவேண்டும் என்ற காந்தியச் சிந்தனைகளை அக்காலத்து ஆசிரியர்களில் 95% வீதத்தினர் மதித்து நடந்தனர். தமது நடை உடை பாவனைகளில் மாணவர்கள் மதிக்கத்தக்க விதத்திலேயே நடந்தனர். மாணவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு, வளர்ச்சியில் தம்மால் ஆன தாக்கத்தை ஏற்படுத்தினர். பல ஆசிரியர்கள் தமது திறமையான கற்பித்தலால் தமது மாதிரியை தம்மாணாக்கரைப் பின்பற்ற வைத்தனர். பேச்சு, நடை என்பவற்றில் தன் ஆசிரியரை "போல" பின்பற்றி நடந்த மாணவர்கள் நிறையப்பேர் இருந்தனர் என்பதை எவரும் மறக்கமுடியாது.

ஆசிரியர்கள் என்போர் அறிவளவாளர்கள். அவர்களை ஓரிடத்தில் தேங்கவிட்டால் ஓரிடம்

மட்டும் அறிவு வளமுள்ளதாக இருக்கும். ஏனைய இடங்கள் அறிவில் இருட்டாகவே மாறிவிடும் என்பதை கவனத்தில் எடுத்த அன்றைய ஆட்சியாளர்கள் கஷ்டப்பிரதேசங்களில் கட்டாய சேவை என்பதை அறிமுகப்படுத்தினார்கள். இரண்டாண்டு அல்லது மூன்றாண்டு கஷ்டப்பிரதேசங்களில் வேலை செய்ததின் பின் தீவின் நகரப்புறப் பாடசாலைகளில் தகுந்த பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இளமைத்துடிப்புடனும் ஆர்வத்துடனும் ஆசிரியப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோர் பின்தங்கிய பிரதேசங்களில் செய்த சேவையால் அப்பிராந்திய மாணவர்கள் சகல துறைகளிலும் பிரகாசித்தனர். அப்பாடசாலைகளுக்கு இவ்வாறு மாறி மாறி வந்த ஆசிரியர்களால் ஆசிரியர் பற்றாக்குறையும் இருக்கவில்லை. மாணவர்களும் விரக்திக்குள்ளாகவில்லை. ஆனால் இன்று ஒரே பாடசாலையில் 25 ஆண்டு, 30 ஆண்டு என்று வேலை செய்வோரைக் கௌரவிக்கின்றோமே தவிர கஷ்டப்பிரதேச கல்வி நிலையை எவரும் கவனிப்பாரில்லை.

1970ம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கையில் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு நிலைமாறத் தொடங்கியது. சான்றிதழ் உள்ள ஆசிரிய மாணவர்கள் "தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள்" என்ற பெயரில் ஆட்ச்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதிலிருந்து ஆசிரியத்துவத்தின் தனித்துவம் படிப்படியாக கொச்சைப்படுத்தப்படத் தொடங்கியது. பின்னர் வந்த அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புக்கு ஆசிரியர்களை நியமித்தனர். ஜனசவிய ஆசிரியர், சமுர்த்தி ஆசிரியர் என்ற நிலையில் ஆசிரியர் நிலை கொச்சைப்படுத்தப்பட்டது. வறுமையை ஒழிக்க ஆசிரியர் பதவி வழங்குவது பொருத்தமானதா? என்பதை ஆசிரியத்துவத்தின் முறைமையோடு தொடர்புபடுத்தி சிந்தித்துப் பாருங்கள்.

ஆசிரியர் என்ற தொழில் சேவை தொடர்பானது. சேவை என்றால் "தொண்டு" என்று பொருள்படும். எனவே ஆசிரியன் என்பவன் தொண்டன் என்றாகும். ஆசிரியர் எல்லோரும் தொண்டாசிரியராக இருக்க, "தொண்டர் ஆசிரியர்" என்றொரு வகை ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். தொண்டர்கள் வேறு தொண்டுகள் செய்வது வித்தியாசமானது. ஆனால் ஆசிரியத்தொண்டு செய்ய ஆகக்குறைந்தது அறிவுவளம் அவர்கட்குத் தேவை. ஆனால் இந்த தொண்டர் ஆசிரிய நியமனங்களில் பல ஊழல்களும், நியமன ஒழுங்கீனமுமே அதிகரித்திருந்தனவே தவிர அவ்வாசிரியர்களின் சேமநலன் கருத்தில் எடுக்கப்படவில்லை. உதாரணமாக ஒரு பாடசாலையில் ஆசிரியர் யாருமே இல்லை என்பதற்காக தொண்டராக ஆட்சேர்க்கப்பட்டு பல ஆண்டுகள் வேலை செய்த வளமுள்ள தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட, பணிப்பாளர்களால் சிபாரிசு செய்யப்பட்டவேறு பலர் ஆசிரிய சேவையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு ஆசிரியத்துவம் பற்றி எதுவுமே தெரியாது. நிலமையைச் சற்று சிந்தியுங்கள். இது கொச்சைப்படுத்தலல்லவா?

ஆசிரியரைப் பயிற்சியில்லாமல் வகுப்பறைக்குள் நுழைய விடக்கூடாது எனப் புதிய கல்வி மறுசீரமைப்பு குறிப்பிடுகின்றது. ஆனால் எந்த ஆசிரியத்துவத்துக்கான முன் பயிற்சியுமில்லாத பலர் பாடசாலைகளில் அரசியல் தேவைகளுக்காக ஆசிரியராகிக் கொண்டு இருக்கின்றனர். இலங்கையில் ஏறக்குறைய 10,000 பாடசாலைகள் உண்டு. 200,000 (இரண்டு லட்சம்) ஆசிரியர்கள் இப்பொழுது இலங்கையில் கடமையாற்றுகின்றனர். மொத்த மாணவர் தொகை 4,400,000 (நாற்பத்திநான்கு லட்சம்) ஆகும். இந்த அடிப்படையில் நோக்கின் 22

பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றனர். இந்த நிலை தீவு பரந்த மட்டத்தில் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்தை கேட்க வேண்டியவர்கள் அதை விடுத்து தொண்டர் ஆசிரியர் தேவை என ஆசிரியத்துவத்தை மேலும் கொச்சைப்படுத்துகின்றனர்.

சில மாகாணங்களில் தேவைக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை பன்முகப்படுத்த முடியாத நிலைக்கு பொருத்தமற்ற நிர்வாகம் காரணமா? அல்லது அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற நிலை காரணம் என்பது கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

மேலும் 200,000 (இரண்டு லட்சம்) ஆசிரியர்களையும், நூறு ஆசிரிய மத்திய நிலையங்களையும் 17 தேசிய கல்விக் கல்லூரிகளையும், 16 ஆசிரியக் கல்லூரிகளையும் கவனத்தில் எடுத்து சேவையாற்றும் நோக்கில் கல்வி அமைச்சில் தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை (NATE) என்றொரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு பங்காற்றுவதுடன், ஆசிரியர்களின் சகல சேமநலன்களையும் பேணும் அமைப்பாக இது ஆரம்பிக்கப்பட்டது. பல கல்வியியல் பேராசிரியர்கள் இவ்வமைப்பு மிகச்சிறப்பாக இயங்குவதாகவே குறிப்பிட்டனர். ஆசிரியர்களின் தர நிர்ணயத்திற்கான அமைப்பு வேறொன்றும் இலங்கையில் இல்லை. தேசிய ஆசிரியக்கல்வி அதிகாரசபை ஆண்டறிக்கைகளின் படி இவ்வமைப்புக்கு கல்வியமைச்சு பெருந்தொகை பணத்தைச் செலவளிப்பதாகவும் இல்லை. செலவு குறைந்த அதிகாரமுள்ள இந்த அமைப்பு ஆசிரியர் கல்விக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்வதனால் தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறு உலகவங்கியும் விதந்துரைத்துள்ளது. ஆனால் இந்நிறுவனம் இன்று நிறுத்தப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை இதற்குப் பிரதியீடாக எந்நிறுவனம் இயங்கும் என்பதும் குறிப்பிடப்படவில்லை. அப்படியாயின் ஆசிரியர் கல்வி என்பது வெறும் கேலிக்கூத்தா? இது கொச்சைப்படுத்தல் அல்லாமல் வேறென்ன?

நிலமை இவ்வாறு இருக்க, பாடசாலை மாணவர்களுக்கு சீருடை கொடுக்கப் போகின்றோம் என்று ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. இப்பணியை ஆசிரியர்கள் மிக விசுவாசத்துடன் செய்து வந்தனர். பாடசாலைக்குப் பிள்ளை வராது இருந்தால் வரும்வரை சீருடையை வைத்திருந்து குறித்த மாணவருக்கு கிடைக்கும் வகையிலே பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் அப்பணியை முறையாகத் திட்டமிட்டு நிறைவேற்றினார்கள். பெரும்பாலும் இந்நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் தமது நிலையைத் துர்ப்பிரயோகம் செய்யவில்லை என்றே குறிப்பிடலாம். அப்படி தவறு ஏதாவது ஒரு பாடசாலையில் நிகழ்ந்திருந்தால் பொறுப்பற்ற ஆசிரிய நியமனத் தவறுதான் அதுவாக இருக்கும். ஆனால் இப்பணியை ஆசிரியர்கள் செய்வது நிறுத்தப்பட்டு கிராமச் சேவகர்களின் ஊடாக உதவி அரசாங்க அதிபர்களின் கவனத்துடன் அது வழங்கப்படும் என்று ஒருமுறையை அறிமுகப்படுத்தினர். பல மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் குறித்த படிவங்களை நிரப்பவே தெரியாது. இந்த நிலையில் பல மாணவர்கள் தமது சீருடைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை உள்ளது. விண்ணப்பித்த பின் ஒரு தினத்தில் சீருடை வழங்கப்பட்டது. அத்தினத்திற்கு போகாத பலர் விண்ணப்பப் படிவத்தைக் கொடுத்த பற்றுச்சீட்டுடன் சென்ற வருடச் சீருடை எடுக்காது இன்றுவரை பொறுத்திருக்கின்றனர். இந்தச் சீருடை வழங்கல் ஏன் பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் இருந்து எடுக்கப்பட்டது?. ஆசிரியத்துவத்தைக்

கொச்சைப்படுத்தவா? அல்லது அதிகாரப் பரவலாக்கலா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இலங்கை நிர்வாக சேவை (SLAS) உத்தியோகத்தர்களே கல்வியியல் பற்றி தீர்மானம் எடுக்கிறார்கள். அந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் தமது பணியாளர்களான கிராமசேவையாளர்கள் மீது வைத்துள்ள அபரிமிதமான நம்பிக்கையை ஆசிரியர்களின் மீது வைக்காதது துன்பகரமானது. இதுவும் ஒருவகை கொச்சைப்படுத்தலாகும் எனப்பேசப்படுகிறது. இலங்கையில் கல்வி நிர்வாகசேவை என்றொரு தனிச்சேவையும் உண்டு. இச்சேவையாளர்கள் இக்கொச்சைப்படுத்தல்களைப் பார்த்தும் பாராதவர்களாகவே இருக்கிறார்கள்.

மேலும், பாடசாலைமட்ட முகாமைத்துவம் பற்றி புதிய கல்வி மறுச்சீராக்கம் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. அண்மையில் வெளியிடப்பட்ட தரம் ஒன்று அனுமதி பற்றி தேசிய பாடசாலைகளின் மாணவர் ஆட்சேர்ப்புப்பட்டியலை துப்பறியும் பொலிஸார் பரிசீலிப்பர் என்ற செய்தி பாடசாலைகளை மேலும் கொச்சைப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. ஒரு அதிபர், முகாமைத்துவக்குழு கொண்ட ஒரு நேர்முகப்பரீட்சையின் அடிப்படையிலேயே தேசிய பாடசாலைகளுக்கு தரம் 1 மாணவர் அனுமதி நேர்முகப்பரீட்சை நடைபெறுகிறது. இதற்கென்று அமைச்சின் சுற்று நிருபம் ஒன்று அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் மாணவர் ஆட்சேர்ப்பு செய்வதில் தவறு இருக்குமானால் அமைச்சுக்கு மேன்முறையீடு செய்யலாம் என்ற நிலைதான் இதுவரை இருந்தது. இம்முறை ஏன் தொடர்ந்து பேணப்படவில்லை? பாடசாலை நிர்வாகத்தில் கொண்ட அதிருப்தியா? அல்லது பொலிஸ் திணைக்களத்தில் கொண்ட அபரிமிதமான நம்பிக்கையா? மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அதிபரின் வேலையை கிராம சேவையாளர், துப்பறியும் பொலிஸார் செய்வதுதான் பாடசாலை முகாமைத்துவத்தை வினைத்திறன் உள்ளதாக்கும் செயலா? அல்லது ஆசிரியத்துவத்தை கொச்சைப்படுத்தி கேவலமாக்கி அழித்தொழிக்கும் நிலையா? என்பது இன்று கேள்வியாக விஞ்சி நிற்கிறது.

குளவி கொடுத்த கொடை

குளவிகள் மரக்கட்டையைத் துளைவிட்டு, எச்சிலால் மரத்தூளைக் கூழாக்கி, அந்தக் கூழைத் தம் கூடுகளில் பரப்பி வைக்கும். அதன்மீது காற்றுப்பட்டதும், அது தாளைப் (பேப்பர்) போல ஆகிவிடுகிறது. ரெனே தெஅவுமுர் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். மரக்கூழிலிருந்து தாளை ஏன் உருவாக்கக்கூடாது என்பதைச் சிந்தித்தார். அதுபற்றிய தமது கருத்தை 1700 இல் வெளியிட்டார். ஆனால் இதை உடனே நடைமுறைப்படுத்த முடியவில்லை. 152 ஆண்டுகளுக்குப் பிறகே, அவரது எண்ணம் நிறைவேறியது. 1852-இல் பிரடெரிக் கெல்லர் என்ற ஜெர்மன் நெசவாளி மரம் கடையும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இந்த இயந்திரம் மரக் கூழிலிருந்து தாள் தயாரிக்கும் பிரெஞ்சு விஞ்ஞானியின் கருத்தைச் செயல்படுத்தியது. உலகில் முதலாது அச்சுத் தாளையும் உற்பத்தி செய்தது.

- அறிவியல் பண்ணை, தஞ்சை

அமைதி - அமைதி !

இவ்வாண்டு கவிஞர் வைரமுத்து விருது பெற்ற
பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் (தமிழ்நாடு)

அமைதி ! அமைதி ! அமைதி ! சூழ
ஆனந்தப்பாப் பாடுவோம் - உலகம்
அமைதி ! அமைதி ! அமைதி வாழ
அகில மக்கள் கூடுவோம் !

(அமைதி)

உயிர்கள் ஒன்றே ! உணர்வும் ஒன்றே !
உதிரம் ஒன்றே நாடுவோம் - மாந்தர்
வயிறும் ஒன்றே ! மனமும் ஒன்றே !
மாறுபாட்டைச் சாடுவோம் !

(அமைதி)

பூமி ஒன்றே ! பொழுதும் ஒன்றே !
புரட்டும் உருட்டும் ஏனடா ! - வணங்கும்
சாமி ஒன்றே ! தரணி கெடுதல்
தன்னலத்தால் தானடா !

(அமைதி)

விண்ணிடிக்கும் எண்ணம் சேர்ப்போம் !
வெல்லும் அமைதி காணுவோம் - ஒப்பில்
மண்ணில் விஞ்சும் அமைதி சமைக்கும்
மாட்சி அறங்கள் பூணுவோம் !

(அமைதி)

ஒளியும் விழியும் பகைத்தால் பார்வை
உணர்வு பிறத்தல் உண்டோ? வான
வெளியும் வளியும் பிரிந்தால் தரணி
உயிர்கள் வாழ்தல் என்றோ ?

(அமைதி)

தனித்தனி மாந்தர் தரும் இடருக்கே
தாரணிப் போர் தொடங்கவோ? - தீமை
மனித குலத்தை ஆட்டிப் படைக்கும்
வன்முறைகள் தொடரவோ?

(அமைதி)

தேசம் அனைத்தும் மாசில் பாதை
சிந்தனைகள் சமைப்போம் - உலகப்
பாசம் வளர்ப்போம் பகைமை தொலைப்போம்
பகையில் உலகை அமைப்போம்

(அமைதி)

கவிஞர் நம்மின் கடமை இதனை
கடப்பாடாகப் பாடுவோம் - உயர்ந்த
புவியில் மனித நேயம் வளர்க்கும்
புதிய பாதை கூடுவோம் !

(அமைதி)

தமிழ்ச் சங்கங்கள் ஒரு விளக்கப்பட்டியல்

	தலைசங்கம்	இடைச்சங்கம்	கடைச்சங்கம்
காலம்	கி.மு. 306க்கு முன்	கி.மு. 306 கி.பி 64	கி.பி 64 - 363
ஆண்ட அரசர்	காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 பாண்டியர்	வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திரு மாறன் ஈறாக 59 பாண்டியர்	முடத்திரு மாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 பாண்டியர்
இவருள் கவி அரங்கேற்றியவர்	எழுவர்	ஐவர்	மூவர்
தமிழாய்ந்த புலவர்	இறையனார், குமரவேள், அகத்தியர், மார்க் கண்டேயனார், கௌதமர், நிதியின் கிழவன், முரஞ்சியூர் முடி நாகனார் முதலிய 549 பேர்	அகத்தியர், தொல்காப்பியர் முதலிய அகத்தியரின் சீடர்கள், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துஷரைக்கோன், கீரந்தை முதலிய 59 பேர்	சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரனார் முதலிய 49 பேர்
இவருள்ளிட்டுப் பாடினோர்	4449 புலவர்		449 பேர்
சங்கமிருந்து தமிழாய்ந்த தலைநகர்	கடல் கொள்ளப்பட்ட மதுரை	கபாடபுரம்	உத்தர மதுரை
ஆய்ந்தறிய கொண்ட நூல்	அகத்தியம்	அகத்தியம், தொல்காபியம், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம்	அகத்தியம் தொல்காப்பியம்
பாடப்பட்டவை	பரிபாடல்கள், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை	கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல்	எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை

31.10.03

அஸீம் அ. மக்கின்,

கொழும்பு.

நலம். வாழிய நலம்

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் தமிழ் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் பொருட்டு 'தமிழ் நயம்' என்ற பெயரால் மலர் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

கல்லூரி அளவிலே தமிழ் முழக்கம் குறைந்து வருகிற காலம் இது. இந்த நேரத்தில் இத்தகைய இனிய பணியை நீங்கள் ஏற்றிருப்பது ஒரு நல்ல தமிழ்த் தொண்டே. தமிழ்நயம் மூலம் எண்ணற்ற படைப்பாளிகளை அடையாளம் காணமுடியும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் பணி சிறக்கவும், மேன்மையடையவும் வாழ்த்துகிறேன். இத்துடன் என் படைப்பு ஒன்றினை இணைத்திருக்கிறேன்.

அன்புடன்

லேனா தமிழ்வாணன்

சென்னை.

தினந் தினம் முன்னேற்றம்

- லேனா தமிழ்வாணன் -

ஓர் எழுத்தாளரை ஒரு வாசகர் கேட்டார் : "உங்கள் படைப்புகளிலேயே உங்களுக்குப் பிடித்தது எது?" எழுத்தாளர் சொன்னார் : "அநேகமாக நாளைக்கு எழுதப்போகும் கட்டுரையாக இருக்கும்." என்று.

ஒரு குடும்பத்துப் பெண்ணிடம் அவளது உறவினர் கேட்டார் : "உன் சமையலை உன் கணவர் விரும்பிச் சாப்பிட்ட நாள் எது?" அவள் சொன்னாள் : "அநேகமாக நாளைய் சமையலாக இருக்கும்". என்று.

அதற்காக இவர்கள் இருவரும் இதுவரை செய்து வந்த பணிகள் சரியல்ல என்று சொல்லிவிட முடியாது. மாறாக, நேற்றைய தினத்தைவிட இன்று சிறப்பாகச் செய்வேன். நாளை அதைவிடச் சிறப்பாகச் செய்வேன் என்பதைத் தன்னம்பிக்கையோடும், குன்றாத ஆர்வத்தோடும் சொல்கிறார்கள் என்றே நாம் பொருள் கொள்ள வேண்டும்.

இப்படி நம் பழைய சாதனைகள் தோற்றுப் போகும் வகையில் தினந்தினம் மேன்மேலும் முன்னேறுவதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும். பந்தை இதற்குள் போட்டால் கோல்; எல்லையைத் தாண்டிச் செலுத்தினால் சிக்ஸர் என்ற ஒரு நோக்கும், ஓர் இலக்கும் இருக்கின்றன. விளையாட்டிலேயே இது இருக்கும் போது வாழ்வில் இவையிரண்டும் இல்லாமல் போகலாமா?

இது தொடருமானால் உண்ணல், உறங்கல், கழித்தல் என்னும் முத்தொழிலைச் சரிவரச் செய்து வரும் மற்ற இனங்களுக்கும் மனித இனத்திற்கும் இடையே வேறுபாடு இல்லாமல் போய்விடும். நம் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பவை அடிப்படையில் இரண்டே இரண்டாகத் தான் இருக்க முடியும்.

ஒன்று நம் மனம்.

சிலருக்கு இலட்சியங்கள் இருக்கும். முன்னேற வேண்டும் என்ற விருப்பம் இருக்கும். ஆனால் மனத்தளவில் தைரியம் இருக்காது. உண்மையான ஆர்வம் இருக்காது. தன்னம்பிக்கையோ துடிப்போ இருக்காது. எதற்கெடுத்தாலும் தயங்குவார்கள்.

மற்றொன்று சூழ்நிலை.

வறுமை, குறுகிய வாய்ப்புகள், எண்ணிலடங்கா விரோதிகள், முரண்பாடு மிக்க மனிதர்களிடையே வாழ்தல் ஆகியவை சூழ்நிலைத் தடையாக இருந்து ஒருவரை முன்னேற விடாமல் செய்யும்.

ஒன்று மட்டும் உறுதி!

தனக்குள் இருக்கும் மனக்குறைகளைப் புரிந்து கொண்டு அவற்றை அழுத்தப் புதைத்துவிட்டுத் தன்னிடமுள்ள திறமைகளைப் புரிந்து கொண்டு அவற்றை வெளிக்கொணரும் வகையில் ஒருவர் விழிப்பும், சுதாரிப்பும் அடைந்து விட்டால் அவர் முன்னேறுவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

அதை விட்டுவிட்டு நான் ஒரே நாளில் முன்னேறியாக வேண்டும் என விழைவது வீண் கனவு.

நேற்று நம்மிடமிருந்த குறைகள் இன்று நம்மிடம் இருக்கக் கூடாது. அவை தினந்தினம் களையப்பட வேண்டும்.

நம்முடைய தினச் செயல்கள் ஒவ்வொன்றும் நம்மை முன்னேற்றப் பாதையில் சேர்க்க வேண்டுமே தவிர, பின்னோக்கிச் செலுத்துவதாக இருக்கக்கூடாது.

இவற்றை மனத்தில் கொண்டு செயல்பட்டால் முன்னேற்றத்திற்கு நிச்சயம் உத்தரவாதம் உண்டு.

தமிழ் பேசுவோரே, தெரிவீர் தமிழ் !

-தமிழ்மணி மானா மக்கீன்-

உலகின் பல்வேறு நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் சந்ததியினர் அன்னை தமிழை எழுதவோ பேசவோ தெரியாதவர்களாக மாறிவிடுவார்களோ என்ற அச்சத்தில் ஆதங்கம் மிகக் கொண்டு - கவலைப்பட்டு,

"தமிழ்பேசுவோரே தெரிவீர் தமிழ்" - எனக் கூவிக்குரலிடுகிறேன் "தமிழ் நயத்தில்".

உலகத்துப் பல நாடுகளில் வாழும் தமிழ் பேசுவோரை தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடுமே ஒருங்கிணைக்க வல்லவை.

இதனால் இன்றைய இளைஞர்களிடம் தமிழ்மொழி குறித்தும் தமிழ்ப்பண்பாடு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் இன்றியமையாதது.

இதை எப்படி செய்வது ?

என் பாணியில் தந்திட விழைகின்றேன்.

பேரறிஞர்கள் மட்டுமே தெரிந்து வைத்திருக்கின்ற சிலவற்றை சாமான்யர்கள் அறிந்திருக்கவேண்டும் என்பதில் எனக்கு அளவிடற்கரிய ஆசை.

தொடர்ந்து படித்திடுக - கீழே வைத்திடாமல் !

வில்லியம் டெய்லர் என்பார் சொன்னார் : "மனிதனால் பேசப்படும் மிகவும் வளமார்ந்த, பண்பட்ட, திருந்திய மொழிகளுள் தமிழும் ஒன்று" -என்று.

வின்சுலோ பாதிரியாரோ "கிரேக்கத்திலும் பண்பட்ட துல்லியமான மொழி தமிழ்; எழுத்து, பேச்சு இருவகை வழக்குகளில் இலத்தீனை விடவும் வளமிக்க மொழி தமிழ்" என்றார். (இவர்தம் ஆங்கில-தமிழ் அகராதி புகழ் பெற்ற ஒன்று)

தமிழ் எழுத்துக்கள் சிந்துவெளிகாலத்தில் சித்திரை முத்திரை எழுத்துக்களாக இருந்து அந்நாகரிக அழிவிற்குப் பின் அசோகர் காலத்தில் "தமிழ்பிராமி" எழுத்துக்களாக மாறி "தமிழி" என்று வழங்கியது. (காலம் கி.மு. 3 இலிருந்து கி.பி. 3 வரை எனலாம்.)

பின் தமிழி, தமிழ் என்று மாறி தமிழ்நாட்டில் முதன்மை மொழியானது. இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதினெட்டு அட்டவணை மொழிகளுள் ஒன்றாயிற்று.

அதே சமயத்தில் எம் தாயகத்திலும், மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு ஆகிய நாடுகளிலும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளுள் ஒன்று.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் மொத்தம் ஆறு கோடியே பன்னிரண்டு இலட்சம்பேர் தமிழ்மொழி பேசுவோர்.

இத்தோடு ஏறத்தாழ முப்பத்தைந்து நாடுகளில் மொத்தம் 94.77 கோடிப்பேர் தமிழ்பேசுவோர்!

இவர்களுள் முஸ்லிம்களும் மிகக் கணிசமானோர்.

இன்று உலகிலுள்ள பதினான்கு நாடுகளிலுள்ள 27 பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

தமிழைப்பற்றியும், தமிழ்க்கலைகள், பண்பாடுகள், இலக்கியங்கள் பற்றியும் தெரிய வைக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ் பயிலப்படும் நாடுகள் : இந்தியா, இலங்கை, பிரான்சு, கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி, ருசியா, இங்கிலாந்து, ஒலந்து, வடஅமெரிக்கா, சுவீடன், மலேசியா, சிங்கப்பூர், செனகல், செக்கோஸ்லவாக்கியா, கிழக்காப்பிரிக்கா.

உலகமொழிகளில் முக்கியமானவற்றின் மொத்த எண்ணிக்கை சுமார் அறுநூறு. இதில் இலக்கண, இலக்கியம் உடைய மொழிகள் சுமார் முந்நூறு. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறே ஆறுதான்.

தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரீஸ் ஆகியனவே ஆகும். இன்று இலத்தீனும் ஹீப்ருவும் இறந்த மொழிகள். இருந்தும் இஸ்ரேல், யூதர், ஹீப்ருவுக்கு உயிரூட்டும் முயற்சியில் உள்ளர். ஆனால் தமிழ் நாட்டில் தமிழுக்கு சங்கு ஊதுகின்றனர்.

தமிழக இளைஞர்கள் இரண்டு தமிழ்பேசி இருபது ஆங்கிலத்தைப் புரள விடுகிறார்கள்.

"பசங்கள்" என்றொரு படம் ("பாய்ஸ்") வந்தபிறகு தமிழ்ப் பண்பாட்டுடன் தமிழனின் இடத்தைத் தேட வேண்டியிருக்கிறது.

"தமிழே உலகின் முதன்மொழி" என்று நிறுவிய தேவநேயப் பாவாணருக்கு நினைவு மண்டபம் நிறுவப்பட்டுள்ள மௌண்ட்ரோடு இடத்திற்கு முன்னேயே "ஆடையற்ற ஓட்டம்" ஓடுகிறான் தமிழ் பயல் !

அவனிடம் தமிழ் அன்னையை நினைவூட்டுவது எப்படி? அவளது பண்பாட்டைச் சொல்வது எப்படி?

போகட்டும் ! (அதுதான் படமே போய்விட்டதே !) நாம் பதிவுகளைப் புரட்டுவோம். ஓர் இனத்தை அழிக்கவிரும்புவோர், அந்த இனத்தின் மொழியை ஒழித்துவிட்டால் போதும். எண்ணம் எளிதில் நிறைவேறிவிடும். பிரான்சு நாட்டில் வாழ்ந்த "கால்" இனத்தவர் தம்மொழியை ஒதுக்கி பிரெஞ்சுவை ஏற்றனர். விளைவு அந்த் இனமே மெல்ல அழிந்தது.

மேற்கண்ட இனத்தவர் போலவே அமெரிக்காவில் இன்றுவாழும் கறுப்பின மக்கள் (நீக்ரோ) தம்மொழி துறந்தனர். தனித்தன்மை இழந்தனர்.

இன்னுமின்னும் தகவல்கள் உண்டு. இவை உணர்ந்து தான் நூறு ஆண்டுகளில் மெல்லச்சாகும் தமிழ் என்று மேலை ஆய்வாளர்கள் சூளுரைக்கின்றனர்.

உண்மை ! ஒரு மொழி அந்த இனத்தின் மூலமே, அதுவும் இளைஞர் சமுதாயத்தின் வாயிலாகவே அழிக்கப்பட்டால் இனத்தின் ஒற்றுமை, சிறப்பியல்பு, பண்பாடு யாவும் அடியோடு அழிந்து போகும், அழிந்தே போகும் !

அயல் நாடுகளில் 99 விழுக்காடு தாய்மொழியே ஆட்சி மொழியாக உள்ளது. ஜப்பான் நாட்டில் ஜப்பான் தவிர வேறு மொழிக்கு சிறப்பிடம் இல்லை. பிரான்சில் தாய்மொழிக்கே தலைமை நிலை இருக்கின்றது. வேற்று மொழி திணிப்பு எதிர்க்கப்படுகிறது.

முன்னைய கிழக்குப் பாகிஸ்தானில் வங்கமொழியே மக்களின் கல்வி மொழியாக நிலை பெற்றிருந்தது. ஆனால் தாய்மொழியை வெளியேற்றி விட்டு பாகிஸ்தானின் ஆட்சி மொழியான உருது திணிக்கப்பட்ட போது போராட்டம் வெடித்தது ! முஜிபுர் ரஹ்மான் என்றொரு ஒப்பற்ற

தலைவர் பலிகடாவானார். முடிவில் கிழக்குப் பாகிஸ்தான் மறைந்தது, பங்களாதேஷ் பிறந்தது.

தமிழ் மக்களிடையே மேல்நாட்டு மருத்துவம் பரவ எண்ணியவர் ஓர் அமெரிக்கப் பாதிரியான டாக்டர் கிறீன். தமிழினை அறியாத இவர் தமிழைப்படித்துக் கலைச்சொல்லாக்க முறைகளைத் திட்டமிட்டு வகுத்துப் புத்தகம் எழுதி (அல்லது எழுத வைத்து) சுமார் 140 ஆண்டுகளுக்கு முன் முப்பத்திமூன்று மாணவர்களுக்கு தமிழில் மருத்துவம் கற்பித்துள்ளார்.! நினைவில் வையுங்கள், அன்று அந்நியர் ஆட்சியில் அவர்களுக்கும் அவர்கள் மொழிக்கும் அடிமைப்பட்டுப் போயிருந்தோம் நாம் !

டாக்டர் கிறீன் அவர்களது "மொழிப்புரட்சி" வடபுலத்திலேயே நிகழ்ந்தது என்பது நான் கண்டறிந்த தகவல்!

இன்னொருவர் டாக்டர் ஜீயூ. போப் என்ற ஆங்கிலேயர் தமிழ் கற்று அதில் தம்மை முழுமையாக இழந்தவர். தம் கல்லறையில் ஒரு வாக்கியத்தைப் பதிக்கும்படி உயில் எழுதி வைத்தார் !

அந்த வாக்கியத்தை வாசியுங்கள் இங்கே ! "ஒரு தமிழ் மாணவன் இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறான்" !

உடம்பே புல்லரிக்கிறது. இலண்டன் ஒக்ஸ்போடின் "செயின் செபல்கள் செமெட்ரி" சேமக்காலை இருக்கும் வால்ட்டன் தெருவில் உள்ள ஒரு கல்லறையில் ஓய்வுறக்கம் கொண்டுள்ளவரைத் தரிசித்த இலண்டன் தமிழர்கள் எத்தனை பேர்? இதயங்களைத் தொட்டுச் சொல்லட்டும்.

மூவாயிரம் ஆண்டுகளாக இடைவிடாமல் தமிழ்பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருப்பதால் தமிழில் ஓர் இலட்சத்திற்கும் மேல் சொற்கள் உள்ளன. "அரி" என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் 109 கருத்துக்கள் உண்டு. பூவின் ஒவ்வொரு நிலையையும் காட்ட அரும்பு, போது, மலர், அலர், வீ, செம்மல் ஆகிய ஆறு சொற்கள் உள்ளன. ஆங்கிலத்திலோ பட்(Bud) ஃப்ளவர் (Flower) ஆகிய இரண்டுக்கு மேலில்லை ! பெண்களின் பலவகைப் பருவங்களை விளக்க பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை ஆகிய ஆகிய ஆறுவகைப் பெயர்கள். ஆங்கிலம் இரண்டை மட்டுமே கொண்டுள்ளது. (Girl, Women)

கற்களில் செதுக்கப்பட்ட காலத்திலிருந்து கணினியில் பயன்படும் காலம் வரை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் தமிழ் ஏறத்தாள பத்துமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் உலகமொழிகளில் கணினியின் பயன்பாட்டிற்கு வசமாக அமைந்துள்ள ஆசிய (இந்திய) மொழி தமிழ் என இந்திய அறிவியலாளர்கள் சங்கம் சான்றுரைத்துள்ளது.

இன்று உலகத்தமிழர்களுடனான தொடர்புச் சாதனமாக தமிழ் இணையம் உள்ளது. உலகத் தமிழர்களை இணைக்கும் பாலமாகவும் தமிழர்களை தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்கும் சாதனமாகவும், உலகச் சமுதாயத்தை இணைக்கும் தகவல் தொழில் நுட்பமாகவும் இருக்கிறது. ஒரு புரட்சியின் தொடக்கமாகவும் ஆங்கிலத்திற்கு நிகராகவும் அமைந்துள்ளது. ஆசியாவிலேயே பன்னாட்டு தமிழர்களும் தமிழைத் தகவல் புரட்சியின் ஆற்றல் மிகு கருவியாகப்பயன்படுத்தி வருகிறார்கள்.

கணினித்துறையில் பிற இந்திய மொழிகள் இடம்பெறு முன்னர் முன்தோன்றிய

மூத்தமொழி என்ற பெருமையுடன் "தமிழ்" கணினிப் பயணம் தொடங்கித் "தமிழ் இணையம் 99" என்ற தமிழோசை இன்று இனிமையாக ஒலிக்கிறது.

தமிழ் தொடர்பான இணையத்தளங்கள் 3000 வரை உள்ளன. திருக்குறள், கம்பராமாயணம், பாரதிதாசன், கண்ணதாசன், டாக்டர் கலைஞர் ஆகியோரின் படைப்புக்கள், திரைப்படங்கள், நாளேடுகள், வார இதழ்கள் இணையத்தில் உள்ளன.

பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் (Pencilvenia University) அதன் வலை மனையில் (Website) தமிழை பேச்சு நிலையில் கூட கற்றுத் தருகிறது ! பேசிக் காட்டுகிறது.

இதுவரை நான் எழுதியவைகளைத் தப்பித் தவறிப்படிக்கும் சந்தர்ப்பம் பெற்ற இளைய தலைமுறையினர் இங்கிருந்தாலும் சரி, புலம் பெயர்ந்திருந்தாலும் சரி, தமிழ் தெரிந்தவர்களிடம் தமிழிலேயே நான்கு வார்த்தை பேசுங்கள்! வேண்டவே வேண்டாம் வேற்று மொழி.

எதிர்காலத்தில் உங்களுக்கு ஒரு மகனோ, மகளோ பிறக்கலாம். ஆனா, ஆவன்னா என அரிச்சுவடியை அந்தப்பிஞ்சுக்கு அன்பளியுங்கள்.

ஏனெனில் மொழி உணர்வும் அறிவும் வளர அன்னை மொழியை இளம் பருவத்தில் ஊட்டிவிடுதலே சிறப்பு. கற்பனா சக்தி, சிந்தனை ஊற்று, எண்ண வெளிப்பாடு ஆகியன தாய்மொழி மூலமாகவே வெளிப்படக் கூடியவை.

நீங்கள் புலம் பெயர்ந்திருந்தால் அல்லது பெயர முயன்று கொண்டிருந்தால் தமிழ் இணையப் பல்கலைக்கழகமும், தமிழ்ப்பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் தமிழ்ப்படிப்புப் பிரிவுகளை நன்கு பயன் படுத்திக்கொள்க. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனமும் உதவும்.

வாழ வைப்போம் தமிழை !

சரியும் பிழையும் தமிழில் !

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
தேனீர்	தேநீர்	நடத்துனர்	நடத்துநர்
அருகாமையில்	அருகில்	பண்டகசாலை	பண்டசாலை
இயக்குனர்	இயக்குநர்	மனசு	மனம்
இன்னாள்	இந்நாள்	முகர்ந்து	மோந்து
உத்திரவு	உத்தரவு	முயற்சித்தான்	முயன்றான்
எண்ணை	எண்ணெய்	முழுங்கு	விழுங்கு
ஒருத்தன்	ஒருவன்	முன்னூறு	முந்நூறு
ஒருவள்	ஒருத்தி	முந்நாள்	முன்னாள்
கருப்பு	கறுப்பு	வரட்சி	வறட்சி
சுவற்றில்	சுவரில்	வென்னீர்	வெந்நீர்
சிலவு	செலவு	வெண்ணை	வெண்ணெய்

இலங்கையின் முதற்தர வானொலி

No. 1 Super Hit Music Station

SOORIYAN FM

சூரியன் FM

தமிழ் பேசும் மக்களின்
அசைக்க முடியாத அலைவரிசை

A | B | C

Radio Network

Asia Broadcasting Corporation (Private) Ltd.

35th Floor, East Tower, World Trade Centre,
Echelon Square, Colombo 1, Sri Lanka.

அறிவுப் புரட்சியில் அற்புதங்கள் நிகழ்த்தத் தகுதி பெறுங்கள் !

ப. ஸ்ரீ. இராகவன்.

கட்டுரையாளர் ப. ஸ்ரீ. இராகவன் இந்திய நிர்வாகத் தொண்டில் மாநில, மத்திய அரசுகளில் தலைமைப் பதவிகளை வகித்து விட்டு ஓய்வு பெற்றவர். ஐக்கிய நாடுகளின் ஆலோசகராகவும், அமெரிக்க நாடாளுமன்றத்தின் சிறப்பு அழைப்பாளராகவும் இருந்திருக்கிறார். அகில உலக ஆங்கிலக் கவிகள் மன்றத்தின் உறுப்பினர்.

படிப்பு முடிந்த பின் நுழைய இருக்கும் வாழ்க்கையைத் தம் கனவுகளுக்கேற்ப நிர்மாணித்துக் கொள்வது எப்படி என்ற கேள்வியும் அவ்வப்பொழுது அவர்களையும், அவர்களது தாய், தந்தையர்களையும் அச்சுறுத்திக் கொண்டிராமல் இருக்காது. அவர்கள் சிந்தனையைத் தூண்டுவதற்காக எழுதிய கட்டுரை இது.

நேற்றைய, இன்றைய நடப்புகளை வைத்து வருங்காலத்தை உருவகப்படுத்திக் கொள்ள முடிவதோடல்லாமல் வருங்காலத்தையே உருவாக்கவும் முடியும். எதிர்கால இயல் (Futurology) என்று மேல் நாடுகளில் 40 ஆண்டு காலமாகப் பிரபலமாகிவிட்ட ஒரு துறையின் அடிப்படையும் இதுதான். அதில் பங்கு கொண்டவன் என்ற முறையில் இப்பொழுதிருக்கிற உலகின் போக்குகளைப் பார்த்து நாளைய யுகத்தின் தீர்மையை எவ்வாறு கணிக்கலாம் என்று சிறிது விளக்க முயல்கிறேன்.

மின்னல் வேக மாற்றங்கள் :

வருங்கால யுகம் தொழில்நுட்பப் புரட்சிகளாலான மாற்றங்களைச் சந்திக்கப் போகிறது. அந்த மாற்றங்களும் மின்னல் வேகத்தில் நிகழப் போகின்றன. தகவல் தொழில்நுட்பம் தவிர ஜீவாதார அணுவியல், பை(B)யோ டெக்னாலஜி நேனோ (Nano) டெக்னாலஜி என்பவை எல்லாம் உலகின் எல்லா நடவடிக்கைகளையும் ஆக்கிரமித்துக் கொள்ளப் போகின்றன. எந்தவொரு பொருளையும் மற்ற எந்த பொருளாகவும் மாற்றலாமென்ற வரை அறிவியல் முன்னேறப் போகிறது. பேச்சுக்காக, உருளைக்கிழங்கை மாதுளம் பழமாகவும், முயலை அணிலாகவும், தங்கத்தை மரமாகவும் வேண்டுமானால் தகரமாகவும் மாற்ற முடியப் போகின்றது. நிலையாக ஒன்றும் இருக்கப் போவதில்லை என்பதைத் தவிர வேறொன்றும் நிலையாக இருக்கப் போவதில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் ஓரிடத்திலிருந்து மறைந்து இன்னோரிடத்தில் இருப்பது சாத்தியமாகப் போகிறது.

பௌதிகவியலில் ஒரு நொடியில் 3 லட்சம் கிலோ மீட்டர் செல்லக்கூடிய ஒளியின் வேகத்தை மிஞ்சிய வேகம் கிடையாது என்று சொல்லிக் கொண்டிருந்தனர். இப்பொழுது அப்படியொரு தடையில்லை என்று கண்டு பிடித்திருக்கின்றனர். மனோவேகம் என்பது இலக்கிய நயத்தோடு நிற்காமல் அன்றாட வாழ்க்கையின் அம்சமாகி விடலாம். அப்படி ஆகிவிட்டால்

பூமியின் மக்கள் மற்ற கிராமங்களில் குடியேறுவதும் ஒரு கிரகத்தில் இருந்து இன்னொரு கிரகத்திற்குப் போக்குவரத்தும் சா்வ சாதாரணமாகிவிடும். பூமியிலிருந்து 30 ஆயிரம் - 40 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் ஆகாயத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு செயற்கைச் சூரியனிலிருந்து ஒளி கிடைக்குமாறு செய்து இரவையே பகலாக்கி விட முடியும்.

இதையெல்லாம் கேட்டு உங்களுக்குச் சிரிக்கத் தோன்றலாம். ஆனால், யோசித்துப் பாருங்கள். நூறு ஆண்டுகளுக்கு முன் உங்கள் தாத்தாவிடமோ கொள்ளுத்தாத்தாவிடமோ உலகத்தில் எந்தவொரு சமயத்திலும் 500 விமானங்கள் ஒவ்வொன்றும் 400 பேர்களை ஏற்றிக் கொண்டு 600 மைல் வேகத்தில் பறந்து கொண்டிருக்கும். உங்கள் வீட்டிலேயே சௌகரியமாகப் படுத்துக் கொண்டிருக்கலாம்; கடை, கண்ணி, தெரு, ரயில், பேருந்து விமானம் - எங்கிருந்து வேண்டுமானாலும் யாருடன் வேண்டுமானாலும் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கலாம்; இணையத்தின் மூலம் பொருள்கள் விற்றல் - வாங்கல், கோடிக்கணக்கில் பணம் பட்டுவாடா செய்யலாம்; ஆயிரக்கணக்கான மைல் தூரத்தில் உள்ள நண்பர், உறவினருடன் அவரைத் கணினித் திரையில் பார்த்துக் கொண்டே உரையாடலாம்; சந்திரனில் மனிதன் நடமாடலாம்; என்றெல்லாம் சொல்லியிருந்தீர்களானால், உங்களைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே அடைத்திருப்பார்கள்

வருங்கால யுகத்தில் நடக்கக் காத்திருக்கும் தொழில்நுட்பப் புரட்சிக்கு முதன் முதலில் நாம் நம்மை மானசீகமாகத் தயார் பண்ணிக் கொள்ள வேண்டும். சாத்தியமில்லாததென்று ஒன்றும் இருக்கப் போவதில்லை என்று துணிதல் வேண்டும். இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளேயே பெரிய பெரிய கட்டடங்களுக்கான அவசியமிருக்கப் போவதில்லை; அவரவர் வீடுகளில் இருந்து கொண்டே அரசுப் பணிகள் மற்றும் தொழில்களை நிர்வகிப்பதோ, கல்வி கற்பதோ, கல்வி கற்றுத் தருவதோ, தொடர்புகள் கொள்வதோ சுலபமாகக் கைகூடப் போகின்றது.

தேவையான குணங்கள் :

சொந்த வாழ்க்கையானாலும், எந்தவொரு அமைப்பின் நிர்வாகமானாலும், அதன் எதிர்காலத்தை விருப்பப்படிப் படைப்பதற்கு வேண்டியவற்றில் முக்கியமான குணங்களில் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம். எல்லாவற்றிற்கும் முதலாக நிற்பது ஒழுக்கம். இந்த ஒரு சொல்லினுள் சட்ட ஒழுங்கை மதித்தல், கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு மற்றும் நன்னெறிகளைப் பேணுதலும் அடக்கம்.

அடுத்து வேண்டியது விடாமுயற்சி, "ஊழையும் உட்பக்கங் காண்பர், உலைவின்றித் தாழாதுஞற்றுபவர்" என்றார் திருவள்ளுவர். இடையூறையஞ்சாமல், எதிர்ப்பால் மனந்தளராமல், தடைக்குத் தடை போடும் சாமர்த்தியமுடையாராயிருத்தல் அவசியம். இதைக் குமர குருபர்-

மெய்வருத்தம் பாரார், பசி
நோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார் - செவ்வி

அருமையும் பாரார், அவமதிப்பும்
கொள்ளார்,
கருமமே கண்ணாயினார்

- என்ற வெண்பாவில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தெள்ளத் தெளிவாக கூறி விட்டார்.

மூன்றாவது : விழிப்புணர்ச்சி, அதாவது, தன்னுடையவும், தன்னுடன் போட்டி போடுபவருடையவும் பலங்கள், பலவீனங்கள்; எழக்கூடிய வாய்ப்புகள், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தகுதிகள், எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சவால்கள், அபாயங்கள் அவற்றை வெற்றிகரமாக முறியடிக்கத் தேவைப்படும், ஏற்பாடுகள் - இவற்றையெல்லாம் கூர்மையாகத் தெரிந்து வைத்திருத்தல், இதில் தொழில்நுட்பப் புரட்சிகளுடன் தோது கொடுத்துச் செல்லும் திறமையும் சாரும்.

நான்காவது : துணிவுடைமை, மேலை நாடுகளின் வளர்ச்சிக்கு மையமான காரணமென்னவென்று என்னை கேட்டால், அது அந்நாட்டு மக்களின் துணிச்சலோடு கலந்த செயல்பாடாகும். அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும். புதுப் புது சாதனைகளைச் சாதிக்க வேண்டும், இயற்கையின் ரகசியங்களை உடைக்க வேண்டும், நீர், நிலம், விண் எல்லாவற்றிலும் தம் முத்திரையைப் பதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தாலுந்தப்படுபவர்கள் அவர்கள், வட துருவம், தென் துருவம், முன்பின் தெரியாத, அபாயங்கள் நிறைந்த, நிலப்பரப்புகள் என்றெல்லாவற்றிலும் துறுதுறுவென்று அலைந்து தம் ஆதிக்கத்தை நாட்டிக் கொண்டவர்கள். நோய்களுக்கு மாற்று கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், நோய்களின் விஷக் கிருமிகளைக் கூடத் தம் உடலுக்குள்ளேயே ஊசி மூலம் செலுத்திக் கொண்டு பரிசோதனை செய்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் கப்பல்களும் அவற்றிலிருந்த, அல்லது அவற்றைச் செலுத்துவதற்கான, வசதிகளும் மிருகங்களை அடைக்கும் கூண்டுகளை விடக் கேவலமாக இருந்த போதிலும், அவர்கள் வட, தென் அமெரிக்காக்கள் என்ன, ஆஸ்திரேலியா என்ன, இந்தியா, கிழக்கிந்தியத் தீவுகள் என்ன, ஐஸ்லாண்ட், க்ரீன்லாண்ட் என்ன, என்று நீண்ட, கடினமான பிரயாணங்கள் மேற்கொண்டனர். இன்றும் கூட அவர்கள் பல இன்னல்களைப் பொருட்படுத்தாமல் அபாயகரமான இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்யும் துணிவை நாம் தொலைக்காட்சியில் Discovery, National Geographic போன்ற ஒளிபரப்புகளில் காணலாம்.

எதிர்காலத்தை நம் விருப்பம் போலச் சமைத்துக் கொள்ள வேண்டியதற்கான ஐந்தாவது குணம்: சிந்தனா சக்தியோடு கூடிய அலசல் திறன், அதாவது, எது, யார், ஏன், என்ன, எங்கே, எப்படி, எப்பொழுது என்ற ஏழு கேள்விகளின் உதவியுடன் தீவிரமாக எந்தப் பிரச்சினையையும் அணுகுவது. தெஸ்காட்டே என்ற தத்துவஞானி இதைத்தான் "நான் சிந்திக்கிறேன், ஆகையால் உயிர் வாழ்கிறேன்" என்று சொல்லிப் போனான். இதன் பொருள் சிந்தியாதவன் செத்தவன் என்பதாகும். இதுவும் மேலையை நாட்டினரிடம் தான் வேண்டிய அளவில் காணப்படுகிறது.

ஆறாவதாக இருக்க வேண்டியது : முன்னேற்றப் பாதைகளை வகுத்துக் கொள்ளும் நுண்ணறிவு, வாழ்நாளில் எந்தெந்த கட்டத்தில் என்னென்னதைச் சாதிக்க வேண்டும் என்ற தெளிவான குறிக்கோள்கள் அல்லது மைற்கற்களைப் பதித்துக் கொண்டு அவற்றை நோக்கி

ஏறு போல் பீடு நடை போட்டு முன்னேறும் உறுதி. இதைத்தான் வள்ளுவர், "ஞாலங்கருதினம் கைகூடும், காலங்கருதி இடத்தாற் செயின்" என்றார். அந்தக் குறிக்கோள்கள் விண்ணைத் தொடுவனவாக இருக்கவேண்டு மென்பதில்லை. பரீட்சையில் இத்தனை மதிப்பெண்கள் எடுப்பேன், தொழிலில் இத்தனை லாபம் பெறுவேன் என்ற சின்ன சின்ன ஆசைகளும் குறிக்கோள்களாக இருக்கலாம். அல்லது கல்பனா சாவ்லா என்ற விண்வெளி வீராங்கனை மாதிரி, வானளாவிய குறிக்கோளையும் தன்முன் வைத்து வெற்றி காணலாம். பெரிய கனவுகள் காண்பதில் தவறில்லை. ஏனென்றால் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அடிக்கடி வலியுறுத்துகிற மாதிரி, கனவுகள் தான் அநேக சமயம் சாதனைகளுக்குத் தூண்டுகோலாகின்றன. எவர் நினைத்ததை அடையும் திண்மையை வளர்த்துக் கொள்கிறாரோ, அவர் தனக்குச் சாதகமான எதிர்காலத்தையும் உண்டாக்கிக் கொள்பவராகிறார்.

சில சமயங்களில், நம் முன்னிற்கும் ஒரு சவாலைப் பற்றித் தீவிரமாக, இடைவிடாது நினைத்துக் கொண்டிருந்தாலே அதை வெல்வதற்கான வழி மனதில் உதித்து விடுகிறதென்பது பலருடைய நேரிடையான அனுபவம்.

யாரோ சொன்னவை ....
யாருக்கும் பொருந்துபவை !

✦ **கற்றுக் கொள்ள விருப்பம் இல்லாதவன், கற்றுக் கொண்டதைப் புரிந்து கொள்ளாதவன், புரிந்து கொண்டதைப் பிறருக்குச் சொல்லி விளக்கத் தெரியாதவன், விளக்கத் தெரிந்த பின் அதன்படி நடக்கத் தெரியாதவன் - இவர்களுக்கு நான் கற்றுக் கொடுக்க மாட்டேன்.**

✦ **கற்றுக் கொள்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன. வெற்றி அடைந்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுதல், தோல்வி அடைந்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுதல், முதலாமவர், "என்ன செய்ய வேண்டும்" என்பதையும். இரண்டாமவர். "என்ன செய்யக்கூடாது" என்பதையும் கற்றுக் கொடுக்கிறார்கள்.**

✦ **உலகில் மூன்று தரமான மனிதர்கள் உள்ளனர். தங்களது அநுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்பவர்கள் - இவர்கள் அறிவாளிகள். பிறரது அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்பவர்கள் - இவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள். தங்களின் அனுபவத்திலிருந்தோ பிறரின் அனுபவங்கள் மூலமோ பாடமே கற்றுக் கொள்ளாதவர்கள் - இவர்கள் தான் முட்டாள்கள்.**

இயக்குநர் மணிரத்தினம் "முத்தமிட்ட" நம்மவர் கதை !

ஒரு பொறியியலாளராக ஈராக் முதற்கொண்டு இந்தோனேசியா வரை பணிபுரிந்த "சுதாராஜ்" என்ற சி. இராஜலிங்கம் அவர்கள் படைப்பிலக்கியத்துறையில் 70களில் அடியெடுத்து வைத்தவர். புகழ்பெற்ற "சிரித்திரன்" சஞ்சிகையில் ஆசிரியர் அமரர் சிவஞானசுந்தரம் கண்டெடுத்த எழுத்தாளர். முதல் சிறுகதைத் தொகுப்பிலேயே ("கொடுத்தல்") சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற போதிலும் "ஆனந்த விகடன்" தனது சிறுகதைப்போட்டியில் "அடைக்கலம்" மூலம் அடையாளப்படுத்தி, பரிசளித்து வைர விழாவைக் கொண்டாடிய பொழுதே (1991) இலக்கிய உலகம் இவரை ஏறிட்டுப்பார்த்தது.

இங்கு வந்து போன திரைப்பட இயக்குநர் மணிரத்தினமும் விதிவிலக்கல்ல. சுதாராஜ் வாழும் புத்தளத்தில் படப்பிடிப்பிற்கான இடங்கள் (லொக்கேஷன்) பார்க்க வந்த அவரும் அவரது உதவியாளர்களும் "சுதாராஜ்" வெளியிட்டிருந்த "தெரியாத பக்கங்கள்", என்ற மற்றொரு சிறுகதைத் தொகுதியை அடையப்பெற்றனர் ! அதில் 'அடைக்கலம்' !

அதன் பிறகு நடந்த சம்பவங்கள் பலருக்கும் தெரியாத பக்கங்கள்! ஒரு சிறு இடைவெளியில் "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைக்கு வந்த பொழுது இளைய தலைமுறையினராகிய நாமெல்லோரும் கூடிப்பார்த்தோம்.மிகச் சமீபத்தில் இந்திய தேசிய விருது கிடைத்த பொழுது பெருமையால் பூரித்தோம்.

இதற்குப் பின்னணியில் எம்மவரது படைப்பு இருந்துள்ளது, அவர் இருட்டடிப்புக்குள்ளாகிப் போனார் என்பதெல்லாம் எமக்குத் தெரியாமலேயே போனது ! சுமார் 12 ஆண்டுகளுக்கு முன் எமது பாலப்பருவத்தில் வந்த "அடைக்கலம்" சிறுகதையை படித்திருக்கவோ, பார்த்திருக்கவோ சாத்தியம் குறைவு. எழுத்தாளரது அன்பான அனுமதியுடன் இந்தத் தமிழ் நயத்தில் கதையை மறு பிரசுரம் செய்கின்றோம்.

யார், யாரை முத்தமிட்டுள்ளார் என்பதை அடையாளப்படுத்திக் கொள்வோம். எம்மவரது படைப்பாற்றல் திறமைக்கு ஈடுமில்லை, இணையுமில்லை என எட்டுத்திக்கும் முழங்குவோம்.

-மலர்க்குழுவினர்-

அடைக்கலம்

நான் மனைவியைத் தேடி வீட்டுக்குள் சென்றபோது அவள் குளிப்பை முடித்து, அழகான சேலையில்... சுவாமி தரிசித்து, பூச்சூடி, குங்குமப் பொட்டிட்டுப் புனிதமாகத் தோன்றினாள்.

"இந்த வீட்டுக்குக் குடிவந்த நாளிலிருந்து இப்ப தான் என்ர மனம் நிறைஞ்சிருக்கு!" என்றேன்.

அவள் நாணம் மேலிட, "எப்படி வெளிக்கிட்டாலும் உங்களுக்கு ஏதாவது குறைதானே? ... சரி, சரி! இப்பவாவது இந்தத் திருவாய் மலர்ந்தது போதும்!" எனத் தனது மகிழ்ச்சியை மனக்குறை போல் வெளிப்படுத்தினாள்.

"நான் அதைச் சொல்லயில்லை"

"பின்னை எதை?" என ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

"குருவிப்பிள்ளையள் கூடு கட்டுகினம்!"

"உண்மையாவா?" ஆச்சரியம் அவள் முகத்தில் மலர்ந்தது.

நகருக்கு அப்பால் அமைதியான சூழலில் இடமெடுத்து நாங்கள் வீடு கட்டியதற்கு ஓர் உட்காரணம் இருந்தது. இங்கு வந்த நாளிலிருந்து எங்களுக்குள் ஓர் ஆசை எதிர்பார்ப்பு இந்த வீட்டில் ஒரு சரணாலயம் போல் பிராணிகள் தானாகவே வந்து கூடுகட்டி வாசம் செய்ய வேண்டும் என்று. அதற்காக வீட்டைச் சூழ, பல பழமரங்களையும், பூமரங்களையும் வளர்த்து ஒரு சோலையைப் போல ஆக்கி வைத்திருக்கிறோம். மரங்களில் சிறிய தட்டுக்களை போட்டு விடுவோம். குருவிகள் பழவகைகளை சாப்பிட வரும். பூக்களில் தேன் குடிக்கும் அணில் தானியங்களைப் பொறுக்கிச் செல்லும். ஆனால் ஒன்றுதன்னும் எங்கள் வீட்டில் கூடு கட்டிச் சீவனம் செய்யவில்லை.

மரங்களில் வந்திருந்து ராகமெடுத்துப் பாடுகின்றன. தங்களுக்குள் ஏதோ பேசி மகிழ்கின்றன. ஆனால் இரவில் நித்திரைக்கு எங்கோ பறக்கின்றன. இது எங்களுக்கு ஒரு குறையாக இருந்தது. இப்போது அந்தக்குறை தீர்ந்தது போலோர் உணர்வில் என் பின்னே ஓடி வந்தாள் மனைவி.

குருவிகளைப் பார்த்துவிட்டு மகள் சொன்னாள் "அப்பா உங்கட கொண்டைக்குருவிகள் தான் கூடு கட்டுகினம்.. என்ன?"

அவற்றுக்குக் கொண்டைக்குருவி எனப் பெயரிட்டதே நாங்கள் தான்; உண்மையான பெயர் தெரியாது.

ஒரு கையிலடங்கக் கூடிய சைஸ். நீளமான வால். மேற்கு பகுதி பிரவுண் நிறம் நெஞ்சின் கீழ்ப்பகுதி சாதுவான வெண்மை கலந்திருக்கும். வாலின் தொடக்க அடிப்பாகம் சிவப்பு, தலைப்பகுதி கறுப்பு, உச்சியில் எடுப்பான கொண்டை.

விடியற்காலையில் முற்றத்தில் பிரம்புக் கதிரையைப் போட்டுச் சற்று நேரம் அமர்வேன். மகளும் வந்து என்னோடு இருப்பாள். அப்போது இந்தக் குருவிகள் வந்து மரக்கிளைகளில், ஒவ்வொரு கொப்பாக மாறி மாறித் தாவி இருந்து பாட்டுப் பாடும்.

நானும் மெள்ள சீக்கா (விசில்) அடித்து அவற்றைப் போல ஒலி எழுப்புவேன். மகள் விநோதமாகப் பார்ப்பாள்.

"என்னப்பா குருவியோட கதைக்கிறீர்களா?"

"ஓமம்மா...."

"என்ன கதைக்கிறீர்கள்?"

"எப்படி சுகமா இருக்குறீர்களா? ... என்ன பெயர் என்று கேக்கிறேன்."

"என்ன பெயராம்?"

"கொண்டைக்குருவிகள்"

குருவிகளுக்கென வேண்டி வைக்கப்பட்டுள்ள 'சாமை' 'வரகு' போன்ற தானியங்களை மகள் எடுத்து வந்து வீசுகிறாள். நிலத்தில் தத்தித் தத்தி வந்து அவை தீன் பொறுக்கும்.

சில நாட்களில் குருவிகளைக் காணாவிட்டால், "குருவியளைக் காணவில்லை.. கூப்பிடுங்கோ!" என மகள் கேட்பாள். நான் சீக்கா அடிப்பேன்.

சீக்கா சத்தம் கேட்டதும் அவை வந்துவிடும். சீக்கா ஓசைக்கும், சாப்பாட்டுக்கும் இடையில் அவை ஏதோ அர்த்தத்தைப் புரிந்து வைத்திருக்கின்றன.

நாங்கள் தூர நின்று கவனித்தோம். கொண்டைக்குருவிகள் இரண்டும் ஒவ்வொரு செடிகளாகப் பறந்து சென்றன. கூடலான செடிகளுக்கு உள்ளே சென்று சோதித்துப் பார்த்து வந்தன. ஒரு செடியின் இலை சடைத்து நான்கு கிளைகள் காற்றிலாடி மரத்துக்குப் பெலப்பில்லாமல் இருந்தமையால் 'சப்போட்'டாக ஒரு கம்பை நாட்டி நாலு கிளைகளையும் கட்டியிருந்தோம். குருவிகள் கூடு அமைப்பதற்கு அது பொருத்தமான இடமாக அமைந்து விட்டது போலும். எங்கெங்கோ பறந்து சென்று தும்பு போன்ற மெல்லிய இழைகளைக் கொண்டு வந்தன.

"அட உண்மைதான்!" என்றாள் என் மனைவி. இப்போதுதான் நான் சொன்ன விஷயத்தை நம்புபவள் போல.

மகள் என்னிடம் ஒரு கேள்வியைப் போட்டாள் "அப்பா! குருவி எப்பிடிக் கூடு கட்டுற இடத்தை டிசைட் பண்ணுது?"

உடனே எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. வழக்கமாகவே நான் அப்படித்தான். அதற்காக தெரியாது என்று அர்த்தமல்ல. எதையும் சிந்தித்துச் சொல்லுவேன்.

"மறைவான... பாதுகாப்பான இடமாகத் தேடி எடுக்கும்"

"ஏன்"

"அவையளுக்குப் பயம்! குஞ்சைக் காப்பாற்ற வேணும்தானே?"

"என்ன பயம்...? குண்டு விழுமென்றா?"

"பெரிய பறவையள் பிடிச்சிடும் தானே? ... பிராந்து வல்லூறு..."

"அப்ப... பிளேனுக்கு? பிளேன் குண்டு போடும் தானே? .... பிளேனுக்குப் பயமில்லையோ?"

அவளது கவலை எனக்குப் புரிந்தது. உள்நாட்டு யுத்தம் நடக்கிறது. விமானங்கள் திடுதிப்பென வந்து குண்டுகளை வீசுகின்றன.

"ஓமம்மா! பிளேனுக்கும் பயம்தான்! குண்டுச் சத்தம் அதுக்கு அதிர்ச்சியாயிருக்கும்.

முட்டை கலங்கும். குஞ்சு பொரியாது."

தென்னந்தும்பை சுருட்டி எப்படியோ அதை ஒரு வளையம் போல ஒட்டி அலகிலே தூக்கி வந்தன. தூர ஒரு மரத்தில் இரண்டும் இருந்தது. எச்சரிக்கையாக நாலாபுறமும் நோட்டமிட்ட பிறகு ஒன்று தும்புவளையத்தைக் கொண்டு செடியிலுள்ளே போகும். அது மீண்டும் வரும்வரை மற்றது எல்லாப் பக்கமும் நோட்டம் பார்த்தவாறே இருக்கும்.

மூன்று நாட்களாக ஓய்வொழிச்சல் இல்லாது தூரத்தூரப் பறந்து சென்று ஒவ்வொரு தும்பாகக் கொண்டு வந்த வேலை முடிந்திருந்தமையால் , மெதுவாகச் சென்று எட்டிப் பார்த்தேன். ஒரு பாதிச்சிரட்டையின் அளவில் மிக நேர்த்தியாகத் தும்பு வளையங்களை அடுக்கி அடுக்கி, மென்படுக்கையாக அந்தக் கூட்டை அமைத்திருந்தன.

"பாப்பம்! அப்பா, நானும் பார்க்க... காட்டுங்கோ!" என மகள் அங்கலாய்த்தாள். அவளைத்தூக்கி செடியினுள் உயரத்திலிருந்த கூட்டை இலைகளை விலக்கிக் காட்டினேன்.

கொண்டைக்குருவிகள் இரண்டும் ஒன்றையொன்று அணைத்துக் கொண்டு தூர மரக்கிளையிலிருந்து எங்களையே பார்த்துக் கொண்டிருந்தன.

நாங்கள் அப்பால் விலகினோம். கூடு அமைத்திருக்கும் அந்தச் செடியை வேறு பிராணிகள் அண்மித்தால் மின்னல் வேகத்தில் பறந்துபோய்த் தாக்கி அவற்றைக் கலைக்கும் குருவிகள். எங்களை நிதானமாகப் பார்த்துக் கொண்டிப்பது ஆச்சரியத்தை அளித்தது. எங்களால் தங்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை என அவை நம்புகின்றன போலும்.!

இது எங்களுக்கு நல்ல பொழுது போக்காக அமைந்து விட்டது என்றே சொல்லலாம்! நாட்டில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக எனக்கு அலுவலகமும் இல்லை... பிள்ளைக்கு ஸ்கூலும் இல்லை. முற்றத்தில் கதிரையைப் போட்டு அமர்ந்திடுவோம்.

"கீ... கீ..."

புதிய குரல் கூட்டிலிருந்து கேட்டது. குருவி எத்தனை முட்டைகள் இட்டது, எத்தனை குஞ்சுகள் பொரித்தன போன்ற விவரங்கள் எங்களுக்குத் தெரியாது. அதைப் பார்க்கப்போனால் குருவிகள் குழப்பமடையக்கூடும். மிரட்சியில் வேறு இடத்துக்கு மாறிப் போய்விடக்கூடாது என்பதில் நாங்கள் எச்சரிக்கையாக இருந்தோம்.

"கீ..... கீ..... கீ...."

" அநேகமாய் ரெண்டோ அல்லது மூன்று குஞ்சுகள் இருக்கும்!" என எனது உத்தேசத்தைத் தெரிவித்தேன் ஒரு ஊகம்தான். தற்செயலாக அது ஒரே ஒரு குஞ்சாகவும் இருக்கலாம். பெரிதுபடுத்திச் சொன்னால் கேட்கிறவர்கள் சந்தோஷப்படுவார்கள் என்ற எண்ணம்.

"அப்பா! குஞ்சுகளை நாங்கள் வைச்சு வளர்ப்போமா?"

"வளரட்டும்... இப்ப அதுகள் சின்னக் குஞ்சுகள் தானே!"

ஆனால் அதற்குச் 'சான்ஸ்' இல்லாமற் போய்விட்டது. ஒரு நாள் பகற் பொழுது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். இரவு முழுவதும் ஓயாத குண்டுச் சத்தத்தினால் உறங்க முடியவில்லை. முகாமிலிருந்து ஏவப்படும் குண்டு எங்கெல்லாம் விழுந்து யாரையெல்லாம் பலியெடுக்கிறதோ என்ற பதற்றம். ஒரு வேளை அது இந்தப் பக்கமும் வந்து விழுமோ? மகளை கொங்கிறீட் ஃபிளாட்டின் கீழ் படுக்கவைத்துவிட்டு நானும் மனைவியும் விழித்துக்

கொண்டிருந்தோம்.

காலையில் சத்தங்கள் ஓய்ந்திருந்தன. பத்திரிகையை வாசித்தவாறு கதிரையில் இருந்து அப்படியே கண்ணயர்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது தான் மனைவியின் குரல் கேட்டது.

"ஓடி வாங்கோ! ஓடி வாங்கோ!" முற்றத்தில் நின்றவாறு மனைவி பதறிக் கொண்டு நின்றாள்.

"இஞ்ச ஓடி வாங்கோ!"

எழுந்த வேகத்தில் மகளையும் தூக்கிக் கொண்டு மறுபக்கமாகப் பதுங்கி குழியை நோக்கி ஓடினேன். குண்டு வீச்சு விமானம் வருவதாக இருக்கலாம். அதுதான் மனைவி இப்படிப் பதறுகிறாள்.

நான் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்து மனைவி சினங்கொண்டாள். "ஏன் இப்படிப் பயந்து சாகிறியள்?"

அப்போதுதான் நிதானித்துப் பார்த்தேன். விமானத்தின் இரைச்சல் ஏதும் கேட்கவில்லை. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்...' என்ற கதைதான். அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் கையிலிருந்த மகளைக் கிடத்திவிட்டு.. மனைவி அருகில் போனேன்.

"செண்பகம்!.. குருவிக் குஞ்சு....." எனத் தடுமாறியபடி குருவிக் கூட்டுப்பக்கம் கையைக் காட்டினாள். என்னையும் பதற்றம் பிடித்துக் கொள்ளக் கூட்டை நோக்கி ஓடினேன்.

குருவிக்கூடு தும்புதும்பாகச் சின்னாபின்னமாகியிருந்தது. குஞ்சுகளைக் காணவில்லை. யுத்த நடவடிக்கையால் காணாமற்போன தங்கள் பிள்ளைகளின் கதி அறியாது பதறும் பெற்றோர்களைப் போல, பெரிய குருவிகள் இரண்டும் அவலக் குரலில் கத்தியவாறு சுற்றிச் சுற்றிப் பறந்தன. பறந்து பறந்து தேடின. செண்பகம் கச்சிதமாய் தனது வேலையை முடித்திருந்தது.

செண்பகம் பொல்லாத பட்சி. சிவந்த அனல் கக்குவது போன்ற கழுகுக் கண்கள், குத்திக்கிழிக்கும் கூரிய சொண்டு (அலகு). சிறிய பாம்புகளையும், விஷப் பூச்சிகளையும் தனது ஆகாரமாக "லபக்" கென விழுங்கக் கூடியது. பொதுவாக இது விஷ ஜந்துக்களை ஒழித்துக் கட்டும் பிராணி என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் ஒன்றும் அறியாத அப்பாவியான சிறு ஜீவன்களையும் சாப்பிட்டு ஏப்பம் விடுகிறதா?

நான் சோர்ந்து போனேன். மனைவி அழுவாதைப்போல நின்றாள். "குஞ்சு... செத்துப் போச்சா?" என மகள் கேட்டாள். அவள் கண்களில் நீர் துளிர்த்து வந்தது.

"யுத்த நடவடிக்கைகளால் நவம்பர் மாத இறுதிவரை வடபகுதியில் 16,545 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன!" எனச் சற்று முன்னர் வாசித்த பத்திரிகைச் செய்தி கூட என்னைப் பெரிதாகப் பாதிக்காதது போலிருந்தது. அழுது குளறும் இந்தக் குருவிகளுக்கு எப்படி ஆறுதல் கூறமுடியும்?

"ஓடி வாங்கோ! ஓடி வாங்கோ!

முற்றத்தில் நின்றவாறு மனைவி திரும்பவும் பதறிக் கொண்டிருந்தாள்.

இஞ்ச ஓடி வாங்கோ... அந்தா பாருங்கோ! எவ்வளவு சின்னக் குருவிக்குஞ்சு!"

குருவிக் குஞ்சா? திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெரிய கேற்றின் கதவு இடைவெளியூடே

தத்தித் தத்தி வந்தது. அப்போதுதான் நடை பழகும் ஒரு குழந்தையைப் போல நடக்க முடியாது கஷ்டப்படுவது தெரிந்தது. எனினும் இங்கிதம் தெரிந்த ஒரு பெரிய ஆளைப்போல வாசலில் நின்று "கீ! கீ!" எனக் கூப்பிட்டது. "உள்ளே வரலாமா?" எனக் கேட்பது போல முனகியது. காதுக்குச் சரியாக எட்டாமல் முனகும் குரல்.

ஓடிப்போய் அதைத் தூக்குவதற்காகக் கையை நீட்டினேன். அப்படியே நிலத்தோடு படுத்துக் கொண்டது பயத்தில் கையிலெடுத்த போது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அதன் நெஞ்சு துடித்துக் கொண்டிருப்பதைக் கையில் உணர முடிந்தது. அப்போதும் முனகும் குரல் "கீ.. கீ.."

"அப்பா காட்டுங்கோப்பா பாப்பம்" என மகள்.

"எங்க பாப்பம்...? என்ன உங்கட.. குருவிக் குஞ்சு தானே?" என் மனைவி.

கையை மெதுவாக நீக்கிப் பார்த்தோம். அப்போதுதான் இறகுகள் முளைக்கத் தொடங்கியிருந்தன. மீன் செதில்களைப் போல

"எவ்வளவு சின்னக்குஞ்சு!" என மகிழ்ந்தவாறே, மகள் அதன் முதுகில் தன் விரலால் தடவினாள். அது உடலைச்சிலிர்த்தது... "கீ!... கீ!"

"அப்பா இதை நாங்கள் வைச்சு வளர்ப்போமா?"

என்னிடத்திலும் அந்த ஆசை தோன்றியிருந்தாலும், அது எப்படிச் சாத்தியமாகும் என்ற கவலையும் கூடவே இருந்தது.

எனினும், "ஓமோம்! வளர்க்கலாம்!" எனச் சொல்லிவைத்தேன். ஐயோ பாவம்! சின்னக்குஞ்சு! தீனைக் கொத்திச் சாப்பிடக்கூடத் தெரிஞ்சிருக்காது.. செத்துப் போயிடும்!" எனத் தனது அச்சத்தைத் தெரிவித்தாள் மனைவி.

"விரலால் சொண்டை திறந்து... ஊட்டி விடலாம் தானே?"

"அதுக்கு என்ன சாப்பிடக் குடுப்பீங்க"

"வரகு சாமை, பழவகைகள்!"

நல்லாய்த்தான்! நீங்கள் நினைக்கிறது மாதிரியில்லை! இது குழந்தை! பதப்படுத்தாமல் குடுத்தால் தொண்டையிலேயே அடைச்சுச் செத்துப் போயிடும்.

அவள் இரண்டாவது முறையாகவும் "செத்துப் போய்விடும்" என்ற வார்த்தையைப் பாவித்ததும் நான் உஷாரடைந்தேன். குருவிக் குஞ்சை வளர்ப்பதனால் சாப்பாடு ஒரு பிரச்சனை தான். குருவிகள் குஞ்சுகளுக்கு என்ன ஊட்டுகின்றன என்று தெரியவில்லை. பூச்சி புழுக்களா அல்லது பழ வகைகளா..? அவற்றைத் தங்கள் வாயிலேயே மென்று பதப்படுத்திக் கொடுப்பதாகவும் இருக்கலாம்.

பூச்சி புழுக்களை என் வாயில் போட்டு மெல்வதாவது?

குருவிக்குஞ்சைக் கண்ட சந்தோஷத்தில் நாங்கள் கலகலத்துக் கொண்டிருக்க, கொண்டைக்குருவிகள் பறந்து வந்தன. எங்களைச் சுற்றிப் பறந்து கீச்சிட்டு முறையிட்டன. மரக்கிளையில் போயிருந்து பார்த்தன. சற்று வித்தியாசமான தொனியில் அழுவது போல குரலெழுப்பின. ஆ! இந்தக் குருவிகள் எல்லாம் எவ்வளவு அருமையாகத் தங்கள் குதூகலங்களையும் மகிழ்ச்சியையும், வேதனைகளையும், சோகங்களையும் தெரிவிக்கின்றன.

தாயின் குரல் கேட்டுக் குஞ்சு கத்தத் தொடங்கியது.

"பாவம் ! அதுக்குப் பசிக்குது போல... தாயும் வந்திருக்கு.. விடுங்கோ போகட்டும்!"

ஒரு மரக்கிளையில் குருவிக் குஞ்சை விட்டோம். தாய்க்குருவி அண்மையில் பறந்துவர இது வாயைப் பிளந்து கொண்டு கத்தியது. தாய் தீன் ஊட்ட எத்தனிக்கையில் எங்கிருந்தோ அந்தச் செண்பகம் பறந்து, குண்டு வீசப் போகும் விமானத்தைப் போல் குத்திப் பதிந்து தாக்க வந்தது. குருவிகள் இரண்டும் தொலைவில் பறந்து போயிருந்து அவலக்குரல் எழுப்பின. குஞ்சு "தொப்" பெனக் கீழே விழுந்தது. "கீ... கீ..."

அடைக்கலம் தேடி வந்த குஞ்சைத் திரும்பவும் அந்த யமனின் கையில் கொடுக்கப் பார்த்தோமே என்ற கவலையுடன் ஓடிப்போய்த் தூக்கினோம். நல்ல வேளையாகக் காயமேதும் பட்டிருக்கவில்லை. குருவிக் குஞ்சைக் கையில் வைத்துக்கொண்டு... இனி என்ன செய்யலாம் என ஆராய்ந்தோம். அப்போது மனைவி ஒரு திட்டத்தைச் சொன்னாள்.

"கிளிக்கூடு போல... கம்பி வலையால் அடைச்ச கூட்டிலை குஞ்சை விட்டு ஒரு மரத்திலை கட்டி விடலாம். வலையை ஓரிடத்திலை கொஞ்சம் நீக்கி பெரிய ஓட்டை ஆக்கிவிட்டால் தாய்க்குருவி அதற்குள்ளாலை எட்டித் தீன் குடுக்கும்... குஞ்சு பரக்கக்கூடியதாய் வளர்ந்தவுடனே திறந்துவிடலாம்."

இது நல்ல "ஐடியா"வாகப் பட்டது. நான் குதூகலத்துடன் சொன்னேன். "அப்ப எங்க வீட்டிலையும் ஒரு அகதிமுகாம்."

"அகதி முகாமோ.. என்னவோ.. அடைக்கலம் எண்டு வந்த ஜீவனைப் பாதுகாக்க வேண்டியது எங்கட பொறுப்பு."

இதற்குப் பிறகு நாங்கள் துரித கதியிற் செயற்பட்டுக் கூட்டிலே குஞ்சை விட்டு, மரக்கிளையில் கட்டினோம். இப்படிச் செயற்கையான கூட்டில் அடைபட்டிருக்கும் குஞ்சுக்கு ஊட்டுவதற்கு தாய்க்குருவி வருமா என்ற சந்தேகம் இன்னும் எனக்கு இருந்தது.

கொண்டைக்குருவிகள் ஒவ்வொரு மரமாகப் பறந்து பறந்து குஞ்சைப் பெயர் சொல்லி அழைத்தன. குஞ்சு வாயைப் பிளந்து குரல் கொடுத்ததும், ஒரு குருவி சட்டெனப் பறந்து வந்து கூட்டுக்கு அண்மையில் இருந்தது! கூட்டின் ஒவ்வொரு வலைக்கண்களூடும் முகத்தைச் செலுத்திச் செலுத்தி... உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தது. அந்தப் பெரிய ஓட்டை... அதனூடு தலை மிக இலகுவாக உட்சென்றதும்... இன்னும் கொஞ்சம் முயற்சித்து..ம்.ம்.. எனச் சிறகை ஒடுக்கி... இழுத்து உள்ளே போய்விட்டது. "அப்பாடா" என மூச்சு வாங்குவதற்குள் அதற்குள் பயம் பிடித்துக் கொண்டது போலும். "பிள்ளையைச் சிறை மீட்க வந்து தானும் அகப்பட்டுக் கொண்டேனா?" குருவி வெளியேறுவதற்காகச் சிறகடித்துக் கூட்டுக்குள்ளேயே பறந்து பறந்து வலைக்கண்களில் முகத்தைக் குத்திக் குத்தி அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தது.

ஓடிப் போய்க் கதவை திறந்தேன்.

"அப்பா ! திறக்க வேணாம்! ரெண்டையும் வளர்த்தாள்.. தாய் குஞ்சுக்கு தீன் குடுக்கும்தானே.?"

"இல்லையம்மா! பாவம், அது பயப்படுது போகட்டும்!" கதவைத் திறந்ததும், எய்த

அம்பு போல வெளியே பறந்து போனது.

ஆனால் தாய்ப்பாசம் யாரை விட்டது? சிறு பூச்சி புழுக்களைக் கொத்திக் கொண்டு திரும்பவும் கூட்டுக்கு அண்மையாக வந்திருந்து சோகமாக அழத் தொடங்கியது. மற்றது பக்கத்தில் வந்து வேறு தொனியில் பேசியது.

"கீ ! கீ ! பசியில் அழும் குழந்தைக்கு ஒரு புதிய குரலில் ஆறுதல் சொன்னவாறு மெள்ள மெள்ள ஒவ்வொருகிளையாக முன்னேறி.... எதற்கும் துணிந்தது போல் சட்டெனக் கூட்டுக்கு அண்மையில் பறந்து சென்று வலைக்கண்களூடு அந்தப் பெரிய துளையைத் தேடி "ம்...ம்.." ஒரே மூச்சில் உள்ளே போய்விட்டது.

நாங்கள் ஆவலுடன் பார்த்தோம். "சரி! சரி! குஞ்சுக்குத் தீன் குடுக்குது" என துள்ளிக் குதித்து மகிழ்ந்தாள் மகள்.

குஞ்சுக்குத் தீனூட்டிய பின்தான் குருவிக்கு அடுத்த பிரச்சனை தெரிந்தது. இனி எப்படி வெளியே போவது? சிறகடித்து அதே எத்தனிப்பு. வலைக்கண்களில் முகத்தைக் குத்திக் குத்தி..

கதவைத் திறந்துவிட்ட போது கவனித்தேன். பாவம் தாய்க்குருவியின் அலகுகள் மேலாக வலைக் கம்பியில் உரசிய சிதைவில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் அன்று முழுவதும் குருவி பலமுறை வந்து... தீன்கொடுத்தது. வலைக் கண்களில் குத்திக் குத்தி வெளியே வரத் தவித்தது... நாங்கள் திறந்து விட பறந்து போனது.

இவ்வளவு தெரிந்த குருவிக்குப் பொறுமையாக இருக்கத் தெரியவில்லையே.. வேலையில்லாத ஒருவன் வந்து திறந்து விடுவான் என்று புரியவில்லையே என்ற கவலை எங்களுக்கு! மாலைக்குள் அதன் முகத்துக் காயம் ஒரு புண்ணாக மோசமடைந்திருந்தது. எனினும் குருவி அதை லட்சியம் செய்யவில்லை.

அதற்குத் தன் தாய்ப்பாசம் பெரிதாக இருக்கலாம். அதனால் தன் முகப்புண்ணைப் பெரிதுபடுத்தாமல் வந்து போகலாம். ஆனால் இதை எங்களால் அலட்சியம் செய்ய முடியவில்லை. மறுநாள் மிருக வைத்தியரிடம் கேட்டு அதன் புண் ஆறக்கூடியதாக மருந்து வேண்டி வந்தோம். அடுத்த முறை குருவி கூட்டுக்குள் வந்ததும் திறந்து விடுவதற்கு முன் பிடித்து அதன் புண்ணில் மருந்தைத் தடவிப் பறக்கவிட்டோம்.

"ஓட்டை பெரிசாய் இருக்கிறபடியால்தான் குருவி கூட்டுக்குள்ளே போகுது! அதைக் கொஞ்சம் சிறுசாக்கி விடலாம்... தலை மட்டும் உள்ளே நீட்டக் கூடியதாக!"

தனது முன்னைய 'ஐடியா'வுக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தாள் மனைவி. எனினும் இதை உடனடியாக ஏற்றுக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை.

"அதெப்படி...? குஞ்சு அருகில் வந்து தீன் வாங்கவேண்டும்!"

"நீங்கள் அப்படிச் செய்து பாருங்கோவேன். ரெண்டு மூன்று முறைக்குப் பிறகு குஞ்சு தானாகவே பழகிவிடும்!"

அவள் சொன்ன பின்தான் இத்திட்டம் வெற்றியளித்தது. கூண்டுக்கு உள்ளேபோக முடியாமல் தலையை மட்டும் உள்ளே விட்டு தாயின் அழைப்பைக் கேட்டதும் குஞ்சு முதலில் தயங்கி பிறகு பசி உந்தலில் தட்டுத் தடுமாறி தாயின் அருகில் வந்து தீன் வாங்கியது.

இப்போது எவ்விதக் கஷ்டமுமில்லாமல் அந்தச் சிறிய ஓட்டை வழியே தாய் தலையைவிட்டு தீனூட்ட, குஞ்சு சாப்பிட்டு வளர்ந்து கொண்டிருந்தது. நாளும் பொழுதும் அதீன் சிறகுகள் வளர்ச்சியடைந்து அழகான தோற்றமெடுத்தன. ஓரிருமுறை அதைத் திறந்து விட்டுப் பார்த்தோம். "பறக்குமா?"

அதற்குச் சரியாக பறக்க தெரியவில்லை. சிறகடித்து மெள்ள உயரம் பறந்து கீழே விழும். திரும்பவும் கூட்டில் பிடித்து விடுவோம். அது நல்ல வளர்ச்சியடையும் வரை !

அதை இப்போது குஞ்சு என்று சொல்லமுடியாது. அதனால் இப்போது பறக்க முடியும். திறந்து விடலாம் எனத் தீர்மானித்தபோது மகள் கவலைப்பட்டாள்.

"வேண்டாமப்பா! அதை வைச்சு வளர்ப்போம்!

"அடைச்சு வைக்கக் கூடாது! பாவம் தானே? திறந்து விட்டாலும் அது இஞ்ச நிண்டு வளருமம்மா"- மகளை ஆதரவாக அணைத்துக் கொண்டு நின்றோம்.

கூட்டிலிருந்தபடியே எங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்தது. சிறகைச் சிலிர்த்து உதறியது. மெள்ளத் தாவி கூட்டின் வாசலில் இருந்தது. சட்டெனப் பறந்து மரக்கிளைக்குப் போனது. அலகினால் ஒவ்வோர் இறகுகளாகக் கோதிவிட்டுச் சரிபார்த்தது. அங்கிருந்தபடியே எங்களைப் பார்த்து... "கீ..கீ.. நன்றி! நன்றி!"

அப்போது -

கீச்... கீச் சத்தம் வந்தது. திரும்பிப் பார்த்தால் ஓர் இராமர்! (அணில்) பரபரவென பாதி மரம் இறங்கி வந்து வாலைத் தூக்கித் தூக்கி எங்களைப் பார்த்துக் கத்தியது.

கொண்டைக் குருவிக் குஞ்சை சுதந்திரமாகப் பறக்க விட்டதற்கு தன்னுடைய கீச்...கீச் சத்தம் மூலம் எங்களுக்கு நன்றி தெரிவிப்பது போல் தோன்றியது!

மீண்டும் உற்சாகமாக சரசரவென்று மரத்தின் உச்சிக்குப் போய் திரும்பிப் பார்த்தது.

இதற்குள் கொண்டைக்குருவிகள் இரண்டும் எங்கிருந்தோ பறந்து வந்து குஞ்சின் பக்கத்திலிருந்தன. குதூகலத்தில் மகிழ்ந்து கத்தியவாறே குஞ்சுடன் சேர்ந்து வேறொரு மரத்துக்குப் பறந்தன.

ஒருவிதமான திருப்தியுணர்வும் ஆனந்த விம்மலும் என் நெஞ்சை நிறைக்க, பக்கத்தில் நின்ற மனைவியையும் மகளையும் திரும்பிப் பார்த்தேன். என்னடா இது! உத்தியோகத்துக்காக நான் எந்தப் பிரதேசமெல்லாம் போய் வந்தாலும் சிணுங்காத என் மனைவி கண்கள் கலங்கிக் கொண்டு நின்றாள். மகள் வைத்த கண் வாங்காது குருவிகளைப் பார்த்தவாறே கையசைத்துக் கொண்டிருந்தாள்....

"பை! பை!"

"கீ! கீ!"

கற்பதற்கே வாழ்க !

கற்றுக் கொடுக்கும்போதே மனிதன் கற்றுக் கொள்கிறான். உயிர் உடலில் இருக்கும் வரை கற்பதற்காகவே உயிர் வாழக் கற்றுக்கொள்.

-ஜெனாக்கா

With Best Compliments from

⌘

⌘

⌘

NILWALA AGENCY

Importers and Suppliers of
Hardware, Marine Items, Non-Ferrous & Foundry Materials

157-1/2 A, Maha Vidyalaya Mawatha,
Colombo 13.
Tel : 2326144 / 331214
Telex No : 21583 TELCO CE Attn. Nilwala
Fax : 2326144, 2345993

இலங்கையின் முதற்தர வானொலி
சூரியன் அலைகளில்

ஆராய்ச்சி மணி

உங்கள் பிரச்சனைகள்

உரியவர்களின் பதில்கள்

உறுதியான தீர்வுகள்

உண்மையான நிலவரங்கள்

உங்கள் சூரியனில்

"சனிக்கிழமை தோறும் 10 மணி முதல் 11 மணி வரை"

இங்கு நீதி உண்டு ! தர்மம் உண்டு ! - ஆராய்ச்சி மணி

With the Best Compliments of

Plastic Packaging (Pte) Ltd.

Manufacturers & Exporters of Degradable Polythene Bags in Sri lanka

93/3, Sri Dhammadara Mawatha, Ratmalana.

With the Best Compliments of

Worldgate Euro Apparels (pvt) Ltd.

Manufacturers of High Quality Readymade Garments

9, 1st Lane, Koswatte,
Rajagiriya.

With the Best Compliments of

MY HOPE TRAVELS

Pioneers in Manpower Recruitment

110-1/8, Dam Street,
Colombo 12.

With the Best Compliments of

BUSINESS MANAGEMENT SCHOOL

Leaders in Flexible Learning

Call 2504757

With the Best Compliments of

Lanktrad International (pvt) Ltd.

Suppliers of body brushes

117, St. Joseph Street,
Colombo 14.

With the Best Compliments of

United Exports

With the Best Compliments of

K. Chandrasekaran

Tel : 0712-362302

With the Best Compliments of

FANCY MUSEUM

Dealers in Fancy Goods, Toys, Eversilver & Gifts
Specialists in : Dancing & All Bridal Ornaments, Costumes

253 B, Galle Road, Wellawatte Complex,
Colombo - 6.
Tel : 2580216 Fax : 2500627

With the Best Compliments

from

Old Royalist
(1997 Batch)

Mr. A. Giridaran (B. E., B.Tech)
Director

PROFESSIONAL MANPOWER
RECRUITING SERVICES (PTE) LTD

Overseas Manpower Consultant & Allied Services

Labour Licence No : 1382
No. 529, Galle Road, Colombo-06, Sri Lanka.
Tel : 0094-11-258 91 41 / 236 11 44
Fax : 0094-11-258 94 11 / 259 79 45
Hotline : 0094-71-275 28 77
e-mail : pmrs@itmin.com

With the Best Compliments of

★

★

★

HAIFA

Travels & Tours (Pvt) Ltd.

HEAD OFFICE :

53/A, Bristol Paradise Building,
York Street, Colombo-01.

BRANCH OFFICE :

57/A, Bristol Paradise Building,
74-46, Bristol Paradise Building
Sir Baron Jayathilake Mawatha, Colombo 1.

Tel : 4717041-44
Fax : 4717045
E-mail : haifatnt@isplanka.lk

With the Best Compliments of

❖

❖

❖

Maanasi

Only she knows

- Hand Picked Collection of Shalwars & Sarees From Trivandrum / Bangalore / Mumbai and Ahmedabad
- Handloom Sarees / Attar & Perfumes
- Fashion Jewelleries & Ladies Accessories
- Authentic Ayurvedic Products from Kerala (Chakola's Fairness Oil - The only safeway to fairness)
- Kaveri Products (Cosmetics) Pankaj Kasthuri

207, Galle Rod, Kollupitiya, Colombo-3.
(Opp : American Embassy)
Tel : 4734225, 0777-733022

With the Best Compliments of

DEVI

Clinic of Integrated Medicine

45, School Lane, Kolpetty,
Colombo 3, Sri Lanka.
Tel/Fax : (+941) 2593125
Mobile : (+94 722) 401420
E-mail : deviclinic@visualnet.lk
skumars_sys@hotmail.com

With the Best Compliments of

Advanced Level
PHYSICS
R. Sivaramachandran

Kandy : **Pioneer Institute**
Peradeniya Road, Kandy.

Wellawatta : **BCTT**
No : 10, 36th Lane,
Wellawatta.

Kotahena : **Inflogic Academy**
Jampettah Street,
Colombo-13.

பிரத்தியேக வகுப்பிற்கு
0777-175026

தமிழ் நயம் 2003

With the Best Compliments of

A - Z TRADERS

General Merchant Aluminium, Eversilver, Plastic, Glasswares, Ointments & Gift Items, Tables, Chair Etc.,

No. 2, Wolfendhal Street, (Adamali Building) Colombo 13.

With the Best Compliments of

APPOLO MEDI CLINIC
&
DENTAL SURGERY

- OPD Treatment
- Channelled Consultancy Service
- LAB Investingations
- Dental Surgery
- Ambulance Service can be arranged

298, George R. De Silva Mw.,
Kotahena, Colombo 13
Telephone : 4610459

With the Best Compliments of

NORWAY RESIDENCE

APPROVED BY CEYLON TOURIST BOARD

No. 4, Beltona Lane, Bambalapitiya,
Colombo 4, Sri Lanka. Tel : 011250446

Norway : +4748036487
France : +33609152059
Swiss : +41816515442
Hotline : 077-6077127
Web : www.norwayresidence.com
E-mail : infor@norwayresidenc.com

With the Best Compliments of

Sharp Steels Lanka (Pvt) Ltd.

Importers, Suppliers & General Hardware Merchants

20B, Central Road, Colombo 12,
Sri Lanka.
Tel : 4721834, 4721835,
2438447, 2435920
Fax : 2439634
E-mail : sharpsteels@email.com

With the Best Compliments of

Pettah Essence Suppliers

For Confectioners
- Liquid Glucose 45 BE
- Dextrose Monohydrate B. P.
- Corn Flour
- Gelatine
- Flavouring Essences
- Colours

For Cosmetic Industries
- Perfumes
- Pharamaceutical Products
- Talcum Powder

Cake Ingredients
- Sultanas
- Raisins
- Currant
- Kadju
- Candid Peels
- Cherries
- Chowchow
- Pumpkin Presence

Biscuits, Ice Cream & Yoghurts
- Milk Powders
- Sodium Bicarbonate
- Amonium Bicarbonate
- Baking Powder
- Oil Paper
- Box Boards

No. 19, Dam Street, Colombo 12, Sri Lanka.
Tel : 2326235, 2542764, 2441721
Office : 2542762, 2542763, 2434859
Telefax : 2434859
E-mail : pettaess@sltnet.lk

With the Best Compliments of

Seagull Property Developers (Pvt) Ltd.

A BOI APPROVED COMPANY

30-5/4, Nelson Place, Colombo 6
Telephone: 0777-317075, 2503266.
Fax: 2360481
E-mail: vakeesan@lankaccom.lk

With the Best Compliments of

SRI ABARINA TEX

Dealers in Textiles & Specialists in Imported Sarees
& Readymade Garments

176/1D, 1st Floor, Attar Mahal Super Market,
Keyzer Street, Colombo 11, Sri Lanka.
Tel : 2390751

With the Best Compliments of

MULTILAC PAINTS
CITY TRADING CO.

38, 3rd Cross Street,
Colombo 11.

தேச வழமை

- சுவர்ணராஜா நிலக்ஷன் -

சட்டத்தரணி.

முன்னாள் மாணவர் தலைவர்

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் 1995

தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடைமை பற்றிய மேலோட்டமான தேசவழமை உசாவலாகவே இச் சிறு கட்டுரை அமைகிறது. தேசவழமைபற்றி இன்றைய இளம் தலைமுறையினர், மாணவ சமூகத்தினர் அறிந்து கொள்ளவேண்டுமென்பதும் அதன்பால் ஈடுபாடு கொள்ள வேண்டுமென்பதுமே என்னை இக் குறிப்பை றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்ற சஞ்சிகையாம் "தமிழ் நயத்தில்" எழுதத் தூண்டிய காரணிகளாகும். எனவே தொன்று தொட்டு நிலவி வரும் எமது வழக்காற்றுச் சட்டங்கள் பற்றிய அறிவும் அதனை மேலும் ஆராய்ந்து அறியும் ஊக்கமும் மாணவர்கட்கு ஏற்பட இக்குறிப்பு உதவலாம் என்பதே எனது எதிர்பார்ப்பு.

இலங்கையின் சட்ட வரலாற்றை எடுத்து நோக்குவோமாயின் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு வாழ்ந்த தேசிய இனங்கள் தத்தமது வாழ்க்கை முறைமைகளுக்கு அமைவாகப் பொருத்தமான சட்ட அமைப்புகளைக் கொண்டிருந்தமை புலனாகும். கண்டியச் சிங்களவர் கண்டியச்சட்டத்தையும் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் சட்டத்தையும் கிழக்கு மாகாணத்தின் ஒரு பிரிவுத் தமிழ் மக்கள் முக்குவச் சட்டத்தையும் யாழ்ப்பாணத் தமிழர்கள் தேசவழமையையும் தமது வழக்காற்றுமுறைச் சட்டமாக ஏற்றங்கீகரித்து வந்தனர்.

ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கையின் சட்டத்துறையில் பிரதானமான விருத்திகள் ஏற்பட்டன. உரோம டச்சுச் சட்டமுறைமைகளை அடியொற்றியதாக ஒல்லாந்தர் இலங்கையின் சட்ட முறைமையை ஒழுங்கமைத்தனர். எனினும் இத்தேசத்தில் வழக்காறுகளாக நின்று நிலை பெற்ற சட்டங்களை அவர்களால் எளிதில் மாற்றியமைக்க முடியாது போனமை ஈண்டு குறிப்பிடற்பாலது. சட்டத்துறையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த அக்காலத்திற் தானும் வடபுலத்து மக்களிடம் வேரோடிக் கிளைபரப்பி ஊன்றி வளர்ந்திருந்த சட்டமான தேசவழமை தனது முக்கியத்துவத்தை இழந்து விடவில்லை.

இவ் வகையில் சட்டத்துறையின் வளர்ச்சியில் ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் கவனஞ் செலுத்தி வந்தனர். நீதி பரிபாலனம் அவர்களது முக்கிய கரிசனைகளில் ஒன்றாகியது இதனாலேயே அவர்தம் செல்வாக்குக்கு உட்பட்டு அமைந்த இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு பெரிதும் பிரித்தானிய நீதிமன்ற அமைப்பு முறையை ஒத்ததாக உள்ளது. எவ்வாறெனினும் பிரித்தானிய ஆட்சியாளர்களும் இலங்கையின் தேசிய வழக்காற்றுச் சட்ட வடிவங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றையும் ஆராய்ந்து அங்கீகரிக்கப்பட்ட இலங்கைச்சட்டத்தின் அங்கமாக்க முயற்சிகள் மேற்கொண்டனர்.

இவ்வகையிலேயே திசாவே ஐசக் என்பவரால் சேகரிக்கப்பட்ட தேசவழமை வழக்காறுகள் 1806ம் ஆண்டு முழுச்சட்ட வல்லமையுடன் செயற்பாட்டுக்கு வந்தன. அன்று முதல் இலங்கைச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஓரங்கமாகத் தேசவழமைச்சட்டமும் இருந்து வருகின்றது. காலத்தின் தேவை கருதி தொகுக்கப்பட்ட தேசவழமைச் சட்டம் பொருத்தப்பாடான ஏற்பாடுகளை மட்டுமே உள்ளடக்கியதாகச் சட்டமாக்கப்பட்டது.

தேச வழமை யாருக்கு உரியது ?

தேச வழமைச்சட்டத்தின் பாயிரமாவது (Preamble) பின்வருமாறு கூறுகிறது : "Thesawalamai is a collection of the customs of the malabar Inhabitants of the province of Jaffna"

அதாவது, யாழ்ப்பாண மாவட்டம் வசிக்கும் மலபார்களின் வழக்காறுகளின் தொகுப்பே தேசவழமையாகும். வட மாகாணத்தில் வசிக்கும் தமிழ் மக்களே "மலபாரி" என அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே தேசவழமைச் சட்டத்தின் நலன்களைப் பெறுவதற்கு அல்லது தேசவழமையால் ஆளப்படுத்தப்படுத்துவதற்கு ஒருவர் தமிழராக இருப்பதுடன் வட மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். இதுவே தேசவழமையின் வீச்செல்லை தொடர்பான அடிப்படையான பொது விதியாகும்.

யாழ்ப்பாண வாழுமை

சட்டம் ஒன்றின் சிக்கலான அம்சங்களை ஒரு பிரச்சனை எழும் போது தான் நாம் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியும். அதே வகையில் தான் தேசவழமையின் ஏற்புடைமை தொடர்பிலும் பல்வேறு சிக்கலான வழக்குகள் இலங்கை நீதிமன்றங்களில் மட்டுமன்றிப் பிரித்தானியாவின் கோமறைக் கழகத்திலும் எடுத்தாராயப் பட்டுள்ளன.

தேசவழமைச் சட்டம் யாழ்ப்பாண மாவட்டத் தமிழ்வாசிகளுக்கு உரித்தானது எனச் சட்டம் கூறுவதால் யார் இந்த யாழ்ப்பாண வாசிகள் என்ற கேள்வி பல தடவைகள் நீதிமன்றங்களின் முன் எழுப்பப்பட்டுள்ளது. இவை தொடர்பில் தீர்க்கப்பட்ட பழமையான மற்றும் அண்மைக்கால வழக்குகளில் நீதிபதிகள் தெரிவித்த சில கருத்துக்கள் சுவை மிக்கதாகவும் பொருள் பொதிந்தவையாகவும் ஆழ்ந்து ஆராய்ந்த வெளிப்பாடுகளாகவும் உள்ளதால் கட்டுரையைப் படிப்போரின் ஆர்வத்தை அவை தூண்டக் கூடும். இதன் நிமித்தம் அக்கருத்துக்களைச் சுருக்கமாக வரிசைப் படுத்தித் தருகின்றேன்.

ஸ்பென்சர் எதிர் ராஜரட்ணம் என்ற வழக்கில் நீதியரசர் வூட்றென்டன் பின்வருமாறு கூறினார் : "தேசவழமையென்பது இலங்கையிலுள்ள எல்லாத் தமிழர்களுக்கும் அவர்களது பூர்வீகம், மதம் காரணமாகத் தானாகவே ஏற்புடையதாகக் கூடிய வகையிலமைந்து ஓர் ஆள்சார் சட்டமல்ல. மாறாக அது யாழ்ப்பாண மாகாணத்தில் இன்றைய வட மாகாணத்தில் நிலவும் பிரத்தியேகமான வழக்காறு என்பதுடன் அம்மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட தமிழர்களுக்கே ஏற்புடையது." சவுந்தரநாயகம் எதிர் சவுந்தரநாயகம் என்னும் 1917ம் ஆண்டு நடைபெற்ற வழக்கில் யாழ்ப்பாணத்தில் பிறந்தாலும் கூட சவுந்தரநாயகத்தின் தந்தை

யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியமர்ந்த கொழும்புச்செட்டி வர்க்கத்தைச் சேர்ந்தவரென்பதால் அவர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதாகாது எனத்தீர்க்கப்பட்டது.

அரசன் எதிர் பெருமாள் என்னும் பிரசித்தமான 1911ம் ஆண்டு வழக்கொன்றில் மத்தியமாகாணத்தில் வசிக்கும் இந்தியத் தமிழர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதல்ல எனக் கூறப்பட்டது. வெள்ளைப்பிள்ளை எதிர் சிற்றம்பலம் என்னும் 1875ம் ஆண்டைய வழக்கொன்றில் திருகோணமலையைச் சேர்ந்த தமிழர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதாகாது எனத் தீர்க்கப்பட்டது.

1994ம் ஆண்டு ஆண்டைய வழக்கான தருமலிங்கம் செட்டி எதிர் அருணாசலம் செட்டியார் என்ற வழக்கில் தேசவழமை யாழ்ப்பாணத்தில் வதிவிடமுள்ள எல்லாத் தமிழர்களுக்கும் பொருந்தாது. மலபார் வழிவந்த தமிழர்களுக்கு மட்டுமே அது பொருந்தும் என வாதிடப்பட்டது. எனினும் நீதியரசர் சுயட்ஸ் தேசவழமைச்சட்டம் இலங்கையை வாழிடமாகக் கொண்ட வடமாகாணத்தில் வசிக்கும் எல்லாத் தமிழ் மக்களுக்கும் ஏற்புடையதெனக் குறிப்பிட்டார்.

இடப்பெயர்வும், புலப்பெயர்வும், தேசவழமையும் :

தேசவழமை யாழ்ப்பாண மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட தமிழர்களுக்கே ஏற்புடையது என்பது வழக்குகளில் வலியுறுத்தப் பட்டு வந்த தீர்க்கமான கருத்தாகும். இருந்தபோதிலும் பல்வேறு காரணங்களினாலும் வட மாகாணத்தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி இலங்கையின் பல்வேறு பகுதிகளில் மட்டுமன்றிப் பூகோளத்தின் பரப்பெங்கனும் தமது வாழ்விடங்களை அமைத்துள்ளார்கள். இந்நிலையில் அவர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதா? என்னும் கருத்தைக் கவரும் கேள்வி பலருக்கும் எழுவது இயல்பே. இது தொடர்பில் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட எண்ணங்கள் விருப்பங்கள் என்பவற்றைப் பொறுத்தே ஒரு முடிவை எடுக்க முடியுமே தவிர பொதுவான கருத்தைக் கூறமுடியாது. தமிழர்கள் அக்காலமுதலே தொழில் நிமித்தம் வாணிபம் கருதியும் பல்வேறு இடங்களுக்கும் சென்று தங்கியிருந்தனர். இவர்கள் தொடர்பிலான வழக்குகளும் அன்றைய காலத்திலேயே நீதிபதிகளை இப் பிரச்சினை குறித்துச் சிந்திக்கத் தூண்டி விட்டது.

ஸ்பென்சர் எதிர் ராஜரட்ணம் வழக்கில் நீதியரசர் வூட்றெண்டன் பின்வருமாறு கூறினார். "வதிவிடம் எனும் போது வடமாகாணத்தில் நிரந்தரமாகத் தனது வாசஸ்தலத்தை அமைத்து விட்ட ஒருவரையே நாம் குறிப்பிடுகிறோம். இவ்வாறான ஒரு வாழ்வில் எது என்பது தொடர்பில் பொதுவான விதிமுறைகள் எதையும் நாம் அமைத்து விட முடியாது. ஒவ்வொரு வழக்கும் அதன் நிகழ்வுகளிலேயே தங்கியிருக்கும். ஒருபக்கம், யாழ்ப்பாணத்தில் வாழ்விடம் அமைந்திருந்தாலும் "யாழ்ப்பாண வாசி" எனக் கூறப்படமுடியாத ஒரு தமிழன் இருக்கலாம். மறுபுறம் வேறொரு பிரதேசத்தில் வாழ்விடத்தை ஒரு தமிழன் அமைத்திருந்தாலும் கூட அது அவனை "யாழ்ப்பாண வாசி" என்னும் பிடிக்குள் இருந்து விலத்திவிடாது போகலாம். கொழும்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர் ஒருவரோ. காலி அல்ல மாத்தறைக் கச்சேரியில் நிரந்தரமாகப் பணிபுரியும் அரசாங்க ஊழியர் ஒருவரோ ஒரு யாழ்ப்பாணத் தமிழராக இருக்கின்றாரெனில், அவர் தனது பூர்வீக மாகாணத்தின் வழக்காற்றுச் சட்டங்களுடனான

தொடர்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளக் கூடும். ஆனால் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் என்ற ஒரே காரணத்தால் அவர் தேசவழமையின் ஆளுமைக்கு உட்படமாட்டார்" எனக் குறிப்பிட்டார் நீதியரசர் வூட்றெண்டன்.

இவ்வாறான பல்வேறு வழக்குகளையும் தீர்ப்புகளையும் நன்கு ஆராய்ந்த பின் சமகால வழக்குகளில் ஒன்றான சிவஞானலிங்கம் எதிர் சுந்தரலிங்கம் என்ற வழக்கில் அன்றையப் பிரதம நீதியரசர் சுப்பையா சர்வானந்தா அவர்கள் சட்டத்துறையில் தேசவழமைச் சட்டம் தொடர்பிலான மிகக் காத்திரமான மைல் கல்லாக அமைந்த தீர்ப்பை வழங்கினார்.

"தேசவழமை என்பது குறித்த ஒரு பிரதேசத்திற்குள் மட்டுமே செல்லுபடியாகும். ஒரு ஆள்புலம் சார்ந்த சட்டம் அல்ல. அது ஒரு ஆள்சார் சட்டமாகும். வட மாகாணத்தினை வதிவிடமாகக் கொண்டவர்களின் ஆள்சார் சட்டம் தேசவழமையாகும். அவர்கள் எங்கே சென்றாலும் இலங்கையின் எந்தப் பகுதியில் சொத்துக்களை வாங்கினாலும் அவர்களுக்கும் அவர்களின் அசையும் அசையாச் சொத்துக்களுக்கும் தேசவழமை ஏற்புடையததாகும்" என்ற முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பே அது.

எனினும், நீதியரசர் சர்வானந்தா இவ்வாறு வடமாகாணத்துக்கு வெளியே வசிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதாவதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டிய சூழ்நிலைகளையும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

அதாவது, தொழில் வேறு தேவைகள் கருதி யாழ்ப்பாணத்துக்கு வெளியே வசித்தாலும் யாழ்ப்பாணத்துடனான தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணி வருதல், என்றோ ஒரு நாள் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிப் போகும் எண்ணத்தைக் கொண்டிருத்தல், யாழ்ப்பாணம் பற்றிய சிந்தனையைக் கொண்டிருத்தல் போன்றவற்றினூடாகத் தமது "யாழ்ப்பாண வாழுமையை"த் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தேசவழமை ஏற்புடையதாகும். அவர்கள் திருமணம் மற்றும் ஆதனக் கொள்வனவு ஆதனப் பங்கீடு என்பவை தொடர்பில் தேசவழமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் செல்லுபடியாகும் என்பது . சிவஞானலிங்கம் எதிர் சுந்தரலிங்கம் வழக்கின் பிரசித்தமான தீர்ப்பாகும்.

முடிவுரை

தேசவழமைச் சட்டம் என்பது யாருக்கு ஏற்புடையது என்பதை விளக்கிச் சொல்லவே இக்கட்டுரை மிக நீண்டதாகி விட்டது. நேரமும் இடச்சிக்கனமும் கருதி இந்த ஒரு விடயத்தை மட்டும் அலசுவதுடன் இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன். தேசவழமையின் ஏற்பாடுகள் அதிலுள்ள விசேட அம்சங்கள் தேசவழமைக்கு அமைவான திருமண வழக்காறுகள், சொத்துப் பரிபாலனம், காணி உரிமைகள் என்பவை பற்றியெல்லாம் கூறப்புகுந்தால் அவை ஒவ்வொன்றுமே ஒரு தனிக் கட்டுரையாகி விடலாம். எனவே ஆர்வமுள்ளவர்கள் தேசவழமையின் விசேட அம்சங்கள் குறித்து மேலதிகமாக நூல்களை வாசித்து விளங்கிக் கொள்ளலாம். அவ்வாறு எவரையாவது வாசிக்கத் தூண்டுவதற்கு இக் கட்டுரை உதவியிருக்கும் என்றால் அதுவே எனக்குத் திருப்தி தருவதாகும். எமது தனித்துவங்களைப் பேணி அவை பற்றி அறிந்து வைத்து காலத்துக்கொவ்வாதவற்றைக் கழித்துச் செம்மையானவற்றை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லும் பொறுப்பு நம் ஒவ்வொருவரையும் சார்ந்ததாகும்.

கிறுக்குத்தனம்

- ஏ. ஆர். ரிகாஸ்
மருத்துவபீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
(தமிழிலக்கிய மன்றம் 98/99)

இரண்டு அப்பாக்கள் சந்தித்துக் கொள்கிறார்கள். ஒருவர் மற்றவரிடம் கேட்கிறார். "எங்கே உங்க மகன் இரண்டு நாட்கள் வகுப்புக்கே வரவில்லையாமே?" மற்றவர் சொன்னார்.... "ஓ...அதுவா அவன் Interschool chess tournament க்காக போயிருக்கிறான்". உடனே முதலாமவர் "அட என்னங்க நீங்க, படிக்கிற பிள்ளைய இப்படிப்போய் அநியாயமாக்குறீங்களே...." சொன்னதோடு நில்லாமல் சத்தமாகவே சிரித்தார். அவரின் கிறுக்குத்தனத்தை எண்ணி என் பேனா அழத்துவங்கியது.

மாடி வீட்டு மொட்டை மாடி, பக்கத்து வீட்டுத் தாவணிக்காரியின் ஓரப்பார்வை. ஒரே வகுப்பு பெரிய வீட்டுப் பையன் ஸ்நேகம், ரஹ்மான் இசை, வைரமுத்து கவிதைகள், ஷங்கரின் Boys, தனுஷ், த்ரிஷா....

இப்படி நிகழ்கால இளசுகளின் சின்னச்சின்ன சந்தோஷ சிலிர்ப்புகள் இன்னும் சில. அது கல்லூரி வாழ்வின் கடைசிக்காலம். உயர்தரக் கொப்பிகளுடன் உலவித்திரியும் காலம்.

வாழ்க்கை என்றால் என்னவென்று அறியாமல் - முடிவுகள் எடுக்க முடியுமா? என்று மனது கேட்கும். "எடு" என்றுதான் விடை கிடைக்கும். ஆசை எட்டிப் பார்க்கும். அதற்கும் மேல் அச்சம் என்ற ஒன்று கழுத்தறுக்கும்.

இந்த இரண்டு வருடங்கள் எப்படியிருந்தது என்பது தான் மிஞ்சிப்போகும். ஒரு ஐம்பது, அறுபது வருடங்களுக்கான ஞாபகக் கல்வெட்டுக்கள் !. ஏன் அப்படி ? பதினாறுக்கு முன் பெற்றோருக்கு பிள்ளையாய் மட்டும், ஆசிரியருக்கு மாணவராய் மட்டும் இருந்தோம். பதினெட்டுக்குப் பின்னோ அதுவரை அறிந்திராத, நினைத்துக் கூடப் பார்த்திராத "சமுதாயம்" என்கிற பெரியதொரு சமூக அமைப்புக்குள் கால் வைக்கின்றோம். இதற்கப்பால் பிடிக்குமோ இல்லையோ வாழ்வதற்காய் வாழ்ந்தாக வேண்டிய நிலை. எனவே தான் இந்த இரண்டு வருடங்கள் எப்படியிருந்தது என்பதுதான் மிஞ்சிப்போகும் வாழ்க்கைக்கான ஞாபகக் கல்வெட்டுக்கள் !

இந்தக் கல் வெட்டுக்களில் நாளைய நினைவுகளுக்காய் எதைச் செதுக்கப் போகிறார்கள்? வெறும் டாக்டர்களையும் இன்ஜினியர்களையும் மட்டுமே உருவாக்குவதால் புத்தகம் தூக்கியே கூனிப்போகிற படித்த ஜடங்களை மட்டுமே உருவாக்கித் தருவதென்றால் இந்தப்பாடசாலைகள் எதற்கு?! ஆக, ஒரு டியூசன் நிலையத்தையும் மீறிய பொறுப்பு ஒவ்வொரு பாடசாலைக்கும் உள்ளது. நாட்டுக்கு நாலு தலைவர் வேண்டும் ஒலிம்பிக்கில் சில தங்கம் வேண்டும், சச்சினின் சாதனை உடைக்க நாளை ஒருவன் வேண்டும், ஐ.நா. சபையில் என் மகள் ஒரு நாள் பேச

வேண்டும் என்றெல்லாம்இன்று எத்தனை பெற்றோர் சிந்திக்கிறார்கள்? என் மகன் ஒரு டாக்டர் என்று பெருமைப்படும் வெறுமையானவர்களாக மட்டும் இல்லாமல் சவால்களாக சமாளிக்க அவனுக்கு என்ன பயிற்சி உள்ளது என்று யார் கவலைப்பட்டுள்ளார்கள்?! இன்னுமின்னும் எத்தனை நாட்களுக்கு உங்கள் குழந்தைகளின் எதிர்கால லட்சியங்களை குட்டிச் சிறகுகளுக்குள் முடக்கி விடப்போகிறீர்கள்?! இன்று அவர்களது தேவை சுதந்திரம்! ஒரு அப்துல்கலாமையோ, பில்கேட்ஸையோ பெற எங்களுக்குத் தேவை சிந்தனைவாதிகள்! புத்தகப்பூச்சிகள் அல்லர்!

சரி-இப்படிப்பட்ட உங்கள் லட்சியங்களை பரவலாக்குங்கள். புத்தகக்கட்டுரைகளின் கட்டுப்பாடுகளிலிருந்து வெளிவரத் தொடங்குங்கள். விளையாட்டு, இலக்கியம், திரைப்படங்கள், கணனி என்று துறைகள் ஏராளம்... உங்கள் கல்லூரி மாணவர் மட்டுமல்ல-உங்கள் வயது மாணவர்கள் இணைந்து கொள்ளும் ஒரே களம் எது? விவாத மேடைகளாக இருக்கலாம், கவிதைக்களமாகவோ, நாடக விழாக்களாகவோ இருக்கலாம், கருத்துக்களின் கலப்பும், ஆண்-பெண் சிந்தனைகளின் இணைப்பும் இங்கில்லாமல் வேறெங்கு ஒன்று சேர்வது?! இந்த அனுபவங்களின் சின்னச்சின்ன சீண்டல்கள், சிணுங்கல்கள், தோல்விகள், வெற்றிகள் தான் நாளையும் நினைத்துச் சிலிர்க்கக்கூடிய ஊறிப்போகிற ஞாபகங்கள். “தோற்றுப் போனதாக தீர்ப்பளிக்கப்பட்டோம்” என்று யாரையெல்லாமோ சாடி ஒற்றைத்துளிக் கண்ணீரோடு வெளியேறிய அந்த விவாத நாட்கள்தான் இன்று கப்பல் கவிழ்ந்தது என்றாலும் “ஓஹோ... அப்படியா” என்று சாதாரணமாகவே கேட்டுவிட்டுப் போகும் பக்குவம் தந்தது. “சே..... போயும் போயும் ஒரு பெண் பிள்ளையிடம் கவிதையில் தோற்றுவிட்டோமே” என்றெண்ணி இரண்டு வேளை சோற்றையும் கொட்டிவிட்டு விரதமிருந்த நாட்களை இன்று நினைத்தாலும் சிரிப்பாய் இருக்கிறது. அதைவிட்டு, முள்ளந்தண்டு விலங்குளின் சிறப்பியல்புகளும், தென்னையின் தாவரவியற் பெயரும் சத்தியமாய் நினைவுக்கு வந்ததுமில்லை, வரப்போவதுமில்லை.

தவிர-இந்த இரண்டு வருடங்களுக்கு இன்னொரு சிறப்பு உண்டு. பல யௌவன வயசுகளின் முதற்காதல்கள் அரங்கேறுவதும், அரங்கேறாமலேயே கலைவதும் இங்குதான் ! வகுப்புக்குத் தாமதமாய் போவது ஒரு பாஷன் ! பின்வரிசையில் இருந்து விடையேயில்லாத கேள்வி கேட்டு மாஸ்டரை டென்ஷன் ஆக்குவது ஒரு சுகம். இதையெல்லாம் விட கொஞ்சம் அழகான பெண்களும், ஸ்மார்ட்டான பசங்களும் கல்லூரிகளிலெல்லாம் அட்டைப்பட விளக்கமாக ஆவதெல்லாம் நிஜம். அழகாயிருக்கிற ஒவ்வொரு பெண்ணுக்கும் “சிவப்பு ரோஜா” நீட்டச் சொல்லி பாவி மனசு அலாரம் அடிக்கும். ஆனால் ஒன்று - இது காதலிப்பதற்கான காலமல்ல. நட்புக்கு உரியது. நாளை நீங்கள் பாஸ்அவுட்டான ஆனபிறகு ஒரு காதல் கிடைக்கலாம். ஆனால், நண்பர்களாய் இருந்து சந்தோஷிக்கும் ஒரே பருவம் இது. நீங்கள் பார்க்கும், பழகும் ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் நண்பர்களாய் நேசியுங்கள். காதல் சிறையை விட நட்பின் வலை ஆழமானது; அர்த்தமுள்ளது.

இப்படி - எத்தனை பரந்தது இந்தப் பருவம், நாளை ஒருநாள் “அடடா .... எவ்வளவு மிஸ் பண்ணிட்டோம்” என்று எண்ணுகிறவர்கள்தான் ஏராளம். இன்றைய சில்மிஷங்கள் ஒவ்வொன்றும் நாளை கிறுக்குத்தனமாய்ப்படும். ஆனாலும், இந்த கிறுக்குத்தனங்களே நாளைய மனங்களின் இறுக்கமான நெகிழ்வுகள் ....

இவ்வாறு - எப்படியெல்லாமோ வாழ்க்கைக்கான அனுபவிக்கலாம். அது, ஒரு வாழ்க்கைக்கான தயார்படுத்தலுக்குப் பிறகாகத்தான் இருக்க வேண்டும். வெறுமனே ஞாபகங்களை மனசில் சுமந்து கொண்டு வாழ்க்கைச் சுமையைத் தூக்கமுடியாமல் இழுபட்டு நிற்கத் தயாராவது என்பது, கண்மூடிக்கொண்டு கடலில் இறங்குவது. நாளை ஒருநாள் தற்கொலை செய்து கொள்ள கடலுக்குச் சென்றால், விழுவதற்கு முன் கடல் கூட "A/L பாஸ் இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டுத்தான் அனுமதிக்குமாம் ! நான் படிப்பைத்தவிர மற்றெல்லாவற்றிலும் வெற்றிக்கொடி பிடித்தேன் என்று சொல்லிவிட்டு உயர்தரத்தில் மூன்று கொடிகள் வாங்குவதென்பது ஜீரணிக்க முடியாதது. **உயர்தரத்தில் கோட்டை விடுவதற்கு விளையாட்டையும் மற்றைய கல்வி சாரா நடவடிக்கைகளையும் ஒரு சாக்காகச் சொல்வீர்களாயிருந்தால் அதைவிட கிறுக்குத்தனம் இருக்க முடியாது.** அப்போ என்ன செய்யலாம் ? வழியுண்டு - இவற்றுக்கெல்லாம் எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்களோ அவ்வளவு நேரம் உங்கள் படிப்பிற்காக - மேலதிகமாக செலவிடுங்கள் ! உங்கள் ஸ்தானம் என்னவென்று அடிக்கடி நீங்களாகவே அளந்து கொள்ளுங்கள். உங்களுக்குரிய மிகப்பெரிய நீதிபதிகள் நீங்களே! கண்டிப்பாய் வாழ்வும், வளமும் உங்கள் வசப்படும் !

இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்

"போச்சு போச்சு, என்னைப் போல ஓர் அறிவில் உலகத்திலே எங்கேயும் இருக்க மாட்டான். இடத்தைக் கொடுத்தா மடத்தைப் பிடுங்குவான்" ங்கற பழமொழியை எத்தனையோ முறை என் காதாலே கேட்டிருக்கிறேன். இருந்தும் என் மூளைக்கு எட்டலையே ! வெளியூரிலிருந்தும் வந்தவன் 'இரவு நேரம் மட்டும் திண்ணையிலே படுத்துக்கறேன்' னான். பெரிய மனுஷன் மாதிரி தெரிஞ்சான். சரின்னு அனுமதிச்ச பாவத்துக்கு இராத்திரியிலே வீட்டிலே நுழைஞ்சு டி.வி, டேப்-ரிக்கார்டர், எல்லாத்தையும் கொள்ளையடிச்சுட்டுப் போயிட்டானே என்று புலம்பினார் பொன்னம்பலம்.

முன்பின் தெரியாத ஒருவனை நம்பி இடம் கொடுத்ததுமல்லாமல், கவனக் குறைவாகவும் இருந்து, கும்பகர்ணத் தூக்கம் தூங்கியது இவர் குற்றம். அதேபோல் ஒரு நல்ல பழமொழியை, இந்த அற்பச் செயலுடன் ஒப்பிட்டு அவர் பேசியது அதைவிடப் பெரிய குற்றம்.

ஆம்; இந்தப் பழமொழியின் உண்மையான விளக்கம் இவர் ஏமாற்றத்திற்கு முற்றிலும் எதிரானது; மிகப் புனிதமானது; போற்றுதலுக்குரியது, என்ன அது என்று பார்ப்போம்.

இடம் என்பது மனித ஜீவன்களின் இதய பீடம். அந்த இடத்தை இறைவன் தங்குவதற்குரிய இடமாகத் தந்து விட்டால், இறைவன் அங்குள்ள மடமையைத் துரத்தி விரட்டுவான் என்பதே இப்பழமொழியின் புனிதமான பொருள் பொதிந்த விளக்கமாகும்.

பழமொழிகளின் இது போன்ற உண்மைப் பொருளை நாம் உணர்ந்து, நாமும் இதயத்தை இறைவனின் பீடமாக்கி மடமையை விரட்டுவோம்.

- நன்றி : 'பழமொழி விளக்கச் சிறுகதைகள் '

With Best Compliments from :

M. G. M. DISTRIBUTORS & CO.

For your household requirements insist on M.G.M. food items

- Iodised Table Salt
- Atta-Flour
- Roasted Red Rice Flour
- Roasted White Rice Flour
- White Rice Flour
- Gram Flour
- Kurakkan Flour
- Orid Flour
- Maize Flour
- Noodles
- Kurakkan Noodles
- Gingelly Oil
- Butter Ghee
- Soap Nut Powder
- Bleaching Powder
- Broken Wheat
- Whole Wheat
- Wheat Crumble
- Butter Curd Chillies
- Devilled Cadju Nuts
- Icing Sugar
- Nelli Crush (M.G.M.)
- Grape Juice (M.G.M.)
- Rose Syrup (M.G.M.)
- Nannary Syrup (M.G.M)
- Nelli Crush (Tholagatty)
- Passion Fruit Cordial
- Orange Cordial
- Lime Cordial
- Lime Pickle
- Garlic Pickle
- Vinegar
- Bicarbonate Soda
- Citric Acid
- Honey
- Seedless Dates

No. 279, Wolfendhal Street,
Colombo 13
Tel: 2440061, 2338727

போரோய்ந்த ஈராண்டு

- "நிழல்" பி. எஸ். செந்தூரன்
கல்லூரி மாணவர் தலைவர் 2000/2001
தலைவர் இந்து மாணவர் மன்றம் 1999 / 2000
இதழாசிரியர் தமிழ் இலக்கிய மன்றம் 2000/ 2001

இக்கவிதையின் தோற்றம் அண்மையில் தோன்றிய அதிரடி அரசியல் அறிக்கைகளின் தழும்புகளால் உருவானது. இதில் கூறப்பட்ட பாதிப்புகள், மகிழ்ச்சிகள் ஒரு தனி மனிதனுக்கு, தனி இனத்துக்கு, தனி மதத்துக்கான ஒன்றல்ல. மனிதம் மதிக்கும் இலங்கை மனிதர் அனைவருக்கும் உரித்தானது. ஆகையால் போரோய்ந்த ஈராண்டு நீடிக்க எல்லோரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போமாக.

நீண்ட இடைவேளையின் பின் தமிழ்நயத்தில் தவழ்வது இனிமையாக இருக்கிறது மிக்க மகிழ்ச்சி.

- நிழல்

சத்தங்கள் ஓய்ந்த ஈராண்டு
சந்தமிசைத்த சமரச முயற்சி
வளமான வாழ்வுக்கு வழியென்று
வசந்தத்தை நோக்கிய பயணம் !

அதிரடி ஓசைகளில் - அகதிகளாய்
அங்குமிங்கும் அலைந்தவர் வாழ்வு
அமைதியான சோலைதனை
அண்மிப்பதாய் ஓர் எண்ணம் !

மறைந்த சூரியன் காலை மலர்வது போல்
மறந்த புன்னகை மழலைகளிடம் துளிர
இடர்கள் சற்றே தணிந்து - நம்பிக்கை
சுடர்கள் சற்றே ஒளிர....

பாதை திறப்பும் பரஸ்பர புரிந்துணர்வும்
பாரின் பார்வையில் பரிணமித்த பேச்சும்
திடீரென ஓய்ந்த சோதனைச் சாவடிகளும்
தித்திக்கும் நிம்மதி தருமென்றே எண்ண....

ஓங்கி ஒலித்த இனவாதக் குரல்களும்....
ஓயாமல் பொங்கிய எதிர்ப்பலைகளும்
சற்றே தணிந்து - அமைதி வருமென்று
சகலரும் எண்ணியிருந்த வேளை....

இளநீர் விற்கும் தோழனதும் - வீதியோரம்
இளங்கீரை விற்கும் சகாவும் - தொழில்
இலாபம் அதிகம் கண்டு மனமகிழ்வுடன்
இனியதொரு வாழ்வை நோக்கியிருக்க...

பங்குச்சந்தையின் பணையேறும் நிலை கண்டு
பணம் விதைத்து பங்கு வாங்கி
அமைதி முயற்சியின் முன்னேற்றம்
அதிகலாபம் என அறுவடைக்கு காத்திருக்க...

வேலையில்லா திண்டாட்டம் - பசி பட்டினி
இவையெல்லாம் ஒழிந்திங்கு - சுகமான
வாழ்வொன்று வழியிலே தெரியுதென்று
விழி வைத்து இளைஞர் காத்திருக்க...

எதிர்பார்ப்புகள் எகிறிகுதிக்க
எதிர்ப்பலைகள் அடங்கி ஒடுங்க
எல்லோர்க்கும் அமைதி இங்கு கிட்டுமென
எதிர்பார்த்து இலங்கை மாதா காத்திருக்க...

திடுமென முளைத்த திடீர் அறிக்கைகள்
சடுதியாய் நகரை சூழ்ந்த துப்பாக்கிகள்
அடுத்திங்கு என்ன நிகழும் என்ற கேள்விகள்
தடுமாற்றம் கண்ட சமாதான விரும்பிகள்

எதிர்பார்ப்புகள் ஏமாற்றப்படுமோ ?
எங்கே மீண்டும் குண்டோசைகள் எழுமோ ?
எம்மவர் மண்ணில் குருதி பாயுமோ ?
எல்லார் வாழ்வுமினி வலியோ ?

பேரினவாதிகளுக்குக் கொண்டாட்டம் !
பேராசை தோழர்க்கு மனமகிழ்ச்சி !
அன்றாட வாழ்வோடு தினம் போராடும்
அவைர்க்கும் அதிர்ச்சி கலந்த கலக்கம்...

போரோய்ந்த ஈராண்டு இன்றே முடிவின்
போட்டி போடும் கட்சிகளுக்கு வாக்கு சிக்கல் - ஆனால்
வாழ்க்கை வண்டில் தள்ளும் வறியருக்கு
வாழ்வுச்சிக்கல் - உணராயோ மனிதா?

அமைதி அழகாகத்தானே இருக்கிறது ?
சுமையாக எவர்க்கும் தெரிகிறதோ ?
நீ செய்தால் - நீ நிலைத்து விடுவாய் - வரலாற்றில் !
நானல்லவா நிலைக்க வேண்டும் - நினைப்பவர்கள் இருக்கிறார்கள்...

நினைப்பவர்கள் இருக்கும் வரை - நம் மண்ணில்
நிதர்சனம் எவர்க்குமில்லை
விடிவானம் தொலைவினில்தான் - இன்னும்
கிட்டிவிடும் தொலைவினில் தெரியவில்லை !

கலைந்த மண்ணுக்கு விடிவொன்று
தொலைவினில் தெரிகிறது தொட்டுவிடலாம்
தோழமை உணர்வு உதிக்குமெனில் - அன்றேல்
தொலைவினில் தெரிவது தொலைவினிலேயே ....

போரோய்ந்த ஈராண்டு நீள வழி செய்வாய்
அழிவோய்ந்த அமைதி பூங்கா மலர நீள வழி செய்வாய்

With Best Compliments

from

Rupika Traders

Potatoes / Seed Potatoes whole Sale and Retail

2G, St. Andrews Drive
Nuwara-Eliya
Tel: 052-2222806, 052-2223620

இளைஞர்களின் சிந்தனைக்கு ...

- உ. லெ. மு. ரெஷா
மன்றத் தலைவர்
தமிழ் இலக்கிய மன்றம் 2002/2003
மாணவர்த் தலைவர் 2002/2003

மனித வாழ்வில் பருவங்கள் அவன் அறியாமலேயே வந்து கொண்டுதான் இருக்கின்றன. அவன் பிறந்தவுடன் பாலகப்பருவமும், பின்னர் சிறுவர் பருவமும், அவன் பள்ளி வாழ்க்கையை அனுபவிக்கும்போது வாலிபப்பருவமும், அதைத்தொடர்ந்து இளைஞர் பருவமும், வயோதிபப்பருவமும் வந்துகொண்டுதான் இருக்கின்றது. இருப்பினும் இளைஞர் பருவம் என்பது ஒவ்வொரு மனித வாழ்விலும் அதிக பங்கு வகிக்கும் பருவமாக இருக்கிறது. இப்பருவத்தில் துடிப்பு, வேகம், விவேகம், போன்ற குணங்கள் அனைத்தும் ஒன்றித்துப்போய் இருப்பதுதான் இதற்குக் காரணமாகும். எனவேதான் இளைஞர்கள் "நாட்டின் முதுகெலும்பு" என்று போற்றப்படுகிறார்கள் இவ்விளைஞர்கள் தங்கள் சிந்தனையில் புகுத்த வேண்டிய அம்சங்களைத்தான் இக்கட்டுரை சுமந்து வருகிறது.

மொழி என்பது ஒரு மனிதன் வாழ்வில் மிக முக்கியமான ஒன்றாகும். மனிதனுக்கு மனிதன் கருத்துகளை பரிமாற்றிகொள்வதற்கு மொழி என்பது இன்றியமையாத ஒன்றாகும். அதிலும் தமிழ்மொழி என்பது இன்று உலகம் போற்றும் முதன்மை மொழிகளில் ஒன்றாக இருக்கின்றது. இத்தமிழ் மொழியானது காலத்திற்கு காலம் பேசப்படுகின்ற விதத்தில் மாற்றம் அடைகிறது. காரணம் காலத்திற்கு காலம், மனிதனின் கலாசாரங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களும், பிற மொழிகளின் பாதிப்புக்களுமே இதற்கு காரணமாகிறது. அண்மைக்காலமாக தமிழ் மொழியுடன், ஆங்கில மொழியினை கலந்து பேசுவது எம்மவருக்கு வழக்கமாகிவிட்டது. இன்று தமிழினை கதைப்பதற்கு வெட்கப்படும் எம்மவர் சமுதாயம், எமக்கென்றிருக்கின்ற பாரம்பரியங்களையும் வெறுக்கின்றார்கள். 'இன்று யாரைப்பார்த்தாலும் நாங்கள் பேசுகின்ற வார்த்தைகளில் அரைவாசிக்கும் மேலாக ஆங்கில வார்த்தை கலப்படமாகியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இந்நிலை இன்னும் தொடருமாயின் தமிழ்மொழி, மொழிக்கான சிறப்பு என்பன அடியோடு அழிந்து போகும் நிலைமை உண்டாகிவிடும். எனவே அருமை இளைஞர் சமுதாயமே நீங்கள் நினைத்தால் உங்கள் மொழியினை சிகரத்தில் தூக்கி வைக்க முடியும். நீங்கள் சிந்தித்தீர்கள் என்றால், நிச்சயம் உங்கள் கலாசாரங்களையும், மொழியினையும் அதன் சிறப்புகளையும் மக்களிடையே பரப்பி அவர்களையும், தவறான வழியிலிருந்து காப்பாற்ற முடியும். இப்படியான செயற்பாடுகள் செய்வது உங்கள் மீது சுமத்தப்பட்ட கடமையாகும். இன்று எமது சமுதாயத்தில் ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. முக்கியமாக வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றின் பாவணை இன்று அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆனால் இவை அனைத்தும் தத்தமது கடமைகளை செவ்வனே செய்கின்றனவா? என வினாவுகின்ற போது, இல்லை என்ற வார்த்தைக்கே அதிக வாக்குகள் கிடைக்கின்றன. இன்று வியாபார ரீதியில் வெற்றி பெறுவதற்காக ஊடகங்கள், தேவையற்ற பலவிடயங்களை சேர்த்துக் கொண்டுள்ளார்கள். உதாரணமாக எமது தமிழ் வானொலி அறிவிப்பாளர்கள் அடிக்கும் லூட்டி, கேட்பவர் எமக்கு சலிப்பைத்தான் தட்டுகிறது. தமிழினை ஒழுங்காக உச்சரிக்கத்தெரியாத

பல அறிவிப்பாளர்கள் இன்று அறிவிப்பாளர்களாக கடமையாற்றுவது பெரும்கவலைக்குரிய விடயமாகும். வானொலி மட்டுமல்லாமல், பத்திரிகைகள் தங்கள் பத்திரிகை விற்பனையாக வேண்டும் என ஆடைக்குறைப்பு செய்யப்பட்ட படங்களை தங்கள் முன்பக்கத்தில் பிரசுரிப்பது. தொலைக்காட்சிகள் எமது கலாசாரங்களை முற்றிலும் பாதிக்கத்தக்க நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவது என்று, ஊடகங்களின் செயற்பாடுகளை விபரித்துக் கொண்டே செல்லலாம். எனவே இளைஞர்களே, நீங்கள் நினைத்தால், இத்தகைய செயற்பாடுகளை களைத்தெறிவது மட்டுமல்ல ஊடகங்களுக்கான உண்மையான கடமையினை அறிந்து செயற்பட முடியும்.

இன்றைய இளைஞனிடம் இன்று இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சனையாக கருதப்படுவது இன்றைய பருவக் காதலாகும். என்று காதல் என்பது ஒவ்வொரு இளைஞன் வாழ்விலும் சர்வ சாதாரணமாக மாறிவிட்டது. இன்று காதலர்கள் சோடியாக பொது இடங்களில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர், தமது கல்வியை அழித்துக் கொண்டும், தமது பெற்றோர்களை பகைத்துக் கொண்டும் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள். இத்தகைய இளைஞர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். பத்துமாதம் சுமந்து, அல்லும்பகலும் எமக்காக பாடுபட்டு, எம்மை படிக்கவைத்து, ஒரு நற் பிரஜையாக இவ்வுலகிற்கு அடையாளம் காட்டிய எமது பெற்றோர்களை மறந்து பத்து நிமிடத்திற்கு முன் பார்த்த ஒரு பெண்ணின் பின்னால் அலைவது எந்த விதத்தில் நியாயம் ? சிந்தித்திப் பாருங்கள். இளைஞர்களே நீங்கள் நாட்டின் கண்கள். உங்கள் குடும்பங்களின் குத்துவிளக்குகள். எனவே புரிந்து நடப்பது உங்கள் கடமையாகும்.

அடுத்து எம்மவர் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமான வீரம், ஏனென்றால் இன்று வீரம் என்ற சொல் எம்மவரிடமிருந்து விட்டகன்று போய்விட்ட நிலை உண்டாகியுள்ளது. அப்படியும் வீரமானது மக்களிடையே தனித்து நின்றாலும், அவர்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு தவறிவிடுகிறார்கள். ஒரு சண்டை என்றால், அதை உண்டாக்குவதற்கு ஒரு நியாயமான காரணம் இருக்க வேண்டும். இதைவிடுத்து சரியான காரணம் இன்றி சண்டையிடுவது இன்றைய காலத்தின் வழக்கம் (Fashion) ஆகிவிட்டது. இன்று தனியார் கல்வி நிலையத்திற்கு வெளியில் அதிகமாக இத்தகைய சம்பந்தமில்லாத சண்டைகளை நீங்கள் காணலாம். ஒரு பெண்ணுக்காக சண்டை பிடிப்பார்கள். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தப் பெண் இவர்கள் இருவரையும் ஏறெடுத்துகூட பார்த்திருக்க மாட்டாள். இன்று எம்மவர் உரிமை மீறப்படுகின்ற போது தட்டிக்கேள் என்றால், வீட்டுக் கதவை மூடிக்கொண்டு போர்த்திக் கொண்டு தூங்கும், வீரர்களே எம்மவரில் அதிகம் உள்ளனர். எனவே இளைஞர்களே உங்கள் கையில்தான் இந்தத் தேசம் உள்ளது. எனவே நீங்கள் தான் இவர்களை திருத்த வேண்டும்.

அன்பு இளைஞர்களே, நீங்கள் மேற்கூறிய விடயங்கள் மட்டுமல்ல, சமூகத்தில் எத்தனையோ அநியாயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதைத் தட்டிக் கேளுங்கள். சமூகத்திற்கு நீங்கள் வழி காட்டியாக இருங்கள். அரசியலில் தொண்டர் தலைமைத்துவப் பொறுப்பு உண்டெனில் நீங்கள் ஒரு தலைவராகுங்கள். இத்தேசம் உங்கள் கையில் உள்ளது என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

உன்வழி சரி என்றால் நீ செல்லும் பாதையில்
களைகளை பிடுங்கி எறிவது தவறல்ல

றோயல் கல்லூரி

தமிழ் விவாத அணி 2003

தலைவர்

தே. ஜெயபிரகாஷ்

உப தலைவர்

அ. ரஜீவன்

நீ. நிஷாந்தனன்	வி. விமலாதித்தன்
ரா. டிலுக்ஷன்	சூ. சூரியபிரதாப்

Debate Team

Seated L to R : Mr. R. Rajasooriyar, Mr. R. L. Senanayake, T. Jeyapragash, H. A. U. Gunasekara *(Principal)*, A. Rajeevan, N. Neshanthanan, Mr. S. Rathnasabapathy

Standing 1st Row L to R : V. Vimalathithan, R. Diluxshion, S. Sooriyaprathap

கண்ணோட்டம் :

றோயல் கல்லூரி விவாத அணி

"விவாத உலகின் முடிசூடா மன்னர்கள்"

கடந்த ஒரு தசாப்தத்திற்கும் அதிகமாக விவாத வரலாற்றில் வீறு நடைபோட்டு தனிச்சரித்திரம் படைத்து வந்த றோயல்கல்லூரி விவாத அணியினர் இவ்வருடம் "விவாத உலகின் முடிசூடா மன்னர்கள்" எனும் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டனர்.

"பிறப்பு விவாதி" தே. ஜெயப்பிரகாஷ் தலைமைப் பொறுப்பேற்று அணியை வகுத்து நிற்க, "கவிநடை விவாதி" வி. விமலாதித்தன், "கருத்து விவாதி" நீ. நிஷாந்தனன் ஆகியோருடன் "அதிரடி விவாதி" அ. ரஜீவன் நான்காம் இடத்தை பொறுப்பேற்றார். இவர்களுடன் "கவர்ச்சி விவாதி" ரா. டிலுக்ஷனும், கன்னி விவாதியாக சூ. சூரியபிரதாப்பும் அறிமுகமாகி அணிக்கு வலு சேர்த்தனர்.

வழமை போல வருடாந்த றோயல் தோமிய விவாதப் போட்டியுடன் தனது பருவகாலத்தை ஆரம்பித்த எமதணி தோமிய மேடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் வெற்றியீட்டி மீண்டும் "குலசேகரம் நினைவுக்கேடயத்தை" கைப்பற்றி தம் தனித்துவத்தை நிலைநாட்டியதுடன் தனது வெற்றிப் பயணத்தையும் தொடர்ந்தது.

இதைத் தொடர்ந்து இந்துக் கல்லூரியின் பொன் விழாக் கேடயத்திற்கான விவாதப் போட்டியில் பல புதிய முகங்களுடனும் புத்துணர்ச்சியுடனும் களமிறங்கிய எமதணி றோயலுக்குரிய தனிச்சிறப்புடன் விவாதித்து முதல் சுற்றில் இசிப்பத்தன கல்லூரியையும், இரண்டாம் சுற்றில் வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியையும், மூன்றாம் சுற்றில் மாபொல அல்-அஷ்ரப் கல்லூரியையும், அரையிறுதிப்போட்டியில் டீ.எஸ் சேனாநாயக்க கல்லூரியையும் நடுவர்களின் ஏகமனதான முடிவில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப்போட்டியில், அவ்வருட அகில இலங்கை தமிழ்த்தின போட்டி வெற்றியாளர்களான இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியுடனான விறுவிறுப்பான விவாதப் போட்டியில் வெற்றியீட்டி அனுபவத்தால் ஆர்ப்பரித்தவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்ததுடன் மீண்டுமொரு முறை தொடர்ந்தும் இந்துவின் பொன்விழா வெற்றி கேடயத்தை தமதாக்கிக் கொண்டது.

இவ் வெற்றியின் மூலமாய் விவாதத்தில் கருத்துக்கே முதலிடம் கவர்ச்சிக்கு அல்ல என்ற உண்மை உறுதி செய்யப்பட்டது.

தொடர்ந்து இசிப்பதன கல்லூரியால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாத சுற்றுப்போட்டியில் முதல் சுற்றிலே கல்கிஸ்சை பரி.தோமாவின் கல்லூரியையும், இரண்டாம் சுற்றில் வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியையும் வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டியில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியுடன் அரங்கம் அதிரும்படி மிகச் சிறப்பாக விவாதித்த போதும் எமதணி இப்பருவகாலத்திற்கான முதல் தோல்வியை தழுவியது.

அடுத்து அகில இலங்கை தமிழ்த்தின போட்டியின் கோட்டமட்ட விவாதத்தின் முதலாம் சுற்றில் புனித கிளயார்ஸ் கல்லூரியை வெற்றிக் கொண்டு இரண்டாம் சுற்றில் புனித அன்னம்மாள்

மகளிர் கல்லூரி விவாதம் தயாராகும் நிலையில் தோல்வியை ஏற்றுக்கொண்டு போட்டியிலிருந்து விலகிச் செல்வதாய் அறிவித்தது. இறுதிப் போட்டியில் கொழும்பு இந்துக்கல்லூரியுடனான மற்றுமொரு விறுவிறுப்பான விவாதப் போட்டியில் மிகத்துரதிஷ்டவசமாக சிறு புள்ளிகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவி இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இந்துக் கல்லூரியினால் மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான விவாதச் சுற்றுப்போட்டியில் தவிர்க்க இயலாத காரணங்களால் எமதணியின் சில முன்னணி விவாதிகள் இன்றி முற்றும் புதுமுகங்களுடன் களமிறங்கிய எம் கன்னியணி முதல் சுற்றில் புனித சூசையப்பர் கல்லூரியையும், இரண்டாம் சுற்றிலே யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியையும், மூன்றாம் சுற்றில் புனித பிரிஜ்ஜட் கன்னியர்மடத்தையும் வெற்றி கொண்டு நாற்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்கு பற்றிய இப்போட்டியில் காலிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. அனைவரது கவனத்தையும் பாராட்டையும் வென்றது. இருப்பினும் சோதனைகள் எம் கன்னியணியை பின் தொடர்ந்து கொண்டேயிருந்ததால், "எம் அணியின் நால்வரது குரலும் ஒரே மாதிரி இருந்தது" என்ற புதுமையான தீர்ப்பின் படி நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரியுடனான காலிறுதிப் போட்டியில் எமதணி தோற்றதாக அறிவிக்கப்பட்டது.

இத்தனை இன்னல்களையும் கடந்து முஸ்லிம் மகளிர் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாதச்சுற்றுப் போட்டியில் மீண்டும் புதிய உத்வேகத்துடன் முழுமையாக களமிறங்கிய எமதணி முதல் சுற்றிலே உவெஸ்லிக் கல்லூரியுடன் வெற்றி பெற்றது. இரண்டாம் சுற்றிலே அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டி வெற்றியாளர்களான இந்துக்கல்லூரியுடன் வீரவாதம் புரிந்து வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டியுள் நுழைந்தனர். அரையிறுதிப் போட்டியில் புனித சூசையப்பர் கல்லூரியையும் வென்று மீண்டும் ஒரு வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டதன் மூலம் றோயல் கல்லூரி அணியினர் "விவாத உலகின் முடிசூடா மன்னர்கள்" என்பதனை நிரூபித்து தங்களின் தனித்துவத்தையும் தக்கவைத்துக் கொண்டனர்.

றோயல்கல்லூரியின் விவாத அணி இப்பருவ காலத்தில் தனது முழுத்திறமையையும் வெளிகாட்டியதுடன் அனைத்து அணிகளுக்கும் அச்சுறுத்தலாகவும் காணப்பட்டது. சில தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் அணியின் மூத்த முன்னணி விவாதிகள் அற்ற நிலையில் சில பின்னடைவுகளை சந்தித்திருந்த போதும் எமது முழுமையான அணி இதுவரை எப்போட்டியிலும் எவ்வணியாலும் தோற்கடிக்கப்படாது தங்கள் தனித்துவத்தை நிலை நிறுத்தியுள்ளதுடன் றோயலுக்குரிய தனிப்பெருமையையும் ஈட்டிக்கொடுத்துள்ளமை பெருமைக்குரியது.

இறுதியாக எங்களின் வெற்றிக்கெல்லாம் சொந்தக்காரர்களான எங்கள் அண்ணாமார்களும் றோயலின் முன்னாள் விவாத வித்தகர்களுமான மூத்த விவாதிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் றோயல் கல்லூரி விவாத அணி எதிர்வரும் வருடங்களிலும் விவாத மேடைகளில் தங்கள் தனித்துவத்தை பேண வாழ்த்துகிறோம்.

றோயல் கல்லூரி

விவாத அணியினர் 2003/2004

எமது கல்லூரிக்குள்ளான
"விவாதச் சுற்றுப்போட்டி 2003"

1ம் இடம்	:-	நீ. நிஷாந்தனன்
		ச. சிவசங்கர்
		தி. சஞ்சீவன்
		ஜெ. நிரோஜன்
2ம் இடம்	:-	சி. சிவாகணேஷ்
		ஐ. அப்ராஸ்
		ந. றசா
		ந. பிரசன்னா
3ம் இடம்	:-	வி. விமலாதித்தன்
		ர. றிஃப்டி
		கி. அரவிந்தன்
		த. ஸ்ரீரமணன்

எங்கள் கல்லூரிப் போட்டிகளில் நடுவர்களாக கடமையாற்றிய எமது ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் எமது முன்னாள் விவாதிகள் அனைவர்க்கும் இதயங்கனிந்த நன்றிகள் உரைக்கின்றோம்.

செயற்குழு
2003/2004

Best Wishes

from

Mr. M. R. Fahumudeen

றோயல் கல்லூரி

தமிழ் விவாத அணி

முன்னாள் அணித்தலைவர்கள்

1976/1977	-	S. இராமசந்திரா
1977/1978	-	R. இராஜகாரியர்
1978/1979	-	A. R. ஹக்கீம்
1979/1980	-	S. ஜனார்த்தனன், S. பாலமோஹன்
1980/1981	-	C. V. பார்த்தீபன், S. வெங்கடேசன்
1981/1982	-	M. வரகுணண் M. A. சுமதிரன்
1991/1992	-	M. R. உருஷ்டி அமீர்
1993/1994	-	B. சந்திரபிரகாஷ்
1994/1995	-	S. நிலக்ஷன்
1995/1996	-	G. S. சேதுகாவலர்
1996/1997	-	C. I. அலியான்
1997/1998	-	G. S. சேதுகாவலர்
1998/1999	-	R. சசிதரன்
1999/2000	-	R. பிரம்மவிநாயகன்
2000/2001	-	T. யோகேந்திரன்
2001/2002	-	S. கஜேந்திரன்
2002/2003	-	U. L. M. ரெஷா

With the Best Compliments of :

Newly Opened.... By a Royalist

KALUBOWILA DENTAL CLINIC

Following treatments are carried out here

- Tooth Extractions
- Fillings (Temporary & Permenent)
- Cleaning (Scaling)
- Dentures (Removable Artificial Teeth)
- Crowns & Bridges (Fixed Artificial Teeth)
- Children's Dental Care
- Orthodontic Clip (Appliances)
- Minor Oral Surgeries

Consultation Hours:
Daily
9.00 a.m. — 1.00 p.m.
4.00 p.m. — 9.00 p.m

(Close to Grand Mosque)

No. 35B, Hospital Road, Dehiwala.

With Best Compliments from

❑

❑

❑

EAST WEST MARKETING (PRIVATE) LIMITED

297/2, George R. De Silva Mawatha, Colombo 13.
Tel : 2441111 (10 Auto Lines) Fax : 2331435
Mobile : 0777-305345
E-mail : eastwest@eastwst.com

With the Best Compliments of

PrintKing

Best impressions, Royal Service

62/5/11, Katukurunda Watta,
Mawaramandiya, Kadawata
Telephone: 2976388, 2976336.
Fax: 2976336
Mobile: 0777312052
E-mail: printking@eureka.lk

With the Best Compliments of



A R B

SQUARE

Audio, Video Parlour & Communication

358, Galle Road, Colombo 6

Tel: 2505537, 2553540, 5557509, 5557510

Fax: 2505538

With the Best Compliments of

Print Connection

65/12 A, Bodhirukkaramaya Road,
Waragoda, Kelaniya
Telephone: 2917848 Mobile: 0777-328848
E-mail: printc@itmin.com

With the Best Compliments of

S. S. TRADERS

(S. SIVALINGAM)

Dealers in Vegetable

V. C. Building, Main Street
Kandapola
Telephone : 2229650

With the Best Compliments of

Sri Maaruthy Pawn Brokers
and
Communication

110, Nuwara-Eliya Road,
Talawakelle
Telephone: 052-2258459

With the Best Compliments of

Shingapoore Jewelers

Dealers in Genuine 22 ct. Gold Jewelleries
and Italy Silver Jewelleries

315, Galle Road, Wellawatta,
Colombo 06,
Sri Lanka
Telephone: 2363158

With the Best Compliments of

SIVA ENTERPRIZE

Leading Estate Suppliers General Hardware Merchants

Welcome to Nuwara-Eliya
Welcome to Siva Enterprize

Block CI - Siva Complex, Lawson Street,
Nuwara-Eliya
Telephone: 052-2222109, 052-2222941

With Best Compliments from

New

Dhiviya Jewellers

Specialists in 916 Gold Jewelleries

42-C, Galle Road, Wellawatte,
Colombo 6.
Telephone: 2508501, 2505065

With the Best Compliments of

Lion T. Uthayakumar MJF

President

Lions Club of Colombo North

(2003 - 2004)

200, Sri Kathiresan Street, Colombo 13,

Sri Lanka.

Tel : 2431824, 23322462

Fax : 2393144

Mobile : 0777-312007

E-mail : uthaya@sol.lk

With the Best Compliments of

❖

❖

❖

Esviem's Super Market

FOR ALL YOUR HOME NEEDS

No. 338, Galle Road, Wellawatta,
Colombo - 06.
Tel : 4518844

Car park at :
No : 6, Rajasinghe Road, Wellawatta, Colombo 6.

Organizing Committee

Seated L to R : P. Suntharakumar *(Asst. Treasurer)*, Azeem A. Mackeen *(Editor)*, S. Vithushan *(Secretary)*, K. Partheepan *(Chairman)*, T. J. Aslam *(Secretary)*, A. Arshad *(Treasurer)*, N. Neshanthanan *(Asst. Treasurer)*

Standing 1st Row L to R : S. Sivaganesh, A. L. M. Abith, M. Z. M. Rihan, S. Sivakumar, A. Shariq Mirzaa, M. U. M. Nazih, S. Sajeeganthan, J. Ravikirushanth, M. V. M. Naseem, V. Niranjan Prasanth

Standing 2nd Row L to R : T. Sanjeevan, M. M. M. Rikas, M. S. M. Jumly, K. Kokullanath, M. Affan, M. F. Rahuman, S. Nazamat, A. Y. F. A. Faiz, P. Mayooran, M. Thivaharan

Absentees : V. Vimalathithan, S. Samson

Royal College
Tamil Literary Association
Organizing Committee 2003/2004

K. Partheepan
S. Vithushan
T.J. Aslam
A. Arshad
M. Imthiyaz
Azeem A. Mackeen
N. Neshanthanan
P. Suntharakumar
V. Vimalathithan
M.S.M. Jumly
S. Nazamat
S. Samson
M.M.M. Rikas
T. Sanjeevan
S. Sivaganesh
S. Sivakumar
J. Ravikirushanth
U. Nazih
S. Sajeeganthan
A. Shariq Mirzaa
A. Y. F. A. Faiz
A.L.M. Abith
M. F. Rahuman
M. Affan
M.N.M. Nazeem
V. Niranjan Prasath
M. Thivakaran
P. Mayoorun

வேத்திய வேங்கைகள் சூடிய வாகைகள்

இவ்வருடம் தைமாதம் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தால் ஒழுங்கு செய்த தமிழ்த்திறன் காண் போட்டிகளில் பரிசுபெற்ற எமது பாடசாலை மாணவர்கள்.

1ம் இடங்கள்

மேற்பிரிவு	கவிதை	வி. விமலாதித்தன்
மேற்பிரிவு	பேச்சு	நீ. நிஷாந்தனன்

2ம் இடங்கள்

கீழ்ப்பிரிவு	பேச்சு	பூ. ஜெயமயூரேஷ்
கீழ்ப்பிரிவு	கட்டுரை	ச. உமாஷங்கர்
மத்தியபிரிவு	கவிதை	ச. அர்ஜுனா
	பேச்சு	த. ஸ்ரீரமணன்
மேற்பிரிவு	சிறுகதை	பி. சுந்தரகுமார்

05.02.2003 அன்று சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் விழாவிலே இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பரி. தோமாவின் கல்லூரி கல்கிசையின் தமிழ் இலக்கிய மன்றத்தினரால் இவ்வருடம் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழத்திறன் காண் போட்டியில் பரிசுபெற்ற எமது பாடசாலை மாணவர்கள்.

1ம் இடங்கள்

கீழ்ப்பிரிவு	கட்டுரை	ச. உமாஷங்கர்
மத்தியபிரிவு	கட்டுரை	ச. சதானந்
மேற்பிரிவு	கவிதை	க. கார்த்தீபன்

2ம் இடங்கள்

மத்தியபிரிவு	தனியிசை	கி. அரவிந்தன்
மேற்பிரிவு	பேச்சு	நீ. நிஷாந்தனன்

3ம் இடங்கள்

கீழ்ப்பிரிவு	தனியிசை	ச. பிரணவன்
மத்தியபிரிவு	பேச்சு	ஸ்ரீ. சுகோதயன்

அன்று அவர்களது கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற கலைவிழா - 2003இல் இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அகில இலங்கை தமிழ் தினப் போட்டி - 2003 இல் பரிசு பெற்ற மாணவர்கள்

கோட்ட மாவட்டம்

1ம் இடங்கள்

4ம் பிரிவு	கவிதை	சூ. சூரியப்பிரதாப்
5ம் பிரிவு	கவிதை	வி. விமலாதித்தன்

2ம் இடங்கள்

திறந்த பிரிவு	விவாதம்	தமிழ் விவாத அணி
3ம் பிரிவு	பேச்சு	பூ. ஜெயமயுரேஷ்
4ம் பிரிவு	பேச்சு	த. ஸ்ரீரமணன்

3ம் இடங்கள்

3ம் பிரிவு	தனியிசை	கி. அரவிந்தன்

மாகாண மாவட்டம்

1ம் இடம்

5ம் பிரிவு	கவிதை	வி. விமலாதித்தன்

2ம் இடம்

4ம் பிரிவு	கவிதை	சூ. சூரியப்பிரதாப்

3ம் இடம்

5ம் பிரிவு	கவிதை	வி. விமலாதித்தன்

இவ்வருடம் புரட்டாதி மாதம் கொழும்பு இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போட்டிகளில் பரிசு பெற்ற எமது பாடசாலை மாணவர்கள்.

1ம் இடம்

மேற்பிரிவு	தனி நடிப்பு	நீ. நிஷாந்தனன்

2ம் இடம்

திறந்த பிரிவு	தமிழறிவு	ஜெ. நிதர்ஷன்
		த. சஞ்ஜீவன்
		த. கோதயரமணன்
மேற்பிரிவு	பேச்சு	சி. சிவாகணேஷ்
மேற்பிரிவு	கட்டுரை	அ. ஹரீஷன்

3ம் இடம்

மேற்பிரிவு	சிறுகதை	ஜெ. பிரசன்னா

28.10.2003 அன்று இராமகிருஷ்ண மண்டபத்தில் வெகு விமரிசையாக நிகழ்த்த தீபாவளி விழாவிலே இவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. இனிவரும் காலங்களிலும் எங்கள் வேத்திய வேங்கைகளின் வெற்றிகள் தொடர எம் மன்றம் வாழ்த்தி நிற்கிறது.

செயற்குழு
2003 / 2004

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட

"தமிழ்த்திறன் காண்" போட்டி முடிவுகள்

ஆண்டு - 1

	1-H	1-J
சொல்வதெழுதல் :	1. அ. அவிநேஷ்	1. K. கௌதமன்
	1. பா. சியாம்கணேஷ்	2. A. சஞ்சயன்
	3. சா. ஸ்ரீசுபத்சன்	3. C. துஷ்யந்தன்
	3. மு. ஆசில்முனாஸ்	3. M.N. நஃப்லி அஹமட்
உறுப்பெழுத்து	1. செ. லக்ஷன்	1. M. இக்ரிமா
	2. ஸ்ரீ. வர்ணசுதன்	2. S. கர்ணன்
	3. நா. ராஜ்காந்	3. M. அர்சாட்அகமட்
	3. மு.பா. சிராஸ்	3. S. இரகுராகவன்

ஆண்டு - 2

	2-H	2-T
கட்டுரை	1. V. சுஜீவன்	1. L. கீர்திகன்
	2. B. ஷாருந்தன்	2. H. இல்ஹாம்
	2. T. ஹரிசுதன்	2. S. துசியந்தன்
	3. K. மௌலிகரன்	3. S. ஹரிஷ்மன்
	3. B. பாலமுரளி	3. T. அக்மல்
		3. J. ஜீவினோஜன்
சொல்வதெழுதல்	1. S. துசியந்தன்	1. T. காந்தரூபன்
	2. V. துவாரகேஷ்	2. H. ஹிபாஸ்
	2. K. நிலாஸ்	2. R. ஹிரிசிகன்
	3. R. ராகுல்	3. M. முஸாப்
	3. E. பிரம்மானந்தன்	3. V. திவ்வியன்
		3. B. ஹிரஞ்சன்

கதைசொல்லல்	1. A. இன்ஷாப் அன்வர்	1. G. ஹரிநாத்
	2. R. மிதுஷன்	2. R. உதிஷ்டரன்
	2. S. பிரஷாந்த்	2. J. கவின்கஷ்வத்
	3. J. ருசைக்	3. R. கோகுலன்
	3. F. மைக்மகேஷ்	3. Y. உமாசுதன்

ஆண்டு - 3

	3-H	3-J
பேச்சு	1. I. இம்தியாஸ்	1. M.S. முகாத்
	2. S. சாய்லோலிபவன்	2. V. ஜீவிதுர்னன்
	3. M. சிகாம்கான்	3. S. பாலகஜன்
	3. I. ஷூம்லி	3. A. சாமில்
சொல்லதெழுதல்	1. K. M. சீஷான்	1. K. விவேஷ்
	2. A. செந்தூரன்	2. M. முன்சில்
	3. M. பானுகோபன்	2. J. சசிசேகன்
		3. V. ஜீவிதுர்ஸன்

ஆண்டு - 4

	4-H	4-J
பேச்சு	1. T. திவியன்	1. M. மிர்ஸான்
	2. P. கோகுல்ராம்	2. S. அஸ்வின்
	3. K. வேதபிரியன்	3. R. அருண்தீப்
	3. P. சாய்தேவ்	3. R. ராகுலன்
கட்டுரை	1. J. பிரவீன்	1. R. நிரோஷன்
	2. N. கபிலாஷ்	2. I. இக்பால்
	3. N. லசந்	3. J. அருஷான்
	3. A. தாரிக் அஸீஸ்	3. A. பளீள்

ஆண்டு - 5

	5-H	5-J
தனிநடிப்பு	1. M.T. அசீல் அகமத்	1. B. அஜன்
	2. M. இமாஸ் இம்தியாஸ்	2. N. பிரவீன்
	3. K. சசிபாலன்	3. E. பிரகலாதன்
		3. A.H. அப்துல்லா
பேச்சு	1. M. T. அகீல்அகமத்	1. N. பிரவீன்
	2. M. இமாஸ் இம்தியாஸ்	2. S. சிவகணேஷ்
	3. R. ரமணன்	3. B. அஜன்
		3. N. டிலுக்ஷன்

கீழ்ப்பிரிவு

கட்டுரை	1. பா. மயூரன்	- 8 R
	2. ரா. பார்த்தீபன்	- 7 Q
	3. சி. மயூரன்	- 8 Q
சிறுகதை	1. சு. சுஜன்	- 8 Q
	2. அ. சப்ரான் அக்பர்	- 8 R
	3. அ. கு. கோகுலானந்த சுந்தரம்	- 8 Q
கவிதை	1. ச. கிரிதரன்	- 8 R
	2. ப. சஜீவ்	- 8 Q
	3. து. லுசாந்தன்	- 8 Q
பேச்சு	1. ஜெயமயூரேஸ்	- 7 R
	2. சி. மயூரன்	- 8 R
	3. தி. தியாகேஷ்	- 6 Q
	3. ந. துவாரகேஷ்	- 6 R

மத்திய பிரிவு

கட்டுரை	1.	ஜீ. முகுந்தாஜ்	- 9 R
	2.	த. ஸ்ரீரமணன்	- 11 Q
	3.	ம. மயூரன்	- 9 Q
சிறுகதை	1.	சி. கபிலன்	- 10 R
	2.	ர. ரி∴ப்டி	- 10 Q
	3.	சு. நிஷாந்தன்	- 10 R
கவிதை	1.	பா. பார்த்தீபன்	- 11 Q
	2.	சு. விசாகன்	- 9 R
	3.	ந. ஹிஸாம் முகம்மத்	- 10 Q

மேற்பிரிவு

கட்டுரை	1.	அ. ஹரிஷன்	- 12 Sci M
	2.	த. கோகுலரமணன்	- 13 Sci M
	3.	மு. ரிகாஸ்	- 13 Sci M
சிறுகதை	1. ,	க. கார்த்தீபன்	- 13 Sci M
	2.	தி. சஞ்ஜீவன்	- 13 Sci M
	3.	மு. இர்ஸாத்	- 13 Com D
கவிதை	1.	த. ஹரிலோஜன்	- 12 Sci M
	2.	அ. ஹரிஷன்	- 12 Sci M

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

கல் தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்த குடிகளால் பேசப்பட்டது, எமது தமிழ் மொழியாகும். இளமை குன்றா வளம் பொருந்திய இளந்தமிழ், இனிமை குன்றா இன் தமிழ், தெவிட்டாத் தீந்தமிழ், மென்கிழியும் ஜீரணிக்கத்தக்க மென்தமிழ், வகை வகையாய் வரங்கள் பெற்றுத் திகழும் வண்ணத் தமிழ், பண்டைய அரசர்களால் பராமரிக்கப்பட்ட அழகுத் தமிழ், சங்கம் வளர்த்த தமிழ் என்று புகழ் பெறுகிறது. மேலும் -

"யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்"

என்றார் வீரத்தமிழ் பாரதி. பல மொழிகள் கற்றவனுக்கு தமிழ்மொழியின் இனிமையும் சிறப்பும் கூறவேண்டியதில்லை.

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்தமிழ்
இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்றான் பாவேந்தன் பாரதிதாசன். அமுதம் போன்றது தமிழ். தமிழ் தான் எங்கள் உயிர். தமிழ்தான் எங்கள் உயிர் மூச்சு என்ற கருத்தை இப்பாடல் வலியுறுத்துகின்றது. தமிழ் மொழியை கேட்டால் நெருப்பு நீராக மாறும். மதங்கொண்ட யானை மயங்கி விழும். தமிழ்மொழியை பற்றி ஒரு கவிஞர் கூறுகையில்,

"கன்னித்தமிழ் கவின்தமிழ்
இன்பத்தமிழ் அதுவே எம் தமிழ்"

என்றார். தமிழைப் பற்றி பாடாத புலவர்களா? பாடாத பறவைகளா? தமிழின் ஆற்றலை அறியாத மனிதன் ஒருவனும் இவ்வையகத்தில் இருக்க முடியாது. உயிருக்கு நிகரான தமிழல்லவா இது. ஒட்டக் கூத்தர், கம்பர், பாரதியார், பாரதிதாசன், இளங்கோ அடிகள், ஒளவையார் போன்ற பல புலவர்கள் தமிழ்மொழியை பற்றி இயற்றியுள்ளனர். அவர்கள் பாடிய பாடல்கள் இன்றும் எம்மத்தியில் உயிருடன் வலம்வருகின்றன.

பண்டைய அரசர்களை நோக்குவோமானால் அவர்கள் தமிழை வளர்த்த விதத்தை இன்றும் எம்மால் மறக்கமுடியாது. தம்மைத் தேடிவந்த புலவர்களுக்கு இல்லையென்று சொல்லாது வாரிவாரி வழங்கினர். புலவர்கள் அரசனிடம் வந்தால் அரசன் அவர்களை தேடிச்சென்று அவர்கள் பாதங்களை கழுவி, வணங்கி ராஜா போல அமர்த்துவார். இதை மறக்க முடியுமா? பெருஞ்சேரல் இரும்பொறை அரசனை நோக்குவோமானால் அக்காலத்தில் முரசுக்கட்டிலில் படுத்துறங்கினால் தண்டனை என்ற சட்டமுண்டு. மோசிகீரனார் என்னும் தமிழ் புலவர் ஒருநாள் வெயிலின் கொடுமை தாங்கமுடியாமல் அங்கேயே உறங்கிவிட்டார். அரசன் அவருக்கு தண்டனை

கொடுக்காது புலவரைப் போற்றினார்.

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

என்றார் கண்ணதாசன். தமிழன் என்பவன் தலை நிமிர்ந்து நிற்பவன் எதற்கும் அஞ்சாதவன். சிங்கம் போன்றவன் என்ற கருத்தை இப்பாடல் வலியுறுத்துகின்றது.

இக்காலத்திலும் கம்பன் போன்ற கழகங்களை நடத்தியும் ஆங்காங்கே கூட்டங்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள் நடத்தி தமிழ் மொழியை வளர்க்கின்றனர். பாடசாலைகளில் விழாக்களை நடத்தி தமிழை வளர்க்கின்றனர். ஒரு சிறு குழந்தையிடம் தமிழ் மொழியை பற்றி கேட்டால்,

"தாய்ப்பாலில் வீரத்தைக் கண்டேன்
தாலாட்டில் தமிழ்மொழி கண்டேன்"

என்று கூறும் இப்படிப்பட்ட உயிருக்கு நிகரான தமிழை போற்றுவோமாக.

- பா. மயூரன்
8-R

யாரிடம் மொழிப்பற்று?

ஆங்கிலேயர்தான், உண்மையிலேயே தாய் மொழிப் பற்று உள்ளவர்கள். நாடுகடந்து வந்து உலகெங்கும் தமது தாய்மொழியை ஆணித்தரமாக நிலைநாட்டி விட்டார்கள் !

பஞ்சாபியர் ஆயிரக்கணக்கான மைல் தூரம் சென்று குடியேறியிருக்கிறார்கள், கனடா நாட்டில். ஓரளவு தாய்மொழிப் பற்றுடையவர்கள் என்று கூறலாம். அந்த நாட்டு முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்து அதன் பிரதிபலனாக அவர்கள் வசிக்கும் ஊர்களில் உள்ள பிரதான நகரமான வான்கூவரின் தெருப்பெயர்ப் பலகைகளில், பிரெஞ்சு, ஆங்கிலமொழிப் பெயர்களின் கீழே பஞ்சாபி மொழியிலும் (குருமுகி) எழுதி வைக்கச் செய்துள்ளனர். என்ன தாய்மொழிப் பற்று !

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற கவிதை

அரை மனிதன்

ஆதியிலே காட்டிலே பிறந்து,
கற்குகைகளிலே காலத்தை ஓட்டி,
விலங்குகளை வேட்டையாடி,
பச்சையாக உண்டு வளர்ந்து,
இலை, தழைகளைக் கட்டிக் கொண்டு,
அரை மனிதனாய் வாழ்ந்த காலம் !

வைத்தியசாலையிலே சொகுசாகப் பிறந்து,
மாளிகையிலே வாழ்க்கையை வாழ்ந்து,
பீசாவை உண்டு மகிழ்ந்து,
ஆடை, அணிகலன்களை அணிந்து கொண்டும்,
அரை மனிதனாய் வாழும் இந்தக் காலம் !

விஞ்ஞான யுகம் தேறிவிட்டது,
மாளிகைகள் வானை அடைய,
எங்கு பார்த்தாலும் கணினிமயம்,
கையிலே " செல்போன் எடுத்துக் கொண்டு,
'கர்ள் ஃபிரண்ட்' வைத்துக் கொண்டு,
கழுத்தில் வெள்ளிச் சங்கிலி அணிந்து,
சங்கத்திற்குச் செல்லும் இந்த
அரை மனிதன் !

அன்றோ ஆபிரிக்காக் காட்டிலே,
விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்த
இந்த மனிதனும் அரை மனிதனே !
இன்றோ ஐரோப்பாக் கண்டத்திலே,
வானிலே பறந்து கொண்டிருக்கும்,
இன்றைய மனிதனும் அரை மனிதனே !

அன்றோ இருமணம் இணைந்த காதல்,
இன்றோ மாட மாளிகையிலே,
விலை மாதர்களோடு !

குகைகளிலே உப்புத் தண்ணீர்
குடித்த அந்த மனிதன்,
இன்றோ ஹோட்டல்களில் மதுவகைகளில்,
இன்றைய மனிதன் !

காரியத்தை நிறைவேற்ற
கடவுளைக் கூப்பிட்ட அந்த மனிதன்,
காரியத்தை நிறைவேற்ற
விஞ்ஞானத்தை நம்பி வீரியத்துடன்
செயற்படும் இன்றைய மனிதன் !

ஆதியிலே கல்லில் செதுக்கிய சிற்பம்,
இன்றோ கிரபிக்ஸில் வரையும் ஓவியம் !
அழியாத ஓவியம் அன்றைய ஓவியம்,
அரைநொடியில் கிழிந்துவிடும் இன்றைய ஓவியம் !

கல்வியை சிந்தனையில் சிறை செய்த
அந்த மனிதன் !

சீ. டீ யில் அதைப் பதிக்கும்
இன்றைய மனிதன் !

விலங்குகளை கொல்ல கல்லை பயன்படுத்திய
அன்றைய மனிதன் !
ஏவுகணையில் உலகை அழிக்கவல்ல
இன்றைய மனிதன் !

அன்றைய மனிதன் ஆடையால்
அரை மனிதன் !
இன்றைய மனிதன் எல்லாவற்றிலும்
அரை மனிதன் !

ஆண்டிகாணும் கனவில்தான் முழுமனிதன்
இன்றைய மனிதன்,
காலத்தாலும் அழியாத முழுமனிதன்
இன்றைய மனிதன் !

- ச. கிரிதரன்
8-R

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற சிறுகதை

கண்ணிரண்டை விற்று......

பூஞ்சோலை என்பது மிகவும் அழகிய கிராமம். இயற்கைப் பூஞ்சோலைக் கிராம மண்ணில் பிறந்தோர்க்கு நிகராக ஒத்துப் போனது. இவ்வளவு நாளும் அமைதியாய் இருந்த அந்தக் கிராமத்தை போர் எனும் கொடிய மாலை சூடிக்கொண்டது. எங்கும் கலவரங்கள், வெட்டுக்கள், இரத்தத் துளி போன்றவை காணப்பட்டன. அன்று இயற்கைச் சூழலில் வாழ்ந்த மக்கள், இயற்கைக்கே பயந்து ஓடினர். இப்படியிருக்கையில் ......

அன்று தோட்டா முழக்கத்திலேயே பொழுது விடிந்தது. ஆயினும் குமரனோ கனவு உலகத்தில் மிதந்து கொண்டிருந்தான். பொழுது விடிந்து ஏழு மணியாகிறது. "டேய் தம்பி, எழும்புடா, டேய் எழும்புடா. நேரமாகுதடா பள்ளிக்கூடத்துக்கு" என்றவாறு அவனது தாயார் சுப்பம்மா எழுப்புகிறாள். கனவில் மிதந்த குமரனோ கனவைக் கலைத்தவாறு பாடசாலை நினைவோடு எழும்புகிறான். "அப்பா எங்கம்மா ? நான் நேத்து பள்ளி பரீட்சைக் கட்டணம் கட்ட வேண்டும் என்று அப்பாட்ட கேட்டிருந்தேன். இன்னைக்குத் தான் கடைசி நாள்" என தன் தாயாரைக் கேட்கிறான்.

ஒரு நீண்ட நேர அமைதி தாய், மகன் ஆகியோருக்கிடையில் நிலவுகிறது. அதை அவனது அக்கா கலைக்கிறாள்.

"டேய் தம்பி! அப்பா உனக்காகத்தான் விடியலுக்கு முன்னமே வேலை செய்ய தன்ட வயலிற்கு போனவர். இன்னமும் வரக் காணலியே. சரி உனக்கு நேரமாகுது கெதியா வெளிக்கிட்டுப் போ" என்றாள் கமலினி. சரி இன்னைக்கு எப்படியும் கட்டணம் கட்ட முடியாது என்று நினைத்தவாறு பாடசாலைக்கு தயாரானான்.

இந்நிலையில் சுப்பம்மா தன் கணவர் மாணிக்கத்தைக் காணாது மகளை, பார்த்து வர அனுப்புகிறாள். ஒரு அரை மணி நேரத்தின் பின்னர். குமரன் பாடசாலைக்குக் கிளம்பி விட்டான். வீட்டில் தன்னந் தனியாக இருந்த சுப்பம்மாவை நோக்கி முருகையா ஓடி வருகிறார்.

சுப்பம்மா, சுப்பம்மா என மூச்சிரைக்க ஓடி வந்தவர் ஒரு அதிர்ச்சியை சொல்ல சுப்பம்மா மயங்கி விழுகிறாள். இதைக் கண்ட முருகையா பதற்றத்துடன் வைத்தியரின் வீட்டை நோக்கிச் சென்று வைத்தியருடன் ஒரு மணி நேரத்தின் பின் வருகிறார். ஆனால் சுப்பம்மாவின் உயிரோ அவளது உடலிற்கு சொந்தமில்லை என்றாகி விட்டது. இந்நிலையில் அவளது பூதவுடலிற்கு அருகில் ஒரு காகிதம் ஒன்று இருந்தது. அதை உரக்கப் படிக்கிறார் முருகையா "பூஞ்சோலைக் கிராமத்தில் வசிக்கும் சுப்பம்மாவாகிய நான் சுயவுணர்வுடன் எழுதுகிறேன். எனது கண்கள் இரண்டையும் விற்று நீங்கள் தான் என் மகனைக் காப்பாற்ற வேண்டும்" என்று எழுதியிருந்தாள். இதை வாசித்து முடிக்க இரு கண்ணீர்த் துளிகள் முருகையாவிடம் இருந்து நிலத்தில் சிந்தின.

பின்னர் வீட்டை நோக்கி வருகிறான் குமரன். ஏனெனில் நாளை தான் பாடசாலைக் கட்டணத்திற்கான இறுதி நாள் என்ற இன்ப அதிர்ச்சியை சுப்பம்மாவிடம் சொல்ல விரைகிறான். ஆனால் வாசலில் வந்தவனுக்கோ தன் தாயின் பூதவுடலையே காண்கிறான். பேச்சு மூச்சின்றி கவலையுடன் நிற்கின்றான். அவனிடம் வந்த முருகையா மற்றொரு அதிர்ச்சியை சொல்கிறார். "உன் தந்தையோ வயலிலே இருந்த கண்ணி வெடிக்குப் பலியாக. அவரை தேடிச் சென்ற உன் அக்கா கமலினி வெடி குண்டுகளிற்கு பலியாகி இரத்த வெள்ளத்தில் இருந்ததை சுப்பம்மாவிற்கு தெரிவித்த மறுகணமே உன் தாயாரும் உயிர் நீத்து விட்டார்" என்று சொல்லியவாறு சுப்பம்மாவின் இறுதி மூச்சைத் தெரிவித்து அக்கடிதத்தைக் கொடுத்தார்.

அன்றே தனது பெற்றோரின் அருமையை உணர்கிறான் குமரன். தனது தாய் இறந்தும் தன் கண்ணிரண்டையும் விற்று ...... பணம் பெறுக. என்பதை வாசித்தவன் கலங்கியவாறு அநாதையாக நின்றான்.

இந்த விசித்திரமான நவீன உலகில் உள்ள தாய்மார்கள் கோடி பேரில் இவளும் ஒருத்தி தான். இவள் ஒரு தாய் அல்ல. ஒரு தெய்வம் என்பதை நாமும் உணர வேண்டும்.

- சு. கஜன்.
8 - Q

புத்தகங்கள் அறிவுக்கே உணவை யூட்டிப்
புதிதான காட்சிகளை மனத்தி லேற்றி
வித்தகனாய்ச் செய்யுமென இலக்கி யத்து
வேலிக்குள் அடியெடுத்து வைத்தி டாது
நித்தமனப் பசிதீரப் படித்துப் பார்த்து
நாலைந்து பேர்களுக்கு விளக்கக் கூறின்
அத்தனையும் அறிவாகி மனத்தி லேறும்
அறிவாளி எனும் பெயரை உலகம் நல்கும்!

- கவிஞர் கண்ணதாசன்

*எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மத்தியப் பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை*

மரித்துவிட்ட மனிதத்துவம்

நவீனமயமாக்கப்பட்டு வரும் விஞ்ஞான உலகின் தேவைகளை நிறைவேற்ற நினைத்துக்கொண்டிருக்கும் நாம், சமாதானம், சாந்தி, மனிதத்துவம் என்பவை பற்றி சிந்திக்கக்கூட நேரம் இல்லாமல் இருப்பது நாமறிந்த உண்மை. அறிவு விருத்தியால் ஆன்மிக வாழ்வை தொலைத்து ஆயுத உற்பத்தியால் ஆயுளைமுறித்து அன்பு எனும் வழிதவறி ஆயுதம் எனும் உயிர்க்கொல்லியை கையிலேந்தி மானிடர் மானிடரை அழிக்கும் அகிலத்தில் மனிதனே இல்லாமல் போனதன்பின் மனசாட்சி எங்கே ! மனஅமைதி எங்கே! மானிடரிடையே மனிதத்துவம் தான் எங்கே ! திருவிழாவில் மகனைத் தொலைத்து தேடும் தாயைப்போல் மகன் எனும் மனிதத்துவ மாணிக்கத்தை தொலைத்து தேடிக்கொண்டிருக்கின்றோம். ஆம் தொலைக்கப்பட்ட பூமியில் தேடிக்கொண்டிருக்கும் மானிடர்களின் நானும் மனசாட்சியுள்ள ஒரு மாணவன். தேடும் வழியில் செல்லும் போது கண்டெடுத்த சில கற்துணிக்கைகள் உமக்காக!

சாதிகள் இல்லையடி பாப்பா ~ குலத்
தாழ்ச்சி உயர்ச்சி கொள்ளல் பாவம்~ பாரதியார்

என்றார் நம் பாவேந்தர் பண்பும், பயனும் பறைசாற்றப்பட்டிருந்த அன்றைய காலத்தில் மனிதத்துவத்திற்கோ மனித ஒற்றுமைக்கோ என்றும் பஞ்சமில்லை. இவ்வுலகில் இரண்டே இரண்டு சாதிகளே காணப்படுகின்றன. ஒன்று ஆண் ஜாதி, மற்றது பெண் ஜாதி. இவ்விரண்டைத் தவிர வேறெந்த ஏற்றத் தாழ்வுகளும் நம்மிடையே இல்லை. எந்த குலப்பிரிவுகளும் இல்லை என்று தன் பாவலிமையால் வலியுறுத்தினார் அன்றைய காலத்தில் வாழ்ந்த மகாகவி. மனிதத்துவம் என்றால் என்ன? என்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். மனிதனின் மனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து வாழவேண்டும். இரக்கம் மேலோங்கி காணப்பட வேண்டும். ஒற்றுமை நம்மிடையே தழைத்தோங்க வேண்டும். இவை அனைத்தும் நிறைவேறினால் போதாது. மாந்தர்க்கும் மாந்தர்க்கும் இடையே இரக்கம், அன்பு, உயிர்களிடத்தில் அன்பு என்பன நம் மனதில் இலயித்து போவதும் மட்டும் அல்லது நம் செய்கையில் செயல்படவேண்டும். அவ்வாறு அவை அனைத்தும் நிறைவேற்றப்படின் நம்மிடையே மனிதத்துவம் தழைத் தோங்கி விட்டதென பெருமிதம் அடையலாம். ஆனால் அங்கே ! வாழ்க்கையையே தொலைத்துவிட்டு தேடும் மனிதர்களிடையே இது எல்லாம் சாத்தியப்படுமா !

விஞ்ஞானம் எனும் விந்தையில் மயக்கப்பட்ட மாயாஜால மண்ணில் ; விண்ணில் கால்வைக்கும் ஆசை நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் வேளை ; நாடுகளை நாடுகள் பாதுகாத்துக் கொள்ளவும். தவறவில்லை. ஆம் இன்றைய உலகத்தில் உருவாக்கப்பட்டுவரும் அணுஆயுத உற்பத்தியே ஆகும். அன்றைய காலத்தில் வேடர்கள் உணவு வேட்கைக்கான உயிரினங்களை அழித்தார்கள். அதுதவறில்லை ஏனெனில் அது அறிவில்லாக்காலம், ஆகாரம்

இல்லா உலகம். ஆனால் காலம் நெருங்கிய வேளை அதாவது இன்றைய காலகட்டத்தில் உயிரினங்களை விடுவோம். மானிடர் மானிடரையே ஏன் அழிக்கின்றனர்? ஏன் ? உயிர்க்கு ஆசையா? உணவுப்பஞ்சமா? காரணம் இல்லாமல் உயிரைக் காவு எடுக்கும் இக்காலகட்டத்தில் மனிதத்துவம் நிலைக்குமா ? ஏற்றத்தாழ்வுகள் இல்லையென வலியுறுத்தப்பட்டது. அந்தக்காலம்! "நானே பெரியவன்" என்பது இந்தக்காலம். ஆம் இன்றைய காலத்தில் நடைபெறும் நயவஞ்சக போரை பற்றியே மேலும் உரைக்க வந்திருக்கின்றேன்.

அமெரிக்கா எனும் உயிர்கொல்லி அனைத்துலகத்தையும் அழித்துவரும் வேளை. அதன் சிலந்தி வலையில் சிக்குண்ட சின்னஞ்சிறிய பூச்சியே ஆப்கானிஸ்தான். அழிந்தது மனிதத்துவம். அதற்கு முன்னர் மட்டும் ஏதோ வாழ்ந்ததா ? இல்லையே. அமெரிக்காவின் தாண்டவ நடனம் கால் வைத்தது ஆப்கானிஸ்தானில். அதனால் அழிந்தது அந்நாடே இருவர்க்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளுக்கு ஆயிரக்கணக்கானோர் எவ்வகையில் தீங்கிழைத்தனர்? காரணம் இல்லாமல் மனிதர் மனத்தை மாய்த்தது ஏன் ? இவர்களிடையே மனிதத்துவத்தை எதிர்பார்க்க முடியுமா? ஏற்றுக் கொள்ளத்தான் முயல்வார்களா? இவ்வாறு இன்றைய காலகட்டத்தில் நடக்கும் மனிதத்துவமில்லா மானியப் போரை கூறப்போனால் இரண்டு இரவுகள் கூட போதாது. ஆம் அமெரிக்க - ஆப்கானிஸ்தான். அமெரிக்கா - ஈராக். காஷ்மீர் பிரச்சனை. இஸ்ரேல் சண்டை. இவ்வாறு ஆக்கிக்கொண்டே போகலாம் அழிக்கும் அசுரர்களை.

செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள் எங்குபார்த்தாலும் கொலை! கொலை! கொலை! என்றே தகவல்கள். கொலை செய்யும் பூமியில் கொள்ளை இன்பம் காணமுயலலாமோ! கொள்ளை இன்பம் தான் காணலாமோ ! எல்லாம் வெறுங்கனவுகள். விழியினுள் தெரியும் சொற்ப நேரப்படக்காட்சிகள், கொலை செய்யும் உயிர்கொல்லியர்களிடையே மனிதத்துவம் இருக்குமா? இனியாவது தழைக்குமா?

ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என வர்த்தகம், கல்வி என்பவற்றில் காட்டாது ஆயிரக் கணக்கான உயிர்களை கொன்று பலத்தை காண்பிப்பதில் என்ன வீரம் காணப்படுகின்றது. அனைத்தும் கோழைத்தனம்.

அன்றைய காலகட்டத்தில் எறும்பை காலால் மிதித்தால்கூட பாவமன்னிப்பு கேட்டு இறைவனை நாடுவார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் இறைவன் வசிக்கும் கோயிலையே இடிக்கின்றனர். அன்று வாழ்ந்த ஆன்றோர்களுள் பாரதியார், பாரதிதாசன், ஔவையார் போன்ற தமிழ் போற்றும் புலவர்கள், கவிஞர்கள் பாவல்லுனர்கள். இரக்கம், அன்பு, பணிவு, மனிதத்துவம் என்பவற்றை பாடல் மூலம் பயிற்றுவித்தனர் பாலர் நமக்கு. ஆனால் இன்னைய காலகட்டத்தில் பிறக்கும் குழந்தை கூட வெடிச்சத்தம் கேட்டே பிறக்கின்றது. உயிர்ப்பயம் இன்றும் அவர்கள் மனதில் நிலைக்கின்றது. இறைவனை போற்றினால் தானே பண்பு விளையும் பயன் கிடைக்கும். இன்றைய காலகட்டத்தில் அவற்றை தவிர்த்து ஆண்டவனை அறவே மறந்து ஆபாச ஆடைகளிலும், ஆகாத மதுபானங்களிலும் தானே மனம் போகின்றது. தூய்மை இருக்கும் இடத்திலே இறைவன் துயில்வான். நம் மனதைத் தூய்மையாய் வைத்திருந்தால் நம் மனதில் குடிபுகுவான். நம்மை நல்வழிப்படுத்துவான் ஆனால் இன்று நம் மனதில் என்ன இருக்கின்றது. நிச்சயமாய் இல்லை. இறைவன் இருந்தால் நாமேன் இவ்வாறு இருப்போம். இன்றைய

காலகட்டத்தில் காணப்படும் மனங்களில் வெடிகுண்டுச் சத்தமும் தாய் தந்தையர் புலம்பலும், அன்னையவள் கண்களில் வழியும் நீர்த்துளியின் கலங்கலும். இன்னும் சில அசுர மனங்களிடையே வெறும் இரத்த வெறியும், இரங்காமனமும், கருங்கல் நெஞ்சம், ஈரமில்லா மேனியுமே காணப்படுகின்றது.

இவ்வாறு நாம் கதைக்கின்றோமே நம் நாட்டைப்பற்றி மட்டும் சற்று யோசித்தோமா? நம் நாடு மட்டும் என்ன பெரிய புனித நிலமா? எல்லாம் வெறும் கற்பனையாய் போனது நாற்திசைகளிலும் சண்டையின் எதிரொலி ஓங்கிக் காணப்படுகின்றது. அன்று சொன்னார்கள், மானிடர், மானிடரிடையே ஏற்றத்தாழ்வுகளே வேற்றுமைகளோ வேறுபாடுகளோ காணப்படக்கூடாது. ஆனால் இன்று இலங்கைத் திருமண்ணில் நிறங்களில் கூட வேறுபாடு காண்கின்றனரே மனித நிம்மதியிலும் மனிதத்துவத்தை மட்டும் எதிர்பார்க்கலாமோ! நினைக்கவே முடியாது. ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னமே அதாவது 2 தசாப்தங்களின் முன்னரே ஆறுமுகநாவலரை தந்த யாழ்குடா நாட்டில் முளைக்கவிடப்பட்டது யுத்தம் எனும் கள்ளிச்செடி. தமிழ்க்காக வேண்டி ஒரு இயக்கம். தமிழரை எதிர்த்து ஒரு இயக்கம். தமிழை தமிழரை காக்க அவர்களை முதன்மையாக்க வேண்டுமானால் யாரையாவது போராடச் சொன்னதற்கு போரிடச் செய்தது என்ன நியாயம். தமிழரை காக்க அண்ணல் காந்தி வழியில் செல்லாமல் உயிர்களை அழித்தது ஏன் நியாயமா? மனிதத்துவம் இல்லாமல் மானிடரை அழித்தது சரியா? இனியாவது எதிர்கால தலைமுறைகளை காப்பதற்காகவாவது மனிதத்துவத்தை ஓங்க வைப்போம். சண்டையை ஒழிப்போம். காலத்தை வெல்வோம். மனிதத்துவத்தை தழைக்க வைப்போம். உயிர்களிடத்திலும் மாந்தர்க்கும் மாந்தர்க்குமிடையே அமைதியை நிலைநாட்டுவோம். அன்பை வளர்க்க போராடுவோம். இரத்த வெறி கொண்ட மானிடர் மனத்தை மாற்றி மனிதத்துவத்தை ஊக்குவித்து ஏற்படுத்தி அவர்களையும் மனிதர்களாக்குவோம். நாமும் மனிதர்களாய் மனிதத்துவத்துடன் மன அமைதியுடன் வாழ்ந்து எம் கனவுகளை வெறும் கண் விழிகளினுள் மூடாது அவற்றை நிஜமாக்கி வாழ்க்கையில் வெற்றி காண்போம். இனி வரும் பிள்ளைகளை பூக்களில் மலர வைப்போம்

- து. முகுந்தராஜ்
9-R

With the Best Compliments of

❖

❖

❖

Lalitha Trade Centre

SPECIALIST IN SAREES

200, Main Street, Colombo 11.

Tel : 2325911

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மத்தியப் பிரிவில் முதலாம் இடம்பெற்ற கவிதை

முறிந்த பனைகள்

மனிதர்கள்
மரித்துவிட்ட
மண்ணுலகில்.....
"செல்" வந்த
சோகங்களால்
செல்லரித்துப்போன.....
வாழ்க்கை எனும்
வெளியில்
முறிந்து கிடக்கும் பனைகள் தான்
எத்தனை? எத்தனை?

"அமுதே" என்று பெயர் சொல்லி....
ஆயிரம் ஆண்டுகள்
அரும்பாடுபட்டு
வளர்த்து விட்ட
வண்ணத்தமிழென்னும்
வளம் மிக்க பனை - இன்று
தலையிழந்து
தரணியிலே
தத்தளிக்கும் நிலைகூறுவதா?

அரவணைப்பின்றி
அநாதைகளாய்......
அன்னையவள் அன்புக்காய்
அலறிக்கிடக்கும்
தத்தளிக்கும்
தனயன்கள்
தவிப்புகள் கூறுவதா ?
உறவினரும்
அறியாமல்.....
ஊருக்கும்
தெரியாமல்.....
செம்மணியிலே
உறங்கிக்கிடக்கும்
உறவுக்காரர் கதை சொல்வதா?

உரிமையிழந்து.....
உறவைப்பிரிந்து.........
உடலில் ஒட்டிக் கொண்ட
உயிருடன்...........
உலாவித்திரியும்
அப்பாவிகளாம்
அகதிகளின்
அவலங்கள் சொல்வதா ?

பாடசாலைகளிலே
பாதுகாப்புப் படையினரையும்
பாதுகாப்பாய் குடியமர்த்தி.....
அவர் தம் தடுப்புக் காவலில்
அவலங்கள்
அனுபவிக்கும்
இளைஞர் கதை சொல்வதா?

கல்வியிழந்து........
கவனிப்பாரின்றித்
தெருவோரம்
கையேந்தும்
இளம்வடலிகளாம்
சிறுவர் வாழ்வின்
சிதைவுகள் கூறுவதா?

உணர்வுகளாய்
உந்தப்பட்டு...........
பயங்கரவாதிகளாய்
பரிமாணம் பெற்ற......
தமிழன்னை........

தன்னை மீட்கத்
தம்மையே பணயம் வைத்த
"தீச்சுடர்கள்" கதை சொல்வதா?

சுதந்திரப் போராட்ட
விளைவுகளாய்............
மண்ணுக்காய் மரித்த
மாவீரர்களாய்..........
தமிழ்த்தாயின்
தாலாட்டிலே
உறங்கிக்கிடக்கும்
உத்தமர்கள் கதை சொல்வதா?

காற்றில்
கரைந்து விட்ட - எம்மவர்
கனவுகள் கூறுவதா?
இல்லை

ஆயுதங்களால்
அழிக்கப்பட்ட
ஆசையெனும் பனைபற்றிக்
கூறுவதா?

உடல்களால்
உரமாக்கப்பட்ட போதும்
முறிந்த பனைகளை
மட்டுமே - தனதாக்கி
சீரழிந்து கிடக்கும்
சீர்கொள் யாழ் நிலைகூறுவதா?

இருபது வருட யுத்தத்தால்
இடித்தழிக்கப்பட்ட...........
முறித்தெறியப்பட்ட............
இப்பனைகள்
இனிமேலும் தளைக்கும்
நன்னாளும் உண்டோ?

- பி. பார்த்தீபன்
11-Q

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மத்தியப் பிரிவில் முதலாம் இடம்பெற்ற சிறுகதை

அலைகள் ஓய்வதில்லை

"அம்மா நான் மருத்துவ கல்லூரிக்கு செல்லப்போகிறேன்" என்று கூறிக்கொண்டு உள்ளே வந்தான் குபேரன். குபேரனது முகத்தில் மகிழ்ச்சி. குபேரனது குடும்பம் ஒரு நடுத்தர வருமானமுடைய குடும்பம். அப்பா, அம்மா, தங்கை என அளவான, பாசமுடைய குடும்பம். அவனது தாய் மீனாட்சியின் தந்தை குருதிப்புற்றுநோய் காரணமாக இறந்துவிட்டார். அதனால் மீனாட்சி குபேரனை சிறுவயதிலிருந்து "நீ வைத்தியராகி குறுதிப்புற்றுநோய் உள்ளவருக்கு உதவவேண்டும்" எனக்கூறிக் அவனது மனதில் அந்த இலட்சியத்தை பதித்துவிட்டார். குபேரனும் கஷ்டப்பட்டு படித்து இப்போது மருத்துவம் படிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

"என்னப்பா சொல்லுறே நீ மருத்துவக் கல்லூரிக்கு போகப்போகிறாயா?" எனக் கேட்டுக் கெண்டே வெளியே வந்தாள் மீனாட்சி. ஆமம்மா நான் மருத்துவம் படிக்க தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். இனி மருத்துவக் கல்லூரியில் சீட்டு மட்டும் தான் எடுக்கனும்" என கூறிக்கொண்டே தாயின் காலில் விழுந்த ஆசீர்வாதம்பெற்றுக் கொண்டான் குபேரன்.

"எனக்கு இப்பத்தான் நிம்மதியாக இருக்குடா"

"நான் உங்கட நம்பிக்கையை நிச்சயம் காப்பாத்துவேன். மருத்துவ கல்லூரிக்கு சீட்டுக்கு விண்ணப்பம் போட்டிருக்கேன். இன்னும் சில நாட்களிலே சீட்டு கிடைச்சுடும்".

காலை எழுந்து குபேரன் நேரே சென்று காலைக்கடன்களை முடித்துவிட்டு அம்மாவிடம் சென்றான். "அம்மா எனக்கு சீட்டு கிடைச்சதும் உடுப்பு எல்லாம் வாங்கனும் அதை இப்பவே வாங்கட்டுமா? அந்த மருத்துவர் உடுப்பை நான் போடணும் போல இருக்குதம்மா" என்றான். "சரியப்பா உண்ட விருப்பம் போலவே செய்ராஜா" என்று பணத்தைக் கொடுத்தாள் மீனாட்சி. உடைகளை வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் வந்தான். மகனை மருத்துவ உடையில் பார்த்ததும் மீனாட்சியின் கண்ணில் கண்ணீர் வடிந்தது. "அழாதே அம்மா, நீங்கள் எல்லோரும் பட்ட கஷ்டத்துக்கு பலன் கிடைக்கப் போகுது" என கூறினான் குபேரன். "அது சரி, அப்பா, தங்கை எல்லாம் எங்கே" என கேட்டான் குபேரன். "அவங்க திருவிழாவுக்கு போயிருக்காங்க".

மறுநாள் காலையில் வீடு சுறுசுறுப்பானது. காரணம் இன்றுதான் மருத்துவக் கல்லூரிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது. குபேரன் சுறுசுறுப்பாக உடையணிந்து அலுவலகம் நோக்கி ஓடினான். பெயர்ப் பட்டியலிலுள்ள பலகையை நெருங்க நெருங்க அவனது இதயத் துடிப்பை அவனால் உணர முடிந்தது. இறைவனை பிரார்த்தித்தபடி பலகையில் அவனது பெயரைத் தேடின விழிகள். பலகையில் அவன் பெயர் இருக்கவில்லை. குபேரனுக்கு அதிர்ச்சி. ஏமாற்றத்துடன் வீடு நோக்கி நடந்தான். "நான் எப்படி இதை வீட்டில் சொல்லுவேன்?" என்ற யோசித்த வண்ணம் இருந்தது அவன் மனது.

"என்னடா எந்த கல்லூரி" என்ற கேட்டபடி அருகே வந்தாள் தங்கை புவனா. வாடிய குபேரனது முகமே காட்டிக்கொடுத்தது. "எப்படிபா நீதான் நல்ல புள்ளி பெற்றிருக்கிறாயே பிறகு எப்படி உன் பெயர் இல்லாமல் போகும்" என வினவினாள் மீனாட்சி "அதுதான் எனக்கும்

தெரியல்ல அம்மா" என கூறிக்கொண்டே கதறி அழுதான் குபேரன். கவலைப்படாதே நாளைக்கு நாம் பெயர் பட்டியல் இடுபவரை போய்ப்பார்ப்போம் என்று கூறி சமாதானப்படுத்தினாா். எல்லோரும் பெயர் பட்டியல் இடுபவரை சென்று பார்த்தனர். "ஐயா என் மகன் நல்ல புள்ளி பெற்று இருக்கிறான். ஆனால் அவன் மருத்துவ கல்லூரிக்கு எடுபடவில்லையே" எனப் பரிதாபமாகக் கேட்டார் தந்தை சண்முகம். "என்னங்க சொல்றீங்க நல்ல புள்ளி எடுத்தவங்களை போடனும்னா நாங்கள் பணத்திற்கு என்ன செய்யுறது. ஒரு 30 இலட்சம் ரூபா தாங்க பெயரைப்போடுகிறேன்" என்றான் பெயர் பட்டியலிடுபவன். "இது என்னையா நியாயம் திறமைக்கு படிக்க இடமில்லையா" என கோபத்துடன் கேட்டார் சண்முகம். "கூடகதைச்சாகாசு தந்தாலும் போடமாட்டேன்" என திட்டவட்டமாக கூறினான். அவனோடு வாதிட விரும்பாத சண்முகமும் குபேரனும் வீடு நோக்கி சென்றனர். "அப்பா நான் என்னப்பா செய்யுறது" என கவலையுடன் கேட்டான் குபேரன். "கவலைப்படாதே நான் ஏதாவது செய்கிறேன்" என நம்பிக்கையூட்டினார் சண்முகம். காலையில் சென்ற சண்முகமும் தங்கையும் இன்னும் வீடு வராததைக் கண்ட குபேரனும் மீனாட்சியும் அச்சமடைந்தனர். சிறிது நேரத்தின் பின் உள்ளே வந்த பொலிஸ் அதிகாரி "நான் சொல்வதைக் கேட்டு அதிர்ச்சியடைய வேண்டாம். உங்கள் கணவரும் மகளும் ஒரு பஸ்சில் அடிபட்டு இறந்து விட்டனர்" என கூறிவிட்டு சென்றார். தலையில் இடிவிழுந்தது போல் இருந்தது. இரண்டு நாட்கள் வீடு முழுவதும் ஓலக்குரல்கள். இரு நாட்கள் கழிந்த பிறகு. "அம்மா அப்பா இறந்த பிறகு கடை அப்படியே இருக்குது. நான் போய் பார்த்திட்டு வாறேன்" எனச் சென்றான் குபேரன். மாலை வீட்டிற்கு வந்த குபேரனிடம் பல நகைகளை கொடுத்தாள் மீனாட்சி. "இவற்றை வித்து மருத்துவக் கல்லூரிக்கு கட்டு" என கூறினாள் மீனாட்சி. " என்னம்மா இது அது ஒண்டும் வேண்டாம் நான் வியாபாரத்தையே பார்க்கிறேன்." என்றதும் "இல்லப்பா உண்ட அப்பாவோட ஆசையும் இதுதான். அதனாலே நீ நிச்சயம் மருத்துவராகனும் என்றாள். சரிம்மா நான் போய் வித்துட்டு வாரேன் ஆனால் இது போதாது அம்மா என கூறினான். குபேரன் "நான் ஏதாவது செய்யுறேன் ராஜா. நீபோய் முதலில் வித்திட்டு வா" என்றாள். குபேரன் சென்றுவிட்டான். மீனாட்சியின் கையில் பத்திரிகை அதிலுள்ள செய்தியை வாசித்தன மீனாட்சியின் கண்கள் தீயால் இறந்தவருக்கு ரூபா 200000 சன்மானம்.

நகைகளை விற்றுவிட்டு வந்தான் குபேரன். அவனது வீடு முழுவதும் கூட்டம் "என்ன நடந்தது என கேட்டபடியே ஓடிச்சென்றான் குபேரன்." உங்கம்மா தீபற்றி இறந்துட்டா " என்றார் ஒருவர் குபேரன் கதறி அழுதான் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை அவன் தனியே இருப்பது போன்ற ஓர் உணர்வு. சிறிது காலத்தில் இழப்புதொகை 200000 வழங்கப்பட்டது. அப்போதுதான் தெரிந்தது மீனாட்சி அதற்காகத் தான் இறந்திருக்கிறாரென்று. குபேரன் கண்கள் கலங்கின உடனே எழுந்து 300000 பணத்துடன் சென்றான் பெயர் பதிவாளனை நோக்கி. அவனோ "என்ன தம்பி நீ! 300000 அப்போதுதான்! இப்ப எப்படியும் 500000 வரும்" என்றான். குபேரன் ஓடிச்சென்று கழுத்தைப் பிடித்தான். காவலர்கள் அவனை இழுத்துச் சென்று வெளியே போட்டனர்.

காலையில் கடற்கரை ஓரத்தில் ஓர் உடல் ஒதுங்கியது. அது குபேரன் என சில அடையாளங் காட்டினர். குபேரனை கரையில் சேர்த்த அலைகள் மட்டும் ஓயவில்லை!

- சி. கபிலன்

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் காண் போட்டிகளில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

மெல்லத் தமிழினிச் சாகுமா ?

காலவெள்ளோட்டத்திலே, எத்தனையோ கவின் பொருட்கள் கரைந்து போய்விடுகின்றன. உலகின் மிக உன்னதமான மொழிகளுள் இன்றும் உயிர் பெற்றுத் திகழும் ஓர் மொழி தமிழ். இன்னும் உயிர் காத்து வாழுமா? என்பதுதான் கேள்விக்குறி. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி அன்று கூறினான்.

"சொல்லவும் கூடுவதில்லை - இவை
சொல்லுந் திறமும் தமிழ் மொழிக்கில்லை....
மெல்லத் தமிழினிச் சாகும்"!

அவனது உயிர்த்துடிப்புள்ள வார்த்தைகள் இன்று எம் தமிழ் மக்களின் உட்செவிகளுள் புகுந்து உணர வைத்துக் கொண்டிருக்கின்றன. தமிழினுடைய பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு எல்லாம் சிதைந்து கொண்டிருக்கின்றன.

"கல் தோன்றி மண்தோன்றாத காலத்து
முன் தோன்றிய மூத்த தமிழை"

சங்கங்கள் அமைத்து தாலாட்டி வளர்த்த சங்கத் தமிழை, வெறும் நாகரிக மோகத்தாலும் அயல் நாட்டு கலாசாரத்தாலும் சீரழித்துக் கொண்டிருக்கிறோம் நாம் என்றால், அது குற்றச்சாட்டல்ல. யதார்த்த பூர்வமான உண்மை. தாய்மொழியின் அருமையை வளர்ந்து வரும் சமுதாயத்திற்குக் கூற மறுத்துவிடும் எம் தமிழ் மக்கள் இருக்கும் வரை எமது தமிழ் வாழுமா? என்பதே விவாதத்தின் கருப்பொருளாகி விட்டது.

"பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழின் அழுங்குரலை கேட்டல் வேண்டும்
ஓடையிலே என்சாம்பல் கரையும் போதும்
என் தமிழே சலசலத்து ஓடல்வேண்டும்"

என்று உள்ளத்தின் உணர்ச்சிப் பிரவாத்தோடு முழங்கினான் பாரதிதாசன். அப்படிப்பட்ட ஆத்ம சங்கல்பம் இன்று எவருக்கு உள்ளது? எதற்கெடுப்பினும் ஆங்கிலத்தை வளர்த்து விடத் துடிக்கும் எம் இளைஞர்களுக்கு மத்தியில் "தாய் மொழியை வாழ வைப்பேன்" என்று கங்கணம் கட்டுபவன் யார்?

"மேலைத்தேய மோகத்தில் சிக்குண்டு கிடக்கிறோம்" என்று மிக இலகுவாக எம்மவர்கள் மீது நாமே பழி கூறிக் கொண்டு திரிகிறோம். ஆங்கிலேயன் ஆகாயத்திற்கு விண்கலம் அனுப்பும் போது, நாம் சாதிகள் பேசிச் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கெல்லாம் என்ன காரணம்? எதிர்கால உலகத்தை செதுக்கப்போகும் சிற்பிகளான நாமே செதுக்குப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எதிர்கால உலகத்தைத் தூக்கி நிறுத்தப் போகும் விழுதுகளான நாமே விழுந்து கொண்டிருக்கின்றோம். அயல் நாட்டுநாகரிகம் மட்டுமா இதற்குக் காரணம்? இல்லை நாமே தான் இதற்குக் காரணகர்த்தாக்கள்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று சும்மாவா சொன்னார்கள்? எமது தமிழ்மொழியை நாமே பேச மறுப்பதும் அதனை நாமே இழித்துரைப்பதும், தாய் மீது பழி சொல்வது போன்றதல்லவா?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்" என்றான் பாரதி. "இனிமை என்றால் தமிழ், தமிழென்றால் இனிமை" என்று இறுமாப்புடன் கூறிக் கொள்கிறோம். ஆனால் அதனை நம் வாழ்வில் செயற்படுத்துகின்றோமா?

பொதுவாக இளம் பராயம் முதல் சில மாணவர்கள் தமிழை சரியாகக் கற்றுக் கொள்வதில்லை. அவ்வாறு அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு பெற்றோர்க்கும் நேரமில்லை. இன்னும் சொல்லப்போனால் "விருப்பமில்லை" என்றே கூறிவிடலாம். மேலும் தமிழை நன்கு படித்த மாணவர்கள் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றார்கள். தமிழருக்கே உரித்தான ஆடைகளை உடுத்துவதற்கு மறுகின்றார்கள். தமிழை இழிவுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவையெல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு தமிழ்த் தாய் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றாள்.

இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகள் தமிழ் மொழிக்குச் சாவு மணி அடிப்பதற்குக் காத்துக் கொண்டிருக்கின்றன.அதனை விட்டு, அயல் நாட்டு நாகரிகமென்றும் அவர்களது கலாசாரம் என்றும் குறை கூறுவதில் என்ன பயன்? "உன்னைத் திருத்து, உலகம் தானாய்த் திருந்தும்" என்று உலகிற்குச் சொன்னார்கள் பெரியோர்கள். அதனை நாம் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றோமா?

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய பெரு நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
கூறுவதில் மகிமை இல்லை"

என்று தீர்க்க தரிசனமுடன் கூறினான் பாரதி. அவனது சொற்படி தமிழை வளர்ப்பதற்கு முயற்சிகளும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அதே வேளையில் தமிழ்த் தாயின் கருவறையைச் சிதைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழைக் கொச்சைப்படுத்தும் ஆக்கங்களையும், தமிழின் பெருமையை இழிவுபடுத்தும் கட்டுரைகளையும்

எந்தப் பத்திரிகையும், எந்தச் சஞ்சிகையும் அனுமதித்தல் தமிழுக்குச் செய்யும் துரோகமாகும். ஆங்கிலந்தான் பெரிதென்று அயல் நாட்டுப் பெருமை கூறும் எம் தமிழ் மக்களுக்கு மத்தியில், ஜி.யு. போப் என்ற ஆங்கிலேயர் தமிழின் இனிமையை, அதன் தொன்மையை உணர்ந்து "தமிழனாகச்" சாக விரும்பினார். இது ஒன்று மட்டும் போதும். தமிழை உலகறியச் செய்து விடும். பாமரராய் விலங்குகளாய்ப் பான்மை கெட்டு, தாய்மொழி மறந்து வாழும் இளைஞர்கள் விழித் தெழுவார்களேயானால், எம்மொழி புதிய பிரவாகம் எடுத்துவிடும்.

"கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி

நாட்டத்தில் கொள்ளாரடி" என்பதற்கிணங்க, வாய்ச்சொல்லில் மட்டும் வீரத்தைக் காட்டும் தமிழர்கள் தமிழை வளர்த்தெடுக்க முயல்வார்களா? அல்லது அதுவும் நீர்க்குமிழி போன்றதா?

இராமாயணத்தை இன்பத் தமிழில் தந்து கம்பனும் மறைந்து விட்டான். இளங்கோவும் போய் விட்டான். பாப்பாப் பாட்டு முதல் பல பாட்டுக்களைத் தனித் தமிழில் தந்த பாரதியும் பறந்து விட்டான். "தமிழுக்காகச் சங்கே முழங்கு" என்று கூறிய பாரதிதாசனும் இறந்து விட்டான். இன்னுமென்ன இருக்கிறது? நரம்பினால் முறுக்கேற்றப்பட்ட, மனதினால் வைராக்கியம் ஊட்டப்பட்ட இளைஞர்கள் தமிழைக் காத்திட புறப்படாதவிடத்து தமிழ்த் தாயின் மானங்காத்திட மலராதவிடத்து மெல்லத் தமிழினிச் சாகும். ஆனால் மேதினியில் மீண்டும் முளையாகும்........

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்"

- அ. ஹரிஷன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2005

அன்றைக்கே இருந்தது !

தமிழ் மருத்துவத்தில் நோயை அறியும் முறைகளை எட்டு வகைத் தேர்வுகளாகப் பகுப்பர். அவை 1. நாடி, 2. நல்லொலி, 3. பரிசம், 4. விழி, 5. நா, 6. மேனி, 7. மலம், 8. சிறுநீர் ஆகியன. நோய் வருவதற்கான மூல காரணங்கள் ஐந்து வகைப்படும். அவை

1. கோள்களின் தாக்கம், (Astral Influences) **2. நஞ்சுப் பொருட்கள்,** (Poisonous Substances) **3. மனநிலைக் காரணங்கள்,** (Psychological Causes)
4. செய்வினைத் தீய எண்ணங்கள், செயல்களின் தாக்கம், (Spiritual Causes)
5. கால்வழிக் குற்றங்கள் (Heriditory Defects).

With Best Compliments from

Elephant House

SUPER

126, High Level Road, Nugegoda. Tel : 824800

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்திறன்காண்
போட்டிகளில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

விதைக்குள்ளே ஒரு விருட்சம்

இரத்தமில்லா சமாதானம்,
குற்றமில்லா உள்ளம்,
காமம் இல்லாக் காதல்,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

அறிவைக்கொடுக்கும் கல்வி,
தோல்வியை ஏற்கும் உள்ளம்,
உயிரைக் கொடுக்கும் நட்பு,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

மக்களை விரும்பும் மந்திரி,
மந்திரியை விரும்பும் மக்கள்,
பச்சைக்குழந்தை உள்ளம்,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

கபடமில்லா நட்பு,
பாசாங்கில்லா அன்பு,
எதனையும் மதிக்கும் பண்பு,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

பள்ளம் அற்ற உள்ளம்,
துன்பம் அற்ற இன்பம்,
செருக்கு அற்ற பணிவும்,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

கள்ளம் அற்ற சிரிப்பு,
நமக்கேன் வீண்நோய்வலிப்பு,
உள்ளத்தில் கொள் இறை நினைப்பு,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு விருட்சம்.

குடியை உயர்த்து கோன்,
வீண் வம்பு நமக்கேன்,
அழகுக்கு இன்று விலையேன்,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு
விருட்சம்.

வறுமை இல்லாத் தரணி,
கொடுமை இல்லா இறப்பு,
நன்மை செய்யும் நினைப்பு,
இவையெல்லாம் விதைக்குள்ளே ஒரு
விருட்சம்.

இப்படி உள்ள உலகம்,
இப்படி உள்ள உலகம்,
இவையெல்லாம் என் மனதுள் உள்ள,
விதைக்குள்ளே ஒரு விருட்சம். !

- த. ஹரிலோஜன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2005

மரங்களினால் !

- 18 நபர்கள் ஓராண்டு முழுவதும் சுவாசிப்பதற்கு எவ்வளவு பிராண வாயு தேவையோ அதை ஒரு ஏக்கரில் வளர்ந்திருக்கும் மரங்கள் அளிக்கின்றன.

- பத்து ஏர் கண்டிஷனர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கினால் எவ்வளவு குளிர்ச்சி கிடைக்குமோ அதை ஒரு மரம் ஒரே மாதத்தில் தன் நிழல் மூலம் கொடுக்கிறது.

எமது கல்லூரிக்குள் நடாத்தப்பட்ட தமிழ்த் திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை

மண்ணின் மைந்தர்கள்

காதலியை விட்டு காதலன் பிரிகையில் ஒருவரையொருவர் கைகள் நழுவி பிரிவது போல ஓய்ந்து போன மழையின் நினைவாய் இலைகளிலிருந்து நீர்த்துளிகள் வடிந்து கொண்டிருந்தன. என்னுடன் நிறுவனத்தில் வேலைபார்க்கும் குமாருடன் அந்த ஒதுக்குப்புற வீட்டை நோக்கி சென்று கொண்டிருக்கின்றேன். இந்த கவலையான சூழ்நிலையில் கடந்த கால் நினைவுகள் என் மனதில் எட்டிப்பார்க்கின்றது.

அது ஒரு பாடசாலை இடைவேளை. சாப்பிட்டுவிட்டு வகுப்பிற்குள் நுழையும் போது ஒரே கூச்சல், ஆரவாரம் ! வகுப்பில் இது வழமை என்றாலும் ஒரு இடத்தைச் சூழ எல்லாரும் கூடி நின்றது கண்டு அங்கே சென்று பார்த்தேன். கூட்டத்தின் நடுவே சுந்தர் ஏதோ செய்து கொண்டிருந்தான். சிறிது நேரம் செல்ல எல்லாம் புரிந்தது. சிறிது நாட்களிற்கு முன்னர் கூறியவாறு அவன் ராக்கெட் அனுப்புவதற்கான முயற்சியிலிருந்தான் ஆம் ! இரசாயனத்தின் மூலம் உந்து சக்தியை பெற்று செல்லக்கூடியவாறு அவன் வடிவமைத்த ராக்கெட் அடியில் நெருப்பை பற்ற வைத்துவிட சீறிய வண்ணம் புறப்பட்டது. ஆனால் சிறிய நேரத்தில் உடல்கழன்று விட உந்து கருவி மட்டும் சென்றது. ஆனால் இது ஒரு வெற்றிகரமான முயற்சியே. சுந்தர் இவ்வாறான தொழில்நுட்ப விடயங்களில் திறமையானவனாயினும் படிப்பில் திறமைசாலி இல்லை.

சில மாதங்களிற்கு முன்னர் நானும் அவனும் ஒன்றாகவே இந்தமாதிரி விடயங்களில் ஈடுபட்டோம். எனக்கும் இதில் ஈடுபாடு அதிகம். ஆனால் ஈகோ அதை விட அதிகம். எனவே அவன் புகழ் பெற நானும் கூட உழைப்பது பிடிக்கவில்லை. எனவே மெல்ல மெல்ல பிரிந்து விட்டேன். ஆனால் நான் தான் வகுப்பில் முதலாவதாதலால் இதில் ஏற்படும் சந்தேகங்களை என்னிடம் கேட்பான். நானும் பதிலளிப்பேன் ஆனால் செய்முறையில் அவன் திறமைசாலிதான், ஏனெனில் நான் அனுப்ப முயன்று பதினைந்து "ராக்கெட்டுகள்" மண் கவ்வியுள்ளன. ஆனாலும் நான் தொடர்ந்துமுயன்று வந்தேன். இன்றும் கூட என் பொழுது போக்கு இதுதான்.

அவன் இத்தோடு நிறுத்தவில்லை. இலத்திரனியலை உபயோகித்து தன்னியக்க ஆரம்பிக்கும் கருவியையும் செய்துவிட்டான். ஆனால் எனக்கு விமான இயந்திரவியலில் ஆர்வம் என்பதால் நான் அது குறித்து மேற்கொண்ட தேடல்கள் அவனை அவனது "ராக்கெட்டிற்கு" உடல் தயாரிக்க என்னை உதவுமாறு கேட்க வைத்தது. ஆனால் நானோ பல சாக்கு போக்கு சொல்லி தவிர்த்து விட்டேன்.

என்னுடைய ஆர்வம், எனது திறமை நான் உயர்தரதேர்வில் ஈட்டிய திறமைச்சித்தி என்பன நான் வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் விமான இயந்திரவியலில் பட்ட மேற்படிப்புக்களை மேற்கொண்டு ஒரு பிரசித்தி பெற்ற, பணக்கார பொறியியலாளராக்கியது. என்ன செய்வது? சுந்தர் திறமைச்சித்தி பெறாவிட்டாலும் கூட இலங்கைப் பல்கலைக்கழக அனுமதிக்கு அவனது

புள்ளிகள் குறைவாக இருந்த போதிலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு அவன் செல்ல வாய்ப்பிருந்தது. ஆனால் பணம் போதாமையால் அம்முயற்சியை தவிர்த்து விட்டான். நான் மட்டும் பணக்காரனல்ல. நான் அவனைவிட வசதி குறைந்தவன். என்னுடைய முயற்சி இங்கேயே உழைத்து என்னை வெளிநாடு செல்ல வைத்தது.

காலில் அந்த பழைய உடைந்த வீட்டின் படி தட்டுப்பட என் நினைவுகள் நிகழ்காலத்திற்கு மீளுகின்றன. உள்ளே சுந்தர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்க அவன் மனைவி அருகில் அமர்ந்திருக்கின்றாள் அவனது மனைவியின் குமுறல் வெளிப்படுகிறது.

"இவர் கிடந்த காசையெல்லாம் ஆராய்ச்சி, ஆராய்ச்சி என செலவழிச்சுப் போட்டார். இப்ப பாருங்கோ வைத்தியத்திற்கு கூட பணமில்லாது படுக்கையில் கிடக்கிறார்."

எனக்கு ஆரம்ப கால நிரந்தர இயக்க இயந்திரத்தை கண்டுபிடிக்க முயன்று தம்வாழ்க்கைகளை நாசமாக்கிய ஐரோப்பிய விஞ்ஞானிகள் தான் உடனே நினைவிற்கு வந்தார்கள். சுந்தர் ஏதோ கூறவே மனைவி உள்ளே சென்று ஒரு பெரிய தகரபெட்டியை தள்ளிக் கொண்டு வந்தார். அது நிறைய ஏதோ பொருட்கள்.

சுந்தர்வருத்தத்தோடு கூறினான். "நான் பட்டதெல்லாம் போதும். இங்கே இவைகள் இருந்தால் என் மகனும் நாசமாய்போய்விடுவான். நீயே எடுத்திட்டு போயிடு". நான் பெட்டியை திறந்துஒருகருவியை எடுத்து அதை இயக்கிப் பார்க்க முயன்றேன். அது திடீரென சூடாகி வெடித்து ஏதோ தொலைவில் சென்று விழுந்தது.

நம்ப முடியாதவனாய் என்னுடன் வந்த குமாரிடம் சொன்னேன் "கெட்டிக்காரன்டா.." குமார் சொன்னான். "ஆனாலும் நூறுகிலோமீட்டர் செல்லும் ராக்கெட்டை நூற்றைம்பது கிலோமீட்டர் செல்ல வைக்க அவனால் முடியாது. அவன் சிறந்த தொழில்நுட்பவியலாளன் தான் ஆனால் தொழில்முறை கொள்கையறிவு இல்லை. எனவே அவனை வேலையில் அமர்த்த ஒருவரும் முன்வரமாட்டார்கள். சிறிது நேரம் இருந்துவிட்டு அந்த பெட்டியையும் தூக்கி கொண்டு அவனுடைய மனைவிக்கு செலவிற்கு கொஞ்சம் பணம் கொடுத்து விட்டு புறப்பட்டேன்.

வீட்டிற்கு சென்று இந்தமுறையாவது வெற்றிகரமாக "ராக்கெட்டை" அனுப்பவேண்டு மென்ற யோசனையுடன் வழியில் அவனுடைய மகன் வீட்டிற்கு முன்னால் குப்பையில்வீசப்பட்ட வானொலிப் பெட்டியை கழற்றி ஏதோ செய்து கொண்டிருந்தான்.

தன் நாட்டு பாடத்திட்டமே தன்னை கைவிடுமென்றறியாத இந்த மண்ணின் மைந்தன் தானும் எதாவது முயன்று பார்ப்போம் என புறப்பட்டிருக்கிறான். அவனாவது செவ்வாய்க்கிரகத்திற்கு "ராக்கெட்" அனுப்பட்டும்.

- க. கார்த்தீபன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

With the Best Compliments of

PYRAMID OIL MILLS

Manufacturers & Exporters of Coconut Produce

232, Grandpass Road, Colombo 14, Sri Lanka.
Tel : 2423240, 2470418, 2470419 Fax : 2439127

Factory :
Tel : 2254131, 2253591
E-mail : pyramid@dynanet.lk

With the Best Compliments of

PC House (Pvt) Ltd

454, Galle Road, Colombo 3, Sri Lanka.
Tel : +94-4724242 Dir : 011-573737
Fax : +94-74-724343
Web site : www.pchouse.lk
E-mail : info@pchouse.lk
Mobile : +94-77-7531352, +94-71-297825

றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்

முன்னாள் மன்றத்தலைவர்களும் செயலாளர்களும்

வருடம்	மன்றத்தலைவர்	செயலாளர்
1974	T. பிரேமகுமார்	S. ஜெயன்திரன்
1975	S. மனோஹரன்	A. தயாநந்தா
1976	S. ஜெயபாலசிங்கம்	S. இராமசந்திரா
1977	S. இராமசந்திரா	S. வசந்தகுமார்
1978	S. வசந்தகுமார்	A. H. M. டுலீப் நவாஸ்
1979	S. அருளநாதம்	V. R. நடேஸ்வரன்
1980	C. V. பார்த்தீபன்	S. வெங்கடேசன்
1981	K. வசீகரன்	M. வரகுணம்
1982	S. சிவப்பிரியன்	A. S. சுபாரதம், V. அனந்தன்
1983	V. அனந்தன்	M. ஸ்ரீதரன், S. சுதர்ஷன்
1984	T. பரணீதரன்	P. செல்வராஜா
1985	N. இரத்தினசிவா	S. சிவகுமரன்
1986	W. சிவஹரன்	R. நிரஞ்ஜன்
1987	S. S. மோஹன்	D. ரிச்சட், A. அனுராஜ்
1988	S. பிரபாஹர்	K. தயாபரன்
1989	T. சௌமிராஜா	A. சுவாமிநாதன்
1990	W. உதயசங்கர்	M. மணிவண்ணன்
1991	P. கிரிதரன்	J. தேவசங்கர், G. அமுதன்
1992	N. குமரகுலசிங்கம்	E. G. J. வேதநாயகம்
1993	E. G. J. வேதநாயகம்	Y. முகுந்தன்
1994	Y. மனோஹரன்	K. நரேஷ்குமார்
1995	S. நிலக்ஷன்	Y. அருணன்
1996	K. இரமணாஹரன்	L. ஜெயந்தன்
1997	G. S. சேதுகாவலர்	P. திருவரங்கன், S. சுதர்ஷன்
1998	S. பாவா	B. யமுனாஹரன்
1999	T. சரவணா	R. இரதீசன், S. S. கிருபாநந்தன்
2000	S. மயூரன்	N. சங்கீத்கண்ணா, T. யோகேந்திரன்
2001	S. கார்த்திக்	M. நேசஜீவன், S. நிமல்ஷன்
2002	U. L. M. ரெஷா	S. சித்தார்த், M. அம்சராஜ்

1973 – "Prithviraj Dharmaraja"

றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்

முன்னாள் மலராசிரியர்கள்

1976	-	S. சிவகுமரன், S. சந்திரநேசன்
1977	-	N. நவநீதன்
1978	-	A. H. M. டுலீப் நவாஸ், R. லோகநாதன்
1979	-	T. ஸ்ரீவிஜயன், M. கோபிராஜ்
1980	-	P. ஜெகதீசன், T. ஸ்ரீகுமரன்
1981	-	S. சிவபிரியன், A. S. சபாரத்தினம்
1987	-	S. சுரேஷ்குமார், S. பிரபாகர்
1990	-	Y. அரவிந்த், S. செந்தில்குமரன், S. டேவிட்
1991	-	V. சுகதீஸ்வரன்
1992	-	நரேஸ்குமார், சதீஷ்குமார்
1994	-	S. அரவிந்தன்
1995	-	M. சிஹாரனிஸ்
1996	-	C. I. அஸியான்
1997	-	வசீகரன்
1998	-	M. ரூபி
1999	-	R. பிரம்மவிநாயகன்
2000	-	P. S. செந்தூரன்
2001	-	S. கீர்த்தன்
2002	-	S. தினேஷ்

Junior Committee

Seated L to R	:	N. Arujuna, M. L. M. Yoosuf, V. Shayanthan *(Chairman)*, R. Mathusagar *(Secretary)*, P. Sushanthan,
Standing 1st Row L to R	:	S. Hariharan, S. Lavan, K. P. Yasinthan, S. Hariharan, M. Noel
Standing 2nd Row L to R	:	M. Zakee, M. Puwaragan, T. M. Nareeth, K. M. Rizath
Standing 3rd Row L to R	:	S. Raguventhan, P. Harendra, N. M. M. Nishad

With the Best Compliments of

BRILLIANT INSTITUTE

O/L CLASSES

Maths	-	S. Sundaralingam
Science	-	K. K. Udayakumar
Com/Acc	-	R. Johnson
		N. R. V. Rajan
Social	-	Balamaster
Tamil	-	S. Murali

136, Sangamitha Mawatha, Kotahena,
Colombo 13.
Tel : 2347728 / 24743792

"Brilliant Makes Brilliants"

With the Best Compliments of

SAMMI CLEARING & TRANSPORT AGENCY

Importers, Exporters & Customs House Agent

171-1/18, Sea Street, Colombo 11.
Tel : 2348719

With the Best Compliments From :

KOOL MART

Free ! Collection & Delivery

Repairs to all types of ,

- Air Conditioners
- Refrigerators & Deep Freezers
- T.V. & Video
- Audio - Video CD
- Hi - Fi System
- Washing Machine, Micro Wave Ovens & Other Home Appliances Etc....

(Quick & Reliable Service)

No. 203, Hill Street, Dehiwala
Phone : 2761712-3, 5558965, 5525527
Fax: 2727071
E-mail : koolmart@visual.lk

With Best Compliments from

❑

❑

❑

PHONE CARE (PVT) LTD

Authorised Dealer for
DIALOG GSM

345, R. A. De Mel Mawatha,
Colombo 3.
Tel : 5558686 Fax : 5559494
Mobile : 0777-702505
E-mail : phone_c@lankabellnet.com

With Best Compliments from

❑

❑

❑

PHONE CARE (PVT) LTD

Authorised Dealer for
DIALOG GSM

345, R. A. De Mel Mawatha,
Colombo 3.
Tel : 5558686 Fax : 5559494
Mobile : 0777-702505
E-mail : phone_c@lankabellnet.com

With the Best Compliments From :

S.THANGAM ACHARY & SONS

T. Uthayakumar

200, Sri kathiresan Street, Colombo-13,
Sri Lanka.
Tel : 2431824 Mobile : 0777-312007

With Best Compliments from :

W. D. WILBERT
ICED FISH

COLOMBO CENTRAL SUPER MARKET
COLOMBO - PETTAH.

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தால் நடாத்துப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான

"தமிழ்த்திறன் காண்" போட்டி முடிவுகள்

கீழ்ப்பிரிவு

கட்டுரை

1ம் இடம் - S. ஜெகன் - பரி. தோமாவின் கனிஷ்ட பாடசாலை
2ம் இடம் - M.M. டீனா - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
3ம் இடம் - P. இனோஜா - நல்லாயன் அரசினர் மகளிர் வித்தியாலயம்
3ம் இடம் - Y. கார்திகா - யாழ். மகாஜன கல்லூரி

கவிதை

1ம் இடம் - L.A. இலிந்தியா - புனித அந்தோனியர் மகளிர் மகாவித்தியாலயம்
2ம் இடம் - A.D.S. ஷெரோன் - புனித அந்தோனியார் ஆண்கள் மகாவித்தியாலயம்
3ம் இடம் - T. அபிலாஷ் - உவெஸ்லி கல்லூரி

சிறுகதை

1ம் இடம் - A. நிரஞ்ஜன் - இசிப்பதன கல்லூரி
2ம் இடம் - M. கிருத்திஹன் - உவெஸ்லி கல்லூரி
3ம் இடம் - S. அமுதபிரியா - புனித அன்னம்மாள் மகளிர் வித்தியாலயம்

பேச்சு

1ம் இடம் - S. நிஷாந்த் - கொழும்பு இந்து கல்லூரி
2ம் இடம் - B. ரேவதி - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
3ம் இடம் - M. ச∴ப்ரான் - பேருவல அல்-ஹுமைசரா கல்லூரி
3ம் இடம் - R. வைஷ்ணவி - திருக்குடும்ப கன்னியர் மடம்.

மத்திய பிரிவு

கட்டுரை

1ம் இடம் - T. தர்ஷிகா - நல்லாயன் கன்னியர் மடம்
2ம் இடம் - R. தாட்ஷாயினி - இந்து மகளிர் கல்லூரி
2ம் இடம் - R. ரஷ்∴பா - பேருவல சீனன்கோட்டை முஸ்லிம் மகளிர் கல்லூரி
3ம் இடம் - M. நதிகலா - திருக்குடும்ப கன்னியர் மடம்

கவிதை

1ம் இடம் - R. மேரி நிரோஜினி - கண்டி மோபிறே கல்லூரி
2ம் இடம் - M. மயூரா - கொழும்பு விவேகானந்தா கல்லூரி
3ம் இடம் - W. ஐஸ்வர்யா - திருக்குடும்ப கன்னியர் மடம்
3ம் இடம் - A. கோபிகா - கொழும்பு விவேகானந்தா கல்லூரி

சிறுகதை

1ம் இடம் - J. ஃபாத்திமா சசிமா - நல்லாயன் கன்னியர் மடம்
2ம் இடம் - B. துவாரகசிங்கம் - கொழும்பு இந்துகல்லூரி
2ம் இடம் - S. அஷ்வினி ருக்ஷாந்தி - கண்டி மோபிறே கல்லூரி
3ம் இடம் - N. கௌதமி - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூரி

பேச்சு

1ம் இடம் - P. புஷ்பா - யாழ். மகாஜனக் கல்லூரி
2ம் இடம் - S. சுப்ராஷனா - கொழும்பு விவேகானந்தா கல்லூரி
3ம் இடம் - M.S.M. நஃப்ஹான் - பேருவல அல்-ஹுமைசரா கல்லூரி

மேற்பிரிவு

கட்டுரை

1ம் இடம் - R. மனோஜ்குமார் - கொழும்பு இந்து கல்லூரி
2ம் இடம் - K. அபர்ணா - இந்து மகளிர் கல்லூரி
2ம் இடம் - S. பிரியதர்ஷினி - கண்டி மோபிறே கல்லூரி
3ம் இடம் - S. இலாவண்யா - இந்து மகளிர் கல்லூரி

கவிதை

1ம் இடம் - I. ஃபாத்திமா - பேருவல சீனன்கோட்டை முஸ்லிம் மகளிர் கல்லூரி
2ம் இடம் - M. ஷரண்யா - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூரி
3ம் இடம் - V. எலிசபத் - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூா

சிறுகதை

1ம் இடம் - B. இரஜிதா - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
2ம் இடம் - D. ஷாலினி - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூரி
3ம் இடம் - R. சிவஷங்கர் - நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

பேச்சு

1ம் இடம் - S. கிருபானந்த் - கொழும்பு இந்து கல்லூரி
2ம் இடம் - R. கோகுல்நாத் - கொழும்பு விவேகானந்தா கல்லூரி
3ம் இடம் - V. சயானி - இந்து மகளிர் கல்லூரி

பொது நுண்ணறிவுப் போட்டி

1ம் இடம் - V. செந்தூரன் - கொழும்பு இந்து கல்லூரி
2ம் இடம் - N. பகீரதன் - கொழும்பு இந்து கல்லூரி
3ம் இடம் - S. தேவகி - கண்டி மோபிறே கல்லூரி

தமிழறிவு வினாவிடைப் போட்டி

1ம் இடம் - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூரி
2ம் இடம் - பேருவல அல்-ஹுமைசரா கல்லூரி
3ம் இடம் - கொழும்பு இந்து கல்லூரி

தொடரின் சிறந்த போட்டியாளர்

R. உமேஷ்நாதன் - ஹட்டன் ஹய்லண்ட்ஸ் மத்திய கல்லூரி

இப் போட்டிகளில் நடுவர்களாக கடமையாற்றியவர்கள்

திரு. ஸஷாங்கன் சர்மா
திரு. ஸ்ரீரங்கநாதன்
திருமதி. ச. சுந்தரலிங்கம்
திருமதி. தேவகௌரி
திரு. A.R. றிகாஸ்
திரு. U.L.M. ரெஷா
திரு. S. சிவசோதி
திரு. மாவை வரோதயன்
செல்வி. ஸ்ரீகுமாரி கதிரைத்தம்பி
திரு. S. நிலக்ஷன்
திரு. B. காண்டிபன்

ஆகியோருக்கும்

நடுநிலைத் தாங்கிய எம் கல்லூரி ஆசிரியர்கள்

திரு. M. கணபதிப்பிள்ளை
திரு. R. இராஜசூரியர்
திருமதி. L. பிரபாஹரன்
திரு. ஸ்ரீராகவராஜன்
திரு. S. சிவக்குமார்
திருமதி. S. இளையதம்பி
திரு. R.M. ஹாயிஸ்

ஆகியோருக்கும் எமது போட்டிகள் இனிதே நிறைவேற சிரமம் பாராது தமது பூரண ஒத்துழைப்பை நல்கி அனைத்துப் போட்டி முடிவுகளையும் சரியாக வெளியிட உதவியமைக்காக எம்மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மேலும், இலங்கையின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் வந்து பங்குபற்றிய போட்டியாளர்களையும், சிரமம் பாராது அழைத்து வந்த பொறுப்பாசிரியர்கள், பெற்றோர்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

- செயற்குழு
2003/2004

எமக்கு பேருதவியளித்த

கனிஷ்ட பிரிவு

(ஆண்டு 1~ ஆண்டு 5)

மாணவர்களுக்கும்,

ஆசிரியர்களுக்கும்,

பெற்றோர்களுக்கும்,

எம். இதயம் கனிந்த நன்றிகள் !

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை

தமிழுக்கு அமுதென்று பெயர்

செம்மை பல நிறைந்து, உண்மை பல கொண்டு, வெண்மைக்கு உதாரணமாய், தூய்மையாய் விளங்கும் தமிழ் எனும் தேன் அமுதோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்னையது. வானமே மண் இறங்கி வழங்கப் பெறினும் அதன் வன்மையிலே வாட்டம் காணாது சொற்பொருளிலே கோட்டம் இல்லாதுஅன்றுபோல் இன்றுவரை தன்னிகரற்று நிகழும் தமிழை தெவிட்டாத தேனினை அமுதென்று சொல்வதே மிகப் பொருந்தும்.

அமுதினை உண்டவர்களுக்கு பல நன்மைகள் உண்டாவதைப் போல் தமிழென்னும் திரை அமுதை உண்டவர்களுக்கு பல கோடி நன்மைகள் விளையும். அமுதின் சுவையோ வார்த்தைகளால் வடிக்க இயலாதது. அதுபோல தீந்தமிழின் பொருளோ பல மொழிகளில் தமிழின் சொல்வன்மைக்கு ஏட்டிக்குப் போட்டியாக வந்தாலும் அவற்றினால் அதைப் படிக்க இயலாதது. அதனால் பற்பல பெருமை படைத்த தமிழ் மொழியினை அமுதென்று சொல்வதே மிகப்பொருந்தும். இனிமையான அமுதிற்கு பல சுவைகள் அமைந்துள்ளது போல தமிழுக்கு ஒப்பிடமுடியாத சுவை பல உண்டு.

வெண்மைக்கு எடுத்துக்காட்டாக வெண்பாக்களும் ஓர் கலைஞனின் கதையை கண்ணிற்கு முன் நடப்பதைப் போன்று காட்டும் கம்பராமாயணமும், அணுவைத்தரித்து திரைகடலினைப் புகட்டி கடுகத்திரித்த திருக்குறளும், ஓர் பெண்ணின் சீற்றத்தைக் கண்ணெதிர் காவியமாக்கும் சிலப்பதிகாரமும், அழகு சேர்க்கத் துலங்கும் ஔவையின் ஆத்திசூடியும், சதுர அடிகளைக் கொண்டு சாலவும் அறநெறி புகட்டும் நாலடியாரும் என்று பலபிரிவுகள் நீண்டு கொண்டே தமிழில் செல்கின்றன. சுருங்கச் சொன்னால் சூழ்ந்திருக்கும் வையகமே சுந்தரத் தமிழுக்கு, சிங்காரத் தமிழ் என்னும் அமுதிற்கு எடுத்துக்காட்டாகத் திகழமாட்டாது.

இப்படி பைந்தமிழாக இருந்த தமிழை செந்தமிழாக மாற்றிய சங்ககாலப்புலவர்களை நாம் மறக்கக்கூடாது "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்றே ஓர் பழமொழி தமிழில் இருப்பினும் தமிழை அளவுக்கதிகமாக அருந்தினாலும் எண்ணற்றுப் படித்தாலும் மேலும் மேலும் நன்மையே பயக்கி ஞாலமே புகழ ஓர் மனிதனை முன்னேற வைக்கும் பெருமை தமிழுக்கு உண்டு என்று மாற்றி தமிழை தமது இரு கண்களாகக் கொண்டு பொக்கிஷம் போல் பாதுகாத்த பெருமை சங்ககாலப் புலவர்களையே சாரும் எனலாம். இவர்களை நாம் தமிழ் என்னும் அமுதில் அடங்கி உள்ள சாறு எனலாம்.

சங்கமருவிய காலத்திலேயே தமிழ்ப் பிரவாகம் பெருநதியாகப் பெருக்கெடுத்து ஓடுவதற்கு முன்னின்று உழைத்தவர்களே சங்ககாலத்துப் புலவர்களான நக்கீரர், ஔவையார், பரணர்,கபிலர், பாரதியார் மற்றும் ஆறுமுகநாவலர் அவர்கள்.

தென்றலைப் போல் பையப்பைய வருவதால் பைந்தமிழ் எனும் பெயரும் தன்மை கொண்டு விளங்குவதால் தண்டமிழ் எனும் பெயரும் வண்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதால் வண்டமிழ் எனும் பெயரும், என்றும் செம்மையுடன் விளங்குவதால் செந்தமிழ், எனும் பெயரும் மேலும் உறுதியாக அண்டத்தைக் காட்டிலும் அருமையும் பெருமையும் கொண்டு தமிழ் திகழ்வதால் அதற்கு அமுதென்று பெயரும் உண்டு.

வாழ்க தமிழ்மொழி என்றென்றும் !

- எஸ். ஜெகன்
பரிதோமாவின் கனிஷ்டப் பாடசாலை

With the Best Compliments of

M. S. Accounting Systems

Specialists in Accounting Work & Tax Consultancy

126 1/2, First Floor
Y. M.B.A. Building, Colombo 1
Telephone: 2438292, 2433100
Mobile: 0777 754124

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் பெற்ற கவிதை

வெல்லும் எங்கள் உரக்கரம்

துயில் கொள்வதை மறந்து நித்தம்
உழைக்கும் உரக்கரங்கள்
ஒருநாள் வெல்லுமடா !

நித்தம் நித்தம் நிஜமாய்
உழைக்கும் உரக்கரங்கள்
ஒரு நாள் வெல்லுமடா !

உழுது பயிர் செய்தும்
வயிற்றுக்குணவு பற்றாமல்
உழைக்கும் கரங்களடா !

நெல்விதைத்து, அரிசி எடுத்து.....
தமக்குண்ண உணவு பற்றி - அக்கரை
செலுத்தாத நம் உழவனின் கரங்களடா !

நூலிலிழுத்து புடவை நெய்து
நொந்து போன உழைக்கும்
கரங்களடா !

நிலவு வந்தாலும் நிலைத்துழைக்கும்
நம் நெசவாளியின்
உண்மை கரங்களடா !

மண்ணெடுத்து பதமாய் குழைத்து
உருவம் கொடுக்கும்
உரக் கரங்களடா !

பானை, சிலை என்பவற்றுக்கு
விலை கொடுக்கும் - தம்
குயவனின் கரங்களடா !

மரம் சரித்து மரம் அறுத்து
வியர்வை சிந்தும் உரக் கரங்களடா !
இதமாய் சீவி நிதமாய் எடுத்த - தம்

தச்சன் கரங்களடா !
என்றும் உழைக்கும் உண்மை
கரம் ஒரு நாள் வெல்லுமடா
உரக்கரங்கள் ஒருநாள் வெல்லுமடா !

புழுதி வாரி இரைக்கும் மண்ணை
கலந்தெடுத்து கற்கள் அடுக்கி கட்டிய
உரக்கரங்களடா !

அடைக்கலமான நிழலை தந்த
நம் அருமை கொத்தனின்
பாரக் கரங்களடா !

தாய் மொழியாம் தமிழுக்கு
அருந்தொண்டாற்றிய - நம்
புலவர் கரங்களடா !

என்றும் மிளிர இயற்றியெழுதிய
நூல்களை காத்த
அருமை கரங்களடா !

அனாதைகளை அணைத்துக்காக்கும்
நம் இனியவர்களின் நேசக்கரங்களடா !

ஏங்கும் இதயங்களுக்கு
அன்பை வாரியிறைத்த - நம்
அன்னை தெரேசாவின் கரங்களடா !

பொதிகளைச் சுமந்து செல்லும்
பாரக் கரங்களடா - நம் உரக் கரங்களடா !

இரத்தம் சிந்தி நிஜமாய்
உழைத்த கரங்கள் ஒருநாள் வெல்லுமடா !

வெல்லும்மெங்கள் உரக்கரம் என்று உரக்க சொல்லடா
மானிலம் நடுங்கி ஏற்க விரிவாய் சொல்லடா !

- எல். ஏ. இலிந்தியா
புனித அந்தோனியார் பெண்கள் மகா வித்தியாலயம்

பாடசாலைகளுக்குகிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற சிறுகதை

வயிற்றிற்குச் சோறிடல் வேண்டும்

ஓர் ஊரில் ஒரு தாயும், மகனும் இருந்தார்கள். அவர்கள் தன் இல்லத்திற்கு வரும் ஒவ்வொருவரின் வயிற்றுக்கும் சோறிட்டு வந்தார்கள். ஒருநாள் மகன் அம்மா! நாம் நம் இல்லத்திற்கு வருபவர்களுக்கு எந்நாளும் சோறிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நமக்கு அதில் என்ன பயன் இருக்கின்றது? என்றான்.

அப்பொழுது தாய், உனது தந்தை இந்த வேலையை வழக்கமாகக் கொண்டார். அவர் இறந்தபின் நான் இதை வழக்கமாக கொண்டுள்ளேன் என்றார். இப்படியே சில காலம் சென்றது. ஒருநாள் மகன் தாயிடம் வந்து அம்மா எந்த செயலுக்கும் பயன் உண்டு. நான் சென்று ஒரு விடயத்தில் பயன் அறிந்துவரப்போகிறேன் என்றான்.

தாயும் அவனை வழியனுப்பி வைத்தார். மகன் ஒரு காட்டு வழியால் சென்றுக் கொண்டிருந்தான். அப்பொழுது வானம் கறுத்தது. இரவாகியது. அப்பொழுதும் நடந்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் முன் வேடன் ஒருவன் வந்து நின்றான். வேடன் அவனைப் பார்த்து "இங்கே கொடிய மிருகங்கள் திரியும் நேரம் உன்னைப் பார்த்தால் கொன்றுவிடும். நீ இன்றைக்கு மட்டும் என் வீட்டில் வந்துறங்கு. காலையில் செல்லலாம்" என்றான் வேடன். இருவரும் வேடனின் வீட்டை நோக்கி நடந்தார்கள். வேடனின் வருகைக்காக காத்திருந்த மனைவி வேடனை கண்டதும் உள்ளே அழைத்துச் சென்று "யார் இந்த பையன்" என்று கேட்டாள். வேடன் இவன் காட்டில் நடந்துக்கொண்டிருந்தான். இன்று மட்டும் நீ "இவனின் வயிற்றுக்கு சோறு போட வேண்டும்" என்றான். அவள் "நான் நம் இருவருக்கு மட்டும் தான் சமைத்திருக்கிறேன். வேண்டுமானால் உங்கள் சோற்றில் ஒரு பங்கை கொடுங்கள்" என்றாள். அவனும் "சரி" என்று அவனது உணவில் பாதியை அவனுக்கு கொடுத்தான். பின் எல்லோரும் உறங்கினார்கள்.

அப்பொழுது, வேடன் மாரடைப்பால் இறந்தான். இதைக் கண்ட மனைவியும் இறந்தாள். அதன்பின் அச்சிறுவன் அவர்களை புதைத்துவிட்டு தவம் செய்தான். சிறிதுகாலம் சென்றபின் இறைவன் அவன் முன்தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றார். உடனே அச்சிறுவன் "வயிற்றுக்கு சோறிட்டால் என்ன பயன் கிடைக்கும்?" என்றான்.

இறைவன் "ஆண்டி நாட்டு அரசனுக்கு ஒரு மகன் பிறப்பான். அவனிடம் நீ சென்று கேள்" என்று சொல்லி மறைந்தார். அதே போல அவ்வரசனுக்கு ஒரு மகன் பிறந்தான். அப்பொழுது அச்சிறுவன் அக்குழந்தையிடம் அக் கேள்வியை கேட்டான். உடனே அக்குழந்தை பேசத் தொடங்கியது. "நண்பா என்னை தெரியவில்லையா? நான்தான் வேடன். உனது வயிற்றுக்கு சோறு கொடுத்ததால் இன்று நான் அரசன் மகனாக பிறந்துள்ளேன். ஆனால் உனக்கு உணவுக் கொடுக்க மறுத்த மனைவி இவ்வூறிலே பன்றியாக பிறந்துள்ளாள்" என்று கூறியது.

அதன் பின் அச்சிறுவன் வீடு சேர்ந்து நடந்தவற்றை தாயிடம் கூறினான். அதன்பின் வயிற்றுக்கு சோறிடுதலை பணியாக செய்து வந்தார்கள்.

- ஏ. நிரன்ஜன்
இசிபதன கல்லூரி

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில் மத்திய பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை

நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு

கடிகார முட்களுடன் சங்கமித்துக் கொண்டிருக்கும் இக்கலியுகத்தில் நாட்டின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கே முதுகெலும்பாகவும், அத்திவாரத் தூண்களாகவும் துலங்குகின்றது. உலகில் வாழும் ஜீவராசிகள் அனைத்தும் தாம் வாழும் சூழலுக்கு ஏற்பவே இசைவாக்கத்தை கொண்டிருக்கின்றன.மனிதனும் அத்தகைய இயல்புகளை கொண்டிருந்தும் உலகில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்ற புதிரை வைத்துக் கொண்டு தட்டுத்தடுமாறி சிலர் கெட்ட பாதையிலும் சிலர் நல்ல பாதையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் நாட்டில் வாழும் இளைஞர்களும் இவ்வாறான எண்ணக் கருத்துகளினுள்ளேயே அடங்குகின்றனர்.

இளைஞன் ஆனவன் தனது நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றுகின்றான். "இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்" என்பது ஒரு கூற்று. ஆனால் இந்த கூற்றின் அடிப்படையில் திகழ்ந்தவர்கள் எத்தனை? எத்தனை? அவற்றில் உலகில் வாழ்ந்தவர்கள் பலர், வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர், வாழப்போகின்றவர்கள் பலர், வாழ்ந்தவர்களில் உதாரண புருஷர்களாக எடுத்துக் கொண்டால் சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி, நேதாஜி, அறிஞர் அண்ணா என்போர் இளைஞர்களாக இருந்து நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு கொண்டவர்கள். வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் சிலர் தமது திறமைகளை வெளிக்கொண்டு வந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறார்கள். ஆனால் பல இளைஞர்கள் "இலை மறை காய்" போல வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அவர்களது திறமைகள் மறைக்கப்பட்டு அதன் மூலம் நாட்டிற்கு ஏற்படும் முன்னேற்றமும் தடைப்படுகின்றது.

உதாரணமாக, எமது நாடாகிய இலங்கையை எடுத்துக் கொண்டால் இருபது வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக அழகிய செல்வச் செழிப்பு மிக்க நாடாக விளங்கிய இலங்கை இன்று இரத்த பூமியாக காணப்படுகின்றது. இதன் காரணமாக நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ளும் இளைஞர்கள் யுத்தத்திற்கு பயந்து வெளிநாடு செல்கிறார்கள். இத்தகை யஇன்றைய இளைஞர்களின் செயல் "மூட்டைப் பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொழுத்துவது" போன்று காணப்படுகின்றது. தனது தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டிய இளைஞர்களே நாட்டை விட்டு ஓடி விட்டால் நாட்டை முன்னேற்றுவது யார் கைகளில் உள்ளது? ஆகவே இளைஞர்கள் அனைவரும் விழித்தெழுந்து "முயற்சி திருவினையாக்கும்" என்ற பழமொழிக்கு ஏற்ப நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டு செல்ல முடியும். இளைஞன் என்பவன் வீரத்துடிப்புள்ள மாவீரன். அவன் நினைத்தால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை.

இன்றைய உலகில் பல வகையான துறைகள் காணப்படுகின்றன. அவையாவன

கல்வித்துறை, விளையாட்டுத்துறை, நீதித்துறை என்பன அவற்றில் அடங்கும். இன்றைய இளைஞர்கள் கல்வித்துறையை எடுத்துக்கொண்டால் அதில் வெற்றி கண்டு நாட்டிற்கு பெருமையை தேடித்தந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லலாம். வைத்தியராகவோ, பொருளியலாளராகவோ, ஆசிரியராகவோ வந்து நாட்டிற்கு தேவையான சேவைகளை வழங்கி நோயாளிகளை பாதுகாத்து, கல்வியறிவை நாட்டில் அனைத்து மக்களுக்கும் ஊட்டி நீதியை நாடெங்கும் நிலை நாட்டி வாழலாம்.

விளையாட்டுத்துறையை எடுத்துக் கொண்டால் இளைஞர்களுக்கு எல்லாம் உதாரணமாகத் திகழ்பவர்கள் முத்தையா முரளீதரனும், சுசந்திகாவும் ஆகும். இவர்களை போன்றவர்களால் நாட்டிற்கே பெருமை. நாட்டிலுள்ள வறுமை, அறியாமை, கடன், வளப்பற்றாக்குறை என்பவற்றை நீக்கி நாட்டை பாதுகாப்பது ஒவ்வொரு இளைஞனினதும் தலையாயகடமை ஆகும். இதற்காக இளைஞன் சுயநலத்தை மறந்து பொதுநலத்தில் ஈடுபட வேண்டும். இவை மட்டுமல்ல சூழலைப் பாதுகாப்பதன் மூலம் இளைஞன் ஒருவன் நாட்டை முன்னேற்றிட தன்னையும் முன்னேற்ற முடியும்.

இளைஞர்களுக்கு விவேகானந்தர் வழங்கிய தாரக மந்திரத்தை நினைவு கொள்வோம்.

"எழுமின் விழுமின் ஓயாது உழைமின்"

- தர்ஷிகா தர்மலிங்கம்
புனித நல்லாயன் கன்னியர்மடம்

புத்திசாலித்தனத்திற்கு விலை அதிகம் !

ரயில் சிக்னல் இயந்திரத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டுவிட்டது. சரிவர அது வேலை செய்யவில்லை.

யார் யாரோ வந்து பார்த்தார்கள். காரியம் நடக்கவில்லை.

அதற்குப் பிறகு ஒரு தொழில் வல்லுநரை அழைத்து வந்தார்கள்.

அவர் அப்படியும் இப்படியும் பார்த்தார். பிறகு வெளியில் போனார். ஒரு நட்டுடன் திரும்பி வந்தார். ஒரு இடத்தில் அதைப் போட்டு முறுக்கினார். அது சரியாகிவிட்டது !

எல்லாரும் பாராட்டினார்கள். தொகை எவ்வளவு தர வேண்டும் என்று கேட்டார்கள்.

ஆயிரம் ரூபாய் ஐம்பது காசு என்றார் அவர் !

அது என்ன கணக்கு ? என்று கேட்டார் நிலைய அதிகாரி

நட்டுக்கு ஐம்பது காசு. குறையைக் கண்டு பிடித்ததற்கு ஆயிரம் ரூபாய் என்றார் அவர்!

மற்றவர்களின் தவறுகளிலிருந்தும் பாடம் கற்றுக் கொள்ளலாம். எல்லாத் தவறுகளையும் நாமே செய்ய நமக்குக் காலம் போதாது.

பாடசாலைகளுக்குகிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மத்திய பிரிவில் முதலாம் இடம்பெற்ற கவிதை

இனியொரு விதி செய்க !

சாத்திரங்களை..............
சலவை செய்ய பிறந்தோரே.............
சகாப்தங்கள் பல கடந்தும் இன்னும் ஏன்
சாதி எனும் சகதிக்குள் மூழ்கிக்கிடக்கிறீர்?..............
சங்கங்கள் அமைத்தென்ன?
சாசனங்கள் இயற்றியென்ன?
சாதியில் குறைந்தவரென்றால்
சாக்கடையென்றுதானே ஒதுக்குகிறீர் !
சமூகத்தவரே விழித்திடுவீர்.............
சாதி எனும் பேய்க்கு அடித்திடுவீர்............
சாவுமணி !
சாதிகள் ஒழியட்டும் !
மனிதம் மலரட்டும் - என
இனியொரு விதி செய்க !

தமிழனாய் பிறந்து
தாய்மொழியை மறந்து
தரம் கெட்டு வாழும்
தரித்திரருக்கு.............
தமிழன் என்றதும் தலைகுனிந்து செல்லும்
தரம் கெட்டவருக்கு
தமிழரின் பெருமை புகட்ட
இறப்பது நாமானாலும்
வாழ்வது தமிழாகட்டும்
என்றொரு விதி செய்க !

கணனியில் உலகம் சுற்றும்
காலத்திற்கு வந்துவிட்டும்
கனவிலே பேய் கண்டதால்

நனவிலே ஆடுவெட்டும்
மூடத்தனத்தை..............
விட்டாரில்லை !
உள்ளத்தில் தூய்மை போதும்
உயிர்ப்பலி இனி வேண்டாம் - என
இனியொரு விதி செய்க !

மனிதம் வளர்ப்பதே,
மதம் என்பதை மறந்து..............
மதவெறி கொண்டு..............
மானுடத்தை அழிக்கும்
மடையரெல்லாம்..............
ஒன்றே குலம்.............. !
ஒருவனே தேவன் - எனப் போற்றும்படி
இனியொரு விதி செய்க !

பணத்திமிர் கொண்டு..............
பாமரரெல்லாம் தம்
அடிமையென்றெண்ணும் முதுகெழும்பில்லா..............
முதலாளிகளெல்லாம்..............
மூச்சிரைக்க வேண்டும் ! என்பதால்
உழைப்பாளி இன்றேல்
முதலாளி இல்லை.............. !
உழைப்பாளி தான் முதலாளியின்
உயிரின் ஆளி என
இனியொரு விதி செய்க !

பெண்ணுரிமை சங்கங்கள்
பெரிது பெரிதாய் அமைத்தென்ன?
குடிகாரக் கணவரிடம்..............
உதைப்பட்டு வதைப்பட்டு..............
உயிரிழக்கும் உத்தமிகள்
இன்னும் தான் குறையவில்லை ! ....
பூவாகப் பூத்து..............

இன்னுமே மாலைசூடாமல்
வாடப் போகும் - மலர்கள் தான் எத்தனை?
சீதனம் இன்றேல் - பிறந்த வீட்டுச்
சிறைதான் நம்பெண்களுக்கு !..............
ஆணுக்குப் பெண்
சரிநிகரென்றால்..............
ஆணும் கொடுக்க வேண்டும் சீதனம் !
அவனே அமைத்து கொள்ள வேண்டும்
நல் வாழ்க்கை - என
இனியொரு விதி செய்க !

சீரழியும் சமுதாயம்
சீராக வேண்டும் !
நேர்வழி மறந்தவர்
நல்வழி சொல்ல வேண்டும் !
அநேகரை அழிக்கும் போரை..............
அன்பினால் நாம் அழிக்க வேண்டும் !
வன்முறைகளை மறந்து
வசந்தங்களை தேட
இணைவோம் பேதமின்றி..............
ஒன்றாய்.............. ! என
இனியொரு விதி செய்க !

- ஆர். மேரி நிரோஜினி
மோபிரே கல்லூரி
கண்டி



பாடசாலைகளுக்குகிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மத்திய பிரிவில் முதலாம் இடம்பெற்ற சிறுகதை

சிதறல்கள்..........

வீதியெங்கும் ஒரே சந்தோஷம் களைகட்டிக் கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதும் சந்தோஷத்தை தெரிவிப்பதுமாய் இருந்தது. ஆனால் ஒரேயொரு வீட்டில் மட்டும் சகிக்கமுடியாத ஓர் அமைதி நிலவியது. கொஞ்ச நேரத்தில் கணேஷலிங்கம் வெளியில் வருகிறார். அந்தக்குடிசை வீட்டின் வெப்பம் தாங்கமுடியாமல் அவரது காற்சட்டையை கழட்டியவண்ணம் வீதியோரத்தை உற்றுப்பார்க்கிறார். அனைவரது சந்தோஷத்தையும் பார்த்த போதுதான் அவருக்கு அன்று தீபாவளி என்பதே ஞாபகத்திற்கு வந்தது. உள்ளேயே முடங்கிக்கிடந்த அவர் திண்ணையில் அமர்ந்து அப்படியே சாய்ந்துகொண்டார். பழைய எண்ணங்கள் மனக்கண்முன் படம்பிடித்துக் காட்ட ஆரம்பித்தன.

யாழ்ப்பாணத்தில் தன் குடும்பத்துடன் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்தவர் கணேஷலிங்கம். மற்றவர் குணம் அறிந்து அவர்கள் மனம் கோணாமல் நடப்பவர். அவரின் செல்ல மகள் ஹரிணி அவள்மேல் உயிரையே வைத்திருந்தார். கணேஷலிங்கம். படிப்பிலும் சரி, விளையாட்டுகளிலும் சரி, கெட்டிக்காரி எல்லோராலும் புகழப்பட்டு வந்தவள். இது இப்படியிருக்க ஒரு பக்கம் யுத்தத்தின் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. அவ்வோசையே காதில் கேட்காமல் வளர்ந்தவள் ஹரிணி. ஒரு பக்கத்தை மட்டும் தாக்கிக்கொண்டிருந்த யுத்தமென்னும் அரக்கன் யாழ்ப்பாணம் முழுவதையும் ஆட்கொண்டான். மக்கள் நிம்மதி, தூக்கம், உறவு, சொத்து என்று எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக அலைக்களிக்கப்பட்டார்கள். இந்த சோதனை கணேஷலிங்கத்தின் வீட்டையும் விட்டுவைக்கவில்லை.

இரவு கணேஷலிங்கத்தின் மனைவி தங்கம்மாவின் புலம்பல் ஆரம்பித்தது. "குண்டு கொண்டு வந்து போடினம் அவேயளுக்கென்ன பாதிக்கப்போறது எங்கள மாதிரி மனிஷங்கள் தானே" என்று புலம்ப கணேஷலிங்கமோ "இங்க பாரு தங்கம் நாங்களென்ன செய்யறது ஆளுக்காள் அடிச்சுக்கொண்டு சாகினம்". "இங்கு பாருங்கோவன் பிள்ளை ஹரிணியிட எதிர்காலத்தை நினைக்க எனக்கு பயமா கிடக்கு" அதனால நாங்க இந்த ஊரவிட்டுட்டு போவம்" இதைத்தவிர எனக்கு வேற வழிதெரியலே". "தங்கம் நாங்க இந்த ஊர விட்டுட்டு போரதாலவேற எங்கேயாச்சுப்போய் கஷ்டந்தான் படப்போறம் அதைவிட இங்கேயே இருந்திடலாம்" என கணேஷலிங்கம் அமைதியாய் கூறுகிறார். தங்கம்மாவோ என்ன பேசுரியல் நாளைக்கே வந்து வீட்டைவிட்டு போங்கவெண்டு இராணுவம் சொன்னா போகதானே வேணும் கூட்டத்தில் அடிப்பட்டு நெரிப்பட்டு சாகிறதை விட இப்போவே போவம்" என்று தங்கம்மா திட்டியும் கெஞ்சியும் பார்க்கிறாள். கணேஷலிங்கம் கேட்பதாக இல்லை. சொல்லிக் களைத்துப்போன தங்கம்மா எப்படியோ போங்க என்று கூறிவிட்டு உறங்கச் சென்றாள்.

திடீரென ஒரு சத்தம் பூமியே அதிர்வதுபோல கேட்டது. உறங்கிக்கிடந்த ஹரிணியும் "அப்பா என்ன சத்தம் எனக்கு ஒரே பயமா கிடக்குது" என்று அப்பாவின் கரங்களை பற்றினாள்.

கணேஷலிங்கத்தின் முகத்தில் ஏதோ ஒரு கலவரம். சத்தங்கள் காதை கிழித்தன. பயந்து நடுங்கிய ஹரிணியை சமாதானப்படுத்திவிட்டு கணேஷலிங்கம் வெளியில் வந்து பார்த்தார். மக்களின் அழுகையும் ஒப்பாரியின் சத்தத்தையும் கேட்ட கணேஷலிங்கத்திற்கு நெஞ்சே வெடித்தது. ஏதும் வேண்டாம் உயிர் தப்பினால் போதும் என்று நாலாப்பக்கமும் மக்கள் ஓடினர். என்ன நடக்கிறது என்றே தெரியாத ஒரு நிலையில் நின்றார். கணேஷலிங்கம் பக்கத்துவீட்டு ராமையா ஓடி வந்து "என்ன கணேஷலிங்கம் ஊரே பதறிப்போய் உயிர கையில பிடித்துக்கொண்டு இருக்குது. நீர் நின்று பார்த்துக்கொண்டு இருக்கிறீர்''. "சாமான் முக்கியமில்லை உயிரை காப்பாத்திக்கோங்கோ'' என்று சொல்லிவிட்டு தன் பாதையை நோக்கி ஓடினார் ராமையா. தன் கண்முன்னமே செல் விழுந்து ஓர் வீடு பத்தியெரிவதை கண்ட ராமையா "ஓ கடவுளே என்ன சோதனை இது'' என்று கடவுளை குறைகூறிக்கொண்டே உள்ளே சென்று "தங்கம்மா சீக்கிரம் புறப்படு''. "ஹரிணி வா சீக்கிரம்'' என்று அவர்களை அவசரப்படுத்தினார் கணேஷலிங்கம். எதுவுமே புரியாமல் அழத்தொடங்கினாள் ஹரிணி. கணேஷலிங்கம் ஒரு கையில் ஹரிணியையும் மறுகையில் தங்கம்மாவையும் பிடித்துக்கொண்டு ஓடத்தொடங்கினார். அகதிகளாய் வாழவழியின்றி "ஓ கடவுளே" என்ற ஒப்பாரியுடன் பயணத்தை எங்கு முடிப்போம் என்று தேடி அலைந்து கொண்டிருந்த அந்த மக்களின் சோதனை வாழ்வில் எவருக்கும் வரக்கூடாது. பனைமரக்காட்டில் பரவசமாய் ஓடித்திரிந்தவர்கள். இப்போது எங்கே போகிறோம் என்றே தெரியாது கண்களில் நீர் சொரிய பட்டமரம் போல் திகைத்து நடக்க சீவனும் இல்லாமல் நடந்தார்கள். உறவுகளின் பிரிவும் சொத்துக்களின் சேதமும் அவர்களை வாட்டியது. அந்த ஊரில் இருப்பதுவோ நான்கே நான்கு கப்பல்கள். அதில் எத்தனை பேர்தான் போகமுடியும். நீ நான் என்று அதற்கு சண்டை வேறு. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிவரும் கணேஷலிங்கத்தின் நிலையை பார்த்தால் கல்நெஞ்சம் படைத்தவர்களும் அழுதுவிடுவார்கள். கணேஷலிங்கத்தின் கையிலிருந்து ஓடிவந்த வேகத்தில் எதேர்ச்சையாக ஹரிணி கைவிடப்பட்டாள். அதையும் அறியாத வகையில் கணேஷலிங்கம் ஓடுகிறார். மிக தூரத்திற்கு சென்ற பிறகுதான் ஹரிணி கைவிடப்பட்டதும் அவருக்குத் தெரிந்தது. "தங்கம்மா எங்கே ஹரிணி'' என்று கணேஷலிங்கம் கேட்டார்'' ஐயய்யோ! என் ஹரிணி எங்கே'' என்று ஒப்பாரி வைத்தாள் தங்கம்மா. இருவரும் தன்னிலை மறந்து சத்தமாக கத்தி ஹரிணியை தேடினார்கள். கணேஷலிங்கம் ஒரு பக்கமும் தங்கம்மா ஒரு பக்கமுமாக பிரிந்து தேடினார்கள். அதில் மூவருமே மூதிசைக்கு சிதறிப்போனார்கள்.ஹரிணி "அம்மா, அப்பா'' என்று கதறிய வண்ணம் தேடினாள். அக்கூட்டத்தில் கீழே விழுந்து அடிப்பட்டு மிதிப்பட்டால் பிரிந்தவர்கள் ஒன்று சேரவும் முடியவில்லை. கவனிக்கவும் நாதியில்லை. குடும்பமே சிதறிப்போனது. கவலையில் ஆக்கிரோசமிட்டார் கணேஷலிங்கம். அழுதுகொண்டிருந்த ஹரிணியை மனிதநேயமுள்ள ஒரு பெண் தூக்கிக்கொண்டு ஓடினாள். தங்கம்மாவோ கிடைத்த இடத்தில் நுழைந்து போட்டில் ஒருவரால் ஏற்றப்பட்டாள். கணேஷலிங்கத்தின் நண்பர் ஒருவர் வந்து "கணேஷ் இங்கு ஏன் நின்றுகொண்டிருக்கிறாய் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கு செல் போடப்போகிறார்களாம் உடனடியாய் வா'' என்று அழைத்தார். கணேஷலிங்கமோ தன் குடும்பம் சிதறிப்போனதை கூறினார். "சரி கணேஷ் எல்லோரும் "கொழும்பிற்கு போகிறார்கள், அங்கு சென்று அவர்களை தேடலாம் வா'' என்று இழுத்துச் சென்றார்.

அன்று வந்து சேர்ந்த கணேஷலிங்கம் தான் இன்னும் அவரின் மனைவியும் மகளும் கிடைக்கவில்லை. அந்த நாட்களை எண்ணி எண்ணி கவலைப்டுகிறார் அவா். அப்போதிலிருந்து புன்னகையை அவர் ஏந்தியதே இல்லை. விசேடங்களும் அவர் வாழ்வில் கனவாய் போயின. பழையதை நினைத்துவிட்டு இயல்பிற்கு வந்த கணேஷலிங்கத்தின் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. போரினால் வாழ்க்கையை இழந்த கணேஷலிங்கத்தின் உறவு, பொருள் எல்லாம் சிதறிப்போயின. இந்த சிதறல்கள் மீண்டும் ஒன்று சேருமா? .... கடவுளின் பிராத்தனையுடன் தொடர்கிறது கணேஷலிங்கத்தின் சோகமான வாழ்க்கை.

- ..பாத்திமா சசிமா ஜாபிர்

புனித நல்லாயன் கன்னியர் மடம்

விநோத உயில்கள் !

மனுஷன் எந்த நேரத்திலே எப்படி நடந்துக்குவான்னு யூகிக்கறது ரொம்பக் கஷ்டம்!

உயிரோட இருக்கிறவரைக்கும் ஓடறான் - ஆடறான் - பணம் சேர்க்கறான். சொத்து சேர்க்கறான். உயிரோட இருக்கும்போதே தனக்குப் பின்னாடி அந்தப் பணமும் சொத்தும் யாருக்குச் சேரணும்னு எழுது வைக்கறான், அதுதான் உயில்.

உயிலைப் பொதுவா எதுலே எழுதுவாங்க... பேப்பர்லே தானே எழுதி வைப்பாங்க?

மெக்சிகோவுலே ஒருத்தர் (மோனேகி) என்ன பண்ணினார் தெரியுமா ?

தன்னோட மார்புலேயே உயிலைப் பச்சை குத்திக் கிட்டாராம். அவருக்கு நினைப்பு - 'இது ரொம்ப ஸ்ட்ராங்க் - யாராலேயும் அழிக்க முடியாது' - அப்படின்னு!

ஒருநாள் திடீன்னு அவர் செத்துப் போனார்.

சடலத்தைப் புதைச்சுத் தானே ஆகனும் !

சொந்தக்காரங்கல்லாம் ஆட்சேபணை பண்ணிட்டாங்க. சடலத்தை பொதைக்கப்படாது - ன்னுட்டாங்க ! அதைப் புதைச்சா மார்புலே எழுதியிருக்கிற உயிலும் அழிஞ்சிடும்லே - அதனாலே அப்படி வம்பு பண்ணினாங்க!

ரொம்ப நாள் வரைக்கும் அதைப் புதைக்காமே பக்குவம் பண்ணி வச்சிருந்தாங்க.

கேஸ் கோர்ட்டுக்குப் போச்சு ! நீதிபதி பார்த்தார்.. பச்சை குத்திருந்த உயிலோட நகலை எடுத்துக்கிட்டார்.

அதுக்கப்புறம் அந்த உடம்பைப் புதைச்சிட்டாங்க. எப்படியிருக்கு பாருங்க, இந்த விவகாரம்!

இன்னொரு வேடிக்கையான ஆசாமி! (ஜோசையா ட்விஸ்) அவர் ஒரு உயில் எழுதி வச்சார். அவர் எப்படி எழுதி வச்சார் தெரியுமா ?

தான் இறந்த பிறகு சவ ஊர்வலத்திலே பாண்ட் வாசிக்கிறவங்களுக்குத் தலைக்கு 40 டாலர் கொடுக்கனும்னு எழுதினார்.

ஊர்வலத்திலே வர்றவங்களுக்கு 20 டாலர் செலவுலே நிலக்கடலையும் வெல்லமும் வாங்கிக் குடுக்கனும்ன்னு எழுதி வச்சார்.

தன்னோட ஆறு பிள்ளைங்களுக்கும் தலைக்கு 2 டாலர் மட்டுமே குடுக்கனும்ன்னு எழுதிவச்சார்.

பாருங்க ... அவருக்குப் பிள்ளையாப் பிறக்கறதைவிட அவரோட சவ ஊர்வலத்துலே கலந்துக்கிறவங்க அதிர்ஷ்டசாலிகள்.

- தென்கச்சி கோ. சுவாமிநாதன்

வானொலியில் கூறிக்7கேட்டது.

பாடசலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில்
மேற்பிரிவில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை

மரித்துவரும் மனித உரிமைகள்

அகிலமெனும் அன்னை மடியிலோ ஆயிரமாயிரம் பிறப்புக்கள். பிறக்கின்ற போதே இறக்கின்ற திகதியை தமது தலையிலே எழுத்தாக சுமந்து வரும் மண்வாழ் பிறப்புக்களில் மகத்துவமானது இந்த மனிதப்பிறப்பு ஒன்றுதான். அறிவுகள் ஐந்துடன் பகுத்தறிவையும் பதித்து ஆறறிவுடன் உலகில் நடமாடும் நாம் நம்மையே மதிக்கத் தெரியாததால் இன்று அறிவுகளுக்கு அணை போட்டு விட்டு கல்லுக்கு நிகராகிவிட்டோம். ஆம் ! உலகில் பிறக்கும் போதே வாழுகின்ற உரிமையுடன் பிறந்த நாம் அடுத்தவனை அழித்து அவன் உயிரைப் பறிப்பதால் உடலிருந்தும் உயிரிருந்தும், உணர்ச்சியற்ற கல்லைப்போல் வாழுகின்றோம்.

உலகிலே ஒரு உயிர் பிறக்கும் போது பிறப்பு முதல் இறப்பு வரை அதற்கென நான்கு உரிமைகள் அல்லது கடமைகள் சொந்தமாகின்றன. தற்காப்பு, உண்ணல், உறங்கல், இனவிருத்தி என்பவற்றை பிறப்புரிமையாகக் கொண்ட ஜீவன்கள் தற்போதைய கால கட்டத்தில் அவற்றை அனுபவிக்கின்றனவா என பார்த்தால், அதற்கு 'இல்லை' என்ற ஒரே சொல்லில் விடையளிக்கலாம். ஏனெனில், இது அந்தக்காலமல்ல, இந்தக்காலம் மாண்புமிக்கவனான மனிதனே தனது உரிமைகளைத் தொலைத்து விட்டு நடுவீதியில் நடைப்பிணமாய் அலையும் போது மற்றவற்றை பற்றி எமக்கென்ன பேச்சு.

மனிதன் எல்லாம் புரிந்து கொண்டான். வாழும் நெறி அறிந்து கொண்டான். இருந்த போதும் மனிதனுக்கு ஒன்று மட்டும் விளங்கவில்லை. அது என்ன? வாழும் வகை தெரியும். ஆனால் அதில் வாழ்வது எப்படி என்றுதான் புரியவில்லை. காரணம், இன்றைய உலகின் நிலை அப்படி வாழும் நெறிமுறைகளுக்கு வரம்பிடப்படுகின்றன. உரிமைகள் மறுக்கப்படுகின்றன, உணர்ச்சிகள் தடுக்கப்படுகின்றன, கருத்துக்கள் கருத்தடை செய்யப்படுகின்றன. இப்படி இருப்பின் எந்த மனிதன்தான் மனிதனாக வாழ்வான், இல்லை மனிதத்துடன் சாவான்? அது சரி நமக்கு இப்படி நரக வேதனை கொடுப்பது யார் ? உயிருடன் நம்மை உருக்குலைப்பது யார் ? அதுவும் நாம்தான் ! ஆக்குபவனே அழிக்கவும் முனைகிறான்.

மனிதனானவன் மண்ணிலே பிறப்பது இறக்கத்தான். ஆனால் வாழும் காலத்தில் அவன் தன் ஐம்புலன்களாலும் அகிலத்திலே அனைத்தையும் அறிந்து உண்டு, கேட்டு, உறங்கி, உடுத்து, பேசி, சிரித்து வேண்டியவற்றை அனுபவிப்பது அவனது உரிமை. ஆயினும் இன்று உரிமையுடன் வாழும் மனிதர்கள் எத்தனை பேர் என்பது தான் புரியவில்லை. வாழ்வது மனிதனது பிறப்புரிமை. சாவதோ அவன் தலைவிதிப்படிதான் நடக்கும். நடக்க வேண்டும். ஆனால் இன்று தனது சொந்த நலத்திற்காக சுயலாபத்திற்காக அடுத்தவன் உயிருக்கு உலை வைக்கும் மனித

ரூப கூற்றுவனும் நமது கூட்டத்தில்தான் இருக்கிறான். பொதுவாக நாம் நமக்கென்றுள்ள கடமைகளை செய்யவும் உரிமைகளை பெறவும் நமக்கே தடையாக நாம்தான் உள்ளோம். நன்னெறியில் வாழ நமக்கென்று உள்ள மனித உரிமைகள் இன்று மண்தோண்டி புதைக்கப்படுவது பாரிய கொடுமை. அதை அடக்கக் கூடிய அதிகார வர்க்கத்தினர் இக்கொடுமையை கண்டும் காணாதது போல் மௌன விரதம் அனுஷ்டிப்பது அதனிலும் கொடுமை. இந்த கொடுமைகளை கொளுத்தவும் அக்கிரமத்தை அழிக்கவும் புரட்சிகளும், கிளர்ச்சிகளும் உருவம் பெற்றாலும் அதற்கு பயங்கரவாதம் என்ற சாயம் பூச முனைவது நாளாந்த செயற்பாடாகிவிட்டது.

நாம் மனிதர்கள். நமக்கு உணர்ச்சிகளும் உண்டு. உரிமைகளும் உண்டு என்று வாழும் மக்களைக் கொண்ட தேசத்தை உலக வரைபடத்தில் எங்கும் காணலாம். ஆனால் அவற்றின் அடிப்படையில் வாழும் மனிதர்களைத்தான் எங்குமே காண முடிவதில்லை. இப்படிப்பட்ட ஈனத்தனமான நிலைக்கு இன்றைய உலகம் தள்ளப்பட காரணம் யாதென்று நாம் அலசி ஆராய்ந்தால், இன்று உலகெங்கும் பூதாகரமாய் உருவெடுத்திருக்கும் யுத்தம்தான் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியான விடயம். ஆசையை அடக்கத் தெரியாத மனிதர் மண்ணாசையும் பொன்னாசையும் பிடித்து நாட்டுக்கு நாடும், நாட்டுக்கு உள்ளேயும் வீணாக சண்டையிட்டு சாகின்றனர். இதன் போது அப்பாவி பொதுமக்களது உயிர்கள் அநியாயமாக காவு கொள்ளப்படுகின்றன. அங்கே மனித உரிமைகள் மரணிக்கின்றன. சில மனிதத் தலைகளோ இதை மறுதலிக்கின்றன.

தற்போது நாம் வாழும் சூழல், எமது சமுதாயம், இந்த உலகம் அனைத்துமே வித்தியாசமாய் போய்விட்டன. நாளை என்றொரு நாளை எதிர்பார்க்க முடியாதளவு எம்மைச் சுற்றி எப்போதும் ஆபத்து காத்து நிற்கின்றது. மரண தேவனின் வருகைக்காக எந்த நேரமும் எமது வாயில் திறந்திருக்கின்றது. தற்போதைய கால கட்டத்தில் யுத்த அரக்கனின் ருத்ர தாண்டவன் இல்லாத இடம் எது? இந்த பாழான யுத்தமும் வீணான இரத்தமும் உயிர் போடும் சத்தமும் இனியும் வேண்டுமா நித்தமும்? அந்நிய நாட்டை பிடிக்க தன்நாட்டு மக்களின் உயிரை பணயம் வைத்து போரிடும் இன்றைய சர்வாதிகாரமிக்க ஜனநாயகத் தலைவர்கள் தமது வாழ்க்கையின் வெற்றியை வெறியாய் கொண்டிருக்கின்றனரே தவிர தமது மக்களைப் பற்றி சற்றாயினும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

உதாரணமாக நாம் வாழும் இலங்கை திருநாட்டை எடுத்து நோக்குவோமேயானால் தற்போது சமாதானக்காற்று மெல்லியதாய் வீசினாலும் கூட கடந்து சென்ற இரண்டு தசாப்தங்களில் ஈழமக்கள்பட்ட துயர் அப்பப்பா...! என்னிலடங்காதன! மூவினமும் நால் மதமும் ஒற்றுமையுடன் விளங்கும் எமது நாடு மனித உரிமைகளை விட்டுவிட்டு மத உரிமைகளுக்கு முதலிடம் கொடுக்க நினைத்த சில சிற்றறிவு படைத்த தலைவர்களின் சின்னப்பிள்ளைத்தனமான செயல்களினால் மனித உயிர்கள் மதிப்பிழந்து போயிருக்கின்றன. மயானங்களில் மனித உரிமைகளுக்கும் இடம் ஒதுக்க வேண்டியதாயிற்று.

அதிகார வர்க்கத்தினரின் ஆதிக்க வெறியினால் இனமோதல்கள் கட்டவிழ்த்து

விடப்பட்டன. தமிழர்கள் உயிராபத்துடன் உலகில் நடமாட வேண்டியதாயிற்று. அவர்களது உரிமைகள் பலாத்காரமாக பறிக்கப்பட்டன. தலை வெட்டும் தலைவர்களை தேர்தலில் சந்திக்கலாம் என்று போட்டிடுவோம் நல்லவர்களுக்கு ஓட்டு, வைத்திடுவோம் தீயவர்க்கு வேட்டு என நினைத்த வேளையில் மலையக மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது. எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு குடிமகனுக்கும் இருக்கும் அரசியல் ரீதியான முக்கிய உரிமை வாக்குரிமை. வாக்குரிமையை இழந்தமையினால் தாழ்ந்த நிலைக்கு தள்ளப்பட்டு தமது அடிப்படை உரிமைகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர் மலையக மக்கள்.

இலங்கையின் வடபகுதியிலே வன்முறைகள் வரம்பு மீறின. ஆட்சி வெறியர்களின் அதிகாரப் போக்கினால் மானிட உயிர்கள் மறைந்து போயின. உடல்கள் மண்ணுக்கும், உயிர்கள் விண்ணுக்கும் விருந்தாயின. மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. இதைத் தடுக்க கிளர்த்தெழுந்த பிரிவினர் மீது பயங்கரவாதிகள் என பச்சை குத்தப்பட்டன. வாழும் உரிமையை இழந்து பல ஆண்டுகள் கடந்து போன நிலையில் தான் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கையை எட்டிப்பார்த்து எமது உரிமைகளை எம்மிடத்திலிருந்து எம்மைப்போன்றவர்கள் பறிக்க அதை எம்மைப் போன்ற வேறோரிடம் கூறி மறிக்கப்பட்ட உரிமைகளுக்கு மணியடிக்கச் சொல்ல வேண்டியுள்ளது. இது இலங்கையில் நடக்கின்றது என மட்டும் நினைப்பதற்கல்ல உலகெங்கும் இன்று இந்த நாடகம் தான் மேடையேறிக் கொண்டிருக்கின்றது.

ஆம் ! மனிதனாய் பிறந்த நாம் நமது பிறப்புரிமைகளையும் உணர்ச்சிகளையும் விட்டுக்கொடுக்கக் கூடாது. வன்முறைகளாலும் யுத்தத்தாலும் சாவுமணியடிக்கப்படும் மனித உரிமைகளுக்கு நாம் மறுவடிவம் கொடுக்க முனைய வேண்டும். ஆதிக்க வெறியினால் அப்பாவி உயிர்களை பலியெடுத்து எமது உரிமைகளை பலாத்காரமாய் பறிக்கும் வீங்கிய தலைகளை வீட்டுக்கனுப்ப வேண்டும். உரிமைகள் எமக்கு உயிருக்குச் சமமானவை. உரிமைகள் இல்லையேல் உயிர் இருந்தும் நாம் நடைப்பிணம் என்று உணர்ந்து பறிக்கப்பட்ட உரிமைகளை போராட்டத்தின் மூலமாவது மீட்டெடுக்கவேண்டும். வாழ்வியல் வழிமுறைகளும் புது அர்த்தம் கற்பிக்க வேண்டும். அதிகாரங்களுக்கும் ஆட்சி வெறிகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. சமாதானமும் சமத்துவமும் கொண்ட நாட்டை உலகெங்கும் நிறுவ வேண்டும். இதன்மூலம் புதியதோர் உலகை இன்றே புனைய வேண்டும். மரித்துவரும் எமது உரிமைகளை ஜனநாயக குடிமகன் என்ற ரீதியில் உரிமையும் பெற்று விட்டோமெனில் நாளைய சந்ததிக்கு நல்ல உரிமைகளை விட்டுச் செல்ல முடியும். உருவம் தெரியாமல் உருக்குலைந்து போயுள்ள எமது மனித உரிமைகளுக்கு புதிய உருவம் கொடுத்து நாளைய உலகை நல்வழியில் புனைய இன்றே உறுதியெடுப்போம்.!

- ஆர். மனோஜ்குமார்
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி

பாடசாலைகளுக்குகிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மேற்பிரிவில் முதலாம் இடம்பெற்ற கவிதை

வேகுமா என் நெஞ்சு ?

தேசிய திரவம் எதுவென்றால்
கண்ணீர் தான் என்பேன்.
தேசிய இசையெதுவென்றால்
விம்மல் தான் என்பேன்.

ஆசையோடொரு ஓடம் செய்து
ஆற்றிலே அதை விட்டு
பெருமூச்சைக் காற்றாக்கி
ஆவலோடதில் அமர்ந்தபோது
நதிவெள்ளம் காய்ந்ததம்மா
நதி வழுக்கையாகிப் போனதம்மா

உயிர் பிரித்து தூரிகை எடுத்து
குருதி தொட்டு வர்ணம் கொடுத்து
ஓரழகோவியம் வரைந்து முடிக்கையிலே
ஐயோ!
சுவர் இடிந்து விழுந்ததம்மா !
அதனாலே என் கண்ணீரும் அழுததம்மா !

வெட்ட வெட்ட துளிர்த்துக் கொள்ளும்
முருங்கையாய் தானிருந்தேன்
காலம் என்னை வெட்ட வெட்ட
நான் இலை விட்டுக் கொண்டிருக்க,
விதியென்னை வேரோடு பிடுங்கி
வெந்தணலில் போட்டதம்மா !

என் உயிரோடு கலந்து விட்ட
வானுயர்ந்த லட்சியத்தில்
தடை விமானம் மோதி விட
எரிந்து சரிந்து வீழ்ந்ததம்மா
அது மண்ணோடு மண்ணாக ஆனதம்மா !

தடுப்பின்றி பயணிக்க
பயிற்சி பெற்றேன்

ஓடமின்றி மறுகரை
தொட்டுத்திரும்ப வந்தது கட்டளை !
முட்டை விட்டு - நான்
வெளியில் வர - தாய்
சிக்கெடுக்கும் அவசரத்தில், சிறகையும்
முறித்துவிட - பறக்கச்சொல்லி
அந்த வானம்
பரந்திருக்க - இந்தப் பறவை
நடக்குதடி - தான் வடித்த
கண்ணீருக்குள்ளே அழுதடி !

செக்குமாடாக
என்னைச் சுற்றிச்சுற்றி
வருகின்றன தோல்விகள்

காந்தத்தின் ஒத்த
திசைகளாய் ஆனோம்
நானும் வெற்றிகளும் !
காலமே ! என் விதியே !
இருதய நோயாளிக்கு
துன்பம் ஆகாது
எனக்கேதும் புது நோயோ !
எனக்கேன் இன்பம் ஆகாது ?

இதய யன்னல் திறந்து பார்த்தேன்
உள்ளே இருள் கண்டேன்
இருளைப்போக்க விளக்கு
வைத்தேன் - இதயம்
எரிந்து போயிற்று
தீயை அணைக்க - கண்ணீர்
வடித்தேன் - அது
எரிபொருளாயிற்று -
நீரே இங்கு எரிபொருளானால்
தீயை அணைப்பதெவ்வாறு?

என் நகக் கண்கள் கூட
அழுகின்றதென்றால் - முகக்
கண்ணின் நிலை தான்

என்னவடி - நான்
கடற்கரை மணலில்
கட்டிய கோட்டையை - பெரும்
அலை வந்து அடித்துச் சென்றதடி !

என் நாட்குறிப்பேட்டின்
முதற் பக்கங்கள்
கண்ணீர் வடிக்கும்
கவிதைகளால் நிரம்பி
நனைந்தாலும்
பிற பக்கங்கள்
நம்பிக்கை ஊற்றுக்களில்
ஊறிக் கிடக்கும்

புதைத்தாலும்
முளைத்துக் கொள்ளவும்.
எரித்தாலும்
உருகாமலிருக்கவும்
காயங்கள் எனக்கு வகுப்பெடுத்த
உருகிப்போனால்
மெழுகாய் சாவேன்
உறுதியாய் இருந்தால்
பொன்னாய் ஆவேன்.
மெதுவாய் நடப்பின்.
முள் தைக்கும் பாதத்தில்.
விரைவாய் ஓடின்..
வியர்த்துப் போகும் வெயிலுக்கு
தன்னில் விழியத
சுமந்து செல்லும்
எறும்பை காண்கையில்
தழும்பில் வந்த காயம்
சிரித்துச் சொல்லும்
கற்களை கண்டு - இனி
இந்த நதி திரும்பி ஓடாது
துன்பம் கண்டு இந்த மனம் வேகாது

- பாத்திமா இஃப்ரத்

சீனன்கோட்டை முஸ்லிம் மகளிர் கல்லூரி பேருவலை

பாடசாலைகளுக்குகிடையிலான தமிழ்த்திறன் காண் போட்டிகளில்
மேற்பிரிவில் முதலாம் இடம்பெற்ற சிறுகதை

மனதுக்குள் ஒரு மரணம்

பாரதிதாசன் என்ற மண்ணில் பிறந்து பாரதி என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட நான் இறந்துவிட்டேன். உடலில் ஏற்பட்ட காயங்களால் அல்ல. மனதில் ஏற்பட்ட காயங்களால். மரணித்தது என் உடல் அல்ல. என் உணர்வுகள். புதைக்கப்பட்டது என் உடல் அல்ல. மனதில் நான் கட்டிய கனவு கோட்டைகளின் சிதறல்கள். ஆம் நான் மரணித்தது உடலால் அல்ல மனதால். இன்று நான் நடமாடுகின்றேன் உணர்வற்ற ஜடமாய். ஏன் இந்த மாற்றங்கள்? என் வாழ்க்கை புத்தகம் சற்று முன்னோக்கி புரட்டப்படுகின்றன.

இளவேனிற் தென்றலில் மல்லிகை மர நிழலில் ஏதோ நான் படிக்காவிட்டால் பத்திரிகை வெளியிடுவதே அநாவசியம் என்ற தோரணையில் ஆர்வமாய் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். என் அருகாமையில் நான் செய்த தவத்தின் பயனாய் கிடைக்கப்பெற்றவையென நான் எண்ணிவாழும் என் இரு பெண் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். அன்று எனக்கு தெரியவில்லை. இன்று நான் வாழ்வதற்கும் என்றோ நான் சாவதற்கும் என் பிள்ளைகள் காரணமாய் இருக்கப் போகின்றார்கள் என்று! "கோழிக்குஞ்சின் வளர்ச்சியும் பெண் பிள்ளையின் வளர்ச்சியும் விரைவானவை" என்று முன்னோர் கூறுவது போல என் பிள்ளைகளும் கண்மூடி திறக்கும் நேரத்தில் வளர்ந்துவிட்டார்கள். அவர்களின் தோற்றங்களும் மாறுபட்டன. வயதுக்கு வந்த பெண்களை வைத்து பாதுகாப்பது, வயிற்றில் நெருப்பை கட்டிக் கொண்டிருப்பதற்கு சமன் என்பார்கள். இருந்தாலும் அவர்களை வைத்து பாதுகாப்பது என் சுமையாக தெரியவில்லை. சுகமாகவே இருந்தது. அவர்களின் தாய் அவர்களை விட்டு பிரிந்து இறையடி சேர்ந்த நாள் தொடக்கம் இன்றுவரை என் வாழ்க்கை அவர்களுக்கென சமர்ப்பித்து வாழ்ந்துவந்தேன். என் பிள்ளைகள் எவ்வளவு தான் வளர்ந்தாலும் எனக்கு சிறு குழந்தைகளாகவே தென்பட்டனர். ஊரில் உள்ளவர்களும் அவர்களை அவ்வாறே எண்ண வேண்டும் என்பது என்ன சட்டமா? முதல் பெண்ணை வீடு தேடி வந்து பெண் கேட்டார்கள். மறுக்கமுடியவில்லை. இரண்டாவது பெண்ணோ மணமகனை தேடி கொண்டு வந்து "இவர்தான் எனது அவர்" என்று காட்டினாள். முதலில் மறுத்தேன், பின்பு ஊராரின் அனுசரணை அறிவுரைகளினால் ஒத்துக்கொண்டேன்.

திருமணம் நிறைவேறியது. வந்தவர்கள் வாழ்த்தினார்கள். திருமணத்தை சிறப்பாக செய்ததையிட்டு, ஆனால் யாருக்கு தெரியும் இத்திருமணத்தை செய்ய நான் பட்ட கடன்கள். மணமக்களை கையாட்டி வழியனுப்பி வைத்தேன். அன்று பாடசாலைக்கு கையாட்டி வழியனுப்பினேன். இன்று வாழ்க்கை வாழ வழியனுப்புகிறேன். அவர்களும் கையசைத்து விட்டுதான் சென்றனர். ஆனால் அன்று எனக்கு புரியவில்லை, என்னைக்கைகழுவி விட்டு

செல்கின்றனர் என்று.

என் குழந்தைகளை பாசத்துடன் தான் நான் வளர்த்தேன். ஆனால், அதில் கண்டிப்பும் இணைந்திருந்தது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் என் கண்டிப்பு என் மீது அவர்களுக்கு இவ்வளவு வெறுப்பை உண்டாக்கியிருக்கும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இன்று நானோ ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியர். என் அன்றாட செலவுகளை மேற்கொள்ளவே என் ஓய்வூதியப் பணம் போதுமானதாக இருந்தது. நான் நம்பினேன் என் இரு பிள்ளைகளும் நான் பட்ட கடன்களை தீர்க்க உதவுவார்கள் என்று. என் நம்பிக்கையில் முதல் அடியாய் வீழ்ந்தது, என் மூத்த பெண் செய்த காரியம்.

அன்றொரு மாலைப்பொழுது கடன்கொடுத்தோர் பணத்தை கேட்டு நெருக்க மகளின் வீடு தேடி சென்றேன். மகளோ வாயார வா என்று கூட என்னை வரவேற்கவில்லை. தயங்கி தயங்கி ஒரு மாதிரியாக பணம் கேட்டேன். அவள் கூறிய வார்த்தைகள் "பச்சை மரத்தில் ஆணியை அறைந்தது" போல இன்றும் என்னை வதைக்கிறது. "ஏற்கனவே மாமியார் பிறந்த வீட்டிலிருந்து எவ்வித சீதனமும் கொண்டுவரவில்லை என்று குத்திக் காட்டுகிறார். இதில் நீங்கள் காசு கேட்டா நானும் உங்களுடன் சேர்ந்து வீட்டிற்கு வரவேண்டியதுதான்" இவை அவள் கூறியவை. அதற்குமேல் என்னால் அங்கு இருக்க முடியவில்லை, எழும்பி வந்துவிட்டேன். இனி என்ன செய்வது? கடன் கொடுத்தோரின் தொல்லையோ தாங்க முடியவில்லை மனமின்றி இரண்டாவது மகளின் வீடு நோக்கி சென்றேன். கடவுள் எனக்காக பரிதாபப்பட்டார் போலும். உள்ளே சென்று என்னை அவமானப்படவிடாமல் வாசலிலேயே என் மகளின் பதிலை கேட்க வைத்தார். ஆம் அவள் என் மூத்த மகளுடன் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கிறாள். "இந்த அப்பாவிற்கு வேற வேலையில்லை நாங்கள் ஒரு கௌரவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவர் இப்படி வீடுதேடி வந்து கடன் கேட்டால் எங்களுடைய கௌரவம் என்னவாகும். வயதாகிவிட்டதே தவிர இங்கிதமே தெரியவில்லை'. இவற்றை கேட்ட பின்னும் ஒருவன் உயிரோடு இருக்கிறான் என்றால் அது நானாக தான் இருக்கும்.

இறந்துவிடலாம் என்றுதான் நினைத்தேன். இருந்தும் உள்ளுக்குள் ஒரு தன்மான எண்ணம். "இவர்களுக்காக ஏன் நான் சாக வேண்டும்?' என் வாழ்க்கை தரப்பட்டது நான் வாழவே'. இதை கூறி என்னால் என்னை சமாதானப்படுத்த முடிந்ததே தவிர மனதில் ஏற்பட்ட ரணத்தை ஆற்ற முடியவில்லை. ஏனெனில், நானும் ஒரு சராசரி தந்தைதானே. இன்று என் வீடு வாசல், சொத்து எல்லாவற்றையும் விற்று கடனை கொடுத்துவிட்டு முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வருகிறேன்.

- பி. இரஜிதா
நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி

With the Best Compliments of

S.R. Jewels Marrt

No. 6/S, Sea Street Junction, Colombo 11,

Sri Lanka

Telephone: 2332641

Mobile: 0777 417113

With the Best Compliments of

MAHARAJA

ROASTED

RICE FLOUR

Farine de riz grillé

බැදපු

හාල්පිටි

வறுத்த அரிசி மா

INSTANT PREPARATION FOR
STRING HOPPERS & PITTU

MADE IN
SRI LANKA

Exported by :

MAHARAJA FOOD PRODUCTS

18/3, Dr. E. A. Cooray Mawatha, Colombo 6
Telephone: 2360926, 2361139 Fax: 074-510805

Imported by:

MAHARAJA U.K. LIMITED

539, High Road, Wembley, HA02DN. Tel: 02089000444
Fax: 02089009666 Mobile: 07956425707
Website: www.angloasiongroup.uk

A Quality Maharaja Food Products

With the Best Compliments of

P & A MARKETING SERVICES

MARKETERS OF :

"Cavadi" Mark Camphore

"Eagle" Brand Naptnaline Balls

Indian Agarbathies

&

All Merchandice Items

No : 8, Rohini Road, Colombo 6.

Tel : 4515975, 2581784

Fax : 2501441

TAMIL MEDIUM

(ஆண்டு 6 தொடக்கம் G. C. E. (O/L) வரை)

கணிதம்	:	Mr. S. P. நவநாதன்
விஞ்ஞானம் / சுகாதாரம்	:	Mr. N. V. பிறேம்
வர்த்தகமும் கணக்கீடு	:	Mr. W. ஹேமன்ட் உதயகுமார்
தமிழ்	:	Mr. S. M. ஜீவா

ENGLISH/ENGLISH LITERATURE : Mr. M. Ponnampalam

SINHALA : Mrs. M. புஸ்பநாதன்

விஞ்ஞானப்பிரிவு G. C. E. (A/L)

இணைந்த கணிதம்	:	Mr. T. சேரன்
பௌதீகவியல்	:	Mr. குணசீலன்
இரசாயனவியல்	:	Mr. N. V. பிறேம்
உயிரியல்	:	Mr. V. S. சிவகுமாரன்

(கலை / வர்த்தகம்)

பொருளியல்	:	Mr. R. ராயரட்ணம்
கணக்கீடு	:	Mr. ஹேமன்ட் உதயகுமார்
புவியியல்	:	Mr. N. V. பிறேம் குமார்
வணி. புள்ளிவிபரவியல்	:	Mr. குறூஸ்

(ஆண்டு 1 தொடக்கம் 5 வரை அனைத்து பாடங்களும் நடைபெறுகின்றது)

ஆண்டு 5 புலமைப்பரிசில் வகுப்பு : Mr. N. V. பிறேம் குமார்

SKY INSTITUTE

At Harrow International
No : 9, Rajasinghe Road, Wellawatta.
Tel : 0722-963224

With the Best Compliments of

IMAGE CONSULTANTS

21, St. Albans Place, Colombo 4, Sri Lanka.
Tel : 2503182 Tele/Fax : 2582109
E-mail : nayana@mail.ewisl.net

"Sterling Point"
124, G. N. Chetty Road, T. Nagar,
Chennai - 17, India.
Tele/fax : 8256064
E-mail : icchennai@yahoo.co.uk.

தமிழில் ஹைகு முயற்சிகள்

முனைவர் இராம குருநாதன், தமிழ்ப் பேராசிரியர். பச்சையப்பன் கல்லூரி, சென்னார்

தமிழில் இதுவரை சுமார் அறுபது ஹைகு தொகுதிகள் வெளிவந்துள்ளன. தமிழ் ஹைகு பற்றிய ஆராய்ச்சி நூல்கள் சுமார் எட்டு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. ஆராய்ச்சிப் பட்டங்களுக்காகவும் ஹைகு பற்றிய சிந்தனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கவிதையின் நிகழ்காலப் போக்கு ஒரு குறிஞ்சிப் பூக்காலமாகத் தான் ஹைகுவின் பக்கம் திரும்பியிருக்கிறது.

தமிழில் முதல் முயற்சியாக, பாரதி தான் ஹைகு கவிதைகளை மொழிபெயர்த்ததோடு, ஹைகு பற்றிய அவரது கருத்தையும் தெரிவித்துள்ளார். கவிதையில் சுருங்கச்சொல்லுதல் நமக்கும் உண்டு எனத் திருக்குறளைச் சுட்டும் அவர், ஹைகு போன்று கவிதை ஒரேயடியாகச் சுருங்கிப் போய்விடக் கூடாது என்பதிலும் கவனமாய் இருந்துள்ளார். பாரதி கூறிச் சென்ற கூற்றில் ஒரு கருத்தை இங்குக் கருதுவது சிந்திக்கத்தக்கது. ஹைகு போன்ற நுட்பச் செறிவு கொண்ட பழந்தமிழ்ப் பாடல்கள் நிலவி வந்திருப்பதை எண்ணிப் பார்த்திருக்கிறார்.

தமிழுக்கு பாரதியாரால் அறிமுகமான ஹைகு, மிக நீண்ட காலமாகத் தேக்கத்திலிருந்து, தொண்ணூறுகளில் பரவலாயிற்று எனலாம். தொடக்கக் கால முயற்சிகளாக மொழிபெயர்ப்பு ஹைகு கவிதைகள் வெளிவந்தன. பிற நாட்டு இலக்கியங்களில் ஆர்வங்கொண்டோர், ஹைகுவைத் தமிழ் மண்ணுக்குக் கைப்பிடித்து அழைத்து வந்தனர்.

தொன்னூறுகளின் தொடக்கங்களில் ஹைகு குறித்த விரிவான பார்வை நூல்வடிவங்களில் பதிவு செய்யப்பட்டன. அப்துல் ரகுமான், சிற்பி, தமிழன்பன், அறிவுமதி, அமுதபாரதி முதலியோர் இந்தத் துறையில் ஆர்வங் காட்டி ஹைகு கவிதைக்கு வரவேற்பு நல்கினர். இதுதான் ஹைகு என்ற நூல்வழிப் பேராசிரியர் தி. லீலாவதி, ஹைகுவைப் புரிய வைத்தார். சென் மதக் கருத்துகள் ஹைகு வழியே சொல்லப்பட்டதை ப. சுப்பிரமணியம் லீலாவதிக்கு முன்பாகவே நூல்வடிவில் அறிமுகப்படுத்தியுள்ளார். அதன் பின் ஹைகு புற்றீசல் போலப் புறப்பட்டது, தொன்னூறுகளின் பிற்பட்ட காலங்களில்தான்.

ஹைகு தனித்தனியான கவிஞர்கள் வழியே நூல்களாக வெளிப்பட்டதோடு, பலர் சேர்ந்து ஹைகுவைத் தொகை நூலாகவும் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வகையில் தொகைகளாக வந்து பலரின் கவனத்தை ஈர்த்த நூல்களாக 'இன்றும் மக்கள்' (1991) 'எண்ணம் நிறைய ஹைகு' (95) 'வேரில் பூத்த ஹைக்கூ' (97) ஆகியவையாகும் ! கணையாழி, ஹைகு சிறப்பிதழ் (92) என்றே இருமாதங்கள் வெளியிட்டு முன்னோடியான பெருமையைப் பெற்றது. குமுதம், சிலரின் ஹைகு கவிதைகளைச் சில இதழ்களில் வெளியிட்டது. 1991 இல் சுஜாதா, 'ஹைகு ஒரு புதிய அறிமுகம்'. என்ற நூல்வழிப் பல ஹைகு செய்திகளை அவருக்கே உரிய பாணியில் எழுதியுள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். அவர் எழுதிய 'நடன மலர்' என்ற கட்டுரைத் தொகுதியின் சில கட்டுரைகள் ஹைகு பற்றியதாகும்.

அண்மைக் காலத்தில் ஹைகு கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதில் புதுக்கோட்டையைச் சேர்ந்த மு. முருகேஷ், சென்னையைச் சேர்ந்த பா. உதய கண்ணன் ஆகியோர் மிகுந்த ஆர்வங்காட்டி வருகின்றனர். இரு தொகுப்புகளும் வெளியிடப் பெற்றுள்ளன.

Best Wishes from

6 R STUDENTS

K. M. Rizath

P. Sushanthan

S. hariharan

M. F. M. Fasi

இவர்களின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

அமுதபாரதியின் 'புள்ளிப்பூக்கள்', 'காற்றின் கைகள்' ஆகியவை எண்பதுகளின் இடையில் வெளிவந்தன. ஜப்பானிய ஹைகுவின் அசை எண்ணிக்கையை (5.7.5) அப்படியே பின்பற்றி எழுதும் முறையை இவரது பெரும்பாலான ஹைகு கவிதைகளில் காணலாம். அந்தாதி முறையில் இவர் எழுதியுள்ளதும் ஒரு புதுமை.

ஹைகு தொடர்பாக இதழ்களின் பணியும் இங்கே குறிக்கத்தக்கது. 'கரந்தடி' என்ற இதழ் தொடர்ந்து ஹைகு கவிதைகளை வெளியிட்டு வந்துள்ளது.

பல்கலைக் கழக ஆராய்ச்சிகள் சில மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இவ்வகையில் கோவை மணி, புனிதவதி, உதய சூரியன், மங்கையர்க்கரசி, பரிமளம், அருணாசலம், பட்டாபி சீதாராமன் முதலியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர். திருமதி. நிர்மலா சுரேஷ் ஹைகு எழுதும் முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டிருப்பதோடு, ஹைகு குறித்த முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு அப்பட்டத்தைப் பெற்ற முன்னணி ஆய்வாளராக அத்துறையில் திகழ்ந்து வருபவர் ஆவார்.

ஹைகுவிற்கெனத் தனிக் கருத்தரங்கினைத் தொடங்கிப் பெருமை பெற்றது, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முனைவர் மேஜர் கதிர் மகாதேவன். ஹைகுவிற்கெனத் தனிக் கருத்தரங்கினை 1994இல் நடத்தினார். 1996இல் கோவையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஹைகுவிற்கு எனத் தனிக் கவியரங்கம் நடத்தியது. 1996இல் சென்னை நங்கை நல்லூர் 'இலக்கிய வட்டம்' ஹைகு பற்றிய கருத்தரங்கினையும் கவியரங்கையும் நிகழ்த்தியது. காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் ஹைகு சிந்தனை அரங்கம் என்ற கலந்துரையாடலை அதில் ஆர்வமுடையோரை அழைப்பித்து நடத்தியது.

சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனம் 29, 30, 31 மார்ச் 1999 இல் நடத்திய ஹைகு பற்றிய மூன்று நாள் கருத்தரங்கம் குறிப்பிடத்தக்கது. சப்பானிய அறிஞர்கள், இந்திய அறிஞர்கள் ஹைகு பற்றிய பல்வேறு கட்டுரைகள் படித்ததோடு, சப்பானிய அறிஞர்களைக் கொண்டு ஹைகு எழுதப் பயிற்சி அளித்தமையும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

இன்றைய தமிழ்க் கவிதை வளர்ச்சியின் காலகட்டத்தை, ஹைகு காலம் என்று ஓர் அன்பர் சுட்டியுள்ளமை அவரது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் காட்ட வல்லது ! ஹைகு காலம் என்று ஒரேயடியாக வரையறுத்துக் கூறுதற்கு வலிமையான ஹைகு பற்றிய பரவலான வாசிப்பும் தமிழில் இன்னும் விரிவடையவில்லை. இதை அறிந்து கொள்ளுவதற்கு உரிய புரிதல் ஓரளவுதான் வளர்ந்துள்ளது. எனினும் பிற இந்திய மொழிகளில் ஹைகு வளர்ச்சி பெற்று இருப்பதை விட, தமிழில் அக்கவிதை வடிவம் பலரைப் பாதித்துள்ளது என்பதால், ஹைகு குறித்து நூல்கள் பல்கியுள்ளன. தரமான உள்ளடக்கமும், காட்சிப்படுத்தலுமே ஹைகுவின் உயர்நாடிகள். பல்கிப்பெருகி வரும் ஹைகு கவிதை நூல்களில் எத்தனைத் தேறும் எப்படித் தேயும் என்பதை அந்நூல்களிலும் நிலைபேறு மட்டுமே உணர்த்தும்.

நன்றி : பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

நான்காம் மாநாட்டு மலர் மே 1999

தமிழ்நாடு

ஆவேசத்தில் தமிழ்த் தாய் !

- கவிஞர் எம். கருப்பையா பாரதி-

**தமிழை செவ்வியல் மொழியாக அறிவிக்கக்கோரி புதுதில்லியில்
2003 ஆகஸ்ட் 18ம் தேதி நடைபெற்ற
உண்ணாவிரதப் போராட்டத்தின் பொழுது இயற்றப்பட்டது.**

எங்கே என் மகன்
வள்ளுவனைக் காணோம் !
என்ன செய்திட்டீர் ?
சொல்லுவீர் மக்களே !

அழுது புலம்பிய
அன்னைத் தமிழச்சி
ஆவேசத்துடன்
பேசத் தொடங்கினாள் !

மீசை முறுக்கி
ரோசம் எழுப்பிய
புரட்சிக்காரன் பாரதி எங்கே?

அதிகாரத்தை
ஆட்சித் திமிரை
எரித்தாள் கண்ணகி !
இளங்கோ எங்கே ?

பாழும் தமிழரின்
மூடத்தனங்களை
பாடை கட்டிய
பாரதிதாசன் எங்கே?

எங்கு பார்த்தாலும்
ராம் ராம் என்றே
எல்லோர் நாவிலும்
கடவுளாய் ஆக்கிய
பிரம்மன் கம்பன்
என் பிள்ளை எங்கே?

வரம்பு இல்லா
கவி தந்தவளை
துரும்பாய் எங்கே
தூக்கி எரிந்தீர் ?

அன்றும் என்றும்
அரிதாய் பெண்ணில்
புரட்சித் தலைவியாய்
போற்றிய என்மகள்
அவ்வை பெண்மணி
எங்கே எங்கே?

மண்ணும் விண்ணும்
மாநிலம் முழுதும்
எண்ணம் செயலால்
மாநுடன் இணைத்த
புறநானூற்றை
யாத்த என்பிள்ளைகள்
கறையான் தின்றிட
காவல் காத்தீரோ?

புறப்படு ! தேடு !
எத்தனை பிள்ளைகள்
உங்களுக் களித்தேன்
அத்தனையும் தத்துவம்
அவர் மூலமாய்க் கொடுத்தேன்

அகத்தில் தீ
பற்றி எரியுதே !

அய்யோ என் பிள்ளை
அகத்தியன் எங்கே?

தத்துவம் வேதம்
தனித்தனி சாத்திரம்
அத்தனையும் வடமொழி
ஆதிக்காரியால்

திருடிக் கொண்டு
போகவே வைத்தாய்
திருட்டுப் பொருளை
உயர்வாய் மதித்தாய் !

எல்லாம் இங்கே
நானே கொடுத்தது
எத்தனைச் சித்தர்கள்
பிள்ளைகள் தொடுத்தது.

வடமொழிக்காரி
வஞ்சகப் பெண்ணாள்
திருடி எடுத்துப் போய்
தன்பிள்ளை என்றாள்

வலையில் விழுந்தாய்
வடமொழிக் காரியால்
நிலையினை மறந்தாய்
நிம்மதி தொலைத்தாய்.

இல்லை இது பொய்
என்பவர்க்கு - என்
பிள்ளைகள் பொக்கிசம்
பிரித்துக் காட்டுவேன்

அழித்த தத்துவம்
ஆயிரம் ஆயிரம்
அழிக்க முடியாது
என்னையும் அவர்களால்

கொண்டுவா பிள்ளைகளை
குலப் பெருமை நிலைநாட்டு
தோண்டியெடுத்து வந்து
தொல்காப்பியம் காட்டு

என் கண்ணீர் எதிரிக்கு ஆயுதமே !
என் கலக்கம் உனக்கோர் பிரளயமே !

இன்னும் எனக்குள்
இளங்கோ இருக்கிறான்
அகத்துக்குள்ளே
மாமுனி தகிக்கிறான் - கம்பன்
வள்ளுவன் - பாரதி
போன்றோர் ஆயிரம்
பாரதிதாசனைப்
படைப்பேன்

ஆம் ! இங்கே - இழந்த
என்பிள்ளைகளை
மீட்பேன்..

விரிந்த கூந்தலாய்,
சிவந்த கண்களாய்
வெறித்த பார்வையால்
தமிழன்னை சொன்னாள்.

என் தமிழ் மக்களே !
எழுந்து வாருங்கள்
செம்மொழி நம்மொழி
செப்புவோம் ஊருக்கு......

நன்றி : "தமிழ்ப்பணி" (தமிழ்நாடு)
செப்டம்பர் 2003

With Best Compliments from

Feiton Trading Company

Importers & Distributors of Electrical Goods

389, Jumma Masjid Road,
Maligawatte, Colombo 10, Sri Lanka.
Tel : 2691625, 2698368
Fax : 94-11-2524642
E-mail : feiton@dynaweb.lk

With Best Compliments from

"Samasiri Samoga Jothi"
"Vidya Kalamani"

PROF. DR. KUMARASAMY NANDAKUMAR

(Special Science Teacher)
Justice of Peace (All Island)

Royal College
Colombo 7, Sri Lanka. Tel : 2695256

Residence : 20, Collingwood Place,
Wellawatte, Colombo 6. Tel : 2507276

முத்தமிழ்

"படிக்கும் படிப்பே இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்
நடிப்பும் கூத்தும் சேர்ந்தே
நாடகத்தமிழ் என்பார்கள்

முடிக்கும் மூன்றும் முத்தமிழ்
முடித்த வண்ணம் நம் தமிழ்
முத்தமிழ் என்றே சொல்வார்கள்"

என்பது பாரதிதாசனின் வார்த்தைகள். முத்துத்தமிழை எம் மூத்த தமிழை முத்தமிழ் என்று நாம் பாகுபடுத்திய போதும் கூட இம் முத்தமிழ் சார்ந்த இலக்கண, இலக்கிய அறிவு எம்மவரிடையே மங்கிவிட்டது. இதனால் தான் போலும் நாடகக்கலை, இசைக்கலை என அவற்றைப் பிரித்து அவற்றையும் திரிபுபடுத்தி சினிமா, பொப்பிசை என்று புத்திலக்கணம் வழங்குகின்றார்கள். எனவே சிறியோனின் அறிவுக்கு எட்டிய மாத்திரத்தில் இம் மூவகைத் தமிழைப் பற்றியும் ஒரு சிறு கண்ணோட்டத்தை இங்கு இயம்புகிறேன்.

"இலக்கியம் கண்டதற் இலக்கணம் விளம்பின்"

எனவும்

"இணைவறு குறுமுனி இலக்கணம் பெறப்,
புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே"

என்று சங்க கால நூல்களில் கூறியது போல இன்பத்தமிழ் இலக்கியங்களின் வரையறைகளாம் இலக்கணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இம் முத்தமிழையும் எமக்கு மொண்டு காட்டும் நூலாக சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இதனாலன்றோ இதை முத்தமிழ் காப்பியம் என்றே கூறுவர்.

"சோற்றுச் செருக்கல்லவே தமிழ் மூன்றை சொல்வித்தே`` என நல்லார் உரை பாயிரம் கூறுவதிலிருந்து முத்தமிழ் மிளிரும் மடல் சிலப்பதிகாரம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இயற்றமிழ்

இதிலே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற தொகை நூல்களையும் சைவ, வைணவ, பௌத்த, சைன நூல்களையும் மேலும் காப்பிய இலக்கியங்களையும் குறிப்பிடலாம்.

அகபுற இலக்கியங்களையும் மேலும் சங்கமருவிய காலத்தில் எழுந்த திருக்குறள் போன்ற அறநூல்களும், சிற்பம், கணிதம், ஜோதிடம், வைத்தியம் போன்ற விடயங்களை அடக்கியது தான் இயற்றமிழ். இசை, நாடகத் தமிழுக்கு அடிப்படையாக விளங்குவது ஒரு சிறப்பம்சமாகும்.

With Best Compliments from

V. Manickam & Brother

Importers, General Merchants & Commission Agents

SUGAR RICE

34, 4th Cross Street, Colombo 11
Telegrams : Thavayoga.
Tel : 2323408, 2323986, 2432347
Fax : 2421972

With Best Compliments from

Echo Times International

Importers of Wristwatches, Watch Parts, Wall Clocks, Radios, Kitchen wares, Electronics, Complimentary items etc.

No. 176, Second Cross Street
Colombo 11, Sri Lanka
Tel: 0094-11-2393999
E-mail: echotimes@sltnet.lk

மேலும் இன்று சிதறாது ஓரளவுக்கேனும் சுட்டிக்காட்டப்படும் வகை இதுவாகும். நாம் எழுதும் கட்டுரை, கவிதை, சிறுகதை ஏன் பேச்சும் கூட இதற்குள் அடங்கும். இயற்றமிழ் இலக்கணம் என்பது -

(1) எழுத்திலக்கணம்
(2) சொல்லிலக்கணம்
(3) பொருளிலக்கணம்
(4) யாப்பிலக்கணம்
(5) அணியிலக்கணம்

என ஐந்து வகைப்படும். மேலும் பொருத்த இலக்கணம், பிரபந்த இலக்கணம் போன்ற இரண்டையும் சேர்த்து ஏழு வகையாகவும் வழங்குவதுண்டு. மேற்கூறிய ஐவகை இலக்கணங்களையும் உடைய நூல்கள் தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம் (குட்டித் தொல்காப்பியம்) தொன்னூல், முத்துவீரியம் என்பனவாகும்.

இசைத் தமிழ்

பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு போன்ற நூல்கள் இசைத்தமிழ் நூல்களுக்கு உதாரணமாகும். வடமொழியில் ஸ்வரங்களுக்கு வழங்கும் பெயர்களைப் போலவே தமிழிலும்-

ஸ - குரல்
ரி - துத்தம்
க - கைக்கிளை
ம - உழை
ப - இளி
த - விளரி
நி - தாரம் என பெயர்கள் வழங்கப்படுகின்றன.

"பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையால் ~ பண்ணின்
திறம் விளரிக் கில்லது போற் செப்பலகவல்
இசை மருட்கு மில்லை யினம்"

இவ்வாறு வடமொழியில் இராகங்களைப்போல் தமிழில் பண் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆயினும் தற்போது இது ஜன்னிய இராக வகையைச் சேர்ந்தன எனவும் கூறப்படுகின்றது. இதில் புறநீர்மை முதலிய 12 வகை பண்களும் தக்கராகம் வகையில் 9 உம் செவ்வழி முதலிய 3 வகை பொதுப் பண்களை உடையன. இப்பண்களால் பாட்டுக்கள் உருவாகின.

இவ்வாறு தமிழ் சொற்களோடு இயற்றப்பெற்றவையே இசைத்தமிழ் இலக்கியங்களாகும். இதை 10 வகையாகப் பிரிக்கலாம் எனவும் ஒரு சாரார் கூறுவர்.பண்டைக் காலத்தில் பொருநர் என்ற குலத்தினர் பொருநுதல் என்ற இன்னுமொரு குலத்தினருடன் பாடுதல் போன்ற தொழிலை இயற்றி வந்ததாகவும் கூறப்படுகின்றது.

நாடகத் தமிழ்

"பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்"

எனப் பட்டினப் பாலையிலும்

"கூத்தாட்டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வப்
போக்கு மதுவிளிந் தற்று"

என்று திருக்குறளிலும் நாடகத்தின் பெருமையையும் நுண்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. இயல், இசையைப் போன்று அவ்வளவாக நூல்கள் காணப்படாத போதும் நாடகங்கள் அன்றைய மக்களாலும் அரசர்களாலும் வரவேற்கப்பட்டதோடு இதன் மூலம் உணர்த்தப்படும் கருத்து வெகுவிரைவாக மக்களைச் சென்றடைந்தது. ஆரம்பத்தில் இசையுடன் கூடிய முகபாவங்களாகவேயிருந்த நாடகமானது சற்று திரிபடைந்து அது பின் கூத்து வடிவங்களோடு ஈற்றில் இன்று நாம் காணும் உரைநடை நாடகங்கள் தோன்றின. இவ்வாறு மேற்கூறிய திருக்குறளில் ஒருவனிடம் செல்வம் பெருகுவதற்கு நாடகத்திற்கு மக்கள் கூடுவதையும் செல்வம் விலகுவதற்கு நாடக அரங்கில் இருந்து மக்கள் செல்வதையும் உவமித்துள்ளார். ஆயின் அக்காலத்தில் இந்நாடகம் எவ்வளவு பிரசித்தமாயிருந்தது என்பது கண்கூடு.

எனவே, முத்தமிழை முழுமையாக புரிந்து மாணவராகிய நாம் அதற்கு மகுடம் சூட்டவேண்டியது எம் பொறுப்பு. இச்சிறு தாளிலே இது ஒரு சிறு பிரசுரம் மட்டும். ஆனால் தமிழோ கடல் போன்றது. அதை ஆராய ஆராய பல்வேறு முத்துக்கள் சிக்கும். எனவே முத்தமிழில் உள்ள மூன்று தமிழ்களையும் நாம் முன் நின்று வளர்ப்போமாக.

"ஓடையிலே என் சாம்பல் ஓடும்போது
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்
பாடையிலே படுத்துறங்கி பவனிவரும்போதும்
பைந்தமிழ் அழமோசை கேட்க வேண்டும்"

என்பதை தாரகமந்திரமாய் கொண்டு உழைப்போமாக.

உடலுக்கு உயிரும்
உயிருக்கு உணர்வும் அளித்த
முத்தமிழை நாம் முடங்காது காப்போம் !

"வளர்க தமிழ், வாழ்க அதன் பெருமை"

- நீ. நிஷாந்தனன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

கோன்முறை அரசு செய்க !

பண்டைத் தமிழகத்தில் எத்தனையோ தலை சிறந்த புலவர்கள் உயர்ந்த செய்யுட்கள், சிறந்த இலக்கியங்களையெலாம் ஆக்கியளித்துள்ளார்கள். அவர்தம் நாவினின்று உதிரும் மொழிகளுள் உண்மை தவிர ஒன்றுமில்லை. ஆதலால் அவர்கள் சான்றோர்களாகப் போற்றிப் புகழப்பட்டார்கள். அவர்கள் தமிழுலகிற்கு அளித்துள்ள அரும் பெரும் இலக்கியச் செல்வங்கள், நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிடந்த மறை மொழிகள் போல் ஒளிவீசி நிற்பதை இன்றுங் காணலாம்.

அப்பேர்ப்பட்ட இலக்கியங்கள் கற்பவர்க்கு வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறைகளை புகட்டும் உன்னதத் தன்மை கொண்டன. மக்கள் நல்வாழ்வு வாழ வகை கூறுவன. மக்களை ஆள்பவன் எங்ஙனம் ஆளவேண்டும் என எடுத்துரைப்பன. ஒரு நாட்டில் எல்லா வளமும் இருப்பினும், மாந்தர் சீராய் வாழ நல்லரசு கட்டாயம் தேவையானது என்றும் நாட்டின் குடிமக்கட்கு அரசனே உயிர் என்றும் பழைய தமிழ் நூல்கள் விளக்குகின்றன.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பதறிகை
வேல்மிகு தானை வேந்தற்கு கடனே"

என்ற புறப்பாட்டு அரசன் கடமையையும் அவன் நிலையையும் எடுத்தியம்புகிறது.

தமிழ்நாட்டில் மூவேந்தர்களும் சிறந்த முறையில் அரசு செலுத்தி வந்தார்கள் என்பதை நூல்கள் மூலமாக அறிய முடிகிறது. இம்மூவேந்தர் குலங்களும் குடிகளின் நன்மையை முதற்கண் கொண்டே அரசோச்சி வந்ததால், செங்கோலாட்சிக்குப் புகழ் பெற்றன.

அரசென்றொன்று உண்டெனில் பகையும் இருக்கும். அப்பகை உள்ளேயோ அன்றேல் வெளியிலோ இருக்கலாம். எங்ஙனமிருப்பினும் நாட்டின் குடிகளை வருத்தும் கொடியவர்களை தண்டித்தல் அரசின் கடமை. பயிர் செழிப்பதற்காய் களை கொய்வது போல் நாட்டில் மாந்தர் நலமுற்று வாழ மன்னன் கொடிய பகைவரைக் கொன்றொழித்திடல் வேண்டும்.

"கொலையிற் கொடியோரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனொடு நேர்"

என்று திருக்குறள் உரைக்கின்றது. மக்களை துன்புறுத்தும் கொடியவர் இல்லாத நாடே நாடாகும்.

தமிழ் வேந்தர்கள் களவுக்குற்றம் புரிந்தவர்க்கு மரணதண்டனை அளித்தார்கள். இதனால் அக்காலத்தில் களவுகள் பெருமளவு அற்றுப்போய் இருந்தன. களவுக் குற்றத்துக்கு கொலைத் தண்டனை வழங்கப்பட்டது என்பதற்கு சிலப்பதிகாரம் சான்று பகர்கிறது. சிலம்பைக் களவாடிய குற்றம் சுமந்த கோவலனுக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டது. கண்ணகி நீதிகேட்டு

With Best Compliments from

THE AUTO PRINTER

Printers & Dealers in Account Books

122, Central Road, Colombo 12
Telephone : 2433351
Fax: 2321843

With Best Compliments from

CD World

MUSICAL CENTRE (PVT) LTD.

DVD/Video CD/Audio CD/ Audio Cassette

No. 618, Galle Road, Kollupitiya, Colombo 3,
Sri Lanka.
Telephone : 2581412
No. 505, Galle Road, Wellawatte, Colombo 6,
Sri Lanka.
Tel : 2554481 Fax: 074 718152

நிற்கையில் பாண்டியன் கூறுகின்றான்

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேற் கொற்றம் காண்"

"உன் கணவன் திருடியதால் அவன் கொல்லப்பட்டான். இதிலென்ன கொடுமை உண்டு?" என்கிறான். பாண்டிய நாட்டு நீதி முறை அவன் கூற்றிலிருந்து புலப்படுகிறது

மன்னனாயிருப்பவன் செங்கோலனாயிருக்கவேண்டும். அவன் நாட்டில் குடிகள் நிம்மதியுடன் உறங்கவேண்டும். மன்னன் செங்கோலாட்சி மக்களைக் காப்பதனாலேயே ஆங்கவன் "காவலன்" எனப்படுகிறான். நாட்டில் குற்றம் நிகழின் அரசன் உடனே விசாரணை செய்யவேண்டும். குற்றம் சாற்றப்பட்டவன் யார், எவன் என்று பாராமல், அவன் குலங்குடி கருதாமல் நியாயத் தீர்ப்பளிக்க வேண்டும்.

திருவாரூரை ஆண்ட மனு நீதிச் சோழன் தன் மகன் ஒரு அப்பாவிப் பசுக்கன்றை கொன்றான் எனக்கேட்டு, விழி நீர் விடும் தாய்ப்பசுவுக்காய் உளம் வருந்தினான். பின் சிறிதும் யோசிக்காமல், ஒரு மகனே தன் குலத்திற்கு உள்ளான் என்றெண்ணாமல் பசுங்கன்று எங்கிறந்ததோ அதே இடத்தில், எந்தத் தேர்ச்சில்லால் இறந்ததோ அதே சில்லால் மகனுடல் மேல் தேரேற்றி வளையவிருந்த செங்கோலை நிமிர்த்தினான் என்றும், அறங்காத்த பெரும் மன்னன் என்றும், தமிழிலக்கியவுலகம் வியந்து போற்றுகிறது.

"ஒரு மைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான் மநுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோதான்"

என்று சேக்கிழார் செங்கோல் வளையாச் சீர்ச்சோழன் மனுவேந்தனைப் பாடுகிறார்.

இதுபோல் பாண்டியன் நெடுஞ்செழியனும் செங்கோலனாய் திகழ்கிறான். கோவலன் கள்வனல்லன் என்று கண்ணகி நிரூபித்தமை கண்ட பாண்டியன் நெஞ்சம் பதைபதைக்க, உள்ளமும் உடலும் நடுநடுங்கிப்போனான். நீதிக்குப் பெயர் போன பாண்டிய நாட்டின் நற்பெயரை நாசஞ்செய்து விட்டதாய் சொல்லொணா மனத்துயர் கொண்டு சொல்கிறான்.

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய்கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என் முதற்பிழைத்தது கெடுகவென் ஆயுள்"

என்றுரைத்து கடுந்துயரால் வருந்தி, ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாக் கவரிமான்போல் அரச கட்டிலில் வீழ்ந்து உயிர் துறக்கின்றான். தான் செய்த பிழைக்காக தன்னுயிர் ஈந்தான் நெடுஞ்செழியன். இச்சேதியறிந்த சேரன் செங்குட்டுவன்கூட உளம் நொந்து,

“செம்மையின் இகந்த சொல்
செவிப்புலம் படாமுன்
வல்வினை வளைத்தகோலை
மன்னன் செல்வுயிர் நிமிர்த்துச்
செங்கோலோக்கியது”

என்று பாண்டியனைப் புகழ்ந்தான். தவறு செய்தவர் தாயாதியாகினும், தரித்திரராகினும், தனவந்தராகினும் ஏன் தாமாகினும்கூட தண்டனை வழங்கத்தவறாத செங்கோன்மை மிக்காராய் திகழ்ந்தனர். அதனால் நாட்டு மக்கள் மன்னனைத் தெய்வமாய்ப் போற்றித் தொழுதனர் என்று தெரியவருகின்றது.

மன்னன் பகைவரை ஒழித்தல்போல், பசியெனும் பகையையும் அழிக்கவேண்டும். மக்கள் பசியால் வாடாதிருக்கச்செய்வது மன்னனின் பெரும் பொறுப்பாகும். அரசன் அறநெறி தவறின் அருமழை பொய்க்கும் என்பது அன்றைய கால நம்பிக்கையாகும். அதனால் நாட்டின்கண் மழை பொய்க்கின் ஆட்சி குறைபட்டதென்று அரசனை மக்கள் தூற்றுவரென புறநானூறு கூறுகின்றது.

“மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
காவலர்ப்பழிக்கும் இக் கண்ணகன் ஞாலம்”

ஆகவே அரசன் பசிப்பிணி குடிகளை அண்ட விடாமல், அனைவரும் ஆருயிர் மருந்தாம் உண்டிபெறுமாறு செய்து அனைவரையும் அரவணைத்து காக்கவேண்டுமென்று அறநூலிலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. அரசு முறையான ஆட்சி நடத்த வேண்டும். நியாயத் தீர்ப்பு வழங்க வேண்டும். கொடியவர்தமை ஒறுத்தும், மக்கட்கு துன்பம் செய்யும் பகைவரை அழித்தும், தன் குடிகளுக்கு தந்தை தாயாகவிருந்து பாதுகாப்பளிக்கவேண்டும். அப்படி முறையரசு செய்யும் வேந்தனின் நாட்டில் மாதம் மும்மாரி பொழியும், எல்லா வளங்களும் நிறைந்து செல்வமும் தருமமும் பெருகும், மக்களும் குறையகன்று அறத்துடன் வாழ்ந்து மன்னனை வாழ்த்துவர். இதனாலன்றோ தெய்வப் புலவர் அன்றே சொல்லி வைத்தார்,

வான் முகில் வாழாது பெய்க
மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவிலாதுயிர்கள் வாழ்க.

- வி. விமலாதித்தன்
உயிரியற் பிரிவு
உயர்தரம் 2004

மகாகவி கண்ட மானுடநேயம்

ஓடி விளையாடு பாப்பா ! ~ நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா ! ~ ஒரு
குழந்தையையும் வையாதே பாப்பா

இனிய தமிழில் இங்கிதமாய்க் கூறுகிறான் பாரதி; இளைய தலைமுறையைக் கொஞ்சம் மழலை பேசும் பருவத்திலேயே ஆற்றுப்படுத்துகின்றான். பிஞ்சு வயதிலே கூடி விளையாட எவரையும் சிந்திக்காத பாங்கை இளமையிலேயே ஆரம்பிக்கின்றான்.

கொத்தித் திரியுங் கோழியுடன் தோழமை கொள்ள, எத்தித் திரியும் காக்கைக்குக் கருணை காட்ட, பாலைப் பொழியும் பசுவிடம் பரிவுகொள்ள, வாலைக் குலைத்து வரும் நாயிடம் நன்றி பாராட்ட, வண்டியிழுக்கும் குதிரையிடம், வயலுழும் மாட்டிடம், நம்மை அண்டிப் பிழைக்கும் ஆட்டிடம் அள்ளிக் கொடுக்க வேண்டிய அன்பை அடுக்கிக் கொண்டே போகும் பாரதி மானுடநேயத்தின் சிகரத்தையே தொட்டு விடுகிறான். அன்பிற்கு, மானுட நேயத்திற்கு வரைவிலக்கணம் கூறுகின்றான் பாரதி.

சாதிக் கொடுமைகள் வேண்டாம் ~ அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் ~ தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

சாதிக் கொடுமைக்குச் சாவுமணி அடித்து, அன்பினால் உலகை அரவணைக்கும் பாரதியின் மானுட நேயம் இமயமென உயர்கின்றது.

அன்பென்று கொட்டு முரசே ! ~ மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் ~ இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

இங்கு மகாகவியின் மானுடநேயம் மனித குலத்தை மேம்படுத்த வழிகூறுகின்றது. உடன்பிறந்தோர் போல் உலகிலுள்ளோரைப் பேணும் உயர் மனப்பாங்கு, வாழும் மனிதர்க்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்ற பொறுப்புணர்வு, பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டுமென்ற உன்னத நோய்க்கு இவையெல்லாம் மகாகவியின் மானுடநேயத்தின் மைல்கற்கள்.

With Best Compliments from

SRI GANESHAN PRESS

PRINTERS & STATIONERS

26, Abdul Jabbar Mawatha, Colombo 12
Telephone : 2434148

With Best Compliments from

SATHIYA TRADERS

Dealers in School items, Gift items and Pawning

No. 10, Main Road, Kandapola.
Telephone: 052-2229556

தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்று சமவுடமை பேசியவன் மானுட நேயன் பாரதி. பாரதி கண்ட புதுமைப்பெண் கூட அவன் மனப்பீடத்திற் பிறந்த மானுட நேயமே.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்தி பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்று வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதரைத் தலை கவிழப் பாடினார். பட்டங்கள் ஆள்வதற்கும், சட்டங்கள் செய்வதற்கும் பெண்களை உரிமையாளராக்கி எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று சங்க நாதம் முழங்கியவன் பாரதி. கரும்புத் தோட்டத்திலே இந்திய மாதர் படும் இன்னல் கண்டு கண்ணீர் வடித்தவர் பாரதி.

கரும்புத் தோட்டத்திலே அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே ! ~ அந்த மெய்
மாந்தர் தம் நெஞ்சு கொதித்துக் கொதித்து
சுருங்குகின்றனரே ! ~ அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ? ஒரு
மருந்திகழ் கிலையோ ? ~ செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின்றார்

என்று பரிவுடன் பாடுகின்றார்.

பெண்ணென்றால் பேயுமிரங்கும். ஆனால் கரும்புத் தோட்டத்திலே பெண்கள் வடிக்கும் கண்ணீர் கண்டு அந்தத் தெய்வமே இரங்காதோ என்று ஏங்குகின்றார்.

நாட்டை நினைப்பாரோ ? ~ எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? அவர்
விம்மி விம்மி விம்மியழுங் குரல்
கேட்டிருப் பாய்காற்றே !

என்று குமுறுகிறான்.

பாரதியின் மொழிப்பற்று, நாட்டுப் பற்று, பெண் விடுதலை, பக்திப் பாடல்கள் என்பனவற்றின் அடிநாதமாக அமைந்திருப்பது மானுடநேயமே என்பதை உணரமுடிகின்றது. நவீன பாஞ்சாலி சபதங்கூட மானுடநேயத்தின் உயிர்ப்பு என்றே கூறவேண்டும்.

மண் பயனுற வேண்டும், வானகமிங்கு தென்பட வேண்டுமென மானுட நேயம் பேசியவன் பாரதி. பகைவனுக்கும் அருள்புரிய வேண்டும் என்ற பரந்த மனப்பாங்கு கொண்டவன்.

"பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே என்றும் பகைநடுவினில் அன்புருவான நம் பரமன் வாழ்கின்றான்" என்பது பாரதி காட்டும் பண்புநெறி உய்த்துணரத்தக்கது. மானுட நேயத்தையே அடி நாதமாகக் கொண்ட மகாகவி

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களிகூட்டவும் வேண்டி நான்
மூட்டும் அன்புக் கனலோடு வாணியை
முன்னுகின்ற பொழுதே லாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றான்.

நாட்டு மக்கள் நலன்தான் பாரதியின் இலட்சியம். மானுடத்தை நேசிப்பதில் பாரதியை விஞ்ச எந்தப்பாவலனாலும் முடியாது.

முப்பது கோடி ஜனங்களின் சங்கமம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை ~ வாழ்க

என்ற பாடல் மூலம் மகாகவி மானுடநேயத்தின் கொடுமுடியையே தொட்டுவிடுகின்றான்.

- எம். ஜீம்லி
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

பிறருக்குக் கற்றுக்
கொடுக்கும் ஆசிரியர்
தமக்கும் அப்போதே
கற்றுக் கொள்கிறார்

- தாமஸ் புல்லர்

நெஞ்சம் பொறுக்குதில்லையே ....!

சகாப்தங்கள் பல கடந்திடினும் தன் இளமை குன்றாது மழலையாய் அனைவருக்கும் இதமளிக்கும் தமிழ் மொழியின் உயிர் ஜீவனே தமிழர் கலாசாரமாகும். சாத்திரம் சம்பிரதாயம் என்று பலவகை எல்லைகளுக்குள் அடங்கிய தமிழ் மக்கள் வாழ்வின் உன்னத சின்னங்களே கலாசாரத்தின் உள்ளம்சங்கள். தமிழர் கலாசாரத்தின் மேன்மையினைப் புலப்படுத்துவது தாய், தந்தையரை முழு முதற்கடவுளாக வணங்குதலே ஆகும். தாய் தந்தையரை அம்மா, அப்பா என்று உளப்பூர்வமாக அழைக்கும் போது அந்த உறவு புனிதப்படுத்தப்படுகிறது. ஆனால் இன்றைய தமிழர்கள் அம்மா, அப்பா என்று அழைப்பதை விடுத்து Mummy, Daddy என்று நாகரிகமாக அழைக்கின்றார்கள். Mummy என்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் பத்திரமாகப் பேணப்பட்ட பிணம் என்ற பொருளும் உண்டு.ஆனால் தமிழரின் அம்மா என்ற பதத்திற்கு தெய்வத்தன்மை பொருந்திய பொருள்களே உள்ளன. இவ்வாறு நாகரிக மோகத்தால் ஒரு தெய்வீக உறவை தமிழர்கள் தாழ்நிலைக்கு இட்டுச் செல்வது வரவேற்கத்தக்கதா?

தாய், தந்தையரை ஆங்கிலத்தில் அழைப்பதுடன் நின்றுவிடாமல் அவர்களை மதிப்பதில்லை என்றும் நம்மவர்கள் கங்கணம் பூண்டுவிட்டனர் போலும்.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

- என்ற நம் தமிழன்னையின் வாக்கிற்கிணங்க இன்றைய சமூகத்தினர், எத்தனை பேர் வாழ்கின்றனர் என்பது கேள்விக்குரியதொரு விடயமே. குறிப்பாக இன்றைய இளைஞர்கள் தாய் தந்தையரை மதியாமல் தம் விருப்பத்திற்கு, அடக்கமின்றி சிறுபட்டிகளாக வலம் வருவது கவலைக்குரியதே. இளைஞர்கள் தாய் தந்தையரை தமது விருப்பங்களுக்கமைய அடக்கியாளும் நிலமையும் ஆங்காங்கே காணப்படுகின்றது. சில இளைஞர்கள் தமது தாய் தந்தையரை கொலை செய்த சம்பவங்களும் நம் காதுகளை இம்சிக்கின்றன.

பெரியோரை மதிக்கும் பண்பு தமிழர் கலாசாரத்தின் மேன்மைக்கு சான்றுபகரும் ஓர் பண்பாக திகழ்கின்றது. இப்பண்பு இன்றைய சமூகத்தில் வெகுவாக குறைவடைந்து கொண்டே செல்கின்றது. பெரியோர் அறிவுரைகள் வழங்கும்போது அவர்களை மீறி செயற்பட்டுவிட்டு அவர்களையே குறைகூறும் இளைஞர்கள் இன்றைய சமுதாயத்தில் பலபேர். குரு அல்லது ஒரு பெரியவர் தண்டிக்கும்போது அவரை எதிர்த்து மல்லுக்கு நிற்பது இன்றைய இளைஞர்களின் காட்டுமிராண்டித்தனமான உளவியல் வெளிப்பாடுகளை சித்தரித்து நிற்கின்றன. நமது நலனுக்காக பாடுபடும் பெரியோரை மதியாது செயற்படுவது தமிழர் கலாசாரத்துக்கு முரணானது என்பது ஒரு புறமிருக்க இது மனிதத்தன்மையா என்பதை இன்றைய இளைஞர்கள் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

கூட்டுக் குடும்பமாக வாழ்தல் என்பது தமிழர் கலாசாரத்தின் ஓர் உன்னத அம்சமாகும். கூட்டுக்குடும்பமாக வாழும்போது ஒருவருடன் ஒருவர் கருத்துக்களை பரிமாறி சிறந்த பல வெற்றிகளை பெறமுடியும். முதியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் ஒன்றாக இருப்பதால் அங்கு மிகுந்த சந்தோசம் மிக்க ஒரு சிறிய நாடு கட்டியெழுப்பப்படுகிறது. கூட்டுக்

With Best Compliments from

BE. ES. EN. TRADERS

Major Dealers for : Technova Imagins Systems (Pvt) Ltd., Mumbai-India
Offset Printing Plates, Chemicals, Nova Dom Plates, Laser Film

Agents for :

Litho Plates SA Spain	-	Offset Printing Plates
Coates of India Ltd.	-	Offset Printing Inks
Hammond Services Ltd. U.K.	-	Offset Printing Chemicals
Schoeller Shammer, Germany	-	Tracing Paper
CNI Graphics Inc. U.S.A.	-	Blankets
SFC Ltd. Korea	-	Polyester Film
M. S. Graphics - India	-	Damper, Ducktor Cloth
Chapel Hill Mfg. Co.	-	Damper, Ducktor Cloth
Abezeta SA Spain	-	Black Covering Spray

E. G. 1, Central Road, Colombo 12.
Tel: 0094-11-2348418-9, 2387924 Fax: 0094-11-2449809
E-mail: bees@sltnet.lk

With Best Compliments from

NEW LUCKY STORES

7, St. Andrews Drive, Nuwara-Eliya
Telephone : 052 2222506

குடும்பத்தின் மூலமாக பல சமூகவிழுமியங்கள் மேலோங்கிக் காணப்படும். மற்றவர் கருத்தை மதிக்கும் தன்மைகள் வளரும். அனைவருடனும் ஒற்றுமையாக பழகும்பண்பும் வளரும். ஆனால் இன்றைய சமூகச் சூழ்நிலைகளில் கூட்டுக் குடும்பமாக வாழ்வது சிரமமான விடயமாகிவிட்டது.

தமிழனாக பிறந்த ஒருவன் தனக்காக வாழாது மற்றவர்களுக்காக வாழும் போதே முழுமையடைகிறான். ஆனால் இன்றைய உலகத்தின் அவ்வாறானவர்களைக் காண்பது அருமையிலும் அருமை. மக்கள் தம்மைப் பற்றியும் தம் குடும்பத்தைப் பற்றியுமே கவலைப்படுகின்றனர். அத்துடன் மற்றவருக்கு உதவும் மனப்பான்மையும் இன்று குறைவடைந்து வருகின்றது.

தமிழர் சமுதாயத்தில் பெண்ணானவள் ஓர் உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றாள். ஒரு குடும்பத்தை நல்ல நிலையில் பேணும் பொறுப்பு ஒரு பெண்ணிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட பெண்கள் இன்றைய சமுதாயத்தில் காட்சி பொம்மைகளைப் போலவே நோக்கப்படுகின்றாள். தொலைக்காட்சி முதல் துன்டுபிரசுரங்கள் வரையிலான அனைத்து விளம்பரங்களிலும் காட்சிப் பொருளாக வைத்தே முதலிடம் கொடுக்கப்படுகிறது.

இன்றைய தமிழர்கள் ஒரு நடிகைக்கு கோயில் கட்டுமளவிற்கு தமது கலாசாரத்தை மறந்துவிட்டனர். அவ்வாறே சினிமா நடிகர்களும், நடிகைகளும் திரைப்படங்களில் அணியும் ஆடைகளை இன்றைய இளைஞர்கள் ஆர்வத்துடன் அணிந்து தமிழர் கலாசாரத்தை சீரழித்து வருகின்றார்கள். அவர்கள் தமது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மறந்து வேட்டி, சேலை, தாவணி சட்டை முதலியவற்றை துறந்து காற்சட்டை, மேற்சட்டை, டெனிம் என்று நவநாகரிக ஆடைகள் மீது தமது கண்களை திருப்பியிருப்பது வரவேற்கத்தக்கதொன்றல்ல.

தமிழர்களுக்கு ஆடையில் தான் மேலைத்தேய மோகம் வந்துவிட்டது என்று கருதினால் இன்று ஆங்கில மொழிமீதும் ஓர் மோகம் வந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியில் ஆங்கிலத்தைக் கலந்து பேசுகின்றனர். மேலும் சிலர் தமிழ் மொழியை ஒதுக்கிவிட்டு ஆங்கிலத்தில் பேசுகின்றனர். பலருக்கு பொது இடங்களில் தமிழ் மொழியில் பேசுவது என்பது வெட்கத்துக்குரியதாக தோன்றுகிறது. வேறுசிலர் நவநாகரிக செயற்பாடுகளை அறியாத தம் பெற்றொரை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்வதை வெறுக்கின்றனர். மேலும் சிலர் தம் குழந்தைகளுக்கு தமிழ்வாடையே படக்கூடாது என்ற நோக்கத்தில் ஆங்கில மொழிமூலமான கல்வியை வழங்கி வருகின்றனர். பல தமிழர்கள் இவ்வாறு பலவழிகளிலும் பைந்தமிழை, கேட்கக்கேட்க இனிக்கும் தேன்தமிழை வெறுத்து ஒதுக்குவது ஒரு தாயை அவள் மகன் எட்டி உதைப்பது போன்ற செயலல்லவா?

மனிதர்களின் அடிப்படை தேவைகளில் முதன்மையானது உணவு ஆகும். தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் ஏனைய சமூகத்தவரிடமிருந்து பாரிய அளவில் வேறுபட்டவை. தமிழர்கள் புலால் உண்ணக்கூடாது. உணவுக்காக உயிர்களை வதைக்கக்கூடாது போன்ற பல கொள்கைகளைக் கொண்டவர்கள். அத்துடன் ஒவ்வொருவரும் ஏழைகளுக்கும் இயன்றளவு உணவளித்து உபசரிக்கவேண்டும். அத்துடன் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு முகம் சுளிக்காது முழுமனதுடன் உணவளித்து உபசரிக்கவேண்டும். அப்போதுதான் அனைவரின் மனம் நிரம்பி மகிழ்ச்சி பொங்கும். ஆனால் இன்றைய சமூகத்தில் தமிழர்கள் தமது பாரம்பரிய

போஷண உணவுகளை மறந்தவர்களாய் வேகமாக தயாரிக்கப்படும் உணவு வகைகள் மீது தமது கவனத்தை செலுத்தியிருக்கிறார்கள்.புலால் உண்பதில் பலர் இன்று மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றார்கள். அது மட்டுமல்லாமல் வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வேண்டா வெறுப்புடன் உபசரித்துவிட்டு அனுப்பிவிடுவார்கள். இவ்வாறாக இன்றைய தமிழர்கள் தமது பாரம்பரியங்களை மறப்பது வரவேற்கத்தக்கதல்ல.

இன்றைய சமூகத்தில் தமிழ் இளைஞர்களிடையே வன்முறைக்கலாசாரம் வெகுவாகத் தலைதூக்கியிருப்பது வருத்தத்திற்குரிய விடயமாகும். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் மாணவர் குழுக்களிடையே அடிக்கடி பிணக்குகள் ஏற்படுவது இன்று சர்வ சாதாரணமான ஒரு விடயமாகிவிட்டது. ஒருவரை ஒருவர் கொலை செய்வதும், காயப்படுத்துவதும் தமிழ்ப்பகுதிகளில் அதிகரித்துவிட்டது. புலம் பெயர்ந்த தமிழர்களும் இவ்வாறு தமக்குள்ளேயே மோதிக் கொள்வது சர்வசாதாரணமாகிவிட்டது. "ஒற்றுமையே பலம்" என்று குரல் எழுப்பும் தமிழர் சமுதாயத்தில் வன்முறைகள் புகுந்திருப்பது கவலைக்குரியதே. பெரும்பாலும் வன்முறைகளில் ஈடுபடும் இளைஞர் குழுக்கள் மதுபானம், போதைப்பொருட்கள் முதலியனவற்றுக்கு அடிமையாகி சீரழித்து கொண்டிருக்கின்றனர். பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் தமிழர் கலாசாரத்தில் இது ஒரு கரும்புள்ளியல்லவா?

தமிழர் கலாசாரத்தை பறைசாற்றும் பல இலக்கியங்களிலும் சிறப்பித்துக்கூறப்படும் நட்பு இன்று போலித்தனமான உறவாக மாறிக்கொண்டே வருகின்றன. நண்பன் என்ற பெயரில், கூட இருந்து குழிபறிப்பது தான் பலரின் பழக்கமாக உள்ளது. நண்பன் ஒருவனை சந்தேகிப்பதும், அவனுடன் நெருக்கமாக பழகிய நண்பர்களை அவனுடன் பகைமை பேச தூண்டுவதும் நட்பின் புனிதத்தை கெடுக்கும் செயல்களல்லவா? பண்டைத்ததமிழர் சிறப்பித்த நட்பை வன்முறைகள் மூலம் கொச்சைப்படுத்தும் இன்றைய இளைஞர் சமுதாயம் தமிழ் கலாசாரத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லுமா?

இன்றைய பச்சிளம் குழந்தைகள் முதல், பொக்கைவாய் கிழவர்கள் வரை காதல் என்ற சொல் சாதாரண விடயமாகிவிட்டது. இன்று வீதிகள் தோறும் மணமாகாத சோடிகள் காதலர்கள் என்ற போர்வையில் வலம் வருவதை பல இடங்களிலும் காணலாம். காதலிப்பது ஒருவரை, மணம் முடிப்பதோ வேறு ஒருவரை என்பது இன்று சர்வசாதாரணமான ஒரு விடயமாகிவிட்டது. பாடசாலைக் காலத்தில் காதல் என்ற பெயரில் ஒரு பெண்ணிற்காக இரு குழுக்கள் வன்முறையில் இறங்குதல் என்பது சாதாரண விடயமாகிவிட்டது. கீழ்த்தரமான நோக்கங்களிற்காக காதலிப்பதும், பணத்துக்காக காதலிப்பதும், காதலித்தவளை ஒதுக்கி வேறொருவரை மணப்பதும், வரிசையாக பலரை காதலித்து ஏமாற்றுவதும் இன்றைய சமுதாயத்தில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தமிழர்களால் சிறப்பித்துக் கூறப்படும் தெய்வீக உணர்வுமிக்க உறவான காதல் இன்றைய சமுதாயத்தில் பலவகைகளிலும் கொச்சைப்படுத்தப்படுவது நிச்சயமாகத் தண்டிக்கப்பட்டு தடுக்கப்பட வேண்டியதே.

பண்டுதொட்டு பல நூற்றாண்டுகளாக வணங்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாடு முதலியன இன்று அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பது பார்க்க நெஞ்சு பொறுக்குதில்லையே !

- மனோகரன் ரமணன்

உயர்தரம் 2004

பாரதி... கண்ணன்...

“பாரதி” என்ற சொல்லைக் கேட்டதுமே அனைவர் உள்ளங்களிலும் அலை பாய்வது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்ற நாமத்தைக் கொண்ட நம் சமூகக் கவிஞனின் வீரத்தோற்றமே. முறுக்கிய மீசையும் வால்விட்ட தலைப்பாகையும் நிமிர்ந்த நெஞ்சமும் இராவணனை ஒத்த வீர நடையும் அவரது தோற்றத்திற்கு அணிகலன்களாம். சமூக சீர்திருத்தவாதி என்று அனைவராலும் போற்றப்படும் பாரதியின் பாடல்களில் பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதுமைப் பெண், புதிய ஆத்திசூடி முதலியன அனைவராலும் நன்கு அறியப்பட்டவை.

பாரதியார் தான் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பியரின் சமய பிரசாரங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதை அவர் இயற்றிய பல பாடல்களின் மூலமாக உணரலாம். குறிப்பாக பாரதியார் தான் இயற்றிய கவிகளில் பெண்ணியத்தைப் போற்றும் வகையில் பல தேவி துதிப்பாடல்களைப் பாடியுள்ளார். எனினும் அவர் இயற்றிய முப்பெரும் பாடல்களில் கண்ணன் பாட்டு என்ற கவிதைத் தொகுதி அவருக்கு கண்ணபிரான் மீதுள்ள மிகை பக்தியைக் காட்டுவதாக அமைகிறது. அத்துடன் பாரதியார் ஒரு கண்ணபக்தன் போலும்.

பாரதியார் கண்ணனைத் தன் தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, குழந்தையாக, காதலனாக என்று இருபத்து மூன்று விதங்களில் கற்பனை செய்து பாடியுள்ளார். பாரதியின் இந்தப் பாடல்கள் அனைத்திலும் ஒரு யதார்த்தத்துடன் பின்னிப்பிணைந்த கற்பனை வளத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

சின்னக் குழந்தைகள் போல்விளை யாடிச்
சிரித்துக் களித்திடுவான் ; நல்ல
வன்ன மகளிர் வசப்பட வேபல
மாயங்கள் சூழ்ந்திடுவான் ; அவன்
சொன்னபடி நடவாவிடிலோ மிகத்
தொல்லை யிழைத்திடுவான் ; கண்ணன்
தன்னை யிழந்து விடில், ஐயகோ – பின்
சகத் தினில் வாழ்வதிலேன்.

என்று பாரதியார் கண்ணனைத் தனது தோழனாகக் கூறுகின்றார். இரு உயிர்த்தோழர்களிற்கிடையே இருக்கும் நட்பின் நிலைத்த தன்மையை பாரதியின் கவிவரிகளிலே சிறப்பாகக் காணமுடிகின்றது. பாரதியார் இக்கவிவரிகளிலே கண்ணபிரானின் குறும்புத்தனங்களைக் கூறுவதுடன் அதனிலும் மேலாகத் தான் கொண்ட நட்புணர்வை மிகைப்படுத்திக்கூறுவதை காணக்கூடியதாக உள்ளது. ஒரு நண்பனுக்கு இருக்க வேண்டிய அனைத்து நல்ல பண்புகளையும் பாரதியார் தன் நண்பன் கண்ணனிடம் மிகையாகவே காண்கிறார்.

பாரதியால் கண்ணனுக்குத் தாய்மை வடிவம் கூடக் கொடுக்கப்பட்டுள்ளமை அவருக்குக் கண்ணபிரான் மீதிருந்த அளவற்ற பக்திப் பெருக்கைக் காட்டுகின்றது.

தின்றிடப் பண்டங்களும் – செவி
தெவிட்டறக் கேட்கநற் பாட்டுகளும்,
ஒன்றுறப் பழகுதற்கே – அறி
வுடையமெய்த் தோழரும் அவள் கொடுத்தாள்:
கொன்றிடுமென இனிதாய் – இன்பக்
கொடு நெருப்பாய், அனற் சுவையமு தாய்
நன்றியல் காதலுக்கே – இந்த
நாரியர் தமையெனைச் சூடிவைத் தாள்.

என்று அவர் தன் தாயாகக் கண்ணனைக் காண்கின்றார். இறைவனாகக் கண்ணபிரானுக்கிருந்த தாய்மைக் குணத்தை பாரதியார் தன் தாயிடம் கண்டதைப் போலவே உயர்வான ஒரு பிணைப்பாகக் காண்கிறார் போலும். ஒரு தாய் தன் குழந்தைக்கு இன்சுவைப்பண்டங்கள் கொடுத்து, இனிய நற் பாடல்கள் கற்றுக்கொடுத்து எவ்வாறு இன்புறுகிறாள் என்பதை இங்கு பாரதி கண்ணபிரானிடம் கண்டுள்ளார். ஒரு தாய் தன் குழந்தையை சான்றோனாக்க எவ்வாறெல்லாம் சிரமப்படுகிறாள் என்பதை கண்ணன் என்தாய் என்று பாவித்து பாரதி மிகவும் சிறப்பான முறையில் வெளிப்படுத்துகின்றார். இங்கு அவர் தாய்மையின் சிறப்பை வெகுவாக வாசகர்களுக்கு சென்றடையும் வகையில் பல வழிகளில் வெளிக்காட்டியுள்ளார்.

பாரதியார் கண்ணபிரானை தன் சேவகனாகப் பாவித்து கற்பனை செய்திருப்பது அவர் கண்ணபிரான் மீது கொண்ட மிகைப் பக்தியையே காட்டுகின்றது. எந்த ஒரு மானிடனினும் ஒரு தெய்வத்தை தன் சேவகனாகக் கூறவே சஞ்சலப்படுகையில் பாரதியார் அதனை அனைவரும் அறியும் விதமாகக் கூறியிருப்பது அவருக்கு தன் பக்தியின் மீதும் கண்ணபிரான் மீதும் இருந்த நம்பிக்கையைக் காட்டி நிற்கின்றது.

“மாடு கன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடுவேன்” என்ற வரிகள் கிருஷ்ணபகவான் கோகுலத்தில் கோபியருடன் வாழ்ந்த காலத்தில் செய்தவற்றை மீண்டும் பாரதியிடம் செய்வதற்கு முன்வருவது போல் காட்டி நிற்கின்றன. நரகாசுரவதம் செய்து மக்களைக் காத்ததுபோல் உன்னுடன் சேவகனாய் இருந்தும் “மக்களைக் காத்திடுவேன்” என்று கூறுவது ஒரு மயக்க நிலையை ஏற்படுத்துகிறது. மக்களை எனும் பதம் பொதுசனங்களைக் குறிப்பதாகவும் அமையலாம் அல்லது பாரதியின் குழந்தைகளை குறிப்பதாகவும் அமைய முடியும். கண்ணபிரான் இவ்வுலகில் அவதரித்த ஒவ்வொரு தடவையும் மக்களை அதாவது பொதுசனங்களை துன்புறுத்தும் பாதகர்களை வதம் செய்தார். அவ்வாறே பாரதியின் சேவகனாக வரும்போதும் பூமியில் அவதரிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு அவதரித்தால் இறைதன்மையினால் பல பாதகர்களை அழிக்கும் சந்தர்ப்பம் அச்சேவகன் கண்ணனுக்கோ அல்லது அவனது கட்டுப்பாட்டில் இருப்பவர்களுக்கோ ஏற்படும். அதன்போது பாதகர்களிடமிருந்து மக்கள் காக்கப்படுவார்கள் என்ற கருத்தே சாலச்சிறந்ததாக அமையும்.

கண்ணன் என் சேவகன் பாடலில் பாரதி ஒரு சேவகனின் கடமைகள் எவ்வாறானவை என்பதையும் சேவகர்களின் குணாதிசயங்களையும் சிறந்த முறையில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

கண்ணன் என் அரசன் எனும் கவியினில் பாரதியாரின் சிறந்த வரலாற்று அனுபவத்தைக் காணமுடிகின்றது. அரசர்கள் பண்டைய காலத்தில் மது, மாது என்பவற்றில் மயங்கி அந்தப்புரத்தில் இருந்ததைப் பற்றி வெகுவாகக் கூறுகின்றார். கண்ணனின் குறும்புத்தனங்களைப் பற்றி நன்றாகக் கூறுகின்றார். அரசனாக இருந்தும் பொறுப்பற்றவனைப்போல் விளையாடித் திரிகின்றான் என்று கூறிவிட்டு, காலம் வரும் போதிலே பகைவரையும் பாதகரையும் அழித்திடுவான் என்று கண்ணனின் குறும்பையும் கலந்து கவிதையாக கூறுகின்றார். இக்கவிதை மக்கள் கவிஞனின் கற்பனை வளத்துக்கோர் சான்றாகும்.

ஞானியர் தம்மியல் கூறினேன் ~ அந்த
ஞானம் விரைவினில் எய்துவாய் ~ எனத்
தேனிலினிய குரலிலே ~ கண்ணன்
செப்பவும் உண்மை நிலை கண்டேன் ~ பண்டை
ஈனமனிதக் கனிவெலாம் ~ எங்நுன்
ஏகி மறைந்தது கண்டிலேன் ~ அறி
வானதனிச் சுடர் நான் கண்டேன் ~ அதன்
ஆடலிலே கென நான் கண்டேன்.

என்று பாரதியார் "கண்ணன் எனது சற்குரு" என்ற கவிதையில் கூறியுள்ளார். இப்பாடலில் பாரதி, கண்ணனை தனது ஆசானாக கற்பனை செய்து ஆசானின் கடமைகளையும் பொறுப்புக்களையும் சிறப்பான முறையில் விபரித்திருக்கிறார். கண்ணபிரான் தன் குருவாக வந்து சாத்திரங்கள், நல்ல கோத்திரங்கள், நல்ல தொழில்கள், ஆடல், பாடல் இவையனைத்தும் நன்கு கற்றுத்தந்து நல்லவழி காட்டிடுவார். என்று புகழ்ந்து பாடுகின்றார். மனித குலத்தின் மேன்மையான தர்மத்தையும் உளத்தினில் புகுத்திடுவார் என்று கண்ணன் எனது சற்குருவில் கூறி குருகுலத்தின் மேன்மையை பறைசாற்றியிருப்பது பாரதியின் பெருமையே.

பாரதியார் கண்ணனை தனது காதலனாகவும் கண்டிருப்பது அவரது கற்பனை வளத்தின் செழுமையைக் காட்டிநிற்கிறது. தான் ஒரு ஆணாக இருந்தும் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து காதலன் மீது பெண்ணின் உள்ளம் கொண்ட விருப்பினை கவிதையாக வடித்திருப்பது பெண்ணியம் மீதான அவரது மதிப்பை வெளிக்காட்டுகின்றது.

உணவு செல்லவில்லை ~ சகியே
உறக்கங் கொள்ள வில்லை
மணம் விரும்பவில்லை ~ சகியே
மலர் பிடிக்கவில்லை
குணமுறுதி யில்லை ~ எதிலும்
குழப்பம் வந்ததடீ
கணமும் உள்ளத்திலே சுகமே
காணக் கிடைத்ததில்லை

என்று பாரதியார், "கண்ணன் என் காதலன்" என்ற பாடலில் கூறியிருக்கிறார். இப்பாடலிலே பாரதியார் காதலனைக் காணத் துடிக்கும் ஓர் பெண்ணின் உள்ளத்தின் உணர்வு பூர்வமான வெளிப்பாடுகளை சிறந்த முறையில் கவிதையாக வடித்திருப்பது வரவேற்கத்தக்கது. காதல் வசப்பட்ட பெண்ணின் உள்ள வெளிப்பாடுகள் ஏனையோரிடமிருந்து அவளை வேறுபடுத்திக் காட்டும் என்பதை கவிதையிலிருந்து உணரக் கூடியதாக உள்ளது. கண்ணனைத் தன் காதலனாகக் காணும், பாரதியின் உள்ளம் கண்ணன் மீது எவ்வளவுக்கு அளவு கடந்த பக்தியைக் கொண்டிருந்திருக்கும் என்பதை இக்கவிதையிலிருந்து உணரலாம்.

மகா கவியவர்கள் கண்ணபிரானை பெண்ணாகக் கற்பனை செய்து பாடிய பாடல்களாக "கண்ணம்மா என் குழந்தை" "கண்ணம்மா என் காதலி" "கண்ணம்மா என் குலதெய்வம்" முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பாடலையும் பாரதியார் உள்ளத்தால் உணர்ந்து முழுமையாக உள்வாங்கி கவிதையாக வடித்திருப்பது அவரது தனியாற்றலே எனலாம்.

சின்னஞ்சிறு கிளியே ~ கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே ~ உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்
பிள்ளைக் கனியமுதே ~ கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே
அள்ளியணைத்திடவே ~ என் முன்னே
ஆடி வருந்தேனே

என்ற பாடலடிகளை அறியாதவர்கள் எவருமே இல்லை எனலாம். கண்ணம்மா என் குழந்தை என்ற பாடலில் இடம்பெறும் இப்பாடலடிகள் தமிழிசையில் அழியாத ஒரு இடத்தை தனக்கென தக்கவைத்துள்ளது என்றால் மிகையாகாது. ஒரு தாய் தன் குழந்தையின் அசைவுகளிலே மயங்கிப் போவதைச் சிறந்த முறையில் இப்பாடல்களில் காணமுடியும். தாய்மையுணர்வை ஆண்மையுள் புகுத்தி பெண்மையின் தாய்மையை உணர்ந்து கவிதையை வடித்திருப்பது பாராட்டத்தக்க ஓர் செயலாகும். இவ்வாறாக கண்ணனையும் ஒரு பெண் குழந்தையாகப் பாவித்து கவிஞர் படைத்திருப்பது கவிஞரின் குழந்தைகளும் பெண் பிள்ளைகள் என்பதால்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சுட்டும் விழிச்சுடர்தான்~கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக்கரிய விழி~கண்ணம்மா
வானக்கருமைகொல்லோ?
பட்டுக் கரு நீலப்~புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில்~தெரியும்
நட்சத்திரங்களடீ

என்று பாரதி கண்ணனைத் தன் காதலி கண்ணம்மாவாகக் காண்கின்றார். ஆரம்பத்தில் கண்ணனை தன் காதலனாகக் கண்ட பாரத கவிஞன் தற்போது கண்ணனைத் தன் காதலியாகக் காண்பது வியப்புக்குரியதே. எனினும் ஒரு காதலனாக தன் காதலியைப் புகழ்ந்து பாடும் பாடல்களை உணர்வுபூர்வமாக அனுபவித்து எழுத்துருக் கொடுத்திருப்பது அவரது கவி நயத்தைக் காட்டிநிற்கின்றது.

இவ்வாறாக பாரதியால் கண்ணன் பல கோணங்களிலும் பல வரையறைகளுக்குள்ளும் வைத்து நோக்கப்படுகின்றான். ஒவ்வோர் இடத்திலும் பாரதி கண்ணனின் பாத்திரங்களை எதுவித களங்கமும் ஏற்படாதவாறு கையாண்டிருப்பது சிறப்பான ஒரு விடயமாகும். ஒவ்வொரு பாத்திரத்திலும் கவிஞர் வெளிக்கொணர்ந்திருக்கும் நீதி பூர்வமான தர்மங்கள் இவ்வுலக வாழ்வுக்குச் சிறந்த படிக்கற்களே. பாரதியார் தன் இதயத்தில் நிலையாக நிறுத்தி வழிபடும் கண்ணனை இவ்வாறாக கற்பனைகளின் மூலம் உயிர்ப்பித்திருப்பது அவரது ஒப்பற்ற பக்தி மேலீட்டைக் காட்டி நிற்கின்றது. எது எவ்வாறு இருப்பினும் பாரதியின் "கண்ணன் பாடல்"களை இரசானுபவத்துடன் இரசித்துச் சுவைத்து நிலையுயர்வது மானிடர் நம் கைகளிலேயே.

தி. கோகுலரமணன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

முதன் முதலாய் ...

பாய் மரப்படகுகளை அறிமுகப்படுத்தியவர்கள்	-	*எகிப்தியர்கள்*
நெடுஞ் சாலைகளை அமைத்தவர்கள்	-	*பாரசீகர்கள்*
கலங்கரை விளக்கங்களைப் பயன்படுத்தியவர்கள்	-	*கிரேக்கர்கள்*
பருத்தியாடை நெய்வதை அறிமுகப்படுத்தியவர்கள்	-	*இந்தியர்கள்*
நிலக்கரியைப் பயன்படுத்தியவர்கள்	-	*சீனர்கள்*
சாவியை வளையத்தில் மாட்டும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்	-	*உரோமர்கள்*
மனிதனை சந்திரனில் தரையிறக்கியவர்கள்	-	*அமெரிக்கர்கள்*

இ. அர்ச்சுனர்
8-Q

குறுங்கதை

குறுங்கதைகள் தமிழில் பெரிதும் பிரபல்யமாகாவிட்டாலும் நவீன இலக்கியத்தில் பெரும்பங்கு வகிப்பதுடன் கதைகள், நாவல்களில் ஆர்வம் இல்லாதோரையும் சுண்டியிழுக்கும் கவர்ச்சியுடையது. இது இரு வகைகளைக் கொண்டது. ஒன்று பெரிய விடயத்தை, சம்பவத்தை சுருக்கி குறுங்கதையாய் கொடுப்பது "சுருக்கம்" எழுதுவது போல ! மற்றையது ஒரு சிறிய கருத்தை பாத்திர படைப்புக்கள், விவுகள் இன்றி போதுமான வர்ணனைகள் கூறுவது. "விவரணம்" கூறுவது போல ! ஆனால் இரண்டுமே திடீர்முடிவுடன் நிறைவடைந்து எதிர்பாராத அதிர்ச்சியை வாசகர்களுக்கு அளிப்பது. இரண்டாம் வகையில்...... ஒரு கதை...

ஏமாற்றியாச்சு !

ரமேஷ் கைகடிகாரத்தை பார்க்கின்றான். மனதில் ஒரு பயம். நேரம் இரவு பத்து மணியாகிக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டு மணிநேரம் இருக்கிறது. போகிறவன் வருகிறவன் எல்லாம் அவனையே சந்தேக கண்ணுடன் பார்ப்பது போன்ற உணர்வு. விமான நிலையம் வந்த பிறகு இரண்டு தடவை கழிப்பறைக்கு போய் விட்டான். போதாக்குறைக்கு கூட வருவதாயிருந்த குமாரும் வரவில்லை ஏற்கனவே பிடிபட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஒருவனை பிணையில் எடுக்கச் சென்று விட்டான். அதோ... அவன் செல்ல வேண்டிய விமானத்திற்கான அழைப்பு ஆங்கிலத்தில் அழகிய குரலில் ஒரு தேவதை வாசித்து கொண்டிருந்தாள். "பயணிகள் அனைவரும்... பதினாறாம் இலக்க கவுண்டருக்கு செல்லவும்" வீட்டிலிருக்கும் அப்பா, அம்மா, தம்பி, தம்பிகளின் நிலை. ஒரு பக்கம் ஏக்கம் ! ஒரு புறம் பயம் !

சுங்க சோதனைகள் முடிய தனது போலி பாஸ்போர்ட்டுடன் வெளிநாட்டிற்கு அகதியாய் செல்ல முனையும் ரமேஷ் அதிகாரிகளை வெற்றிகரமாய் ஏமாற்றிய சந்தோஷத்துடன் குடும்பத்தினரை பயத்தினால் விமான நிலையத்திற்கு வரவிடாது தடுத்த கவலையுடன் விமானத்தை நோக்கி செல்கிறான்... இதோ அதிகாரியின் கவனக்குறைவால் ... மனித வெடிகுண்டாய் தீவிரவாதி ஒருவன் விமானத்தில் ஏறப்போகிறான் என்பதை அறியாது !

க. கார்த்தீபன்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

With Best Compliments from

Ocean Trading Co.

General Hardware Merchants

376, Old Moor Street, Colombo 12.
Tel : 2436876, 2438155, 2459647
Fax : 074-618419

With Best Compliments from

NEW ASHOK VIDEO PRODUCTION

Professionals for Quality
Videography & Photography
What Ever the Occaasion
We'll do it to your satisfaction using latest equipments
& skilled technicians

298 1/2, Galle Road,
Colombo-06, Sri Lanka.
Tel : 2586240, 2360599

With Best Compliments from

K. Balasubramaniam

24, New Chetty Street
Colombo 13.
Telephone : 2436024

With Best Compliments from

SOLID TEX

Wholesale & Retail Dealers in Textiles

Crystal Complex, 80/6, 3rd Cross Street,
Colombo 11.
Telephone: 2380979

With Best Compliments from

Grip Tyre Centre
IDEAL TYRE CENTRE

Dealers for AMW Rebuild and New Tyres & Tubes

No. 482/1, Bloemendhal Road,
Colombo 13.
Telephone : 2330670, 0777-895149

With Best Compliments from

TRADE LINK

Wholesale & Retail Dealers in Imported Ready-made Garments

185, Second Cross Street, Colombo 11
Telephone: 2430192

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்

"ஈன்று புறந்தரும் அன்னை
நன்னடை பழக்கும் தந்தை
பிறந்து வாழும் மண்
பிறப்போடு கூடிய மொழி"

இந்த நான்கு அம்சங்களும் இன்றைய உலகில் ஒரு மனிதனை யார் என்று இந்த அண்டசராசரத்திலே அடையாளம் காட்டுகிறது. இவற்றுள்ளும் அவனுடைய மொழியே அவன் உயர்விற்கு முதல் அடிப்படையாகவும் கருவியாகின்றது என்பதைப் பேரறிஞர் அண்ணா பறைசாற்றினார். இந்த வகையில் எமக்கு அமைந்த மொழி யாமறிந்த மொழிகளிலே சிறந்த மொழியான தமிழ் மொழியாகும். எம் தாய்மொழி அது பிறமொழி அறிஞர்களால் பெருமைப்படுத்தப்பட்ட மொழி. உலகத்தில் வாழுகின்ற எந்த இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்த சிந்தனைக் களஞ்சியங்களாகக் கொண்ட ஒரே மொழியாகும். ஒன்றாகி, இரண்டாகி, மூன்றாகி, நான்காகி, ஐந்தாகி, ஆறாகி, ஏழாகி, எட்டாகி, ஒன்பதாகி, பத்தாகி, பத்துக்குமேலாகி விரிந்து முப்பாலும் கொண்ட முத்தமிழால் விளங்குகிறது. உலகில் சிறப்போடு வழங்கிய உயர் தனிச் செம்மொழிகளில் ஒன்றாகவும் போற்றப்படுகிறது. ஆனால் கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் எல்லாம் வழக்கு இழந்தோ அன்றி முற்றிலும் சிதைந்தோ ஒமியப் பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் இருவழக்கும் பெற்று, இலக்கிய வளமும் கொண்டு என்றும் குன்றாத சீரிளமைத்திறத்தோடு இன்னும் விளங்குவது காலத்தால் மூத்த கன்னித் தமிழ் ஒன்றாகும்.

"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே வெல்லும் தரம் உனக்கு தமிழுக்கு இப்புவிமேலே. எனவே தமிழுக்குத் தொண்டு செய்வோம் என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இந்த வகையில் கண்பார்வையற்ற நிலையிலும் தமிழுக்காக உயிர் வாழ்ந்த மூத்த அறிஞர் பெருமக்களைத் தமிழ் உலகம் இன்னும் போற்றி வருகின்றது. எம்முன் பிறந்த எம் மொழியாளர்கள் எத்தனையோ சொத்துக்களை எமக்குச் சேர்த்து வைத்துச் சென்றார்கள். அவர்கள் தேடிய தோட்டம் எம் குலத்தை வாழையடி வாழையாகக்காத்து வருகின்றது. வழி காட்டிவருகின்றது என்பது நிதர்சனம். மகாபாரதம், இராமாயணம், வள்ளுவம் போன்றவை வாழ வழி காட்டுவன. வாழ்வில் தர்மத்தை வற்புறுத்துவன. இந்த வகையில் பாமர மக்களின் உள்ளத்திலும் தமிழ்பற்றை ஊட்டிய மகாகவியின் சிந்தனைகளை நோக்க வேண்டும். எமது நாடு தமிழ் நாடு என்று சொல்கின்றோம். நாம் தமிழர்கள் என்கின்றோம் அதில் எனக்குப் பெருமை உண்டு என்று விளக்கும் பொழுது பாரதி அதனை மனக்கண் கொள்கின்றார். முதலிலே

With Best Compliments from

K. Balasubramaniam

98, Wolfendhal Street,
Colombo 13
Telephone : 2436024

With Best Compliments from

ROHAN TEX

Dealers in Textile

No. 80/2, 3rd Cross Street,
Crystal Complex, Colombo 11
Telephone : 2471969

"கல்வி சிறந்த தமிழ்நாடு
புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு"

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை"

"அள்ளும் சிலப்பதிகார மென்றோர் – மணியாரம்
படைத்த தமிழ்நாடு"

என்கிறார் மேலும் அதன் வரலாறு கூறும் பொழுது

"ஆதிசிவன் பெற்ற மொழி
அகத்தியன் கண்டு நெறி செய்த மொழி
மூன்று குல மன்னர் என்னை
அன்புடன் வளர்த்துவிட்டார்கள்" என்கிறார்.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

என்ற வரலாற்றை அல்லது தமிழர்தம் வீரத்தைப் பறைசாற்றும் புறநானூறு சமூகத்திற்கு இட்ட கட்டளைகளில் தலையானது. "ஈன்ற புறந்தருதல் என் தலைக்கடனே சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்பதாகும். மூத்த தமிழ் மகன் ஔவையின் அமுதவாக்கு "அன்னையும் பிதாவும் முந்நெறி தெய்வம்" எனவே அதைப்பேண வேண்டியது இளைஞர்க்குக் கடன். வள்ளுவன் இல்லறத்துக்குரிய கடமை என்ன என்பதைக் கூறும் பொழுது ஈன்ற பொழுதிற் பெரிது "உவக்கும் தன் மகனைச் சான்றோன். எனக் கேட்ட தாய் என தாய்மைக்கும் தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து" என்பதை முந்திருப்பச் செயல் எனத் தந்தைக்கும் கட்டளையிடுகிறார். இந்தக் கடமைகளை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் முன்பு சொல்லிவைத்தார்கள். அவை பட்டறிவு தான் வளர்ந்து வந்து, பயன் தரக்கூடிய சமுதாயத்தை பட்டை தீட்டுகின்றது. துவண்டு நின்ற முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்த பாரியின் செயல்தான் வளர்ந்து வரும் சிறார்களுக்குப் பெற்றோர் செய்யும் தொண்டு. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையில் என்றும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்றும் சொல்லி வைத்தவர் பட்டறிவை நாம் மதிக்காவிடில் நட்டம் பட்டறிவுக்கு அல்ல, முட்டாள்களாகிய நமக்குத் தான். இன்று புலம் பெயர்ந்த சூழலில் எமது தாய் மொழியின் விருத்தியில் குழந்தைகளைப் பெற்றோர்கள் பின்னின்று வழிநடத்துகின்றார்கள் இவர்களால் பெருமை பெறப் போவது எமது

தமிழ்ச்சமூகம் என்பது எவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மை. பெற்றோர்கள் அன்றி மற்றவர்கள் எம் குழந்தைகளில் அதிகம் அக்கறை செலுத்தமாட்டார்கள்.

இன்றைய சூழலில் எமது புலம் பெயர்ந்த பெற்றோர்கள் கடும் குளிரையும் உடல் விறைப்பையும் பாராது எமதுமொழி, கலை, கலாசாரங்களைப் பிள்ளைகளுக்குப் புகுத்துகின்றார்கள். என்னைப் பொறுத்த மட்டில் அதிகம் தமிழர் வாழும் கனடா, இலக்கியப்பயணம் ஜெர்மன் பிறிமன்நகரில் நடந்த 10வது ஆண்டு பூவரசு சிறப்பு விழா எனக்குத் தந்த அனுபவமும், இலண்டன் மாநகரில் இயங்கக் கூடிய பல நிறுவனங்களின் முயற்சியினால் எமது இளம் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய தமிழ்க்கல்வி ஊடகங்களின் கலை வளர்ச்சி யாவும் "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உணர்வலைகளைத்தான் என் நெஞ்சில் ஏற்படுத்தியுள்ளன.

வீழ்வது நாமாயினும் வெல்வது தமிழாகட்டும்

- சி. சிவாகணேஸ்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2005

வான்சிலம்பியின் கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் - யாம் பெரிதும்
வல்லோமே என்றெண்ணி வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது

- ஒளவை

கருத்து :-

தூக்கணாங்குருவியின் கூட்டைப் போலும் கறையானின் புற்றைப் போலும் உங்களால் செய்ய முடியுமா? ஒவ்வொரு மலராகத் தேடி சிறுக சிறுக உங்களால் தேனீ போல் தேன் சேர்க்கத் தெரியுமா? இவையெல்லாம் உங்களுக்கு அரிய செயல்கள்! ஆகையால் நீங்கள்தான் வல்லவர்கள் என்று எண்ண வேண்டாம் ! உலகத்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்குத்தான் எளிய செயலாயிருக்கும் !

வாழ்க்கையின் வழி அது சமய நெறி !

ஒருவரின் அறமான வாழ்விற்கு அடித்தளமாக இருப்பது சமயமாகும். வாழ்க்கையை வளத்தோடு வாழ்வதற்கு ஒவ்வொரு படிமுறைகளிலும், செயற்பாடுகளிலும் இரண்டறக் கலந்து மனித வாழ்வை மானிட நேயமிக்க சீரான பாதையை அமைத்து தருவது சமய நெறிகள் என்றால் மிகையாகாது.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம் தவிர்த்து வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை எடுத்தியம்புவது சமயமாகும். சமயத்தோடு இரண்டறக் கலந்த இதிகாசங்கள் இதை போதிப்பதை நாம் அறிந்த விடயமாகும். மண்ணாசையால் விளைந்த விளைவுகளை மகாபாரதமும், பெண்ணாசையால் வந்த வினைகளை இராமாயணமும், பொன்னாசையின் விளைவுகளை சிலப்பதிகாரமும், மானுடனுக்கு அறிவுபுகட்டும் பாடங்களாகும். சமயம் என்பது வெறும் ஆன்மிகவாதம் மட்டுமல்ல அறிஞர்களையும், நாயன்மார்களையும் சான்றோர்களையும் வாழ்க்கை நெறிக்கு முன்னுதாரணமாக்கியுள்ளது. இதிகாச புராணங்களும், சமய சான்றோர்களும் படைத்த வரலாறுகளும் நம் வழி வழி வந்த முன்னோர்கள் சமயத்தோடு சார்ந்த போதனையாக புதிய தலைமுறைகளுக்கு போதித்து வந்தமையால்தான் இன்றைய சந்ததியினர் கலை, கலாசாரத்தை சமயத்தையொட்டியதாகவே பின்பற்றி வாழ வழிவகுத்துள்ளது என்பது ஐயமற்ற தெளிவாகின்றது.

வைரத்தை பட்டைத் தீட்டத் தீட்டத்தான் அதன் மகிமையும், பெருமையும் புலப்படுவதுபோல எம் மனமும் எண்ணங்களும் அவைசீரான வாழ்வும் சமயம் என்ற வைரத்தை நம் அறிவு, பண்பு, பழக்கவழக்கம், நம்பிக்கை என்பவற்றால் பட்டைத் தீட்டத்தான் அதன் பெருமையும் துலங்கும். பகுத்தறிவைக் கொண்டு பிறந்த மானிட வாழ்வில் அவனது ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் சமயநெறி பின்னிப் பிணைந்திருக்கின்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழி, ஆம்! சமய நெறியோடு வாழ்பவனின் வாழ்க்கை தெய்வ திருப்பாதங்களில் போற்றப்படும் அளவிற்கு உயரும்.

வாழ்விற்கு தேவையான இனிப்பான பதார்த்தங்களை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மிக மென்மையாகச் சொல்லித் தருகிறது சமயம். சமயத்தின் அடிப்படையில் செயல்படும் ஒவ்வொரு செயலும் அர்த்தமள்ளது தெளிவாகின்றது.

ப. மயூரன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2005

With Best Compliments from

TRADE LINK

Wholesale and Retail Dealers in Imported Readymade Garments

185, Second Cross Street, Colombo 11.
Tel : 430192.

With Best Compliments from

RITAS

No. 106, D. S. Senanayake Mawatha, Panadura.
Tel : 034-32382

Prop : Al Haj A. H. M. Haneem
No. 13, New Road, Dharga Town.
Tel : 034-75192

மனிதா இது உனக்காக ....

நாகரிகம் தெரிந்தவர்கள், பண்புள்ளவர்கள் பொருளும் அளிப்பார்கள், மன்னிப்பு அளிப்பார்கள், நாகரிகம் இல்லாதவர்கள் நன்றி இல்லாமல் நடந்து கொள்வார்கள், தீமை செய்வார்கள் வாங்கிக் கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள், வாங்கிக் கொண்டதை மறந்தே விடுவார்கள்.

பொருள் தேடுவதும், பெறுவதும் மனிதர்க்கு இயல்பான ஆசையாக இருப்பது போலவே புகழ் அல்லது பாராட்டுத் தேடுவதும் மனிதர்க்கு இயல்பான ஆசையாகும்.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும் அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்த போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.

ஆண்டவன் எவனை அறிகிறானோ அவனுக்குத் தான் முத்தி கிடைக்கும். எனவே ஆண்டவன் ஒருவனே துதிப்பதற்கு உரியவன். ஆன்ம ஞானமுள்ளவன் சாவுக்கு அஞ்ச மாட்டான். அது பிறப்புடன் வந்தது என்பதை அவன் அறிவான்.

நண்பனே, நீ எல்லோரிடமும் இனிமையாகப் பேசு. உன்னைப் பகைப்பவன் எவனும் இருக்கக்கூடாது. அனைவர்க்கும் விளையும் படி நல்ல செயலாற்று. அரிய வாழ்வைத் தினமும் பயனுடையதாக்கு.

சிறு பொருளையும் இகழாதே அவமதிக்காதே. உன் வலக்கையில் செயல் திறமை இருக்கிறது. இடக்கையில் வெற்றியிருக்கிறது.

நூறு கைகயால் பொருள்களைச் சேமித்துவை ஆயிரம் கைகலால் அந்த பொருள்களை வழங்கு.

சிலர் வயிற்றுப் பசிக்காக அலைகிறார்கள், சிலர் வாய்க்கு ருசியாக வேண்டும் என்று அலைகிறார்கள் இவை இரண்டும் கிடைத்து விட்டால் புதிய பசியான உடற்பசி ஏற்பட்டு விடுகிறது. மனிதனுக்கு எப்போதும் பசிதானா? அரும்புவதற்கும், மலர்வதற்கும், கனிவதற்கும் என்று ஒரு காலம் இருக்கிறதல்லவா? சிலவற்றை அடைவதற்கு அந்த காலம் வரும் வரை பொறுத்திருக்கவும் வேண்டும்.

- க. கோகுலநாத்
உயர்தரம் 2005

> ஒருவனுக்குத் தந்தை எனப்படுவோன் ஆசிரியன் தான்
> - நான்மணிக்கடிகை

With Best Compliments from

DEVI TRADING COMPANY

Exporters & Importers

125, Bankshall Street, Colombo 11.
Tel : 2320314, 2335124, 2335125
Fax : 0094-11-2432444
T'grams : "GRADUATE"
Telex : 22463 DEVIN CE

With Best Compliments from

NEW ASIAN CHEMICAL

Dealers in Chemicals, Wax, Acids, Batik Dyes and Laboratory Chemicals

143 A, Bankshall Street,
Colombo 11.

Tel : 2348163 Fax : 2445931

அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ?

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்."

என்று அன்பிற்கு வரைவிலக்கணம் வகுக்கின்றார் பொய்யாமொழிப் புலவர். அன்பு என்பது மூடிவைக்க முடியாத உணர்ச்சியாகும். இந்த அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பை பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் என்பதுதான் இந்தக் குறளின் பொருள். அன்பு என்ற மூன்று எழுத்துக்கள் கொண்ட இவ்வற்புத மகாசக்தி அகிலத்தையே அரவணைக்கும் மாபெரும் மந்திர சக்தியாக விளங்குகின்றது. மனிதனை மனிதனோடு, ஏன் மனிதனை விளங்கோடுகூட இறுகப்பிணைத்து இன்பமாக வாழவைக்கும் இனிய தாரக மந்திரமே அன்பாகும்.

"அன்பென்று கொட்டு முரசே மக்கள்
அத்தனை பேரும் நிகராம்."

என்று பாடுகின்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி. அன்பு அனைவரையும் சமத்துவக் கண்கொண்டு நோக்குவது. ஏழை, பணக்காரன், ஆண்டான், அடிமை, படித்தவன், பாமரன் என்ற பேதமற்றது. பாசம், பந்தம், பரிவு, காருண்யம், கனிவு இவை அனைத்தும் அன்பென்ற மந்திரத்தின் உள்ளுணர்வுகளே.

அன்பு அன்னையின் மடியிலே உதயமாக வேண்டும். அன்னையின் அரவணைப்பிலே அவளின் அமிர்த மொழிகளிலே, கண்ணே மணியே! கற்கண்டே பாகே! என்ற தாலாட்டும் பாட்டுக்களால் உதயமாக வேண்டும். முந்தி தவமிருந்து, முந்நூறு நாள் சுமந்து குழவியைப் பெற்றெடுத்து சேய்க்கு வரும் நோய்க்குந் தான் மருந்திட்டவள் தாய்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே."

என்ற பாட்டு பெற்ற தாயின் அன்பை உணர்த்துகின்றது. தந்தையும் எம் வாழ்வில் இமாலய அன்பு செலுத்தும் ஓர் உன்னத இடத்தைப் பெறுகின்றார். பொருள்தேடி வளர்த்துச் சான்றோராக்கி அவையகத்து முந்தியிருக்கச் செய்யும் தந்தையின் அன்பு மகோன்னதமாகும். தந்தை, தாய், சகோதரர்கள் என்ற குடும்ப வட்டத்துக்கள் மலரும் அன்பு குடும்பத்துக்கு அப்பால், கிராமம், நாடு, உலகம் என்ற பரந்த அடிப்படையில் அனைவரையும் அன்பென்ற பொன் விலங்கு இணைக்கின்றது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு."

அன்பில்லாதவர்கள் எல்லாம் தமக்கே உரியன என சுயநலத்துடன் நடந்து கொள்வர். ஆனால் உள்ளம் நிறைய உண்மையான அன்புள்ளவர்கள் தமது எலும்பையும் பிறருக்குச்

With Best Compliments from

V. Ajeenthan

9R

With Best Compliments from

K. Balasubramaniam

98, Wolfendhal Street, Colombo 13

Telephone : 2436024

சொந்தமாக்கி விடுவர் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அன்புதான் மனித குலத்தின் ஆணிவேர். அன்பு வாழ்க்கையைப் பசுஞ்சோலையாக்குகின்றது. அன்பிலார் வாழ்க்கை பாலைவனத்தில் காணப்படும் வற்றல் மரத்திற்கு நிகரானது.

இராமாயணத்தில் இராமன் பரதனே நாடாளவேண்டுமெனக் கைகேயி கட்டளை இட்டபோது "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ" என்று தனது துன்பத்தை தம்பியின் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் அமைதி காண்கின்றான். அதுதான் உண்மையான தெய்வீகமான அன்பு. கைப்பொருளெல்லாம் இழந்து கண்ணகியிடம் திரும்பிவந்த கோவலன் தன்னைப் புறக்கணித்து குலந்தாரு வான்பொருள் தொலைத்தவனாய்த் திரும்பி வந்த வேளை கண்ணகி சீறாது, சினக்காது நலங்கோள் முறுவலுடன் நகை முகங்காட்டி வரவேற்றாள். அதுதான் உண்மையான அன்பு.

அன்பு இன்பமானது, இனிமையானது அன்புடைமை, இன்சொல்லுடமை, பணிவுடமை ஆகிய பண்புகள் அன்பு என்ற இனிய மந்திரத்தின் சேர்க்கைகள். அன்பு நெஞ்சங்கள் எப்போதும் இன்சொல்லுடையோராய், பணிவுடையோராய் விளங்குவர்.

இன்னும் எத்தனை எத்தனையோ தத்துவங்களும் வரைவிலக்கணங்களும் கூறலாம். அதனால் அன்பின் மகத்துவம்தான் ஓங்கிக்கொண்டு போகும். நம் வாழ்க்கை இன்பமலர்கள் பூத்துக் குலுங்கும் சிங்காரப் பூங்காவாக அமைவதற்கு நம் உள்ளம் என்னும் வயலிலே அன்பு என்ற பயிரை விதைத்துப் பயன் அடைவோம்.

- ச. ராகவேந்தன்
ஆண்டு - 6 R

நலமாக வாழ்வதற்கு ....

உணவைக் குறை	;	அதிகமாகக் கடித்துண்
சவாரியைக் குறை	;	அதிகமாக நட
கவலையைக் குறை	;	அதிகமாக வேலை செய்
சோம்பலைக் குறை	;	அதிகமாக விளையாடு
பேசுவதைக் குறை	;	அதிகமாகச் சிந்தி
வீண் செலவைக் குறை	;	அதிகமாகத் தானம் செய்
திட்டுவதைக் குறை	;	அதிகமாகச் சிரி
உபதேசத்தைக் குறை	;	செயலை அதிகரி

(சர்வோதயம்)

கின்னஸ் புத்தகம்

1951 ம் ஆண்டு ஒருநாள் மாலைப் பொழுதில் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த "கின்னஸ் வாட்" என்னும் அமைப்பின் நிருவாக இயக்குனராக இருந்த "சாக்யூ பிவர்" என்பவர் வேட்டையாடுவதற்காக ஒரு நதிக்கரையோரம் சென்றுகொண்டு இருந்தார். அப்போது வானத்தில் கோடு கிழித்தது போல எண்ணற்ற பறவைகள் பறந்து கொண்டிருந்தன. உடனே அவர் துப்பாக்கியை எடுத்து நிமிர்வதற்குள் அப்பறவைகள் கண்ணுக்குத் தெரியாத தொலைவிற்குச் சென்றுவிட்டன. இக்காட்சியினால் ஆச்சரியப்பட்ட அவர் அப்போதுதான் உலகில் மிக வேகமாகப் பறக்கும் பறவை "கோல்டன் பிளவர்" என்ற விடயத்தை அப்போது அறிந்தார். இது பற்றி தாமே ஒரு புத்தகம் வெளியிட்டால் என்ன என்று நினைத்தார். இதற்காக இலண்டன் சென்று அரசாங்கத்திற்காக புள்ளிவிபரம் சேகரிக்கும் நோரிஸ் மைக்வோட்டர், இ. ரோஸ் மைக் வைட்டர் ஆகிய இருவரோடு சேர்ந்து கின்னஸ் புத்தகத்தை உருவாக்கினார்.

முதலாவது கின்னஸ் புத்தகம் 27.08.1955 இல் 198 பக்கங்களுடன் வெளியானது. இப்புத்தகத்தில் அவ்வருடத்தில் நடந்த உலகசாதனைகள் பற்றி எழுதப்பட்டிருக்கும். அந்த ஆண்டு அதிகமாக விற்பனையான புத்தகம் இதுவேயாகும். ஒவ்வொரு வருடமும் வெளிவரும் இப்புத்தகம் 1957, 1959 வருடங்களில் மட்டும் வெளி வரவில்லை. தனிப்பட்ட ஒருவரின் சாதனைகள் இதில் இடம்பெற்றிருக்கும். அந்த நபரின் சாதனை பற்றி வெளிவந்த செய்திகளைத் தாங்கிய உள்ளூர் பத்திரிகையின் செய்தித் துணுக்குகள் வானொலி, தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்ட செய்திச்சான்று பார்வையாளர்களாகவிருந்த பொறுப்பாளர்களின் கையொப்பத் தொகுப்பு இத்தனையும் உண்மைதான் என்று ஒரு பொறுப்பான நிறுவனத்தின் தலைவர் வழங்கும் உறுதிமொழி இவ்வளவும் அனுப்பவேண்டும்.

இதே முறைதான் விளையாட்டுத் தொழில் சாதனை இவற்றுடன் அதிசயம் போன்ற எல்லாத்துறைக்கும் பின்பற்றப்படுகிறது. கின்னஸ் புத்தகத்தில் சாதனை நிகழ்ச்சிகளை வெளியிடுபவரே தவிர யாரையும் சாதனை செய்ய தூண்டமாட்டார். உலகிலேயே அதிகம் விற்பனையாகும் புத்தகம் இதுவேயாகும். தமிழ் நாட்டில் ஜெயராம் என்பவர் 200 மணிநேரம் விடாமல் பேசினார். இச்சாதனையை முறியடிக்க விஸ்வநாதன் என்பவர் 260 மணிநேரம் பேசி கின்னஸ் சாதனை படைத்தார் தொழில் மூல சாதனைமூலம் சாதனை புரிந்து கின்னஸில் இடம் பெற்றுள்ளவர் நடிகை மனோரமா ஆவார். உலகிலேயே அதிக படம் நடித்தவர் என்ற பட்டியலில் இவர் இடம்பெற்றுள்ளார். உலகிலேயே அதிக திரைப்படங்களில் (130 படங்களில்) ஜோடியாக நடித்தவர்கள் என்ற பட்டியலில் காலஞ்சென்ற பிரேம் நசீர், ஷீலா இருவரது பெயரும் இடம் பெற்றுள்ளது.

- கிருஷ்ணகுமார் அவினாஷ்

ஆண்டு 7 R

தமிழனென்று சொல்லடா !

எமது தாய் மொழி தமிழாகும். தமிழ் என்பதன் பொருள் இனிமை என்பதாகும். உலகில் காலத்தால் மூத்த மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் திகழ்கிறது. தமிழ் மொழி தான் பிறந்து பல்லாயிரம் ஆண்டுகளாகியும் இன்னும் எளிமையும் எழிலும் குன்றாமல் இருந்து வருகிறது இதனாலேயே "கல்தோன்றி மண் தோன்று முன் தோன்று தமிழே" எனப் போற்றுகின்றனர்.

பழைய காலத்து மன்னர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதில் அரும்பாடுபட்டனர். தமிழ் மொழியைக் கற்றுணர்ந்த பெரியோர்களை பொன்னும் பொருளும் தந்து போற்றினர். புலவர்களைத் தம்மிலும் உயர்வாக மதித்தனர்.

அன்று தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ் இன்று அநேகமாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருப்பதற்கு எம் ஈழத்தமிழர்களின் இடம் பெயர்வே முக்கிய காரணம் ஆகும். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதையே முத்தமிழ் என்கின்றோம்.

பண்டைய தமிழ் மன்னர்கள் மூன்று சங்கங்களை அமைத்தனர். அவை முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்பனவாகும்.

இந்நாளில் தமிழ் மொழியைக் காப்பதற்காக பல போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஆதீனங்களும் தமிழ் மன்றங்களும் தமிழ் மொழியைப் பேணுவதில் அவாக் கொண்டிருந்தன. ஆயினும் இன்று சில தமிழர்கள் தம்மை தமிழன் எனக் கூறிக்கொள்ளத் தயங்குவதைக் காண்கின்றோம்.

"யாம் அறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியாரின் கூற்றையும் மதிக்காமல், "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற பாரதிதாசனின் சொல்லையும் மதிக்காமல் தமிழன் எனக்காட்டிக்கொள்ள மறுத்து பிற மொழி பேசி வாழ்வதைக் காண்கிறோம். இவர்களின் செயல், பெற்ற தாயை நீ யார் என்று கேட்பதற்கு சமமாகும். ஆயினும் இவர்களும் எம் மொழியின் பெருமையை ஒரு நாள் உணர்வார்கள் என நம்புகிறேன்.

இவ்வேளையில் மாணவர்களாகிய நாமும் நம் இனிய தமிழ் மொழியை பாதுகாக்க எம்மால் இயன்ற வகையில் பாடுபடல் வேண்டும். அதற்கு முதலில் நாம் தமிழைப் பிழையறப் பேசவும், எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழிலுள்ள நூல்களை விரும்பிக் கற்க வேண்டும். பின் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப கற்றதன்படி ஒழுக வேண்டும்.

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா."

இரா. பார்த்திபன்
ஆண்டு- 7Q

தமிழ் மொழி

எமது தாய்மொழி தமிழ். காலத்தால் மிக மூத்த மொழிகள் பலவுள. அவற்றுள் தமிழ், சமஸ்கிருதம், இலத்தீன் முதலியன ஒருசிலவாம். சமஸ்கிருதமும், இலத்தீனும் இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால் தமிழ் மொழி பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இருந்துவருகிறது. அதாவது, பேசவும், எழுதவும் பயன்படுகின்றது. தமிழ் பிறந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியும் இளமையும், எழிலும் குன்றாமல் இருந்து வருகின்றது.

தமிழ் மொழி இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே வழக்கில் இருந்தது. தமிழ் மொழியைப் பேசிய இனத்தோர், தமிழர் எனப்பட்டனர். தமிழ் மொழி வழங்கிய தேசம் தமிழகம், தமிழ் நாடு, திராவிடம் முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

தமிழ் நாட்டைப் பண்டைய நாளில் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைய வேந்தர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களின் கீழ் குறு நில மன்னர்களும் அதிகாரம் செலுத்தினர். இவர்களெல்லாம் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு அரும்பாடு பட்டனர். தமிழ் மொழியைக் கற்றுணர்ந்த பெரியோர்களைப் பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றினர். புலவர்களைப் பாதுகாத்ததில் பெருமைகொண்டனர். தமிழ் நாட்டில் அன்று பிறந்து வளர்த்து வாழ்வு பெற்ற தமிழ் இன்று மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்காவிலும் வேறு பல தேசங்களிலும் தனது சேவையை வழங்கி வருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் மிகவும் விரிவடைந்துவிட்டது.

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இயற்றமிழ் இலக்கணத்துடன் கூடியது, இசைத் தமிழ் இசையுடன் இயைந்து நாடகத் தமிழ் கதையும், இசையும், கூத்தும் கலந்து வருவதுடன் பல இயற்றமிழ் நூல்களும் இசைத்தமிழ் நூல்களும் நாடகத் தமிழ் நூல்களும் தமிழ் மொழியை அழகு செய்கின்றன.

பண்டையத் தமிழ் மன்னர்கள் மூன்று சங்கங்களை அமைப்பித்தனர். அவை முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்பனவாம். இச்சங்கங்களில் புலவர்களும், மன்னர்களும் உறுப்பினர்களாய் இருந்தனர். பல பல நூல்களை இயற்றினார்கள். ஆராய்ந்தார்கள். நூலின் தரத்தைத் துணிந்து அறியச் சங்கப்பலகை போன்ற அமைப்பும் இருந்தது.

கடைச்சங்கப் புலவர்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன் வாழ்ந்தனர். அவர்கள் இயற்றிய நூல்களுள் சில இந்நாளிலும் கிடைக்கின்றன. பல அழிந்தொழிந்தன. அவர்கள் செய்த பாடல்கள் சங்கத்தார் பாடல் என வழங்கப்பட்டது. தொல்காப்பிய இலக்கண நூல் இடைச்சங்க காலத்துக்கு முந்தியது எனக் கற்றோர் கூறுவர்.

இலங்கை எமது தாய்த்திருநாடு. எமது நாட்டவரான ஈழத்துப் பூதஞ்சேந்தனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவராய் இருந்து தமிழாராய்ந்தவர். அவர் நக்கீரர், காடிலர், பரணர் முதலிய சங்கச் சான்றோர்களைப் போலத் தாமும் அரிய பாடல்களை எழுதி உள்ளார். இஃது

எமக்குப் பெருமையல்லவா?

தமிழ் நூற்பரப்பு மிகவும் பரந்துவிட்டது. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரிய புராணம், திவ்விய பிரபந்தம் என்பன இவற்றுள் சிலவாம்.

பாரதியார் யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் எங்காயினும் கண்டதில்லை என்று அறுதியிட்டு உரைத்துள்ளார்.

மிகப் பிற்காலத்தே நாவலர் பெருமான் பாரதியார் போன்ற சான்றோர் பலர் தோன்றினர். தமிழ் மொழிக்கு அரும்பெரும் தொண்டு புரிந்தனர்.

இந்நாளில் அரசும், பல்கலைக்கழகங்களும், மன்றங்களும், கல்வி நிறுவனங்களும் பிறவும் தமிழ் மொழியைப் பேணுவதில் ஈடுபட்டுழைத்து வருகின்றன. தமிழ் கற்றவல்ல சான்றோர் பலர் அவற்றுடன் இணைத்து அன்னை மொழிக்கு அயராது சேவை செய்து வருகின்றனர். தமிழ் எங்கள் உயிராகும்.

எளிமை, இனிமை, தொன்மை படைத்த தமிழ் மொழியைச் சான்றோர் தமிழ்த்தாய் என்றும் தமிழ்த்தெய்வம் என்றும் போற்றுவர். எங்கள் தாய், தமிழ் பேசும் பலகோடி மக்களின் இதயங்களில் இருந்து நல்லாட்சி புரிந்து வருகின்றாள்.

- றோ. ராகுல் ரகுராம்
ஆண்டு 7 Q



ஆபிரகாம் லிங்கனும், ஜோன் கென்னடியும்

ஆபிரகாம் லிங்கனும், ஜோன் கென்னடியும் பற்றி எமக்கு முன்னரே தெரியும். எனினும் அவர்களுக்கும் இடையில் காணப்படும் சில விசித்திரமான ஒற்றுமைகள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- ஏழைக்குடும்பத்தில் பிறந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 16வது ஜனாதிபதியானார் ஆபிரகாம் லிங்கன்.
- ஆனால் 35வது ஜனாதிபதியான ஜோன் எஃப் கென்னடியோ பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்.

அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஜோன் எஃப் கென்னடி ஒருவரே றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். மிகவும் இளவயதில் ஜனாதிபதியான பெருமையும் அவருக்குண்டு.

ஆனால் இந்த இருவரது வாழ்க்கையிலும் இடம்பெற்றுள்ள ஒரே விதமான சிறப்பு நிகழ்ச்சிகளாவன :

- கி.பி. 1861 இல் ஆபிரகாம்லிங்கன் அமெரிக்க ஜனாதிபதி ஆனார். ஜோன் கென்னடி சரியாக ஒரு நூற்றாண்டின் பின் கி.பி. 1961 இல் ஜனாதிபதியானார்.
- ஆபிரகாம் லிங்கனின் அந்தரங்கச் செயலாளரின் பெயர் கென்னடி ஜோன் கென்னடியின் அந்தரங்கச் செயலாளரின் பெயர் லிங்கன்.
- லிங்கனும், கென்னடியும் அமெரிக்கக் கறுப்பு நிற மக்களின் உரிமைக்காகப் போராடினர்.
- இரு ஜனாதிபதிகளும் தாம் ஜனாதிபதியாக இருந்தபொழுது வெள்ளை மாளிகையில் ஆளுக்கொரு மகனை இழந்தனர்.
- இருவரும் ஜனாதிபதிகளாக இருக்கும்போதே உயிரிழந்தனர். அதுவும் இருவரும் தங்கள் தங்கள் மனைவியர் முன்னிலையில் ஒரு வெள்ளிக்கிழமை நாளில் தலைகளில் சுடப்பட்டு கொல்லப்பட்டார்கள்.

- ஆபிரகாம் லிங்கன் "போர்டு" தியேட்டரில் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது சுடப்பட்டார். கென்னடியோ "போர்டு" கம்பெனியின் தயாரிப்பான ஒரு காரில் பயணம் செய்யும்போது சுடப்பட்டார்.

- ஜோன் வில்க்ஸ் பூத் என்பவன் 1865 ஆம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கனையும், 1963 இல் லீ ஹார்வி ஆஸ்வால்டு என்பவன் கென்னடியையும் சுட்டுக் கொன்றனர்.

- அமெரிக்காவின் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

  பூத் பிறந்த வருடம் - 1839

  ஆஸ்வால்டு பிறந்த வருடம் - 1939

  இவ்விரு கொலையாளிகளும் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

- இரு ஜனாதிபதிகளின் இறப்பிற்குப் பின் அவர்களது துணை ஜனாதிபதிகளே ஜனாதிபதியானார்கள்.

- ஆண்ட்ரூ ஜோன்சன் லிங்கனுக்கு பின்னரும், லிண்டன் ஜோன்சன் கென்னடிக்குப் பின்னரும் ஜனாதிபதியானார்கள். இவர்கள் இருவரது குடும்பப் பெயரும் ஜோன்சன் என்பதே.

- ஆண்ட்ரூ ஜோன்சன் பிறந்தது 1808 இலும், லிண்டன் ஜோன்சன் பிறந்தது 1908 இலும் ஆகும்.

இங்கும் சரியாக நூற்றாண்டுகள் வித்தியாசமாக இருப்பதை நாம் அறியலாம்.

தொகுப்பு : சு. சுஜன்
8 Q

விஞ்ஞானத்தின் விந்தைகள்

இன்று நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம். நாளுக்குநாள் புதுமைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியே இதற்குக் காரணமாகும். விஞ்ஞானம் மனித வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதைக் காண்கின்றோம்.

நமது முன்னோர் வாழ்ந்த காலத்தில் இத்தகைய நிலை இல்லை. அக்காலத்திற்கும், இக்காலத்திற்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு. அக்காலத்தில் மக்கள் கால்நடையாகப் பயணம் செய்தனர். தொலைவில் உள்ளோருடன் நினைத்தவுடன் தொடர்புகொள்ள முடியாதிருந்தது. இன்று நெடுந்தூரத்தில் உள்ளாருடன் பக்கத்தில் இருந்து பேசுவதுபோல் பேச முடிகிறது. தொலைபேசி எனும் கருவி இதற்குப் பயன்படுகிறது. பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தில் உள்ள இடங்களை வானூர்தி மூலம் சில மணித்தியளங்களில்ற் சென்றடைய முடிகிறது. அக்காலத்தில் இத்தகைய வசதி இருக்கவில்லை.

மோட்டார் வண்டி, புகைவண்டி போன்றன இன்று தரைவழிப் பயணத்திற்குப் பெரிதும் உதவுகின்றது. கடல் வழிப்பயணத்திற்குப் பாய்க்கப்பலை நம்பியிருந்த காலம் மறைந்துவிட்டது. அதிவேகப் புகைக்கப்பல்கள் இக்காலத்தில் பயன் படுத்தப்படுகின்றன. அக்காலத்தில் இத்தகைய வசதி இல்லை.

உலகில் பல்வேறு பாகங்களிலும் நிகழ்த்தப்படும் பேச்சுக்களையும் வானொலி கருவிகள் மூலம் நாம் கேட்டு மகிழ்கின்றோம். சிறந்த காட்சிகளையும் நடிப்புக்களையும் திரைப்படங்கள் மூலம் பார்த்து மகிழ்கின்றோம். மின்சார விளக்குகள், மின்விசிறிகள் என்பன நமது நாளாந்த வாழ்வில் நீக்க முடியா இடத்தைப் பெற்றுவிட்டன. வீடு தோறும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பெருகிவிட்டன. இத்தொலைக்காட்சி மூலம் சகல நிகழ்ச்சிகளையும் நாம் நேரில் காண முடிகிறது. மின்சாரம் மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

மனித இதயமாற்று சத்திர சிகிச்சையும் வெற்றிபெற்றுள்ளது. கணனி இயந்திரங்கள் மூலம் குறுகிய நேரத்தில் கூடிய வேலைகளைச் செய்து முடிக்கின்றனர். இயந்திர மனிதனும் செயற்படத் தொடங்கிவிட்டான்.

இவையெல்லாம் விஞ்ஞானம் விளைத்த விந்தைகளே. விந்தை புரியும் விஞ்ஞானம் மனித உலகத்திற்கு, ஆக்கத்திற்கு உதவுவதோடு அழிவுக்கும் வழி அமைத்துள்ளது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் கண்டு பிடிக்கப்பட்ட அணுகுண்டு, சலவாயுக்குண்டு, ஏவுகணைகள் போன்றவை இன்று உலக மக்களை அழிவுப் பாதைக்கு அழைக்கின்றன. இத்தகைய ஆபத்துக்கள் இருந்த போதிலும் விஞ்ஞானத்தின் விந்தைகளை உலகம் வரவேற்கின்றது. புதுமைகள் மலிந்த இக்காலத்தில் நாம் வாழ்வது குறித்துப் பெருமைப்படலாம். மாணவர்களாகிய நாம் விஞ்ஞானத்துறையில் ஆர்வம் கொள்வதன் மூலம் விஞ்ஞானத்தின் விந்தைகளை நன்கு உணர்ந்து கொள்ள முற்படவேண்டும்.

- வி. சாரங்கன்

6-R

பத்திரிகைகள்

பத்திரிகைகளே ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குரிய ஆயுதமாகும். என்று ஒரு நாட்டில் பத்திரிகை தோன்றியதோ அன்றே அதன் முன்னேற்றமும் தோன்றியது எனத்துணிந்து கூறலாம். இவ்விளக்கத்தினைத் தொடர்புபடுத்திச் சிந்திப்போமாயின், மக்களைச் சிந்திக்கச் செய்வது பத்திரிகைகளே என்பது நன்கு விளங்கும்.

பத்திரிகைகளே மனித இனத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கப் போர்க்குரல் எழுப்புகின்றன. நாட்டின் சுபீட்சம் எனும் பெரும் மண்டபத்தின் பலம்மிக்க கற்றூண்களாய்த் திகழ்கின்றன. உலகின் எந்த மூலையிலும் நடைபெறும் செயல்களை, உலகெங்கும் அறிவிப்பதில் பத்திரிகை பெரும் பங்கு கொள்கிறது.

பத்திரிகைகள் தினந்தோறும் தனது வாசகர்களின் அறிவுப்பசிக்குச் சுடச்சுட செய்திகளைப் படைத்து விருந்தளிப்பதில் ஆனந்தம் கொள்கின்றன. சனத்தொகைப் பெருக்கம் மிக்க நாடுகளிலுள்ள பத்திரிகையாசிரியர்கள் ஒவ்வொரு குடிமகனதும் எண்ணங்களுக்கு ஈடளிப்பதோடு எடுத்துக்கொண்ட கருத்தினைத் தெளிவாகக் கூறுவதிலும் வெற்றி பெறுகின்றனர்.

ஒரு சீனக் கழைக்கூத்தாடி அந்தரத்தில் துணையேதுமின்றி கயிற்றில் நடக்கும் போது எவ்வளவு சாதூர்யமாகப் பதட்டமின்றி நகர்வானோ, அதே திறமையோடும், நுண்ணறிவோடும் ஒரு பிரச்சினையை அணுகி, எவருக்கும் பாதகமோ, சாதகமோ இன்றி எழுதி வெற்றியீட்டுவதென்பது பத்திரிகையாசிரியர்களைப் பொறுத்தவரை கைவந்த கலையாகும்.

எத்தனையோ விடயங்களைத் தினமும் தரும் பத்திரிகை ஏன் குறைந்த விலையில் கிடைக்கின்றது என்பது வியப்புப்புக்குரியது. பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களின் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டே, பத்திரிகைகள் தமது செலவுகளைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே, சாதாரண விலையில் விற்பனையாகின்றன. பத்திரிகைகளே மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இந்த ஆயுதம் நடுநிலை நின்று செயல்படும் வரை சமுதாயத்திற்கு எவ்வித ஆபத்தும் இல்லை.

- ச. ஹரிராம்
ஆண்டு - 6 Q

வாய்க்குள் விழுந்த 100 ஒட்டகங்கள் !

குப்பன், முத்தன் இருவரும் நண்பர்கள். குப்பன் விவசாயம் செய்து வந்தான். முத்தனோ வியாபாரம் செய்தான். முத்தன் தனது பேச்சுத் திறமையால் மற்றவர்களை எளிதில் ஏமாற்றி விடுவான். குப்பன் புத்திசாலி மட்டுமன்றி நல்லவனும் கூட.

குப்பன், முத்தன் ஓர் நாள் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது முத்தன் "நாம் இருவரும் தலா ஒரு கதை சொல்வோம். அதைக்கேட்டு யார் "அப்படியா" என ஆச்சரியப்படுகின்றனரோ அவர்கள் கதை சொன்னவருக்கு நூறு ரூபாய் தரவேண்டும்" என்றாள்.

குப்பனும் இதற்குச்சம்மதித்தான். குப்பனை எளிதில் ஏமாற்றலாம் என்று எண்ணி முத்தன் கதை சொல்ல ஆரம்பித்தான்.

"நான் ஒரு நாள் வீதி வழியே சென்ற கொண்டிருக்கும் போது ஒருவன் ஒரே கயிற்றால் நூறு ஒட்டகங்களை கட்டிக் கொண்டு வந்தான்". என்றபடி குப்பனின் வாயை பார்த்த முத்தனுக்கு ஏமாற்றந்தான் மிஞ்சியது. முத்தன் கதையை தொடர்ந்தான். "அங்கு வந்த கழுகு அனைத்து ஒட்டகங்களையும் தனது காலால் தூக்கி கொண்டு பறந்தது. பின்னர் அது நூறு ஒட்டகங்களையும் வயிறார உண்டது" என்றபடி குப்பனைப் பார்த்தான் முத்தன். அவன் ஆச்சரியப் படாததால் நூறு ரூபாயை கொடுத்தான்.

அப்போது குப்பனின் முறை. அவன் கதை சொல்ல ஆரம்பித்தான். குப்பன் சொன்ன கதை முத்தனின் கதையை தொடர்ந்து கொண்டு போயிற்று. "அக்கழுகு போட்ட முட்டை என் வயலில் விழுந்தது. கழுகின் வாய்க்குள் விழுந்த நூறு ஒட்டகத்தில் ஒன்று இந்த முட்டையில் இருந்து வந்தது" நிறுத்தினான் குப்பன். இழந்த காசைப் பெறும் நோக்கில் அமைதியாக இருந்தான் முத்தன். "ஒட்டகத்தின் முதுகில் விளைத்த நெல்லில் செய்த அறுவடையில் 1000 கிலோ நெல் கிடைத்தது. அதில் என் தந்தையிடம் உன் தந்தை 50 கிலோ நெல் வாங்கினார். இன்னும் தரவேயில்லை நீதான் தரவேண்டும்" என்ற முடித்தான் குப்பன். "அப்படியா" என்று கேட்காவிட்டால் 50 கிலோ நெல் கொடுக்க வேண்டி வரும் என்பதால் "அப்படியா" என்ற கேட்டபடியே நூறு ரூபயை அழுத்தினான்.

- இ. அருணோதயன்
7-R

இலங்கையின் பிரதான
ஆலைகளும், ஆய்வு நிலையங்களும், தொழிற்சாலைகளும்

பிரிமா (PRIMA) ஆலை	திருகோணமலை
சோயா ஆராய்ச்சி நிலையம்	பல்லேகலை
விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம்	மகா இலுப்பல்லாம
தேயிலை ஆராய்ச்சி நிலையம்	தலவாக்கலை
தெங்கு ஆராய்ச்சி நிலையம்	லுனுவில
இறப்பர் ஆராய்ச்சி நிலையம்	அகலவத்தை
வைத்திய ஆராய்ச்சி நிலையம்	கொழும்பு
புற்றுநோய் வைத்தியசாலை	மகரகம
ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம்	நாவின்ன
பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்	சபுகஸ்கந்தை
ஓட்டுப்பலகை தொழிற்சாலை	ஜின்தோட்டை
இரும்புருக்கு தொழிற்சாலை	ஒருவெல
டயர், டியூப் தொழிற்சாலை	களனி
சீமெந்து தொழிற்சாலை	காலி, புத்தளம், காங்கேசன்துறை
காகித தொழிற்சாலை	வாழைச்சேனை
மட்பாண்ட தொழிற்சாலை	பிலியந்தலை
உலோக ஆலைகள்	யக்கல
புடவை ஆலைகள்	துல்கிரிய, பூகொடை
கட்டிப்பால் தொழிற்சாலை	பொலன்நறுவை
பால் பதனிடும் தொழிற்சாலை	அம்பேவலை

- இ. அர்ச்சுனர்
8 -Q

With Best Compliments from

Well Wishers

கன்னித் தமிழ்

கவிதை பாடும்

வேத்தியர்கள்

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

அறிமுகம்............
வீரச்செம் படையிது
வேத்தியப் படையிது
வேகமாய் தாக்கும்
வெற்றிப்படையிது

அவை அறிஞர்
பலரைக் கூட்டி
ஆரவாரம் பலவும் செய்து
தமக்குத்தாமே முடிவுகள் சூட்டிய
தருக்கர் தலைவர்கள்
வாங்கும் படையிது

வெற்றி நிச்சயம்........
முன்னே நின்ற எதிரிகள் தம்மை
முடங்கச் செய்த
மூலப்படையிது
திறமையும் திறனும்
ஒருங்கே கொண்டு
திக்கெங்கும் திரண்டு
ஒன்றாய் சென்று
வெற்றிகள் பலவும் பெற்றுவந்த
வேகமாய் தாக்கும்
வெற்றிப்படையிது

ஆனால்
இவர் வெற்றிகள் கண்டோர்.
உள்ளே அவிந்தனர்
நல்லாய் வெந்தனர்
நேரே தாக்க திறமும் இன்றி
முன்னே தாக்க முனைப்பும் இன்றி
முடக்கத் திருவுளம் முனைவாய்
கொண்டு முதுகில் குத்த
பின்னே வந்தனர்

முதுகிலே குத்திய
தீர்ப்பெனும் கத்திகள்
ஒரு பக்கம் சரிந்த
நீதித் துலாக்குள்
வெற்றியின் புதல்வருக்கு
தோல்வியின் கதவங்கள்
போட்டிக்கு முன்னே
முடிந்த தீர்ப்புகள்
முழுமையாய் வந்து
நம்படை சேர்ந்து
இது வென்றவர் சதியா
இல்லை படையின் விதியா ?

இது இப்படி இருக்கு
நம்படையோ ......
திறமைக்காய் நாம்
சொற்சமர் செய்வோம்
திகில் தீர்ப்பால்
நெகிழவும் மாட்டோம்
வெந்த புண்ணிலே
பாய்ச்சிய வேல்களை

வெளியே நாமே தூக்கி எறிவோம்.

ஆனால் பலர் .....
அன்றே நம்படை
உணர்ச்சியை தட்டி
பொங்கிய படையை
பொறுக்கி என்றனர்

வேறு ....
இன்பராஜர்களின் ஈனத்தனத்தாலும்
இளையதம்பிகளின் தந்திரங்களாலும்
இகம்பார்க்கும் முகுந்தர்களாலும்
அழைத்தே கரி பூசும்
உதயகுமாரர்களும்
கவர்ச்சிக்கே முதலிடம்
கருத்துக்கு அல்ல என
தலைப்புக்களை பார்த்தனர்
தரத்தினை அல்ல

இதனால் .....
இடையில் வந்தோர்
இன்பம் அடைந்தனர்
தம்பக்கம் சரிந்த
தராசில் ஏறி
வெற்றி கொடியை
தாமே பறித்து

வெற்றிப் புதல்வரின்
தோல்வியைக் கண்டு
வெறித்தனமாய் சிரித்து
நின்றனர்

இன்று ......
நாம்பெற்ற தோல்வியே
வெற்றியின் குறியென
சாதனை செய்வோம் - மன
வேதனையை விலக்களிப்போம்
நம்படையை நகைப்பு
உள்ளாக்கி நாவற்றவராய்
நறுக்க பேசியோர்
முகத்திலே கரிபூச முனைப்பாய்
முனைந்தனரே
வெற்றியை நாம்தேடி
வீரமாய் சென்று பொங்கினோம்
முதல் பல கனிகள் பறித்தனரே
திறமையை நம்பிய நம்
படையின் திறத்தால்
இரட்டை வருடத்தில் மீண்டும்
வெற்றி
இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்
இவர் முயற்சிகள் தொடர
இறைமுதல்வனை வணங்குவோம்

-'மறவன்'-

உனக்குள் நீ உதிராதே .... !

"வராமல் போய்விட்ட"
வசந்தங்களுக்காக,
நாங்கள்
விழிநீர் வடிப்பதில்லை !

"பெய்யாமல் போய்விட்ட"
மேகங்களுக்குப் பின்னாலே
நாங்கள் கெஞ்சி
நீர் கேட்பதில்லை !
எங்களுக்கும் ஆணிவேர்கள்
இருக்கின்றன !

"எமக்காக 'கூவமறுத்துவிட்ட'
கண்ணாடி போட்ட கவின்
குயில்களே !
ஒரு நாள் காக்கைகளிடமும்
சங்கீதம் படிக்கும்
சங்கடம் வரும் !" என்று
சபிப்போமென நினைத்தீர்களா?
மாட்டோம் ! ஏனெனில்
நாங்கள் நீங்களில்லை !

நொந்து நொந்து நூலாகி,
நொந்த நெஞ்சம் பாழாகி......
வந்து வந்து குத்துகின்ற
நுளம்பைப் போல்,
வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சும் துன்பத்தில்,
நின்றிட்ட நிலைகள்
இனிக் காணும் !

உப்பு விளைத்த
கடலுக்கும் மானம் உண்டு !
உனக்கா இல்லை..... ? தோழா !
தப்பென்று புரிந்தும்
தம்மையே ஏமாற்றித்
தத்துவம் பேசுகின்றவர்கள்
உத்தமமாயிருந்தால்,
எங்கள் நெஞ்சங்கள்
ஒத்துச் செய்த
உடன்படிக்கைக்கு
நடந்ததென்னவென்று
நாடறியக் கூறட்டும் !

ஆகட்டும் !
"அடுத்ததென்ன? ஒன்றுமில்லை!"
என்ற முடிவு
எடுத்ததென்ன? என்தோழா !
கடித்ததென்ன கடுநாயா?
இல்லையே ! - வெறும்
கரப்பான்தானே ! தட்டிவிடு !

வையத்துள் வாழ்வாங்கு
வாழப்பிறந்தவன் நீ !
பொய்மை வலைகளில்
இன்னும்,
பிடிபட்டுத் திரிவதுவும்,
மெய்யே என்றெண்ணி
மேம்பாடு பேசுவதும்,
உய்கின்ற வழியா ....?
உணர்ந்து பார் !
என் தோழா !

வாழ்க்கையின் பூமியில்
நீ, வெறும் மர உச்சியையே
பார்க்கின்றாய் ! - உனக்காய்
காத்திருக்கும் மலைச்சிகரங்கள்
உன்னையே பார்க்கின்றன !

உனக்குள் நீ
உதிர்ந்தது போதும் !
இனி மலர்க....... !
ஏனெனில்..........., ஒரு
கணத்தில், நீ வேறானாலும்
மனத்தில்,
நீ நானல்லவா ?

இலவு காத்த கிளிகளாய்
எங்களை ஆக்கியவர்களுக்கு
நிலவும், வானும், தனிமையும்,
அவர்கள்
ஏமாற்றிக் கொண்டது
தம்மைத்தாமே,
என்கின்ற ஞானம் கொடுக்கும் !
பொழியாமல் போய்விட்ட
பருவமழைக்குத் தெரியாது,

உனக்குள்ளே
முடியாமல் ஊற்றெடுக்கும்
அன்பருவி நான் என்று !

என்றாவது ஒருநாள்
"குயில்கள்"
விட்ட பிழை உணரும் !
ஆனால், அன்று நாங்கள்
ஊர்க்குருவியாய் இருக்கமாட்டோம் !
பருந்தாகி......
உயரப் பறந்து கொண்டிருப்போம் !

(யாவும் கற்பனை அல்ல)

- வி. விமலாதித்தன்
உயிரியற் பிரிவு
உயர்தரம் 2004

என்னால் முடியவில்லை

வானிலிருந்து
வான் மதியை
பிரிக்க முயன்றேன்
என்னால் முடியவில்லை !

கடலிலிருந்து
கள்ளமில்லா
வெள்ளலையை
பிரிக்க முயன்றேன்
என்னால் முடியவில்லை !

மலரிலிருந்து
மனம் மகிழும் - வாசமதை
பிரிக்க முயன்றேன்
என்னால் முடியவில்லை.... !

நானும்
உன்னிலிருந்து என்னை
பிரிக்க முயன்றேன் - அதுவும்
என்னால் முடியவில்லை... !

- ரூமால் ஜோசுவா
8-Q

மறக்க முடியுமா

நீர்த்துளி போல் மென்மொழியும்
சலசலக்கும் கொலுசொலியும்
செவிகள் மறந்திடுமா ?

புதுப்பனிபோல் புன்னகையும்
காற்றைபோல் மெதுநடையும்
கண்கள் மறந்திடுமா ?

உன்னை சுற்றித்திரிந்த
நாட்களையும்
பேசத் துடித்த வார்த்தைகளையும்
என் மனம் மறந்திடுமா ?

உன் ஒவ்வொரு அசைவுகளும்
என் மனம் ஈர்த்துச்சென்றதடி
என் சுகம் பேண மறந்தாலும்
உன் முகம் மறக்க முடியாது

ஓய்ந்தால் அது அலையல்ல
சாய்ந்தால் அது மலையல்ல
உன்னை மறந்தால் அது
மனமல்ல

பச்சைக்குக் கிளிபோல - என்
இச்சைக்கு நீயென்றேன்
ஆனால் பாவை நீயென்றதனால்
எந்தன்கிளி போகவில்லை

இருளில்லாமல் இரவில்லை
திரியில்லாமல் மெழுகில்லை
அலையில்லாமல் கடலில்லை
இலையில்லாமல்
கிளையில்லை
இங்கு உன்
நினைவில்லாமல்
நானில்லை

நீ
என்னும் தோட்டத்தில்
காதல்
பூப்பறிக்க ஆசைப்பட்டேன்
உன்
உத்தரவு கிடைக்கும் வரை
காத்திருப்பேன் அதுவரை

- சி. விதூஷன்
வர்த்தகப்பிரிவு
உயர்தரம் 2003

பதில் சொல்லும் காலம் !

நாட்டில் ஓரிடத்தில் உதித்துத் - தாய்
நவின்ற நல்லுணவைச் சுவைத்து - விளை
யாட்டில் பெரு மகிழ்ச்சி யெய்திப் - பல
வெட்டிப் பேச்சு பல பேசி - நல்ல
ஏட்டைப் படித்துக் கரை யேறிப் - பிறர்
ஏவற் சொல்லுக் கிலக்காகிச் - சுடு
காட்டில் காயும் இவர் போலே - நானும்
காய்வேனென்று நினைத் தீரோ ?

பள்ளிப் பருவத்தில் ஆட்டம் - பல
படங்கள் பார்ப்பதற்கு ஓட்டம் - பெண்ணை
எள்ளித் திரிவது தான் இங்கே - பெரும்
ஏற்றம் என்றெண்ணும் கூட்டம் - நிறை
கல்வி கற்பதற்கே வந்தோம் - சில
கலைகள் கற்பதற்கும் வந்தோம் - இவை
சொல்லித் தெரிவதில்லை மனிதா - நாளை
சோகங் கொள்ளுவது இனிதா ?

தந்தை வியர்வை சிந்தி உழைக்க - அன்புத்
தாயோ உண்ண உணவு சமைக்க - அட
எந்தன் பிள்ளை பள்ளி சென்று - நல்ல
ஏட்டைப் படிப்பா னென்று நினைக்கத் - தங்கள்
சிந்தை அறிவிழந்த சோர்ந்த - என்றுஞ்
சேரா இடஞ் சேர்ந்து வாடும் - இந்த
விந்தை மாணவர்கள் போலே - நானும்
வாழ்வே னென்று நினைத் தீரோ?

சேவை செய்யுமுயர் உள்ளம் - என்றுந்
தோயா தோடுமன்பு வெள்ளம் - இவை
யாவுந் தந்தருள் வாய் தாயே ! - இங்கு
யானும் உந்தன் ஒரு சேயே ! - எழில்
பாவை கண்களினை நாடி - தங்கள்
பாதை மறந்த விழி மூடி - கொடுஞ்
சாவை நோக்கும் இவர் போலே - நானும்
சாவேனென்று நினைத் தீரோ ?

நீதிக்கும் நேர்மைக்கும் அஞ்சி - சில
நேரற்ற வழி சென்று துஞ்சி - பிறர்
பாதிக்கப் பல பாவம் செய்து - பலர்
பார்வைக்குப் பல வேடம் எய்தி - பெண்ணை
ஆதிக்கம் செலுத்திப் பின் வாழ்ந்து - தம்
ஆட்டத்தை முடிக்கின்ற உலகில் - நான்
சாதிக்க துடிக்கின்றேன் தாயே ! - அருள்
தந்தருள் எனக் கிங்கு நீயே !

இளைஞர்கள் படையென்று வந்தால் - தம்
இளமையை உலகிற்குத் தந்தால் - பெரும்
களைகளைத் தம் கையால் கொய்தால் - இக்
கலியுகம் பொலிவுறச் செய்தால் - எம்
நிலைமாறிப் புதுத் தென்றல் வீசும் - எங்கள்
நிழல் கூட உயிர்பெற்றுப் பேசும் - இங்கு
விளையாதோ ? நான் சொல்லும் ஞாலம் - யார்
வருவாரோ ? பதில் சொல்லும் காலம் !

- அ. ஹரிஷன்
கணிதப் பிரிவு
உயர்தரம் 2005

நிழல்

அமாவாசையிலே நட்சத்திரங்களை கண்டதுண்டு
நிலவை கண்டதில்லை
அமாவாசையிலும் நிலவு கண்டேன்
உன்னை கண்ட பின்பு
நிலவு மட்டும் தான் தேயும் என நினைத்தேன்
ஆனால் என் காதலும் அல்லவா தேய்ந்துவிட்டது
என் இதயம் துடிக்கவில்லை அன்றுமுதல்
ஒரு மரணம் தேடியது எனது உடல்

மாதுளம்பழ விதைகள் உன்
பற்களிலே கண்டேன்
வயலின் போல் மெல்லிசை உன்
சொற்களிலே கண்டேன்
தங்கத்தின் மினுமினுப்பு உன்
கண்களிலே கண்டேன்
காந்தத்தின் கவர்ச்சியை உன்
பார்வையிலே கண்டேன்
பூங்காவின் முழு உருவை
முகத்தினிலே கண்டேன்
அழகு எனும் வார்த்தைக்கு
அர்த்தம் நீ என்று கொண்டேன்
ஆனால்,
பெண்ணின் மனதும் - அந்த
விண்ணின் உடலும் ஒன்றுதான்
இரண்டையுமே ஆண்களால்
தொடமுடிவதில்லையே
ஆம்
இவ்வளவு நாள் கட்டினேன் காதல் கோட்டை
ஆனால் இப்பொழுதுதான் தெரிகிறது
அதற்குள்ளே செல்ல கதவேயில்லை என்று

நிஜம்தான்
மண்ணுக்கு ஆசைபட்டு
மீன்கள் அழலாமா
விண்ணுக்கு ஆசைபட்டு
மான்கள் தாவலாமா
ஆசைப்படுவதெல்லாம் கிடைத்தாலும் மனிதன்
ஆசைப்பட்டுகொண்டேதான் இருப்பான்
சுதந்திரமாய் பறந்துகொண்டிருந்தேன்
இன்று கூண்டுகிளியாய் ஆனேன்

என் நிஜத்திற்குள்
நீ நிழலாக
இருக்கின்றாய் ஏனென்றால்
உன் நினைவுகள் என்றும்
என் வாழ்வில்
ஒளித்துகொண்டல்லவா இருக்கின்றது.

- **ஜெ. ரோஹன குமார்**
வர்த்தகப்பிரிவு
உயர்தரம் 2003

நீங்கள் இப்படியா ?

தினம் தினம் என்ன கற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் மாதம் மாதம் என்ன கற்றுக் கொண்டோம். என்பதையும் நினைவில் இருத்துபவன் தான் கற்பதில் ஆர்வம் உடையவன் என்று கொள்ள வேண்டும்.

- கன்பியூஷியஸ்

சுற்றும் பூமி சுற்றாதே

பிறந்த மனிதன்
சுடலையில் எரிகிறான்
கறந்த பால்
கால் மணியில் திரள்கிறது
மறைந்த மனைவி
மாதத்தில் மறந்து போகிறாள்
திறந்த கடைகள்
வருடத்தில் மூடப்படுகின்றன.

மாற்றம் என்பது
இதுதான்
மாற்றத்தின் அர்த்தத்தை தவிர
மற்றதெல்லாம் மாறும் !
ஆற்றலின் அழிவின்மையைப்
போல... !
சுற்றும் பூமியின்
நிரந்தர சின்னம்.

காலி மைதானம்
கடைத்தொகுதியாவதும்
எழுபதுகள் கூடி
அரட்டையடிக்கும்
அரசடி
"ஹைறவே" ஆவதும்
அல்ல மாற்றம் !
அவை காலத்தின் கட்டாயம்

நாளைய விடிவிற்கான
இன்றைய மெழுகுதிரிகள் !
எரிந்தால் தான் சுடர் விடலாம் !
ஆனால்
ஆளையாள் சாப்பிட
அடிக்கப்படும் பல்டியை
என்னவென்று சொல்ல?
மறுமலர்ச்சிக்கான மாற்றமென்பதா ?
இராஜதந்திரம் என்பதா. ?
உயர்தரம் வரை
உத்தம புத்திரன்
அம்மா பிள்ளை
ஆறடித்த பின்
அவசியமென்றால்
கூட வெளியில் வராதவன் !
ஆறே மாதத்தில்
"ரவுடிஸம்" பேசுகின்றான்
சாக்கடை தெறிக்கும்
வாயால்....

நட்பாய் மாறிய காதல்
மாற்றம் காதலியின்
கருத்திலில்லை !
காதலனின் தாடியில் !
காதலாய் மாறிய
நட்பு

மாற்றம் இருவரிலும்
இல்லை !
நட்பை நட்பாய் பார்த்து
காதலித்து
காத்திருந்தவனின்
"ஹார்ட் அட்டாக்கில்"

மாற்றம்
எல்லா உறவிலும் தான்
ஊருடன் ஒத்துவாழ
உதறப்பட்ட
உத்தம நட்பு !
சென்னையில் வீரம்
காட்ட இடிக்கப்பட்ட
சீரணி அரங்கம் போல....!
அடுத்த வீதிக்கும்
அதையடுத்த சந்தைக்கும்
"இன்ர கூலர்" பயணம்

அவசரத்திற்கு
பணம் கேட்டாலோ
ஆண்டியாய் மாறும்
எட்டு முழ பட்டு வேட்டிகள் !

மாற்றத்தை
பற்றி விமர்சிக்க எனக்கென்ன
அருகதையிருக்கு?

வியாழன்
பத்தாண்டிற் கொருமுறை
சூரியனை சுற்றுகையில்
இறப்பதற்குள் அறுபது தடவை
சுற்றி வரும்
எனக்கென்ன அருகதையிருக்கு?
வியாழனைப்பற்றிய
வீணலட்டல் ஏனென்று கேட்கலாம்
அடுத்த சந்ததி
அடியெடுத்து வைக்க
அங்கேயல்லவா
ஆராய்ச்சி நடக்கின்றது !
வியாழனையும்
மாற்றி விடவல்லவா
முயற்சி நடக்கின்றது. !

- க. கார்த்தீபன்
கணிதப்பிரிவு
உயர் தரம் 2004

மறைமுக சம்மதம் ?

அதோ பாருங்கள்
அந்த
ஒருதலைக்காதலன்
இறந்து கிடக்கிறான்
இறந்து கிடந்தாலும்
அவன் விழிகள்
திறந்து கிடக்கின்றன
பாவம் !
காதலிக்காகப்
பார்த்துப்பார்த்து நின்ற
பழக்கதோசம்

குவளை மலர் கொண்டு
செய்யப்பட்டவை உன் கண்கள்
தாமரையாய்
செய்யப்பட்டதுன் திருமுகம்
முல்லை மொட்டுக்களால்
படைக்கப்பட்டவை உன் பற்கள்
செண்பக மலர்களால் தொடுத்துக்
கட்டப்பட்டவை உன் தோள்கள்
அன்று தோன்றிய மாந்தளிர்களால்
செய்யப்பட்டது உன் உதடுகள்
ஆனால்
உன் இதயம் மட்டும்
கல்லால் செய்யப்பட்டதென்ன
கண்ணே !

நான் ஒரு மண்பாண்டம்

காலம் என்னை பிசைந்தது
கண்ணீர் ஊற்றிப் பிசைந்தது
துன்பச் சக்கரத்திலிட்டு
சுழற்றியது
வெய்யிலில் இட்டது
தணலில் சுட்டது
என்னை
மண்பாண்டமாய் மாற்றி
உன் கையில் கொடுத்தது
நீ
நிரப்பப் போகிறாயோ ?
இல்லை
உடைக்கப் போகிறாயோ ?

- ஜெ. ஜெகதீஸ்
வர்த்தகப்பிரிவு
உயர்தரம் 2003

கல்லூரிக்காவியங்கள் !

இன்னுமொரு வருடம் தான்
இருக்கிறது என்னுயிரே !
இன்னுமென்ன இருக்கிறது ?
உனை இழந்தால் என் மனமே !

ஒருநாட் பழக்கமென்றால்
உதறித்தள்ளிடலாம்....
ஏழு வருடங்கள் !....
எப்படித்தான் இழப்பதுவோ ?

தாகம் எனக்கென்றால்
தண்ணீர் குடித்திடலாம்
தண்ணீர்க்கே தாகமடா.....
தாகந்தான் தீர்ந்திடுமோ ?

கல்விக்கடலினிலே கரை தேடும் ஓடம் நான்....
கரை தேடப் பாதை தனைக் கற்பிக்கும் பாடம் நீ....
உன்னை இழந்துவிட
உள்ளங் கலங்குதிங்கே ....
என்னையே இழந்துவிட்டேன் !
ஏதெனக்கு இடிப்பதற்கு ?

விளையாட்டுத் திடலினிலே..
விழுந்தும் நிலம் புரண்டும்...
வியர்வைத்துளிகளுடன்
வேதாந்தக் கதை பேசி...

ஓடித் திரிந்து உள்ளம் மகிழ்வெய்தி
உறவாகிப் போன உனது மனத்திடல்கள் !

ஒவ்வொன்றும் முத்தாக....
ஒளிர்கிறது இப்போது.......
ஓராண்டு கழிந்த பின்னால்....
உன்னைத் தேடுவதெப்போது?

நண்பர்கள் குழாமுடனே நட்புக் கதை பேசி
நகைச் சுவைகள் இயம்பி நாழிகைகள் பல போக்கி....
ஒன்றாக இருந்து உருகிக் களித்ததெல்லாம்....
ஒருநாளே உயிர் வாழும் நாட்காட்டித் திகதிகளாய்......

கற்பதெல்லாம் கற்றும் கலை ஞானம் பெற்றும்....
கைகோர்த்து விளையாடிக் காலங்கள் பல கழித்தும்,
சுற்றுலாச்சென்றும் சுமையின்றி வாழ்ந்ததெல்லாம்
சொந்த இடம் நீத்துச் சுகந்தேடும் அகதிகளாய்.....

போனதுவே எல்லாம்... பொய்யாகத் தானிங்கே........
ஆனதுவே நெஞ்சம்.... அனலாக... உன்னாலே......
'வேத்தியன்' நான் என்றதொரு
வீறாப்பு மிகப் பெற்றேன்......
விடை பெற்றுச் செல்வதற்கோ
உன் மண்ணில் விதையானேன்?

பூத்துக் குலுங்கும் பூங்காவே ! நான் பதித்த
பாதச் சுவடுகளைப் பக்குவமாய்ப் பார்த்துக்கொள் !
காத்திருந்து கரையேறும் கடைசிக்காலமிது !
கண்ணீர்க் கடல்களதைக் கரைக்காமல் போர்த்திக் கொள் !

மேற்குத் திசையிலிருந்து மேவி வரும் பூங்காற்றே !
மேகத்திரள் தேனாய் விழுந்து விடும் மழைத்துளியே !
காற்றில் கலக்காதே என் கீதம் கேட்காதோ?
கல்லூரிக் கற்சுவரும் இதைக்கேட்டு வியக்காதோ?

நெடுந்தூரப் பயணத்தின்
நிலையற்ற விளிம்பினிலே...
கடந்து வந்த காலங்களோ...
கனவுகளின் சுழிகளிலே...

ஓடுகிறேன் !.. ஓடுகிறேன் !
உயிர்ச்சுவட்டின் எல்லை வரை....
ஓராண்டு கழியாமல்
உறைந் திடுமோ? காலத்திரை...

வேடுவர்கள் வேட்டையிலே...
விலங்குகளே இரையாகும்...
காலமகள் ஓட்டத்தினால்...
மானிடமே கரைந்து விடும்...

கண்ணிமைத்துத் திறப்பதற்குள்
கலைந்து விட்ட ஓவியமாய்..
கடந்து விட்ட காலங்கள்....
இழந்து விட்ட நேரங்கள்.....

இன்னுமென்ன இருக்கிறது ?
இழந்து விடத் தான் எனக்கு....
இல்லாதான் இழப்பதுவோ?
இச்சகத்தின் புதுக்கணக்கு....

இமை மூட மறுத்துவிடும்
இரவுகள் தான் அது அதற்கு?
இனிச் செல்லும் பயணத்தில்
எது தானோ? ஒளி விளக்கு !

- அ. ஹரிஷன்
கணிதப் பரிவு
உயர்தரம் 2005

கல்லறையானதே ..... !

உன் சுதந்திர நினைவுகளுடன்
நிறை மாதக் கர்ப்பிணியாய்
உன்னைப் பார்க்க வந்தேன்

ஏதோ யுத்தம் தணிந்து விட்டது
கொழுந்து விட்ட பாசத்தின்
வாசல் தேடி வந்தேன்

தேசம் இருண்டு நின்றது
ரோசம் ஓய்வெடுத்தது
பாசங்கள் தலை தடவின
உன் நேசம்........................

கடற்கரைகள் வயல்வரம்புகள்
குளக்கட்டுகள் எல்லாம் ஓடிப்பார்த்தேன்
பச்சை நினைவுகள் கொச்சை செய்தன.

எங்கும் உன்னைத் தேடினேன்
நீ - நீயாக இருப்பதாயில்லை
நீ எங்கே தொலைந்தாய்
சமாதானத் தூதுவனா ? - இல்லை
நிம்மதி தேடி துரத்திவிட்டார்களா ?

மணமாலை சூடவந்தேன்
மரண மாலை சூடியிருந்தார்கள்
நெற்றிப் பொட்டுக்களும்
சிவப்பாய் குத்தப்பட்டிருந்தன
வாழ்த்துப் பொட்டங்கள்
ஓட்டையானதடி.......

மணமேடை ஏறவந்தேன்
மணல் மேடாய் நீ...
என் உறவுகள் எங்கே ?

விறகுகளாய் அக்கினியில்
எரித்தார்களா ?

உன் தாலியை வாள்களா வெட்டின
பொட்டுக்களை தோட்டாக்களா குத்தின !
என் தாயின் தந்தையின்
சமாதிகள் எங்கே ?
கன்னத்தில் சன்னங்களோடே
காணாமற் போனார்களா ?

இழைத்தவர்கள் யார்
நாங்கள் வழங்குவதற்கு
சமாதான ஓவியம் மலர்கிறது - என்
காதல் காப்பியமும் முடிகிறது

முற்றுப் புள்ளியே
என் வாழ்வுக்கும், என் தேசத்திற்கும் !
கவிதைகள் முட்டி மோதிக்கொண்டன !
வெட்டுண்டு கீழே விழுந்தேன்
என் பாசம் - அதுவும்
என்னுடன் வீழ்ந்ததே !

- ரிகாஸ் மர்சூக்
கணிதப்பிரிவு
உயர்தரம் 2004

கிராமத்து மருதாணி

மல்லிப்பூ முகத்தாள் - இன்று
மனமொடிந்து போயிருந்தாள்
அல்லிப்பூ அகத்தாள் - முதிர்
அரும்பாக ஆயிருந்தாள்

மன்னவன் சொன்னசொற்கள்
மனதிலே ஊஞ்சலாட
"என்னவளே ஏன் கண்ணீர்?
எண்ணிரண்டு வாரங்களில்

உன் முன்னே இருப்பேன்
உவகையுடன் வழியனுப்பு"
எண்ணியவள் வழிபார்த்து
விழிவைத்து காத்திருந்தாள்

ஆறுதிங்கள் கடந்துமே
அண்ணலவன் வருகையில்லை
சோர்வுகொண்டு இருந்தபோது
சோறுகேட்டு வாசலிலே

"ஏழையிவன் இரண்டுநாளாய்
ஏதேனும் அருந்தவில்லை
ஏந்திழையே கொஞ்ச மன்னம்
எடுத்தெனக்குத் தாருமம்மா"

இரந்து வந்தோன் தோற்றம் கண்டு
இரக்கம் கொண்டு சோறு போட
கரம் பிடித்து கட்டியணைத்து
கன்னத்தில் முத்தமிட்டான்

"அத்தானே.. அத்தானே...."
அகம் பயந்து கூச்சலிட்டாள்
"கத்தாதே கண்மணியே
காதலன் தான் வந்துவிட்டேன்"

நொடிப் பொழுதில் இடிந்து நின்ற
பெண்ணவளும் மகிழ்ந்து நின்றாள்
தடிப்பயலே என்று சொல்லி
செல்லமாய்த் தட்டினாள்

- ஏ. அஸீம் றபீக்
(சிலாவத்துறை)
உயிரியல் பிரிவு
உயர்தரம் 2004



தந்தைக்கும் தாய்க்கும் சமர்ப்பணம்

எந்தைக்கோர் முத்தாக
பத்து மாதம் சுமந்து
சொல்லொணாத் துன்பங்களைத் தாங்கி,
யான் உலகைக் காண முன்னரே
எண்ணற்ற கனவுகள் இலட்சியங்களுடன்
அகம் மகிழ,
ஈழமாதாவில் என்னை ஈன்றெடுத்ததோடு

யான் இரு அடியேனும் எடுத்து வைக்க முன்னமே
எனக்கு முதலில் நடையைக்கற்றுக் கொடுத்தது மட்டுமன்றி
யான் காற்றடுக்கி விழும் சமயம்
தோள் கொடுத்தெனைக் காத்ததோடு
தடைக்கற்களையும் என் வாழ்வில்
படிக்கற்களாக மாற்றி, இன்னும்
பார் போற்றும் உத்தமனாய்
வையகம் தனில் எனைச் சிறக்க வைத்த
அன்பினுக்கோர் ஆலயமாக என் தாய்க்கும்,

பாடசாலைப் பருவத்திற்கு முன்னரே
எழுதுகோலைப் பிடிக்கச் செய்து
அறிவுப் பொக்கிஷத்தை அள்ளியே
எனக்குள் குவித்து, பிஞ்சு வயதான ஐந்து வயதினில்
என் இலட்சிய அத்திவாரமான
பாடசாலையிலே கசடறக்கற்க
கால் பதிக்க வைத்து, இன்றைவரை
வற்றாத கல்விச் சாகரமாக என்னை மாற்றி,

வெண்மைதனைப் பாலில் இருந்து
பிரிக்க முடியாதது போல்
ஒழுக்கந்தனை என்னிலிருந்து
பிரிக்க முடியாமல் செய்த என் தந்தைக்குள்

என் கன்னி முயற்சிக்கோர் எடுத்துக் காட்டாகிய
இக் கவிதை இனிதே சமர்ப்பணம்.

- ஏ. மொஹிதீன்
வர்த்தகப் பிரிவு
உயர்தரம் 2005

பெண்ணின் வடிவங்கள்

நம்மைப் பத்து மாதம் சுமந்து
பெற்றெடுத்த அன்பு அன்னையும்
பெண்ணே..........

பூமிக்கு தாயாய் இருந்து படி அளக்கும்
பூமித் தாயும்
பெண்ணே...........

கருணைக்கு நினைவுச் சின்னமாய்
இருந்த அன்னை தெரேசாவும்
பெண்ணே............

கடுஞ் சீற்றங் கொண்டு மதுரையை
எரித்த கண்ணகியும்
பெண்ணே............

வீரத்திற்குப் பெயர் போன
ஜான்சி ராணியும்
பெண்ணே............

கொள்ளை பல செய்த கொள்ளைக்காரி
பூலான் தேவியும் ஒரு
பெண்ணே............

விண்ணைத் தொட்டு பெயர் பதித்த
கல்பனா சவ்லாவும்
பெண்ணே............

மொத்தத்தில் பெண்கள் பல அம்சம்
கொண்ட உலகத்தின் தர்மம் !

- ச. மு. ரிஃப்கி
உயிரியல் பிரிவு
உயர்தரம் 2004

வாழ்க்கை

மனிதா.......................

வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு.
அதில் வெற்றியை நீ நிலைநாட்டு !

வாழ்க்கை என்பது ஒரு வண்டிச்சக்கரம் !
இன்பமும் துன்பமும் வருவது இயற்கை !

வாழ்க்கை என்பது சிறந்த நூலகம்.
கற்கக்கற்க அனுபவம் அதிகம் !

வாழ்க்கை என்பது ஓர் கண்ணாடி.
உடையாது பார்ப்பது உன்திறமை

வாழ்க்கை என்பது ஒரு காற்றாடி.
பறக்கும் வரை மட்டுமே உன் ராஜ்ஜியம் !

வாழ்க்கை என்பது ஒரு மின்சாரம் .
அளவுடன் இருந்தால் நற்பலன் அதிகம் !

வாழ்க்கை என்பது நாடகமேடை.
அதில் கதாநாயகனாக வாழ்ந்து காட்டு !

வாழ்க்கை என்பது சிறு சிறு அத்தியாயம்.
ஒவ்வொன்றிலும் சிறப்பாய் வாழப்பழகு !

வாழ்க்கை என்பது உனக்கோர் சவால்.
பொறுமை திறமையுடன் கடமையைச் செய் !

வாழ்க்கை என்பது உனக்கோர் பரீட்சை.
சிறப்புத்தேர்ச்சி அடைந்து வெல் !

வாழ்க்கை என்பது ஒரு பூந்தோட்டம்.
பூத்துக் குலுங்கி களிப்புடன் வாழ் !

வாழ்க்கைத் என்பது துன்பம் அல்ல.
அந்த அறியாமையைத் தகர்த்தெறி !

வாழ்க்கை என்பது இனிக்கும் கவிதை.
ரசித்துச் சுவைத்தால் எங்கும் இன்பம் !

சிறந்த வாழ்க்கை உன் நம்பிக்கை.
தன்னம்பிக்கையே உன் ஊன்றுகோல் !

- ஜி. துவாரகன்
10 Q

செந்தமிழே !

எத்திக்கும் தித்திக்கும்
ஔவைக்கும் இணைத்திட
முத்திக்கும் அமுதான
அருமருந்தே

- செந்தமிழ்-

காவியங்கள், காப்பியங்கள்
கம்பராமாயணங்களென கணித்து
காவிரி ஆறைப் போன்று
பெருக்கெடுக்கும்.

- செந்தமிழ்-

தமிழே என் தமிழே
தாயின் கருமணியே
என் ஒளியே - உலகின்
கண் ஒளியே

- செந்தமிழ்-

வள்ளுவர், கம்பன், இளங்கோ என
வரிசைமிகு பட்டியல் கொண்டு
வளர்த்திட்டாய் உன் வளர்ச்சியை
நிலைத்திட்டாய் !

- செந்தமிழ்-

வண்ணமிகு மொழியே - சுரு
மொழியே - நின்வழியே
நாமிங்கு நினைத்திடவழி தருவாய்
நலம் பெறுவாய்

செந்தமிழ்-

- ரோ. ராகுல் ரகுராம்
7 "Q"

கானகப் பள்ளி

நாட்டில் உள்ள பள்ளியைப் போல்
நமக்கும் ஒன்று வேண்டுமெனக்
காட்டின் ராஜா கட்டளையால்
கானகப் பள்ளியை திறந்தாராம்.

யானைப் பெரியவர் ஹெட்மாஸ்டர்
காண்டா மிருகம் உதவிக்கரம்
ஓநாய் கரடி சிறுத்தையுடன்
உறுமும் புலியும் டீச்சராம்

எலியார் முதலில் பள்ளிவர
எதிரே பூனைக் குட்டி வர
எலியார் பயந்து குட்டியுடன்
எங்கோ சென்று பதுங்கியதும்

மானார் தமது குட்டிகளை
மகிழ்ச்சியோடு கூட்டிவர
ஓநாய் டீச்சர் தனை பார்த்து
ஓடிப் புதரில் மறைந்ததாம்

ஆட்டுக் குட்டிகள் ஆவலுடன்
அந்தப் பள்ளியில் சேர வர
கோட்டுப் போட்ட கரடியினை
கண்டு கம்பி நீட்டியதாம்.

குரைக்கும் நாயை கண்டவுடன்
குட்டிப் பூனை பாய்ந்தோட
நரியைக் கண்டு முயலாரும்
நாற்கால் பாய்ச்சலில் ஓடியதாம்.

சிறுவர் எவரும் இல்லாமல்
திறந்த பள்ளி என் செய்யும்?
திறந்த அன்றே மூடுவிழா
திருப்திகரமாய் நடந்ததுவாம்.

- இ. அருணோதயன்
7-R

அன்பின் உருவம் என் அம்மா !



அன்பின் வடிவமவள்
அழகின் உருவமவள்
கருணை தெய்வமவள்
கண்ணின் இமை அவள்
எங்கள் உயிரவள்
எங்கள் இரத்தமவள்
சக்தியின் உருவமவள்
சந்திரனின் தாயவள்
பத்து மாதம் சுமந்தவள்
படிக்கவைத்த மாதவள்
பட்டினி கிடந்தவள்
பசி பத்தும் தீர்த்தவள்
அவள் இல்லாமல் நான்இல்லை
அவள் தான் என் உயிர் அம்மா

- வி. பிரகித்குமார்
6-Q

சமாதானம்

புத்தாண்டு பிறந்த இவ்வாண்டினிலே
புது மலராய் மலர்ந்த
சமாதானத் தென்றலே
நம் இலங்கை நாட்டினிலே !

சமாதானம் வளர்கையிலே
நாட்டில் அமைதி ஓங்கும்
இத்தகைய ஒளி
நம் நாட்டில் தெறித்திடுமே !

இத்தகைய ஓர் அருட்கொடை
நம் நாட்டில் ஓங்கி வளர
நாம் இறைவனை பிரார்த்திப்போம் !

- எம். எஸ். எம். இல்யாஸ்
9 -R

நல்வாழ்வு !

நாவிற் கடிமையாகாமல் - உடல்
நலத்திற்காக உணவு உண்டால்
நோயிற் கடிமையாகாமல் - நாம்
நூறு வயதும் வாழ்ந்திடலாம் !

உப்பு காரம் புளி என்ற - சுவை
ஊட்டும் பொருளைக் குறைத்திட்டால்
தப்பே இல்லை எப்போதும் - உடல்
தளராதிருக்க வாழ்ந்திடலாம் !

உடலைப் பெருக்க உண்ணாமல் - நம்
உயிரை காக்க உண்டிற்றால்
திடமும் திறமும் குன்றாமல் - உடல்
தீங்கே இன்றி வாழ்ந்திடலாம் !

நச்சுக் காற்றைக் கொள்ளாமல்- தூளி
நல்ல காற்றை நாம் கொண்டால்
அச்சமூட்டும் நோய் நொடிகள் - நம்மை
அண்டாதிருக்க வாழ்ந்திடலாம் !

- கி. மு. றிசாத் அஹமட்
6-R

கெடுவது எதனாலே ?

உலகம் கெடுவது எதனாலே
உலக மாந்தர் கெடுவது எதனாலே
பிள்ளைகள் கெடுவத எதனாலே
தீய பழக்கவழக்கங்கள் அதனாலே

- பி. ஸ்ரீரமணன்
6 - Q

We Sincerly Thank

Lion . Udayakumar MJF

President

Lions Club of Colombo North

(2003-2004)

For Sponsoring us the Certificates

We sincerely thank



VMAS PRINTERS
&
Staff

No. 282, Wolfendhal Street , Colombo 13,
Sri Lanka.
Tel : 2431588 / 2347880

With the Best Complimentsof

எம் இதயங்கள் இயம்பும் நன்றிகள்

- ✣ அன்புடனே எமது அழைப்பினை ஏற்று பற்பல சிரமங்களுக்கு மத்தியிலும் விழாவிற்கு வருகை தந்த பிரதம விருந்தினர் அவர்களே,
- ✣ தமிழ்ப் பணி சிறக்க முன்னின்று உதவும் அதிபர் உயர்திரு உபாலி குணசேகர ஐயா அவர்களே,
- ✣ ஆக்கமும், ஊக்கமும் அளித்து, எம்மை வழி நடாத்தி கலை விழாதனை சிறப்பிக்க முனைந்த பொறுப்பாசிரியர் சி. இரத்தினசபாபதி அவர்களே, ஏனைய உதவிப் பொறுப்பாசிரியர்களே.
- ✣ கல்லூரிக்குள்ளான, பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவு நிலைமை வகித்து தீர்ப்பளித்த நடுவர் பெருந்தகையினர்களே,
- ✣ பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் அகில இலங்கை ரீதியாக பங்குபற்றிய, மற்றும் இவ்வினிய மாலைப் பொழுதில் இவ்விழாவுக்கு வருகை தந்த பிற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளே அம் மன்றங்களின் பொறுப்பாசிரியர்களே.
- ✣ விளம்பரமில்லாமல் விழா ஏது? அவ்வகையில் விளம்பரங்களை வழங்கிய விளம்பரதாரர்களே, நலன் விரும்பிகளே,
- ✣ மலரை மிகவும் சிறப்பாக குறுகிய காலத்தில் வடிவமைத்துக் கொடுத்த 'விஜயா கிரபிக்ஸ்' நிறுவனத்தினரே, அச்சிட்டு உதவிய 'விமாஸ்' அச்சகத்தினரே, அட்டையை வடிவமைப்பு செய்து மேலும் பல உதவிகள் செய்த 'அரசன்' அச்சகத்தினரே,
- ✣ ஒலி, ஒளி வழங்கிய நிறுவனத்தினரே,
- ✣ தேவையான போது உதவிக்கரம் நீட்டிய முன்னால் வேத்தியர்களே,
- ✣ வேத்தியர் எம் திறமைகளைக் கண்டுகளிக்க திரண்டு வந்திருக்கும் தமிழ் நெஞ்சங்களே,
- ✣ எம் மனங்கள் மறந்தாலும் குறிப்பிடப்பட வேண்டிய பெருமக்களே,

உங்கள் அனைவருக்கும் வேத்தியர் நம் இதய பூர்வமான நன்றிகள் !

செயற்குழு 2003/2004
தமிழ் இலக்கிய மன்றம்

Our Heartfelt Thanks are due to

- Our Chief Guest for her participation despite her busy schedule.
- Our Principal and President Mr. U. Gunasekara for his presence and kind co-operation.
- The teacher-in-charge Mr. S. Ratnasabapathy and the Vice Presidents, the members of the staff for their guidance and inspiring whole-hearted efforts in making this day a success,
- Students and the teachers-in-charge of other schools which participated in the annual inter-school competitions,
- The advertisers and well-wishers who were generous enough to sponsor, contribute banners and advertisements to the "Tamil Nayam".
- 'Vijaya Graphics', 'Vmas Printers' and 'Arasan Printers' for a marvellous job done under a very tight schedule,
- Lights and Sounds for providing excellent light and sound to culminate this event,
- The old Royalists who were dedicated to help us in various ways when it was necessary,
- The present Royalists who sacrificed themselves towards the success of "Kalai Vizha 2003"
- Patrons of the Tamil Language, who have come to grace this occasion,
- All those who wish to remain anonymous but who helped us in numerous ways,

Our Feelings of gratitude are immeasurable

Organizing Committee 2003 / 2004
Tamil Literary Association

உங்கள் உள்ளம் கவர்ந்தவர்களின்
கையெழுத்துகளுக்காக

With Best Wishes

WANT TO BE A WINNER @ CIMA?

JOIN
MERCURY THE PLACE FOR WINNERS

Enrolments now on for CIMA foundation level May 2004 CBA examination.

- Minimum entry requirements:
  G.C.E O/Level credit passes in English & Maths or any qualification above
- Contact - Ramly / Mervin or Nirmalee on 2370643 / 2370644
- Or visit us for further information

Mercury

As Unique As Mercury
25 1/1, Milepost Avenue
Colombo 3
E-mail: mercury1@sltnet.lk

* *Mercury is an accredited CBA centre*

JANATHA STEELS

Importers & General Hardware Merchants

- M.S. CHANNEL
- M.S. SHEETS AND PLATE
- M.S. CHEQUERED PLATE
- M.S. COIL
- PVC SHEETS
- ROUND TUBES
- ROOFING FELT
- STAINLESS STEEL SHEETS
- STAINLESS STEEL TUBE
- SQUARE IRON
- TOR STEEL
- WELDED MESH
- WELDING ELECTRODES
- ZINC COATED STEEL SHEETS
- ANGLE IRON - EQUAL AND UNEQUAL
- ALUMINIUM COILS & SHEETS
- ALUMINIUM CHEQUERED - PLATES
- G.I. PIPES - LIGHT - MEDIUM - HEAVY
- B.I. SHEETS
- B.S. SHAFTING
- CEMENT - COLOUR
- CARBIDE - CHINA / S.A
- FLAT IRON
- FURNITURE TUBES
- GATE CHANNELS
- G.I. WIRE
- H. IRON
- HOOP IRON
- HARD BOARD
- JUMPER STEELS
- LIP CHANNEL
- G.I. PLAIN AND ROOFING SHEET
- STEAM PIPES - LIGHT -MEDIUM - HEAVY
- SEAMLESS STEEL PIPES - SCH 40 & SCH 80
- BLACK STEELS PIPES - LIGHT - MEDIUM - HEAVY
- SHOVELS, MAMMOTIES & AGRICULTURAL IMPLEMENTS



HOTLINE : 011-242 1412

HOTLINE - SUPPLIES : 011-254 3436

SALES : 011-232 1431, 011-232 5807
011-233 8607, 011-238 5180
SUPPLIES: 011-534 7341, 011-254 3436
IMPORTS : 011-245 4282, 011-254 4288
FAX : 011-234 5667, 011-254 3436
E-MAIL : janathas@eureka.lk
WEBSITE : www.janathasteels.com
20, Quarry Road, Colombo 12.
(Opposite HNB)

PROUD OF OUR PAST - CONFIDENT OF OUR FUTURE